# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 31 | கதிர் 346 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 21, ஞாயிற்றுக்கிழமை 06.11.2016

விலை - 30
பக்கங்கள் - 56


## வாள்வெட்டு தொடர்பில் ஒருவர் கைதாகி 4 ஆம் மாடிக்கு

யாழ்ப்பாணம், நவ. 6
வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுக் கொழும்பு 4 ஆம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரே நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் பலர் தேடப்பட்டு வரும் நிலையில் குறித்த நபர் >> 05

## சட்டமா அதிபர் ஜெனிவாவுக்கு

கொழும்பு, நவ. 6
ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் 59 ஆவது கூட்டத் தொடரில் அரசு சார்பில் சட்டமா அதிபர் >> 51

## கடல் வளத்தை அழிக்கும்
# இழுவை மடிக்கு இந்தியாவும் தடை

### நேற்று டில்லியில் நடந்த இருநாட்டு அமைச்சு மட்டப் பேச்சில் இணக்கம்



யாழ்ப்பாணம், நவம்பர் 6
கடல் வளத்தை அழித்தொழிக்கும் இழுவை மடித் தொழிலை இந்தியாவிலும் தடை செய்வதற்கு, இலங்கை - இந்திய அமைச்சு மட்டத்திலான நேற்றைய பேச்சில் இணக்கம் காணப்பட்டுள்ளது.
'இந்திய அரசு முதன் முறையாக இழுவைமடித் தொழிலை இந்தியாவிலும் தடை செய்வதற்கு எழுத்துமூல உறுதி வழங்கியுள்ளது' என்று இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் >> 51

## ராணுவம் வசம் இருந்த காணிக்குள் எலும்புகள்
### எழுதுமட்டுவாழில் நேற்று மீட்பு

தென்மராட்சி நவ. 6
20 வருடங்களின் பின்னர் தோட்டம் செய்வதற்காகக் காணியைத் துப்பரவு செய்த போது அங்கு புதைக்கப்பட் >> 51



## வடக்கு–கிழக்கு இணைப்பினால் ஏற்படாது சுதந்திரம்
### அமைச்சர் சஜித் கூறுகிறார்

முல்லைத்தீவு, நவ. 6
வடக்கு - கிழக்கில் இருக்கின்றவர்கள் வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைக்க வேண்டும் எனக் கோருகிறார்கள். அப்படி இணைக்கின்றபோது சுதந்திரம் ஏற்படாது. வடக்கில் வாழ்கின்றவர்கள், தெற்குக்குச் செல்லவேண்டும், தெற்கில் வாழ்கின்றவர்கள் வடக்குக்குச் செல்ல வேண் டும். அப்பொழுதுதான் நாட்டில் >> 51

### ஒற்றையாட்சி, சமஷ்டி வேண்டாம்
## இரண்டுக்கும் பொதுவில் ஒரு தீர்வைத் தயாரியுங்கள்
### அரசுக்குள் ஒரு தரப்பு ஆலோசனை

கொழும்பு, நவ. 6
ஒற்றையாட்சி முறைமைக்குத் தமிழர்களும் கூட்டாட்சி முறைமைக்கு சிங்களவர்களும் எதிர்ப்புத் தெரிவிப்பதால் இரண்டுக்கும் பொதுவான ஒரு முறைமையின் அடிப்படையில் தீர்வைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு ஒரு தரப்பினர் ஆலோசனை வழங்கவுள்ளனர். அரசுக்குள் உள்ள ஒரு தரப்பினரே இந்த ஆலோசனையை வழங்கவுள்ளனர் எனது தெரியவந்துள்ளது.
தீர்வுப் பொதியின் உள்ளடக்கத்தை >> 51

## வடக்கு ஆளுநரின் பேச்சு சிறுபிள்ளைத்தனமானது
### அமைச்சர் மனோ சாடல்

கொழும்பு, நவ. 6
அமைச்சர் ராஜித சேனாரத்ன பற்றி யும், வடக்கு மாகாண முதல மைச்சர் விக்னேஸ்வரன் பற்றி யும் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே சொல்வது பிழை.அவர் இவை பற்றிய விவரங்களை அறியாமல் குழந்தைத்தனமாகப் பேசுகிறார் என நினைக் கின்றேன்.
இவ்வாறு தேசிய சக வாழ்வு >> 51

## தமிழகப் படகுகளை விடுவிக்க முடியாது
### இலங்கை மீனவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிப்பதற்குப் பேச்சின்போது எந்த இணக்கமும் எட்டப்படவில்லை. படகு விடுவிப்புக்கு நாம் இணங்கியதாகத் தமிழக மீனவர்கள் தெரிவித்ததில் எந்த உண்மையும் இல்லை.
இவ்வாறு இலங்கை மீனவர் சார்பில் பேச்சுக் குழுவுக்குத் தலைமை வகித்த என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.
இலங்கை - இந்திய >> 06

## ரயிலில் மோதுண்டு குடும்பத் தலைவர் சாவு
### மன்னாரில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 6
தலைமன்னாரில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு கொழும்புக்குப் பயணித்த ரயிலில் மோதுண்டு குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார் என்று >> 05

## தொண்டமானாறு நீரேரியில் சிறுவனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 6
தொண்டமானாற்றிலிருந்து நேற்று மாலை 14 தொடக்கம் 16 வயது மதிக்கத்தக்க சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு, ஊறணி வைத்தியசாலையில் >> 52

## அதிகாரம் பகிரும் அரசமைப்பே வேண்டும்
### இதனையே மக்கள் கேட்கின்றனர் என்கிறார் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர்

யாழ்ப்பாணம், நவ. 6
அதிகாரங்களைப்பகிர்ந்தளிக்கும் அரசமைப்பே உருவாக்கப்பட வேண்டும். இதற்கு ஆதரவாகவே மக்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.
இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேய நாயக்கா யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார். இலங்கையின் புதிய அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை யாழ். >> 04



அடகுக்கான அதிகூடிய பெறுமதியுடன் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றிடுங்கள்...
24 கெரட் இற்கு ரூ.36,000
22 கெரட் இற்கு ரூ.33,000
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
011 5 411 411
ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை
SDB வங்கி

MeTecno The Specialist
கூரைத் தகடுகள் | கேட் தகடுகள் | சென்விச் பெனல் | வளைந்த தகடுகள் | ஓடு வடிவிலான தகடுகள் | பேர்லின்க்ஸ்
METROOF Total Roofing Solutions
மெட்டெகனோ லங்கா பிரைவட் லிமிடட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 5 672 672
077 7 842 544
www.metecnolanka.com
METECNO LANKA (PVT) LTD
Sri Lanka, Germany, Italy, Spain, Portugal, Bulgaria, Mexico, Chile, Columbia, India, Thailand, Vietnam

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு, நவ.6
மட்டக்களப்பு, சவுக்கடிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஆயுதங்கள், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை, மைலம்பாவெளி முகாம் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டன.
சவுக்கடிப் பகுதியில் மரமுந்திரிகைத் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, உரப்பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் கைக்குண்டுகள் 4, வெற்று மகசீன்கள் 2, ரீ-56 ரக துப்பாக்கி ரவைகள் 4, சயனைட் குப்பி மற்றும் அடையாளத் தகடு ஆகியன மீட்கப்பட்டன.
குறித்த வெடிபொருள்கள் அசாதாரண சூழலின்போது, தமிழீழ விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட ஆயுதங்கள், குறித்த பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன. (தி)



## திரி சாரணர் மாநாடு

மன்னார், நவ.6
32ஆவது தேசிய திரி சாரணர் மாநாடு முதல் முறையாக மன்னாரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.
மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள லசார் சிறுவர் வளாக மைதானத்தில் ஆரம்பமாகியுள்ள இந்த மாநாட்டில் 21மாவட்டங்களிலிருந்து 300க்கும் மேற்பட்ட திரி சாரணர்கள் கலந்து கொண்டனர்.
ஆரம்ப நிகழ்வின்போது வட மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமை ஆணையாளர் பேராசிரியர்நிமால்டிசில்வா உட்பட பலர் கலந்துகொண்டனர் . இந்த திரி சாராணர் மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை வரை இடம் பெறவுள்ளது. (ற-21,56)

## 10 அமைச்சர்கள் ஊழல் மோசடி

### அம்பலப்படுத்தவுள்ளது மகிந்த அணி

தேசிய அரசின் பிரதான 10 அமைச்சர்களின் ஊழல் மோசடிகளை எதிர்வரும் புதன்கிழமை அம்பலப் படுத்த வுள்ளதாக மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
மகிந்த அரசின் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டனர் என்று மகிந்த அணியின் பல்வேறு உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தேசிய அரசின் அமைச்சர்களின் ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்தவுள்ளதாக அவர் அறிவித்தார்.
இவ்வாறு அம்பலப்படுத்தவுள்ள அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளனர் என்று அவர் கூறினார். (தி)



நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் சூரசங்ஹார நிகழ்வு நேற்று மாலை 4.15 மணியளவில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நரகாசுரனைப் போரில் எதிர்கொண்டு அருட்கடாட்சம் அளித்தார் ஆறுமுகப் பெருமான். (த-8-10)

# தமிழ், முஸ்லிம் மக்களின் காணி மீளளிக்கப்படும்

## கிழக்கு காணி ஆணையாளர் உறுதி

அம்பாறை, நவ. 6
கடந்த 30 வருடகாலமாக இடம் பெற்ற கொடிய போர் காரணமாக கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்கள் காணிப் பிரச்சினைகளுக்கு உட்பட்டுள்ளனர். பிரச்சினைக்குரிய இந்தக் காணிகளைப் பறிப்பது எமது நோக்கமல்ல. உரியவர்களுக்கு அவற்றை மீளவும் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கமாகும். இவ்வாறு கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர் டி.டி அனுர தர்மதாஸ உறுதியளித்தார்.
பொத்துவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் 30 வருடகாலம் நிலவிய கொடிய போர் காரணமாகக் கிழக்கில் விவசாயிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.
குறிப்பாக கிழக்கில் விவசாயிகள் காணிப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் கூடுதலாக பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் முக்கிய காணிப் பிரச்சினைகள் உள்ளன.
இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்குத் தீர்வை வழங்கவேண்டும் என்ற நோக்கிலேயே நானும் பிரதேச செயலாளரும் செயற்பட்டு வருகின்றோம்.
எனினும் அரசின் சில சட்ட திட்டங்களால் வனபரிபாலனத் திணைக்களம் போன்றவை கையகப்படுத்தியுள்ள காணிகளை மீளப் பெற்றுக் கொடுப்பதில் நாம் சவால்களை எதிர்கொண்டு வருகின்றோம்.
உங்கள் காணிகளை உங்களுக்குத் தரவேண்டுமென்பதே எமது நோக்கமேயன்றிக் காணிகளைப் பறிப்பது எமது நோக்கமல்ல.
ஆனாலும், முறையான அரச காணி உத்தரவுப்பத்திரங்களை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அவர்களது காணிகளை எம்மால் பெற்றுத்தர முடியுமென நம்புகின்றோம்.
தற்காலிக, ஒருவருட கால உத்தரவுப் பத்திரம், போலி உத்தரவுப் பத்திரம் வைத்திருப்போருக்கு எத்தகைய தீர்வும் கிடைக்காது.
காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்கென கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் முக்கிய அங்கம் வகிக்கும் ஐந்து குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
இதன்படி மட்டக்களப்பு–அம்பாறை மாவட்டங்களில் தலா இரு குழுக்கள் வீதமும் திருமலையில் ஒரு குழுவும் செயற்படவுள்ளது – என்றார்.
பொத்துவில் பிரதேச செயலாளர் என்.எம்.எம்.முஸாரத் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டத் தலைமைக் காணி உத்தியோகத்தர் கே.எல்.எம்.முஸம்மில், முகாமைத்துவ உதவியாளர் எம்.எஸ். எம்.றியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
விவசாயிகள் அமைப்புக்களினால் முன்வைக்கப்பட்ட காணிப் பிரச்சினைகள் தொடர்பிலான காணி உரிமைக்கான அம்பாறை மாவட்டச் செயலணியின் மனுக்கள் கூட்டத்தின்போது பொத்துவில் பிரதேச செயலாளர் முஸாரத்திடம் கையளிக்கப்பட்டன.
முறையான அரச காணி உத்தரவுப் பத்திரத்துடன் தாம் விவசாயம் செய்து வந்த காணிகளை வனபரிபாலனத் திணைக்களமும் இராணுவமும் கையகப்படுத்திக் கொண்டு, தமது காணிகளில் விவசாயம் செய்ய விடாமல் தடுத்து வருவதாக விவசாயிகள் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.
பொத்துவில் கிரான் கோமாரி கண்டத்தில் 1957ஆம்ஆண்டு வழங்கப்பட்ட அரச காணி உத்தரவுப் பத்திரம் கொண்ட 177 விவசாயிகளின் 885 ஏக்கர் நெற்காணிகளை மீட்டுத் தருமாறும், கரங்கோவா – பாலையடி வட்டை பகுதியிலுள்ள 503 ஏக்கர் காணியை மீட்டுத் தருமாறும் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கையை முன்வைத்தனர். (த-30)

## மண்ணுள் புதையுண்ட ஐவர் உயிருடன் மீட்பு

கொழும்பு, நவ.6
நுவரெலியா கலுகலை அபேபுர பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை, மண்மேடு ஒன்று சரிந்து விழுந்ததில், புதையுண்ட ஐவர், மீட்டெடுக்கப்பட்டனர் என நுவரெலியா பொலிஸார் தெரிவித் தனர்.
இவ்வாறு மீட்கப்பட்டவர்கள், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
நுவரெலியா கலுகலை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட அபேபுர பகுதியில், புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடமொன்றில், பணியாள்கள் கடமையில் ஈடுபட்டிருந்துள்ளனர்.
இதன்போது, அங்கிருந்த மண்மேடு ஒன்று சரிந்து விழுந்ததில், ஐவர் மண்ணுக்குள் புதையுண்டனர்.
இதனைத் தொடர்ந்து, அங்கு பணியாற்றிய மற்றையவர்கள், இயந்திரங்களின் உதவியுடன் மண்ணை அகற்றி, புதையுண்ட ஐவரையும் மீட்டு, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்த்தனர்.
இதில், ஒருவருடைய நிலைமை கவலைக்கிடமாக இருந்தமையால், அவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட வைத் தியசாலையின் வைத்தியரொருவர் தெரிவித்தார்.
இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (தி)

## வேலை வாய்ப்பு

கொழும்பு பேலியாகொட அச்சகத்துக்கு மெஷின் உதவியாளர், பேப்பர் ஏற்றி இறக்க வேலையாள்கள். 18 முதல் 40 வயது வரை. திறமைக் கேற்ப சம்பளம் கொடுக்கப்படும்.

**071 435 8401**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் உள்ள அரியாலைப் பகுதியில் இலந்தைக்குளம் வீதியும் புகையிரதப் பாதையும் சந்திக்கும் இடத்திற்கு அருகில் உள்ள ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 593 7761 / 077 771 2745**

## வாழ்த்துகிறோம்



**Rtn.யசோதை சரவணபவன்**
யாழ்ப்பாணம் E றோட்டரி கழகத் தலைவர்

**பதவியேற்பு நாள் 2016.11.06 வாழ்த்து**

மக்கள் நலனோம்பு மகத்தான பணியேற்று
தக்கஓரு தலைவியென தகைசாலும் யசோதையே
மிக்கபல புகழோங்கு யாழ்நகரின் ஈறொட்டேரி
பக்கமெலாம் புகழ் பரப்பி பாரினிலே சிறக்கட்டும்

வாழ்த்துவோர்:
பயனாளிகள், ஆசிரியர்கள்,
ஆட்சிக் குழு உறுப்பினர்கள்,
வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்,
இல.133, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(C22944) (10.17.18)

## இலங்கை கணக்காளர் சேவை – தரம் III
## போட்டிப் பரீட்சை – 2016

**தயாரிப்படுத்தல் வகுப்புக்கள் ஆரம்பம்:**
12 நவம்பர் 2016 முதல்

அனுமதிக்காக அழையுங்கள் 0777836653

⇒ துரித தயார்ப்படுத்தல் கற்பித்தல் மற்றும் மீட்டல் பயிற்சிகள்
⇒ பட்டயக் கணக்காளர் மற்றும் அரச கணக்காளர்கள் உள்ளடங்கிய அதிதிறமை வாய்ந்த விரிவுரையாளர்கள்
⇒ கற்றலுக்கான விசேட கையேடுகள்
⇒ கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்கள் ஆய்வு
⇒ எதிர்பார்க்கை வினாக்களுடனான விடையளித்தல் நுட்பங்கள்

வெற்றிகரமான பெறுபேற்றை உறுதிசெய்வதற்காக இணையுங்கள்

**INSTITUTE OF BUSINESS MANAGEMENT**
IBM
Quality Learning for Quality Life
01, 2nd Lane,
Power House Rd,
Jaffna
(பஸ் நிலையம் அருகாமை)
WEB: www.ibmsrilanka.com MAIL: info@ibmsrilanka.com

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2815 திகதி 05.11.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
**07 47 61 63 G 26 ரூ.34,881,400/-**

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 572
சீட்டிழுப்பு திகதி 2016.11.05 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
**13 35 59 66 I**
சுப்பர் ஜக்பொட்
**ரூ. 58,732,720/=**



## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
## பதவி வெற்றிடம்

| | | |
|---|---|---|
| 03) பதவி | - | களஞ்சிய பொறுப்பாளர் |
| குறியீட்டு இல | - | 202/13 |
| சம்பளத்திட்டம் | - | 14230 - 120 X 10 - 130 X 10 - 16730 |

(13/2015 சுற்று நிருபப்படி)
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
அ) கூட்டுறவு பணியாளரின் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் /கூட்டுறவு பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்பு பட்ட துறைப்பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் / க.பொ.த (சாதாரண தரம்) எண்கணிதம்/ வர்த்தக கணிதம் / கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
**குறிப்பு:**
1. சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது
3. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
4. சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்த வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ 25.11.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

(சி/23321) (17.19.20)
பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.

## American Innovage International (pvt) Ltd
## பதவி வெற்றிடம்

American Innovage நிறுவனத்தின் புதியகிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க இருப்பதனால் அதற்கான பதவி வெற்றிடங்கள் ஒவ்வொரு பதவிகளுக்கும் 10 பேருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
**வயதெல்லை: 18-35 தகைமை: O/L, A/L**
Distributer, Supervisor, Administrator, Asst.Manager, Manager
வெளி மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**077 7009820, 077 5127011**

## Floence Nighhtingaate (F.N.R)
## தாதியர் பாடசாலை



இப்பொழுது புக்கம் புதிதாக அனைத்து வசதிகளுடனும் மருதனார் மடத்தில் குறுகிய காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் தாதியர் ஆகி தொழில் புரிய முடியும்.

**படித்துவிட்டு வேலை இன்றி இருக்கின்றீர்களா?**

**நிச்சயமாகத் தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி ஒரு வருட பாடநெறி**

- 3 மாதங்கள் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள். பின் தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலை வாய்ப்பு
- இப்பாடநெறி ஊடாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.
- தகைமைகள்
  O/L ஆறு பாடம் சித்தி
  16 - 35 வயதுவரை

நேரம் :- திங்கள் முதல் வெள்ளி வரை
முற்பகல் 9.00 - பிற்பகல் 2.30 வரை
கிழமையில் இரண்டு நாள்கள் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறும்.

- MLT வகுப்புக்களும் நடைபெறும்.
- தகைமைகள்
  A/L விஞ்ஞானம் (Bio Science)

மேலும்

- அரசாங்க வைத்தியசாலை ஓய்வுபெற்ற தலைமைத் தாதியர் மூலம் சிறந்த ஆலோசனை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 718 6438, 076 574 2032
web:- fnighingale.com
கே.கே.எஸ்.றோட், மருதனார் மடம், யாழ்ப்பாணம்.

## வெற்றுக் காணி தேவை

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து 7 கிலோ மீற்றர் தூரத்திற்கு உள்ளே 10 பரப்பு நிலம் தேவைப்படுகின்றது. அறியத்தரவும்.

**075 310 1116**

## MAJESTIC CINEPLEX Jaffna
A CEYLON THEATRES CINEMA
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம 10.00 / 1.00 / 4.00 / 7.00
சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat 9.30 p.m






ப்ரொன்ஸ்
10.30 a.m / 4.30 p.m 1.30 p.m / 7.30 p.m
Fri/Sat 9.30 p.m

விசாரணை ☎ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

## அதிகாரம்...

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை உருவாக்க முயல் வதற்கான அடிப்படைக் காரணமே இனங் கள் மத்தியில் நிலவும் பேதங்களை இல் லாமல் செய்வதற்குத்தான்.

நாம் மக்கள் கருத்தறியும் அமர்வுகளை நாடு முழுவதிலும் நடத்தினோம். இதன் போது கருத்துத் தெரிவித்த பெரும்பான் மையானவர்கள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினர். கொழும்பு அரசின் கீழ் உள்ள அதிகாரங் கள் மாகாணங்களுக்குப் பகிரப்படவேண் டும் என்பதை அழுத்திச் சொன்னார்கள்.

புதிய அரசமைப்பு சமத்துவம், அடிப்படை மனித உரிமைகளைப் பேணத்தக்க வகையிலும், அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலுமான அரசமைப் பாக அமையவேண்டும். நாட்டில் எந்தப் பாகுபாடும் இருக்கக்கூடாது என்பதற்கான பரிந்துரைகளையே புதிய அரசமைப்புக் காக நாம் முன்வைத்துள்ளோம்.

புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்து வதற்குப் பொது வாக்கெடுப்பு மக்கள் மத்தியில் நடத்தப்பட வேண்டும். நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையுடன் நிறைவேற்றப்படவேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில், ஒரு இனமோ அல்லது ஒரு மதமோ சார்ந் தவர்கள் மட்டும் அதிகாரங்களைப் பயன் படுத்துவதாக அமையக் கூடாது. சகல இனத்தவர்களும், சகல மதத்தவர்களும் இதில் பங்காளிகளாகப் பங்கேற்க வேண் டும். இவற்றைப் புதிய அரசமைப்பு உறுதி செய்ய வேண்டும் – என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பொது அமைப்பு பிரதிநிதிகள், பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது பேச்சுக்கள் அமைந்திருக்கின்றன. எப்படி புதிய அரசமைப்பு மதச்சார்பற்றதாக இருக் கும் என்று கேள்வி எழுப்பினர். அத்துடன் வேலை வாய்ப்புக்களை உறுதி செய்வதற் கான சட்டங்கள் ஏதாவது புதிய அரசமைப் பில் உள்ளடக்கப்படுமா என்பது தொடர் பாகவும் வினா எழுப்பப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பேராசிரியர் நவரத்ன பண்டார, ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன, முன்னாள் சட்ட பீடாதிபதி என்.செல்வகுமாரன், வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவ ராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறி தரன், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(த-5-8)


## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில்
பரிசாரகராகக் கடமையாற்றும்
**தங்கராஜ் ஜெயராஜ்**
**இமானுவேல் பொனிபேஸ்**
அவர்கள் 04.11.2016 அன்று
காலமானதையிட்டு கலங்கி நிற்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத்
தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிசங்கம்**
**அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலை**
**கைதடி.**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சகுந்தலாதேவி
சந்திரசேகரம்
திதி: அபரபக்க பூரணை தினம்
(15.11.2016)

தோற்றம் 14.05.1945 — மறைவு 07.11.2014

07.11.2014 அன்று காலமான
தாவடியைச் சேர்ந்த திருமதி
சகுந்தலாதேவி சந்திரசேகரம் அவர்களின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

59, சுதுமலை வீதி, தாவடி,
கொக்குவில்.

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 07.10.2016
வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவி
**திருமதி**
**கற்கண்டு**
**சிங்கன்**
அவர்களின் அந்தியேட்டிக்
கிரியைகள் இன்று
(06.11.2016) ஞாயிற்றுக்
கிழமை காலை 6.00
மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

" நந்திதமஹால் "
கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு.
(J.5896)
(14,17,18)

குடும்பத்தினர்.

## பதவி வெற்றிடங்கள்

**இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

**Qualification**
* 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
* GCE (O/L, A/L)
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

**Benefits**
- Basic Salary
  *Marketing Executive - 15,000/= +++
  *Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Telephone Facilities
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)
- Traveling Allowance
- Bike Allowance

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com

Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

## மரண அறிவித்தல்

# சிங்கராசா பத்மநாதன்



(யாழ்.கூட்டுறவு அச்சகப் பிரதம அச்சுக்கோப்பாளரும், சைனிஸ் பிறிண்டர்ஸ் உரிமையாளரும்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா பத்மநாதன் 04.11.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயரூபினியின் அன்புக் கணவரும், குமுதினி சுஜீவன் (பாதுகாப்பு சேவை), முகுந்தன் (சாரதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாபரன் (நல்லூர் பிரதேசசபை), தர்சினி, நதியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்ற புஸ்பராணி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன், ஜெயகாந்தன் (கனடா), நிமலகாந்தன் (கொழும்பு),மாலினி, சாந்தினி (லண்டன்), ஸ்ரீயானி (லண்டன்), சயானி (லண்டன்), பிறேமினி (லண்டன்), சுமதினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நேமிநாதன், கமலநாதன், தியாகநாதன், புஸ்பராஜ், சிவரூபன், காந்திமதி ஆகியோரின் சகலனும், கபிர்சன், சங்கீதன், கஜானி, தர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'யோகஸ்தன்'
வைரவர் கோயில் ஒழுங்கை,
மானிப்பாய் கிழக்கு.
(J/5875)
(11,18,21)

தகவல்:
**ஜெயரூபினி - மனைவி.**

**வாள்வெட்டு...** குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-106)

**ரயிலில்...** பொலிஸார் தெரிவித்தனர். மன்னார் - புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மது நஜிபுதீன் (வயது-29) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-4)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

இலங்கையின் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. 35,000/= வரை மாதாந்த சம்பளம் பெறக்கூடிய அரிய வாய்ப்பு.

**078 600 7598**

## வேலையாள்கள் தேவை

01. Technical Officer
02. Technical Assistant
(முல்லைத்தீவுப் பிரதேசத்தில்)
03. மேசன்
04. உதவியாள்கள்
05. வயறிங், பிளம்பிங் வேலை தெரிந்தவர்கள்
06. வெல்டர்

**076 866 3944**

## Yarl Beauty & Language's Skills College

YBLSC

அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

கிழமை நாள் பிரிவுகள் 11.11.2016 (வெள்ளி) 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு பிரிவுகள் 12.11.2016 (சனி) 10.00 மணிக்கு

அனைத்து பயிற்சிகளும் மிகச்சிறந்த செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆங்கில, சிங்கள மொழிக்கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

முதலில் இணைந்துகொள்ளும் 10 மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம் இலவசம்.

பயிற்சியின் நிறைவில் தொழில்வாய்ப்பு, சுய தொழில் ஆரம்பிப்பதற்கான வங்கி கடன் வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும். - இயக்குனர் -

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலைக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)



## நாளைய தலைவர்களுக்கு வழங்கப்படும் கௌரவிப்பு பிரணாம புலமைப்பரிசில் தொடர்ந்தும் 16வது தடவையாகவும்!

நீங்களும் பிரணாம புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பியுங்கள்!

2017 செலிங்கோ லைஃப் பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது:

- ஆண்டு 5 புலமைப்பரிசில் - 2016
- க.பொ.த (சாதாரண தரம்) - 2015
- க.பொ.த (உயர் தரம்) - 2015
- தேசிய திறமை விருதுகள் - 2015/2016

பிரணாம புலமைப்பரிசில்

மேலதிக விபரங்களுக்கு (011) 2 461 461 ஐ அழையுங்கள் அல்லது www.ceylincolife.com இற்கு பிரவேசியுங்கள்.

**CEYLINCO LIFE®**

www.ceylincolife.com

## வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

ROYALCERT · DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00 · IAF International Accreditation Forum
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC · UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations · ICDL · bcs · abe · SQA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

15, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

13, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

26, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### KIDS' Class — Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

19, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**British Way® English Academy**

**Contact** (Jaffna Branch) : **033 33 40 600**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

**வீடு தேவை**
யாழ் நகரை அண்மித்த பகுதிகளில்
வீட்டுடன் காணி தேவை.
**077 361 1282, 021 222 3817**

## தமிழகப்...

மீனவர்களுக்கு இடையிலான மூன்றாம் கட்டப் பேச்சு கடந்த 2 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்றது. இந்தக் குழுவில் இலங்கை மீனவர்கள் சார்பில் பங்குபற்றிய வடபகுதி மீனவர்கள் நாடு திரும்பியுள்ளனர். பேச்சில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் குழுவுக்குத் தலைமை தாங்கிய என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தாவது:

தமிழக மீனவர்கள் சார்பில் கலந்து கொண்டவர்கள் எம்மைக் கோபத்துக்குள் தள்ளும் வார்த்தைகளைப் பயன்படுத்திப் பல்வேறு விடயங்களைப் பேசினர். நாம் அமைதியாகவே கருத்துக்களைத் தெரிவித்தோம். அவர்களின் உணர்ச்சி உந்துதலுக்குள் சிக்கிக் கொள்ளவில்லை.

தமிழக மீனவர்கள் மீது நாம் சுமத்திய குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டனர்.

தமிழக மீனவர்கள், எமது கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கான அனுமதியையும், கைப்பற்றப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதிலுமே அழுத்தமாக இருந்தார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இழுவை மடியைப் பயன்படுத்தி மீன்பிடிக்கின்றனர் தானே என்றும் அவர்கள் கேட்டார்கள்.


3வருடகாலம் அல்ல 3 நிமிடம் கூட எமது கடற்பரப்பில் தொழில் செய்ய அனுமதிக்க முடியாது. எல்லை தாண்டும் மீன்வர்கள் கைது செய்யப்பட வேண்டும். அவர்களின் படகுகள் கைப்பற்றப்படவேண்டும். மீனவர்கள் விடுவிக்கப்படலாம். ஆனால் படகுகளை மீளக் கையளிக்க முடியாது என்பதைத் தெளிவாக அவர்களுக்குச் சொன்னோம்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் படகுகளை விடுவிக்க நாம் இணக்கம் தெரிவிக்கவில்லை – என்றார்.

(கு-5-106)

**காணி விற்பனைக்கு**
நுணாவில் சந்தியில் உள்ள
- 7 1/2 பரப்பு காணி உடனடியாக
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
Tel: 075 24 66 7 44
(C/23788)(10,18)

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 15 . 04 . 1922

கந்தன் அடியில் 05 . 11 . 2016

### இராமலிங்கம் சின்னத்துரை

**( இளைப்பாறிய யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்)**

**யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சின்னத்துரை நேற்று (05.11.2016) சனிக்கிழமை கந்தன் கழலடைந்து விட்டார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2016) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**460/5, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(J 5912) (16,17,19)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சிவராசா



யாழ். சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவராசா 04.11.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மூத்த புதல்வரும் நல்லதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் சந்தானலட்சுமியின் அன்புக்கணவரும் சிவானுஜா (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சிவாநந்தினி (கனடா), சியானி (ஜேர்மனி), தயன் (கனடா), மயூரதி (ஆஸ்திரேலியா), அயந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஸ்மலர் (கனடா), சரஸ்வதி, சிவகுமார் (கனடா), தங்கமணி காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் விமலன், ராம்குமார் (கனடா), அன்பழகன் (ஜேர்மனி), அருணன் (ஆஸ்திரேலியா), மீரா ஆகியோரின் அன்பு மாமனும் கந்தசாமி (கனடா), சுப்பிரமணியம், சுகந்தி (கனடா), கணேசானந்தன், இராகினி, இராசலட்சுமி, அன்னலட்சுமி, தவமணிதேவி, சிவராசா (லண்டன்), சிவானந்தம் ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஹனுஜா, பூர்ஜா, விரோஷின், பிரஜின், அபினேஷ், அனுஷ்கா, அபிஷ்ணன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சுயன் (மகன் - கனடா)**
**தொ.பே - 141 673 70618**
**செல்லிடப்பேசி -164 734 56902**

**தகவல்:**
**விமலன் (மருமகன்)**
**கல்வயல், சாவகச்சேரி.**
**077 2105340**

(சி/157)(17,19,20)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கருணாநிதி

(சூரியன் களஞ்சியம் உரிமையாளர்)

காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.194, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கருணாநிதி (செந்தில்) நேற்று (05.11.2016) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையாப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவசோதி (கந்தன் களஞ்சியம்), கற்பகநாதன் (ஸ்ரீமாதவன்) மற்றும் பாக்கியவதி, காலஞ்சென்ற பரம்சோதி (வெங்கடேஸ்வரா) மற்றும் தவமணி, கோகிலாவதி, கணேசன் (ராசு களஞ்சியம்), சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாநிதி (கொழும்பு), தயாபரன் (சூரியன் களஞ்சியம் - யாழ்ப்பாணம்), தயாநந்தினி (லண்டன்), தயாளன் (நாராயணா ஹாட்வயர்), தயாநந்தன் (சூரியன் களஞ்சியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரராஜசிங்கம் (நாராயணா ஹாட்வயர்), வாசுகி, சிவராசா (லண்டன்), கஜந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரி, மஞ்சரி, கோபிநாத், கஜீவன், அனோஜன், அபிஷன், மதுரன், மிதுரா, மதுரா, சங்கவி, சஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.11.2016) திங்கட் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.194, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/23319) (11,17,18,21)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 7044**



வடமாகாண மரநடுகை மாதம்

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."
- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

கார்த்திகை 01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்"

# காணி விடுவித்த இராணுவம் கால்நடைகளை அபகரித்தது

## வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.6
வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த நூற்றுக்கணக்கான கால்நடைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் கொண்டு செல்லப் பட்டுள்ளன. அதன்பின்னரே குறித்த பிரதேசங்கள் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டுள் ளன.

இவ்வாறு மக்கள் கவலை தெரிவித்த னர்.

அவர்கள் தெரிவித்த தாவது-

வலி.வடக்கில் சில பிரதேசங்கள் நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்கு விடு விக்கப்பட்டன. விடு விக்கப்பட்ட பகுதி களில் நூற்றுக்கணக் கான கால்நடைகள் நடமாடியமைக்கான தடயங்கள் காணப்படுகின் றன. அவற்றின் கால்தடங்களும் காணப்படு கின்றன. அங்கிருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேறியேறியபோது நாம் கால்நடைகளைக் கைவிட்டே சென்றிருந்தோம்.

எமது பிரதேசங்களை இவ்வளவு காலமும் ஆக் கிரமித்திருந்த இராணுவத்தினர் இருப்பிடங்களை அழித்துள்ளனர். எமது சொத்துக்கள் சூறையாடப் பட்டுள்ளன. அவர்கள் எமது கால்நடைகளை யாவது விட்டுச் செல்வார்கள். அவை எமது வாழ் வாதாரத்துக்கு உதவும் என்று எதிர்பார்த்தோம். கால்நடைகளைத் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டு சென்ற பின்னர் வெற்றுத்தரைகளையே இப்போது விடுவித்துள்ள னர்.

> நாம் இடம்பெயர்ந்தபோது 200க்கும் மேற்பட்ட மாடு கள், 3000 வரையான ஆடுகள் போன்றவற்றை கைவிட்டே சென்றி ருந்தோம். 26 ஆண்டுகளில் அவை இப்போது பல்கிப் பெருகியிருக்க வேண்டும். அவற்றை உரிமையாளர் களிடம் ஒப் படைக்கும் எண்ணம் இராணுவத்துக்கு இல்லை என்றே தோன்று கின்றது.

நாம் இடம்பெயர்ந்தபோது 200க்கும் மேற்பட்ட மாடு கள், 3000 வரையான ஆடுகள் போன்றவற்றை கைவிட்டே சென்றிருந் தோம். 26 ஆண்டுகளில் அவை இப்போது பல்கிப் பெருகியிருக்க வேண்டும். அவற்றை உரிமையாளர் களிடம் ஒப்படைக்கும் எண் ணம் இராணுவத்துக்கு இல்லை என்றே தோன்று கின்றது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும் எருக்கள், கால்தடங்கள் என்பவற்றைப் பார்க்கும் போது குறித்த பகுதி விடுவிக்கப்பட்டபோதே கால்நடைகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்று வெளிப்படையாகத் தெரிவிகின்றது. எமது கால் நடைகளை எம்மிடம் ஒப்படைக்க இராணுவத்தி னர் முன்வர வேண்டும்.- என்றனர். (ற-101)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வீதிகள் உடன் சீராக்கப்படும்

## யாழ்.மாவட்ட செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.6
வலி.வடக்கில் தற்போது விடு விக்கப்பட்ட பகுதிகளில் சகல வீதிகளும் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட்டு மக்களின் சீரான போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்படும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்ற மாவட்ட செயலர் அங்குள்ள நிலமைகள் குறித்து ஆராய்ந்தார். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் தெரிவித்தாவது-

வலி.வடக்கில் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று ஆராய்ந்தேன். குறித்த பிரதேசத்தின் அனைத்து வீதிகளும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படு கின்றன. பிரதான வீதிகளையும், குறுக்கு வீதிகளையும் உடனடி யாகத் துப்புரவு செய்யுமாறு பணித்துள்ளேன்.

விடுவிக்கப்பட்ட பகுதியில் உள்ள காணி உரிமையாளர்கள் பிர தேச செயலகத்தில் பதிவு மேற் கொண்டு மீள் குடியமரவரும் பட் சத்தில் அவர்களுக்குக் காணிகள் துப்புரவு செய்வதற்கான கொடுப் பனவுகள் உடனடியாக மீள் குடி யேற்ற அமைச்சின் ஊடாக வழங் கப்படும்.

அதேபோன்று ஏனைய தேவை கள் தொடர்பிலும் மதிப்பீடுகள் இடம்பெறுகின்றன. அவை தொடர் பிலும் கவனம் செலுத்துகின் றோம் - என்றார்.

குறித்த பகுதியில் இருந்து விடு விக்கப்பட்ட பாடசாலையை வல யக் கல்வி அதிகாரிகள் பார்வை யிட்டுஅதன் சீரமைப்பிற்கானமதிப் பீடுகளைமேற்கொண்டனர்.(ற-101)

# மேட்டு நில செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

## 50 வீத மானிய அடிப்படையில் ஊடுசாகுபடி இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், நவ.6
யாழ்.மாவட்டத்தில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பயிர்களுக்கு இடையே வளரும் களைகளை அழிப் பதற்காக ஊடுசாகுபடி எனும் இயந்திரத்தை விவசாயத் திணைக் களம் கொள்வனவு செய்துள்ளது என்று

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது-

89 ஊடுசாகுபடி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக மாகாண விவசாய அமைச்சு குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி யில் 4.45 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மேட்டு நிலப் பயிர்ச் செய்கையின்போது பயிர்களுக்கு இடையே வளரும் களைகளைக் கட்டுப்படுத்தி மண்ணைப் பதப்படுத்துவதற்கு இந்த இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது. 50 ஆயிரம் ரூபா பெறு மதியான 69 ஊடுசாகுபடி இயந்திரங்கள் தற்போது யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

கரவெட்டி, புலோலி, புத்தூர், உரும்பிராய், சண்டிலிப்பாய், தெல் லிப்பழை, தொல்புரம் ஆகிய விவசாய போதனாசிரியர்கள் பிரிவு களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் அவை வழங்கப்பட்டுள்ளன.

கொள்வளவு செய்யப்படவுள்ள 21 இயந்திரங்களை தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# மூளாயில் ஆடுகள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.6
மூளாய் தெற்கில் உள்ள ஆட்டுப் பண்ணையாளர் ஒருவரின் வீட்டிலிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆடுகள் கடந்த வியா ழக்கிழமை திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படு கின்றது.

நள்ளிரவு வேளை வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி யுள்ளனர். ஏழு மறி ஆடுகள் திருடப்பட்டமை வீட்டிலிருந்த வர்களுக்கு விடிந்தபின்னரே தெரியவந்தது என்று கூறப் பட்டது.

மூளாயில் அண்மைக்கால மாக ஆடுகள் திருடப்படுவது அதிகரித்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். மூன்று வாரங்களுக்கு முன்னரும் ஒரு வீட்டில் ஆடு திருடப் பட்டிருந்தது என்றும் அவர் கள் தெரிவித்தனர். (ற-10)

# குளவி கொட்டி ஐவர் பாதிப்பு

திருகோணமலை, நவ. 6
திருகோணமலைகெமுனு புர பகுதியில் தேசிய இளைஞர் படையணி பயிற்சி முகாம் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டவர்கள் ஐவர் நேற்றுக் குளவிக் கொட் டுக்கு இலக்காகிய நிலையில் திருகோண மலை பொது வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டனர்.



குளவிக் கொட்டுக்கு இலக்காகிய ஐவரும் மகாதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-45)

# தீவகத்தில் கால போகச் செய்கையில் ஆர்வமில்லை

யாழ்ப்பாணம், நவ. 6
தீவக வலயத்தில் காலபோக மழையை அடுத்து பெரும்போகத்துக்கான நெற்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் தீவக வலயத் துக்குட்பட்ட விவசாயிகள் இந்த காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதில் ஆர்வமற்ற வர்களாகக் காணப்படுகின்றனர் என்று விவ சாயத் திணைக்களம் தெரிவித்தது.

காலபோக மழையை அடுத்து குடாநாட்டில் பெரும்போகத்துக்கான நெற்செய்கை செய் வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின் றனர். தீவக வலயத்துக்குட்பட்ட விவசாயிகள் இந்தக் காலபோக நெற்செய்கையில் ஈடுபடு வதில் ஆர்வமற்றவாகளாகக் காணப்படுகின் றனர். பிந்திய மழை வீழ்ச்சியும், கட்டாக்காலி கால்நடைகளின் அதிகரிப்பு மற்றும் நெற் காணிகளுக்கு சொந்தக்காரர்கள் தமது பிள் ளைகளின் படிப்பு மற்றும் தமது வேலை வாய்ப்பைக் கருத்தில் கொண்டு வெளிமாவட் டங்களுக்கு வெளியேறியமை போன்றன தீவக வலயத்துக்குள் நெற்செய்கை வீழ்ச்சி யடையமுக்கியகாரணங்களாகஅமைகின்றன.

கடந்த வருடம் வேலணையில் 55 ஹெக் ரேயர் நிலப்பரப்பில் விதைக்கப்பட்டு 110 மெற் றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட் டது. ஊர்காவற்றுறையில் 45 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விதைக்கப்பட்டு 90 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. புங்குடுதீவில் 32 ஹெக்ரேயர் நிலப்பரப்பு விதைக்கப்பட்டு 65 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

நெடுந்தீவில் 7 ஹெக்ரேயர் நிலப் பரப்பு விதைக்கப்பட்டு 15 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த வருடம் வேலணையில் 32 ஹெக்ரேயர் நிலப்பரப் பும், ஊர்காவற்றுறையில் 40 ஹெக்ரேயர் நிலப்பரப்பும், புங்குடுதீவில் 32 ஹெக்ரேயர் நிலப்பரப்பும், நெடுந்தீவில் 5 ஹெக்ரேயர் நிலப்பரப்பும் தெரிவு செய்யப்பட்டு நெல் விதைப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# தமிழர்கள் வாழும் கிராமத்துக்கு தமிழ் தெரியாத கிராம அலுவலர்

## குற்றஞ்சாட்டுகின்றனர் ஒலுமடு கிராம மக்கள்

யாழ்ப்பாணம், நவ.6
நெடுங்கேணி, ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் 380 தமிழ்க் குடும்பங்கள் மட்டுமே வாழும் நிலையில் தமிழ் மொழியே தெரியாத சிங்கள கிராம அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் மேலும் தெரி வித்ததாவது–
வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒலுமடுக் கிராம சேவகர் பிரிவில் 380க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. அனைத்துக் குடும்பங்களும் தமிழ்க் குடும்பங்களே. குறித்த கிராமசேவகர் பிரிவுக்கு நேற்று முதல் தமிழ் மொழியே தெரியாத ஒரு சிங்களக் கிராம அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். கிராம அலுவலரை அணுகி உரையாடியபோது அவர் வேறு ஒருவரை அழைத்து சிங்களத்தில் மொழி பெயர்க்குமாறு கோருகின்றார். மொழி பெயர்த்த பின்னரே பதிலளித்தார்.

தமிழ் மக்கள் மட்டும் வாழும் பகுதியில் அதிக தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்பும் இன்றிய நிலையில் காத்திருக்க, சிங்கள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி எமது பிரதேசத்துக்கு அனுப்புகின்றனர். பணிக்கு வந்தவர்களுக்கு பணி செய்ய இன்னும் ஒருவர் தேவைப் படுகின்றார். மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் செல்லும் மக்களோ அல்லது சிங்கள மொழி தெரி யாதவர்கள் இந்தக் கிராம சேவகரிடமிருந்து எவ்வாறு சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். உரிய வர் கள் இது விடயத்தில் தலையிட்டு ஆவன செய்யவேண்டும்.– என்ற னர்.

இது தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேச செயலா ளரிடம் கேட்டபோது– செய்தி சேகரிப்புகாக நேரில் வரும் சந்தர்ப்பத் தில் தகவல் வழங்கப்படும். தொலைபேசித் தொடர்புகளுக்கு செய்தி விளக்கம் வழங்க முடியாது. எமது பிரதேசத்தில் முன்னர் ஒரு செய்தித் தவறு நிகழ்ந்துள்ளது.– என்றார். (ற–101)



# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறே பரிந்துரை

### அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.6
விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பெருஞ் சம்பவங்களுடன் தொடர்புபட்ட கருணா, பத்மநாதன் போன்றோர் சுதந்திரமாக நடமாடும்போது சிறு விடயங்களுடன் தொடர்புடைய அரசியல் கைதிகளை விடுதலை செய்யலாம் என்றே பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளது. அது தொடர்பில் க்ருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவர் தெரிவித்ததாவது–
நீண்ட காலம் தடுப்பில் இருந்ததன் அடிப்படையில் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கும் அதிகாரம் அமைச்சுக்குக் கிடையாது. அது ஜனாதிபதியால் மட்டுமே முடியும்.

தற்போது கைதிகளாக உள்ளவர்களில் பலரை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யலாம். அதற்கான பரிந்துரையை நாமும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

கூட்டமைப்பின் சார்பில் கடந்த காலங்களில் இது தொடர்பில் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அவகாசம் கோரப்பட்டிருந்தது. அந்தக் கால அவகாசம் நிறைவுறும் நிலையில் அவர்கள் இவ்வாறு கோரியிருக்கலாம்.

இது தொடர்பாக ஆராய்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை இடம்பெறவேண்டும் என்றே நாமும் கருதுகின்றோம்.– என்றார். (ற–4,101)

# ஆசிரியர் இடமாற்றத்தை கண்டித்து போராட்டம்

யாழ்ப்பாணம், நவ 6
கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி கற்பித்த ஆசிரியருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டமையை எதிர்த்து பாடசாலை மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் நேற்றுமுன்தினம் கதவடைப்புப் போராட்டம் ஒன்றைமுன்னெடுத்தனர்.

சிறந்த முறையில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் ஆசிரியரை திடீர் என இடமாற்றம் செய்வதற்கான காரணம் என்ன?. பாடசாலையில் ஏற்கனவே ஆசிரியர் பற்றாக் குறை காணப்படுகின்றது. இந்த நிலையில் திடீர் இடமாற்றம் வழங்கியமையைக் கண்டிக்கின்றோம் என்று போராட்டக்காரர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக உடனடியாகத்தீர்வு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான இடமாற்றங்களை ஓகஸ்ட் மாதத்தில் வழங்கப்பட வேண்டும். தற்போது குறித்த ஆசிரியர் குறித்த பாடசாலைக்கே திரும்பவும் மாற்றப்பட்டுள் ளார். ஜனவரி மாதத்தில் இடமாற்றம் வழங்கப்படும் என்று கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் கெ.முருகவேல் தெரிவித்தார். (ற–6,34)



ஹற்றன் நகரிலுள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சூரசம்ஹார நிகழ்வு நேற்று நடைபெற்றது.

# கூட்டுறவுச் சங்கங்களை வகைப்படுத்த வேண்டும்

## வட மாகாண கூட்டுறவு ஊழியர்கள் தொழிற் சங்கத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.6
வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களைத் தரப்படுத்தி வகைப்படுத்த கூட்டுறவு அமைச்சு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். சங்கங்களின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக மாவட்ட ரீதியில் கூட்டுறவு மாநாடுகளை நடத்தி அவற் றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் தொழிற் சங்கத்தின் தலைவர் வ.சிவகுமார் தெரிவித்தார்.

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருக்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடத்தப்பட்ட சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–
தற்போதைய சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் செயற்படுகின்றன. சங்கங்களின் போதிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாததால் அவை பின்னோக்கிய நிலையில் காணப்படுகின்றன. சில கூட்டுறவு அமைப்புக்கள் மிகவும் சிறப்பாகவும் செயற்பட்டு வருகின்றன. இதற்கு சங்கங்களின்செயற்பாடுகள் அதன்வினைத்திறன் போன்றவற்றை எல்லாம் வகைப்படுத்த வேண்டும். சங்கங்களை இவ்வாறு ஒவ்வொரு தரத்திலும் வகைப்படுத்துவதன் மூலம் செயற்பாடுகளை அதிகரிக்க முடியும். அத்துடன் அந்தச் சங்கங்களின் பணியாளர்கள் நன்மையடைய முடியும்.

வடக்கு மாகாணத்தின் மாவட்ட ரீதியில் கூட்டுறவாளர் மாநாட்டை கூட்டி, சங்கங்களின் தேவைகள், அபிவிருத்திகள் குறித்து ஆராய வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த மாநாடுகளை குறைந்தது இரண்டு வருடத்துக்கு ஒரு முறை நடத்த வேண்டும்.– என்றார். (ற–17)



# ஆரம்பித்தது மழை வீடுகளுக்குள் படையெடுக்கும் விச ஜந்துக்கள்

## அச்சத்தில் இத்தாவில் மக்கள்

பளை, நவ.6

தற்போது ஆரம்பித்துள்ள மழையால் இத்தாவிலில் உள்ள மக்கள் குடியிருப்புக்களுக்குள் விச ஜந்துக்கள் உள்நுழைகின்றன. அதனால் அச்சத்துடனேயே இருக்க வேண்டியுள்ளது. அந்தப் பகுதியில் பற்றைக்காடாகவுள்ள காணிகள் குறித்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றில் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பளை, இத்தாவிலில் 2012ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டபோது, வீதியின் கிழக்குப் பகுதி மட்டுமே மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டது. மேற்குப்புறம் வெடிபொருள்கள் அகற்றப்படாது பற்றைக்காடுகளாக உள்ளன. தற்போது மழை ஆரம்பித்துள்ளதால் அவற்றுக்குள் இருந்து விசப்பாம்புகள் குடியிருப்புகளுக்குள் நுழைகின்றன.

தினமும் 10க்கும் மேற்பட்ட விசப்பாம்புகள் குடியிருப்புக்களுக்குள் புகுகின்றன. இரவு வேளைகளில் படுக்கைகளுக்குள்ளும் பாம்புகள் வந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சிறுபிள்ளைகளுடன் நாம் அச்சத்துடன் இருக்க வேண்டியுள்ளது.

இதுவரை 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. சிலர் தமது காணிகளில் மீள்குடியமரவில்லை. அவையும் பற்றைகளாக உள்ளன. அவற்றுக்குள் விச ஜந்துக்கள் மட்டுமல்ல டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் நிலை காணப்படுகின்றது. அவற்றை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரையும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினரையும் கேட்டுக் கொள்கின்றோம். முன்னர் பலமுறை இது குறித்துத் தெரியப்படுத்தியபோதும், இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை- என்றனர். (ற-9)

# பாடசாலை நேரத்தில் மாணவரை விறகு சேகரிக்க அனுப்புகின்றனர்

## பன்னங்கண்டிப் பகுதி பாடசாலை மீது பெற்றோர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.6

கிளிநொச்சி, பன்னங்கண்டி பகுதிப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களை பாடசாலை நேரத்தில் சீருடை அணிந்த வண்ணம் விறகு சேகரிப்பதற்கு அனுப்பப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மு.ப. 10 மணிக்கு மாணவர்கள் பலர் வீதியில் விறகுகளைச் சுமந்தவாறு சென்ற காட்சி பலராலும் அவதானிக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவைத் தயார்செய்வதற்காக அடிக்கடி மாணவர்கள் விறகு சேகரிப்பதற்கு அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு எமது பிள்ளைகள் பாடசாலையில் வழங்கப்படும் உணவுக்காக விறகு சேகரித்துக் கொடுப்பதாயின் அவர்களை கூலி வேலைகளுக்கு அனுப்பியிருப்போம். அரசின் மதிய உணவுத் திட்டத்தில் மாணவர்கள்தான் விறகு சேகரித்துக் கொடுக்கவேண்டும் என்ற நடைமுறை எதுவும் உள்ளதா தெரியவில்லை. இந்தப் பாடசாலைக்கு தற்போது நிரந்தர அதிபர் இல்லை. பின்தங்கிய இந்த கிராமத்தில் அமைந்திருக்கும் இந்தப் பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் எவரும் மாணவர்களின் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை. அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரீட்சை பெறுபேறுகளில் கூட பாடசாலையில் எந்தவொரு மாணவரும் குறிப்பிடத்தக்க புள்ளிகளைப் பெறவில்லை. ஓரளவு போக்குவரத்து வசதியுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை நகரப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். பல தசாப்தங்களுக்கு முன்னர் வன்செயல்கள் காரணமாக மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்த வந்து குடியேறி, கூலி வேலை செய்து வாழ்ந்துவரும் எங்களின் பிள்ளைகளின் கல்வியில் ஆசிரியர்கள் அக்கறை செலுத்தாது நடந்துகொள்கின்றனர். இது தொடர்பில் வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, பிள்ளைகளின் கல்வித்தரத்தை முன்னேற்றவேண்டும்-என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறான சம்பவம் இடம்பெறுகின்றன என்று எமக்கு இதுவரை முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை. இது தொடர்பாக உரியவர்களுடன் கதைத்து நடவடிக்கை எடுக்கின்றேன்- என்று கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் கே. முருகவேள் தெரிவித்தார். (ற-21,6,ய)

# 5 வயதுச் சிறுவன் முகத்தை குதறியது வளர்ப்பு நாய்

## கந்தர்மடத்தில் பயங்கரம்

யாழ்ப்பாணம், நவ.6

ஐந்து வயதுச் சிறுவனின் முகத்தைக் கடித்துக் குதறியது வளர்ப்பு நாய். சிறுவனுக்குச் சிகிச்சையளிக்கப்பட்ட போது, 16 தையல்கள் போடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் வளர்ப்பு நாயுடன் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நாய் பலமுறை கடித்ததால் காயங்களுக்குள்ளான சிறுவன் பெற்றோரால் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.

சிறுவனின் முகத்திலேயே பலத்த காயம் ஏற்பட்டது என்றும்- சிகிச்சையின்போது 16 தையல்கள் போடப்பட்டன என்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ற-101)

# வீடு உடைத்து பகலில் பணம், நகை திருட்டு

## மட்டுவில் தெற்கில் கைவரிசை

யாழ்ப்பாணம், நவ.6

முதியவர்கள் இருவர் தனியாக வசிக்கும் வீட்டில் பகல்வேளை 10 லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் கொள்ளையிடப் பட்டுள்ளது என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மட்டுவில் தெற்கில் இடம் பெற்றுள்ளது. முதியவர்களான கணவன், மனைவியே வீட்டில் தனித்து வாழும் நிலையில், நேற்றுமுன் தினம் மதியம் கைதடியில் உள்ள அவர்களின் உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளனர். மாலை வீடு திரும்பியபோது வீடு உடைத்துக் களவாடப்பட்டமை அறியப்பட்டது.

திருடர்கள் முதலில் கதவை உடைக்க முயன்றுள்ளனர். அது முடியாது போகவே சமையலறைக்கு வெளிச்சத்துக்காகப் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடியை உடைத்து உள்நுழைந்துள்ளனர்.

22 பவுண் தங்க நகைகளும், 16 ஆயிரம் ரூபா பணம் என்பன களவாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது என்றும், விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-101)



# கந்தானையில் ரயிலில் மோதி பெண் சாவு

கொழும்பு, நவ 6
கந்தானை ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதிப் பெண் உயிரிழந்துள்ளார்.
ரயில் கடவையில் சென்றபோது, கொழும்பு புறக்கோட்டையிலிருந்து நீர்கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டுள்ளார்.
கந்தானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது பெண், இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதுடன் சடலம், ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
மரண விசாரணை மற்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (தி)




உலகளாவிய "Great Place to Work" குறியீட்டினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் மிகப் பெரிய நிறுவனமாகிய சிங்கர், தொழில் தேடுவோரினால் விரும்பி நாடப்படும் இடமாகும். நம்பிக்கையான தரச்சிறப்பை 160 ஆண்டுகளாகத் தொடர்ந்து வழங்கும் பாரம்பரியத்தைக் கொண்ட சிங்கர் தனது தொழில் ஸ்தலத்தில் நம்பிக்கைக் கலாசாரத்தை விதைத்துள்ளது. சிங்கர், சிசில், சோனி, சம்சுங், டெல், ஹுவாவி, ஹித்தாச்சி, பிலிப்ஸ், வேர்ல்பூல், கென்வூட் போன்ற புகழ்பெற்ற வர்த்தகப் பெயர்களிலான சாதனங்களை விநியோகிப்பதில் எமது ஊழியர்கள் பெருமையடைகின்றனர். தொழிற்றுறையின் அதிசிறந்த தகவல் தொடர்பு அமைப்பு முதல் சூழல் நலமான உற்பத்தி வசதிகள் வரை சகலவற்றிலும் புத்தாக்கமும் நிலைபெறு தன்மையும் எமக்கு உந்துதலாக அமைகின்றன. நாட்டிலேயே மிகப் பெரிய எமது விற்பனை மற்றும் சேவை வலையமைப்பினால் இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்கள் நன்மையடைகின்றனர். எமது வலையமைப்பில் 410 விற்பனை நிலையங்கள், 12 சேவை நிலையங்கள் மற்றும் 20 சிங்கர் ஃபினான்ஸ் கிளைகள் இடம்பெறுகின்றன. அவற்றில் சமூகத்தின் சகல பிரிவுகளையும் சேர்ந்த ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இலங்கையின் பத்து தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளுள் ஒன்றாகவும் இலங்கையின் மிகச் சிறந்த வர்த்தகப் பெயராகவும் சிங்கர் விளங்குகின்றது.

## வாடிக்கையாளர் சேவை உதவியாளர்

**எதிர்பார்க்கபடும் தகுதிகள்**

- க.பொ.த. (உயர்தர) தகைமை
- கணனி அறிவு (MS Office) மற்றும் Software Packges) போன்றவற்றில் தேர்ச்சி பெற்றிருத்தல்
- வாடிக்கையாளர் சேவையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது
- தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்
- வயது 18க்கும் - 25க்கும் இடையே

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தகுந்த ஊதியத் திட்டமும் நிறுவனத்தின் ஏனைய வழமையான சலுகைகளும் காத்திருக்கிறன.

## தொழில்நுட்பவியலாளர்கள் - மின்சார சாதனங்கள்

**எதிர்பார்க்கபடும் தகுதிகள்**

- க.பொ.த. (சாதாரணதர) தகைமை
- குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி இயந்திரத் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய சான்றிதழ் கற்கை நெறியின் NVQ 03ஆம் மட்டத்திலான தகைமையை அல்லது NAITA, ATI, CGTTI அல்லது தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பத் தேர்ச்சிச் சான்றிதளைக் கொண்டிருப்பது மிகவும் அனுகூலமானது
- வளிசீராக்கி மற்றும் ஏனைய மின்சார சாதனங்களின் பழுதுபார்ப்பில் குறைந்தபட்சம் 01 வருடகால அனுபவம்
- மின்சார சாதனங்களின் விபரத்தொகுப்பு மற்றும் விபரக்குறிப்புக்களை வாசித்து விளங்கிக்கொள்ளும் திறமை
- வயது – 22க்கும் 35க்கும் இடையே

தெரிவு செய்யப்படுபவர்கள், நியமிக்கப்படுவதற்கு முன்னர் பொது முகாமைத்துவச் செயற்பாடுகளில் பயிற்சி பெறுவார்கள்.

சரியான விண்ணப்பதாரர்களுக்குக் கவர்ச்சியான ஊதியத் திட்டம் காத்திருக்கிறது.

உங்களுக்கு மேற்குறிப்பிட்ட பதவிக்கான தகுதிகள் இருந்தால், உங்கள் உறவினரல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களையும் உள்ளடக்கிய உங்கள் விண்ணப்பத்தை அடுத்த 7 தினங்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது hr@singersl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயக் கட்டத்தில் குறிப்பிடவும்.

www.singersl.com என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் நீங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

GREAT PLACE TO WORK Best companies to work for 2016 Sri Lanka

SINGER
Trusted Excellence

உதவி முகாமையாளர் - மனித வளங்கள்
சிங்கர் (ஸ்ரீலங்கா) பீ.எல்.சீ. | 80, நவம் மாவத்தை, கொழும்பு 2.

# அக்கறையை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை

## பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

## உலக வங்கியின் நிதியுதவி மூலம் செயற்படுத்தப்படும் மூலோபாய நகரங்களின் அபிவிருத்தித்திட்டம் (கடன் இல. 58000 LK)

### யாழ்ப்பாண நகரப் பிரதேசத்தில் உள்ள குளங்களின் சுற்றாடல் மற்றும் சமூக அடிப்படைநிலை தொடர்பாக மதிப்பீட்டு ஆலோசனை சேவை ஒப்பந்த இல - SCDP/WB/JF/CS/08

(1) மூலோபாயநகரங்கள் அபிவிருத்தி தொடர்பான செலவினங்களிற்கு இலங்கை அரசாங்கம் உலக வங்கியின் நிதியுதவியை பெற்றுள்ளது. (SCDP) யாழ்நகர அபிவிருத்தி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை செய்யும் தேவை கருதி பெருநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு யாழ்ப்பாண பிரதேசத்தில் காணப்படும் குளங்களின் சுற்றாடல் மற்றும் சமூக அடிப்படை நிலை தொடர்பாக ஆலோசனை சேவையை பெற்றுக்கொள்வதற்கு எண்ணியுள்ளது.

(2) இவ் ஆலோசனைச் சேவையானது யாழ். பிரதேசத்தில் உள்ள குளங்களின் அடிப் படை நிலை தொடர்பாக சுற்றாடல் மற்றும் சமூக மதிப்பீட்டுக்கான வரலாற்று மீளாய்வு, சமூகமட்ட ஆலோசனை நிலைமையை அளவிட்டு மதிப்பிடல், களநிலை விசாரணை மற்றும் தேவைப்படும் போது விஞ்ஞான ரீதியான பரிசோதனை என் பனவற்றை கொண்டிருக்கும்.

(3) பெருநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு மேற்கூறப்பட்ட சேவை தொடர்பில் சுற்றாடல் மற்றும் சமூக மதிப்பீட்டில் தகைமையும் அனுபவமும் உடைய ஆலோசகரின் சேவையைப் பெற விரும்புகிறது.

(4) இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆலோசகர் குறித்த சேவையை வழங்குவதற்குத் தேவையான தமது தகைமை, அவர் சேவையாற்றும் நிறுவனம் தொடர்பான விவரம், அதன் சபை உறுப்பினரின் தகைமை தொடர்பான விவரம், வழிகாட்டி நூல், இப்பணியினை ஒத்த பணிகளை ஆற்றியிருந்தமை பற்றிய விவரம், இவ்வாறான பணிகள் தொடர்பான அனுபவம் (பணியாற்றிய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான விவரங்கள்), பிரதான உத்தியோகத்தர்களின் தொகையும் அவர்களின் தகைமைகளும், குறித்த நிறுவனத்தின் கடந்த மூன்று வருடங்களிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கணக்குகள், ஆலோசகரிடமிருந்து பெறத்தக்க புதிய தொழில்நுட்பம் மற்றும் ஏனைய பொருத்தமான வளங்கள் அடங்கிய தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(5) ஆலோசகர்கள் தமது தகைமையை உயர்த்திக்கொள்ளவும் இச்சேவையில் இணையலாம். குறித்த நிறுவனம் மேற்கூறிய தனியொருதிட்டம் தொடர்பில் மட்டும் தனி ஆலோசகராக அல்லது கூட்டு முயற்சி பங்காளராக அல்லது உப ஆலோசகராக பதவிவகிக்க அனுமதிக்கப்படுவர் என்பதைத் தயவுசெய்து கருத்திற்கொள்ளவும்.

(6) உலக வங்கிசேவை வழங்குநர் பதிப்பு 2011 இன்படியான ஆலோசகர்களை தெரிவுசெய்தலும் பணிக்கமர்த்தலும் என்ற வெளியீட்டில் உள்ளவாறான நடைமுறைகளிற்கு ஏற்ப தரம் மற்றும் கிரய அடிப்படையிலான தெரிவு (QCBS) முறையில் தெரிவுசெய்யப்படுவார்.

(7) ஆர்வமுள்ள ஆலோசகர்கள் மேலதிக தகவல்களை திருமதி கங்காதரிரண வக்க பிரதித் திட்டப் பணிப்பாளர் (சுற்றாடல்) மூலோபாய நகரங்கள் அபிவிருத்தி கருத்திட்டம் அவர்களை தொலைபேசி இல -0094-11-2887320-22 தொலைநகல் 0094-11-286 8188 இன் மின்னஞ்சல் - gangadariscdp@gmail.com மூலமாக அலுவலக நாள்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.30 மணிவரை தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

(8) இப் பதவிக்கு விண்ணப்பிப்போர் 21.11.2016 ஆம் திகதி இலங்கைநேரம் 15.00 மணிக்கு தமது விண்ணப்பத்தை பிரதியுடன் பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கவேண்டும்.

**திட்டப்பணிப்பாளர்**
**மூலோபாயநகரங்கள் அபிவிருத்தித்திட்டம்**
**பெருநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு**
**4 ஆவதுமாடி,செத்சிறிபாய,கட்டம் -1, பத்தரமுல்ல.**

---

### யாழ்நகரிலுள்ள நகர்ப்புற சந்தைகள், பொது பூங்காக்கள் என்பன மேம்படுத்துவதற்கான பணியில் விவரமான வடிவமைப்பு, கட்டுமானப்பணி மேற்பார்வை ஆகியவற்றுக்கான ஆலோசனை சேவை ஒப்பந்தம் இல - SCDP/WB/JF/CS/05

(1) மூலோபாய நகரங்களின் அபிவிருத்தி தொடர்பாக செலவினங்களுக்கு இலங்கை அரசாங்கம் உலகவங்கியின் உதவியைப் பெற்றுள்ளது. யாழ்நகர அபிவிருத்தி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்திசெயற்பாடுகளைச் செய்யும் தேவை கருதி பெரு நகர்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு பொதுமக்கள் பூங்கா, யாழ் புற நகர்ச் சந்தை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் விரிவான வடிவமைப்பு கட்டுமானப்பணி மேற்பார்வை ஆகியவற்றுக்கு ஆலோசனை சேவையைப் பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளது.

(2) மேற் கூறப்பட்ட ஆலோசனை சேவையானது டச்சு கோட்டையை சுற்றியுள்ள முற்றவெளி (கோட்டை பூங்கா) அதை அண்மித்துள்ள சந்தை, யாழ்ப்பாண கடல் நீரேரிக்கரைப் பூங்கா (கட்டம் I,கட்டம் II),பழையபூங்கா (பழையகச்சேரி கட்டடத்தை அண் மித்துள்ள பகுதி),சங்கிலியன் பூங்கா, அயலை அண்மித்துள்ள பூங்கா (ராசாவின் தோட்டம் வீதி, ரசல்ஸ் சதுக்கம் [Russ ells square] கடற்கரை வீதி),ஆகியபொது இடங்களில் தரைத் தோற்ற அமைப்பு, கட்டடக் கலையம்சம், பொது வெளிக்கள வடிவமைப்பு என்பவற்றுடன் புனருத்தாரணம், அபிவிருத்தி, மேம்படுத்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான பொறியியல் வடிவமைப்பு ஆகிய பணிகளை உள்ளடக்கும். இங்கு விவரமான வடிவமைப்பு என்பது தரைத்தோற்ற வடிவமைப்பு, நகர் வடிவமைப்பு, பொது இடங்களின் வடிவமைப்பு, நடை பாதை மற்றும் ஈருருளி பாதைகள், நகர் மெருகூட்டல்,சென்றடையும் வழிகள், பொது வசதிகள், விளை யாட்டு உபகரணங்கள், ஒளிஅமைப்பு, சைகைகள், வடிகாலமைப்பு/வெள்ளநீர் முகாமை, சுகாதார மற்றும் கழிவகற்றல் வசதி என்பனவற்றைஉள்ளடங்கும்.

(3) ஆலோசனைச் சேவை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) மேற்கூறப்பட்ட பரப்பினுள் உள்ளடங்கும் விதத்தில் விரிவான வடிவமைப்பை செய்தல் இவை தொடர்பான கட்டுமான ஒப்பந்தங்களை பெறுகை செய் வதற்கான கேள்வி ஆவணங்களை தயாரித்தல்

(ஆ) கிரயமதிப்பீடு மற்றும் தொகை மதிப்பீடு தொடர்பான ஆவணங்களை தயாரித்தல்.

(இ) பொதுப்பணி ஒப்பந்தங்கள் தொடர்பில் ஒப்பந்தப் பணிகளை நிர்வகித்தலும் கட்டுமானப் பணிமேற்பார்வையும்.

(4) மேல் விவரிக்கப்பட்ட வேலைகள் தொடர்பில் அனைத்து விடயங்களிலும் விவரமான வடிவமைப்பு மற்றும் கட்டுமான மேற்பார்வைகளை மேற்கொள்ள அனுபவம் மிக்க உள்ளூர், சர்வதேச ஆலோசகர்களின் நிபுணத்துவ சேவையை பெரு நகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு எதிர்பார்க்கிறது.

(5) இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆலோசகர்கள் இப்பணியை செய்யும் ஆற்றலை வெளிப்படுத்தும் தகைமை தொடர்பான விவரங்களுடன்

(அ) தாம் சேவையாற்றும் நிறுவன விவரம் அச்சபை உறுப்பினர்களின் தகைமைகள் வழிகாட்டி நூல் போன்றவற்றுடன்

(ஆ) கடந்த 5 வருடங்களில் செய்துமுடித்த இதை ஒத்த்வேலைகள் தொடர்பான விவரம், அப்பணிக்கான ஒப்பந்த ஆலோசனையின் விவரம், அப்பணியில் அமர்த்தப்பட்ட வேலையாள்கள் பணிக்கான காலம் (மனித மாதங்களில்), அவற்றுக்கான செலவு (அமெரிக்கடொலர் பெறுமதியில்)

(இ) அதன் கடந்த 5 வருட கால கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கணக்குகள்

(ஈ) ஏனைய வளங்கள் மற்றும் புதியதொழில்நுட்பம் ஆகிய விடயங்களை சமர்ப் பிக்கவேண்டும்.

(6) ஆலோசகர்கள் தமது தகைமையை உயர்த்திக்கொள்ளவும் இச்சேவையில இணை யலாம். குறித்த நிறுவனம் மேற் கூறிய தனி ஒரு திட்டம் தொடர்பில் மட்டும் தனி ஆலோசகராக அல்லது கூட்டு முயற்சிப் பங்காளராக அல்லது உப.ஆலோசகராக பதவி வகிக்க அனுமதிக்கப்படுவார் என்பதைத் தயவு செய்து கருத்திற்கொள்ளவும்.

(7) உலகவங்கி சேவைவழங்குநர் பதிப்பு 2011 இன்படியான ஆலோசகர்களை தெரிவு செய்தலும் பணிக்கமர்த்தலும் என்ற வெளியீட்டில் உள்ளவாறான நடைமுறை களிற்கு ஏற்ப தரம் மற்றும் கிரய அடிப்படையிலான தெரிவு (QCBS) முறையில் தெரிவுசெய்யப்படுவார்.

(8) ஆர்வமுள்ள ஆலோசகர் மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், மூலோபாய நகர அபிவிருத்திதிட்டம் (தொலைபேசி 0094-11-2887320 – 22 தொலை நகல் 0094-11-2868188 ஈமெயில் modscdp@gmail.com ) மூலமாக அலுவலக நாள்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.30 மணிவரை தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

(9) இப்பதவிக்கான அக்கறையை வெளிப்படுத்துவோர் அவ்விண்ணப்பத்தை அதன் பிரதி யுடன் 21 நவம்பர் 2016 அன்று 3 மணிக்கு முன்னதாக பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.

**திட்டப் .பணிப்பாளர்**
**மூலோபாயநகரங்கள் அபிவிருத்தித்திட்டம்**
**பெருநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு**
**4ம் மாடிசெத்சிறிபாய–கட்டம் - 1, பத்தரமுல்ல, இலங்கை.**

---

### யாழ்நகரிலுள்ள பொதுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், வடிவமைத்தல், கட்டுமானத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் ஒப்பந்தம் இல - SCDP/WB/JF/CS/09

(1) மூலோபாய நகரங்கள் அபிவிருத்தி தொடர்பான செலவினங்களிற்கு இலங்கை அரசாங்கம் உலகவங்கியின் நிதியுதவியை பெற்றுள்ளது. (SCDP) யாழ் நகர அபிவிருத்தி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை செய்யும் தேவை கருதி பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு பொதுக்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துத்தல் தொடர்பில் வடிவமைப்பு, கட்டுமானமேற் பார்வை ஒப்பந்த நிர்வாகம் ஆகியசெயற்பாடுகளுக்கு ஆலோசனை சேவையை பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளது.

(2) யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட 7 அமைவிடங்களில் புதியபொது கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கான கட்டடக் கலை மற்றும் விரிவான பொறியியல் வடிவமைப்புக்கான மேற்கூறப்பட்ட ஆலோசனைச் சேவை தேவையாக உள்ளது. இங்கு மலசலகூட வசதிகள், குளியல்றை வசதிகள், கழிவுநீர்த்தாங்கி இவை தொடர்பான இயந்திரவியல், குழாய் வேலைகள், மின்சார வேலைகள் மேற் கூறியவற்றில் உள்ளடங்கும்.

(3) இதற்கான ஆலோசனைச் சேவைபின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கும்.

அ) மேற் கூறியபணிகள் தொடர்பில் கட்டடக்கலை சார்ந்த விவரமான வடிவமைப்பை செய்தலும்,மேற்கூறிய 7 இடங்களிலுள்ள கட்டுமானங்களிற்கான ஒப்பந்தங்களை பெறுகை செய்வதற்கான கேள்வி ஆவணங்களை தயார் செய்தலும்.

ஆ) மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் கிரய மதிப்பீடு, தொகை மதிப்பீட்டிற்கான ஆவணங்களை தயாரித்தல்.

இ) பொது வேலைகள் ஒப்பந்த கட்டுமான மேற்பார்வையும்,ஒப்பந்த நிர்வாகமும்

(4) மேல் விவரிக்கப்பட்ட வேலைகள் தொடர்பில் அனைத்து விடயங்களிலும் விவரமான வடிவமைப்பு மற்றும் கட்டட மேற்பார்வை தொடர்பில் அனுபவம் மிக்க உள்ளூர், சர்வதேச ஆலோசகர்களின் நிபுணத்துவ சேவையை பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு எதிர்பார்க்கின்றது.

(5) இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆலோசகர்கள் குறித்தசேவையை வழங்குவதற்கு தேவையான தமது தகைமைகள், அவர் சேவையாற்றும் நிறுவனம் தொடர்பான விவரங்கள் அதன் சபை உறுப்பினரின் தகைமைகள் தொடர்பான விவரம்,வழிகாட்டி நூல் போன்றவற்றுடன் இப்பணியை ஒத்தபணி ஆற்றியமை தொடர்பாக பெற்ற அனுபவம், அக்குறித்த நிறுவனங்களுடன் தொடர்புகொள்வதற்கான விவரங்கள், குறித்த நிறுவனத்தின் கடந்த 3 வருடங்களுக்கானகணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கணக்குகள், ஏனைய வளங்கள் மற்றும் புதிய தொழிநுட்பம் தொடர்பான விவரங்கள் போன்ற வற்றை சமர்ப்பிக்கவேண்டும்.

(6) ஆலோசகர்கள் தமது தகைமையை உயர்த்திக்கொள்ளவும் இச்சேவையில் இணையலாம். குறித்த நிறுவனம் மேற்கூறியதனி ஒருதிட்டம் தொடர்பில் மட்டும் தனி ஆலோசகராக. அல்லது கூட்டுமுயற்சி பங்காளராக அல்லது உப ஆலோசகராக பதவிவகிக்க அனுமதிக்கப்படுவார்.

(7) உலகவங்கி சேவை வழங்குநர் பதிப்பு 2011 இன்படியான ஆலோசகர்களை தெரிவு செய்தலும் பணிக்கமர்த்தலும் என்றவெளியீட்டில் உள்ளவாறான நடைமுறைகளிற்கு ஏற்ப தரம் மற்றும் கிரய அடிப்படையிலானதெரிவு (QCBS) முறையில் தெரிவு செய்யப்படுவார்.

(8) ஆர்வமுள்ளஆலோசகர்கள் மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், தந்தி ரோபாயகருத்திட்டநகரஅபிவிருத்தித்திட்டம் (தொலைபேசி 0094- 11 -2887320-22,தொலைநகல் 0094-11-2868188,ஈமெயில் modscdp@gmail.com) மூலமாக அலுவலக நாள்களில் காலை 9.00 இலிருந்துமாலை 3.30 வரை தொடர்புகொள்ளவும்

(9) இப்பதவிக்கான அக்கறையை வெளிப்படுத்துவோர் அவ் விண்ணப்பத்தை அதன் பிரதியுடன் 21 நவம்பர் 2016 அன்று 3.00 மணிக்கு முன்னராக பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கவும்.

**திட்டப்பணிப்பாளர்,**
**மூலோபாயநகரங்கள் அபிவிருத்தித்திட்டம்,**
**பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாணஅபிவிருத்திஅமைச்சு,**
**4ம் மாடி,செற்சிறீபாயகட்டம் -1, பத்தரமுல்ல, இலங்கை.**

# யாழ் நகரில்
# கண்காணிப்பு கமரா (CCTV)
# காட்சியறை
# திறப்பு விழா




இக் காட்சியறை **இன்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை** **காலை 9.30** மணியளவில் **ராசிக் கலக்ஷன்** உரிமையாளரான **P. சசிதரன்** அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது என்பதை அனைவருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

(C/23313)(10.18)

**இல.273, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P: 021 221 5828 / 0777 123 313**

**உரிமையாளர்:**
**J.A. அருள்ராஜ்**

## காட்சியறை சிறப்புற வாழ்த்துவோர்:

**Rasi Collections** — King of wedding sarees & Salwar
**ராசி கலக்ஷன்ஸ்**
No.199, Power House Road, Jaffna.
Tel: 021 222 55 71

**ROYAL COLLECTION**
No.223, Power House Road
(Behind Hospital) Jaffna.
Tel: 021 222 55 73

சுபமுகூர்த்த பட்டு புடவைகள், பட்டுவேட்டிகள், சாறிகள், சல்வார், ஸ்கேட் & பிளவுஸ் மற்றும் சேட்டிங் சூட்டிங் என்பவற்றின் மதுரமான தெரிவுக்கு
**மது சில்க்ஸ்**
**Mathu Silks**
105A.மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
No.105A, Power House Road, Jaffna.
Tel: 021 222 8844/077 233 6195

**TOPAZ**
Jaffna No. 01 Shop
Specialist in Wedding Suits, Wedding Sarees, Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
No.72, Grand Bazaar,Jaffna.
Tel: 021 2224743 / 021 2227645
E-mail: topazagn@gmail.com

**நியூ உதயா ஜுவல்லர்ஸ்**
New Uthaya Jewellers
Dealers in Genuine Ornaments
No:91, Power House Road, Jaffna.
Tel: 021 222 2031

**உதயா ஜுவல்லர்ஸ்**
For Modern & Distinctive
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
No: 81, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 4434

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 5511

**நியூ நகுலா ஜுவல்லறி**
இல.45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 4101

ந.கஜந்தன்
**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**
38,40, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
021 221 7878, 021 221 7877

**Venukka Tex**
*Dealers in Textiles & Fancy Good*
No.199, K.K.S. Road, Jaffna.
Tel: 021 221 7988

**New INPALA HOTEL**
*Taste of hunger...*
259,K.K.S. Road, Jaffna.
10/1,1st Cross Street, Vavuniya.
Cont:0777770689 / 0767846663

**TELE CHOICE**
*ORIGINAL ACCESSORIES*
021 223 1173 info.telechoice@gmail.com
Cont:077 302 44 73 / 021 223 11 72
No:3, Old Post Office, Kopay South,Kopay, Jaffna.

## தாதிய அலுவலருக்கு தரமுயர்வு

வடமாகாண வைத்தியசாலைகளில் கடமையாற்றிய 20 தாதிய அலுவலர்கள் விசேட தர தாதிய அலுவலர்களாக (மேற்றன்) தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனங்கள்வடமாகாண சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுவைத்திய சாலைகளில் நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றனர். நியமனப் பிரகாரம் சாவகச்சேரி வைத்தியசாலையில் விசேட தர தாதிய அலுவலர் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரண்டு விசேட தர தாதிய அலுவலர் பதவி ஆளணிகள் உள்ள தால்ஏற்கனவே விசேட தர தாதிய அலுவலர் ஒருவர் பணியாற்றுகின்றார். (ற-9)


### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய கறுப்பு மற்றும் வெள்ளை நிற 02 பொமேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

077 248 7841

### வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் அப்பளக் கொம்பனிக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.

077 139 3670/ 077 891 9221

### இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

**இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு**

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள்**
**புகைத்தல், உயர்இரத்தஅழுத்தம், அதிக கொழுப்புச்சத்து, நீரிழிவு**

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது



**எங்களால் குணப்படுத்தப்படுகிறது**

- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு,
இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

**Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330**
**Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102**

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை, BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

சட்டென்று சமைப்பதற்கு...

## ஷிப் மெகரல் டின் மீன்




**எப்போதும் இல்லத்தரசிகளின் ஒரே தெரிவு**

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

COLOMBO COMMODITIES

☎ 0112 421430 / 0112 421432

இல: 71, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11.


## அறிவித்தல்

### வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பல் நோயாளர்களுக்கு இலவச பல் சிகிச்சை

ல்ண்டனில் கடமை புரியும் Dr. செல்வன் மேதர்.B.D.S (Sri Lanka) B.D.S (London) D.D.P.H.R.C.S(London), Diploma in Sedation (London) பல் வைத்திய நிபுணர் அவர்களால் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை பல் சிகிச்சை நடத்தப்படும்.' பல் நோயாளர்கள் இங்கு வந்து பயன் பெறுங்கள். முற்பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 22 55157

Secretary
Green Memorial Hospital ,
Manipay

## யாழ்ப்பாணம் மாநகரசபை
### 2017 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவுசெய்தல்

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 2016/12/05 ஆம் திகதிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்**

**பொருள்கள்**

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
03. மேல்நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மருந்துகள்
05. சிற்றுண்டி வகைகள் மற்றும் மதிய உணவு வகைகள்
06. கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்
07. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோல் பொருள்கள்
08. கட்டடப்பொருள்கள் (சிமெந்து, ஓடுகள் முதலியன)
09. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
10. கற்கள், சல்லிகள், கிறவல், கருங்கல் துகள்கள், மணல்கள்
11. நீர்வழங்கு பொருள்கள், நீர் பம்பிகள்,பி.வி.சி. குழாய்கள் முதலியன
12. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்
13. மின்சார இயந்திரப்பொருள்கள், மின் கருவிகள்
14. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
15. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
16. இரும்புப்பொருள்கள்
17. பனைமரங்கள், சலாகைகள்
18. நூலகங்களுக்குரிய நூல்கள்
19. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலிய
20. தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்
21. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன
22. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்
23. கணினி, போட்டோ பிரதி இயந்திரம், தொலைநகல் மற்றும் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்

**சேவைகள்**

01. அச்சிடுதல்
02. ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
03. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
04. ஏற்றியிறக்கும் வேலைகளிற்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்குவிடல்
05. சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைக்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்துதல்
06. மின் மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்
07. மின் கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல்
08. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
09. வாகனங்கள் சேவிஸ் செய்தல்
10. கணினிகள் திருத்தம் சேவிஸ் செய்தல்
11. போட்டோப்பிரதி இயந்திரம் மற்றும் தொலைநகல் சேவிஸ் செய்தல்
12. வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல்
13. தனியார் பாதுகாப்பு சேவை வழங்குதல்
14. மென்பொருள் வடிவமைப்பு சேவை மற்றும் மென்பொருள் மேம்படுத்தல் சேவை
15. கனரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்துதல்

இதற்கான படிவங்களை யாழ். மாநகரசபை கொள்வனவுப்பகுதியில் பெற்றுக் கொள்ள லாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000 மற்றும் வற் வரியினை உள்ளடக்கியதாக காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையினை "ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பணமாக செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானவித இறைவரிக்கிளையில் (Front Office) நேரடியாக வேலை நாள்களில் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும்போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/ சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவு புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.
இதற்கான விண்ணப்பத்தினை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள், சேவைகள் 2017" எனக்குறிப்பிட்டு ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.
06.11.2016

(C/237630) (13.18.21)

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### விற்பனைக்கு

தெஹிவளையில் Dupler Apartment விற்பனைக்கு. 3 Bedroom,2Bathroom,1150 Sqft உறுதி உண்டு. வாகன தரிப்பிடம் உண்டு. காலிவீதியிலிருந்து 100 மீட்டர். (C/23783) (10.18)
தொடர்புகளுக்கு: கஜன் 077 44 23 680

### காணி விற்பனைக்கு

வெள்ளவத்தை Alexandra Road இல் 27.8 பேர்ச் காணி விற்பனைக்கு.
GAJAN (RE/MAX)
077 9347 222

### T.V கள் மலிவு விற்பனை

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட Sony Wega Tv கள் 21" - 10,000/= முதல் விற்பனைக்குண்டு.
077 044 0570
சோனி ரேட் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56,கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

### காணி விற்பனைக்கு

முதலியார் வீதியில் (நாவலர் வீதிக்கு அருகிலும் ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்பாகவும்)1½ பரப்பு விஸ்தீரணமுடைய காணி (கிணறும் உள்ளது.) விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.
076 322 1473, 077 654 4012

### விற்பனைக்கு

யாழ். நகர மத்தியில் ஸ்ரான்லி வீதியில் சுமார் 4000 அடி விஸ்தீரணத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மேல் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
077 997 5532

### காணி வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1¼ பரப்புக் காணியோடு 4 (நான்கு) அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
076 975 4410, 076 977 0175

### விற்பனைக்கு

நல்லின தென்னங்கன்று. செவிழி தென்னை. கட்டை இனம்(பெரிய இளநீர்).ஒட்டு மாங்கன்று. தேசி. தோடை. ஒட்டுப்பலா , ஈரப்பலா. கஜு. மாதுளை. 1Kg கொய்யா. பசன்புறூட். நெல்லி. யம்பு. முருங்கை. ரெட்லேடிப்பப்பாசி, வெற்றிலை. அம்பர்லா. கொடித்தேசி. கமுகு மற்றும் மலை வேம்பு, தேக்கு. சமண்டலை. சவுக்கு. சுந்தரவேம்பு. வேம்பு(ஊர்) மேலும் பல இன பூங்கன்றுகளும் பூச்சாடிகளும் விற்பனைக்குண்டு. இவைகள் அனைத்தும் எமது பண்ணையில் உற்பத்தியானவை.

நியூ லங்கா பாம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.
077 612 9343

நியூ லங்கா பாம்
பலாலி வீதி, உரும்பிராய்.
பிள்ளையார் கோவிலுக்கு
அருகில்.

### ஜப்பான் Toyota Coaster Bus விற்பனைக்கு

28 இருக்கைகளை கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட பஸ் வண்டி

NB - ××××, YOM 2011, Registered in 2012, Manual Transmission,28 Seated, Original adjustable seats, DVD, Wifi, Automatic Door,Curtains, Original Mileage 198000 km, used for staff transport and tourism, Mint Condition.



சுற்றுலாக்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு - 0759732169

### கார் விற்பனை

நல்ல நிலையில் உள்ள TOYOTA AX10 HYBRID 2015 கார் உடனடியாக விற்பனைக்குண்டு.
076 540 5474

### வீடு காணி விற்பனைக்கு

பருத்தித்துறையில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
தொடர்பு: 077 402 5775



## தேவை



### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தில் அல்லது நல்லூர் சுற்று வட்டாரத்தில் சிறிய வீடு 2017 ஜனவரி முதல் வாடகைக்குத் தேவை. வாகனத் தரிப்பிடம் இருப்பது நன்று
011 272 4862

### மணமகள் தேவை

யாழ். சமய ஆச்சாரமான சைவ போசனம், உயர்கல்வித் தகைமையுடன் , கொழும்பில் உயர் உத்தியோகம் வகிக்கும் 1987, 1989 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பிறந்த இரண்டு மணமகன்களுக்கு, பட்டப்படிப்பு உள்ள அழகான, சைவபோசன மணமகள்கள் தேவை. செவ்வாய் தோஷம் இல்லை, ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: இல.39, அபொன்சோ மாவத்தை, தெகிவளை.

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1984 இல் பிறந்த பூச நட்சத்திரம் 2 இல் செவ்வாய் மற்றும் கிரக பாவம் 47 ¼ கொண்ட சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
077 311 9787

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள வயோதிபக் குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலை செய்ய வீட்டுப் பணிப் பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
076 310 3885

### வீடு தேவை

நல்லூரை அண்மித்த இடத்தில் வீடு வாடகைக்குத் தேவை.
077 730 6473, 076 730 4014

### சாரதி தேவை

உல்லாசப் பிரயாண ஹோட்டலுக்கு A/D லைசன்ஸ் உள்ள மும் மொழியும் தெரிந்த சாரதி தேவை.
077 730 6473, 076 730 4014

### வேலையாள்கள் தேவை

கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ள வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 077 623 1295

### தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற நிறுவனத்துக்கு கணக்கியல் உதவியாளர் தேவை. க.பொ.த உயர்தரத்தில் வணிகத்துறை பயின்றவர்கள் விரும்பத்தக்கது.
ஆண்கள் மட்டும்.
T.P: 0773614638 / 021 205 2080

### மணமகள் தேவை

யாழ்.இந்து, 1981, ஆயிலிய நட்சத்திரம், செவ்வாயற்ற, 34 கிரகபாவம்,UK இல் அரச பொறியியலாளராகப் பணிபுரியும் (Citizen) மணமகனுக்குப் பெற்றோர் உள்நாட்டில் படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
077 534 2149, 075 858 4297

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1984 ஐப்பசி, மூலம் முதலாம் பாதம், மொத்த கிரகபாவம் 26¾, 12 இல் செவ்வாய், உயரம் 5'3", கொழும்பில் கணக்காளராக (Fully Qualified Accountant) தொழில்புரியும் மணமகளுக்குத் தகுந்த மணமகன் தேவை.
077 618 8264

### தேவை

விருந்தினர் விடுதிக்குரிய தளபாடங்கள் தேவை.
077 724 2427, 077 741 2713

### எழுதுவினைஞர்கள் தேவை

யாழ்ப்பாணம், வவுனியா காரியாலயத்துக்கு
ஊதியம் - 13 500/=
077 600 0507

## ஏனையவை

### வேலைவாய்ப்பு

சாப்பாடு இலவசம். போடிங் இலவசம். நாள் சம்பளம் 1600/= (With OT) வரும் நாளிலே வேலைவாய்ப்பு
076 623 5152, 076 656 7150, 076 558 7807, 076 571 5255

நாள்சம்பளம். ஐஸ்கிறீம். பிஸ்கட். ஜாம் ஆகிய தொழிற்சாலைக்கு அனைத்துப் பிரிவுகளுக்கும் நாள் சம்பளம் 1600/= (With OT) சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம்.
077 656 7150, 077 456 9222

"Airport Vacancy Loundary" (லொன்றி). கேட்டறிங் கார்கோ (Cargo) போன்ற வேலைவாய்ப்புக்கு ரூ.35000/=, ரூ.75,000/= சம்பளத்துக்கு வேலை வாய்ப்பு. உணவு, தங்குமிடம் இலவசம். 15 வெற்றிடங்கள் மாத்திரமே.
072 223 1518, 071 921 5892

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N குமாரசாமி

கைரேகை. ஜாதகம். எண்கணிதம் மற்றும் திருமணத்தடை. கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
தினசரி காலை 8 மணி முதல் மாலை 6.00 மணிவரை
நாதன் இன்
394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.(வெலிங்டன் சந்தி)
072 681 6681, 076 557 5394

### பெண் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு. கர்ப்பிணி- குழந்தை பராமரிக்க அனுபவம்வாய்ந்த பெண் பணியாளர் தேவை (C/23788) (10.18)
தொடர்பு:0775222533, 0773098057

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (துர்சினி)

## ஏனையவை

### வேலைவாய்ப்பு

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வேலை செய்வதற்கு பிரபல பாதுகாப்புச் சேவைக்கு O.I.C, JSO அனுபவமுள்ள அனுபவமற்ற ஆள்கள் உடன் தேவை. சம்பளம் 35000/= வரை. EPF/ETF தங்குமிடம் இலவசம் வயது 60 வரை. சிங்களம், ஆங்கில அறிவுள்ளோருக்கு முன்னுரிமை
BROWN BERETS (C 23302) (14.17.18)
104 1/1, Welikada watta Road, Rajagiriya
071 244 6926, 011 287 1280

### இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை

கையிருப்பு உள்ளவரை மட்டுமே... இன்றே முந்துங்கள்! Free! Key & Odal
0777 614 186
Sri Lanka. 4, IBC, Wellawatte.

### உங்களுக்கு உள்நாட்டு வேலைவாய்ப்பு

தொழிற்சாலைகளுக்கு:-
சாதாரண தொழிலாளர்கள்.
துறைமுகங்களுக்கு :-
மேசன் பாஸ்மார், தொழிலாளர்.
ஹோட்டல்:-
காவலாளிகள், எழுதுவினைஞர்
077 817 7017, 077 600 0507
இல.157, தேக்கவத்த, கண்டிவீதி, வவுனியா

### உங்களுக்கு.....

யாழ்ப்பாணம்/ வவுனியா/ கண்டி/ கொழும்பு/ மாநகரங்களில் தொழில் ஒன்று தேவையா?
077 505 2239, 077 600 0507
இல.218, அரசடி றோட், கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

### சிகிச்சை நிலைய உதவியாளர் தேவை

பற்சிகிச்சை நிலையத்தில் உதவியாளர் பயிலுனராக பணிபுரிவதற்கு A/L வரை படித்த 20 முதல் 30 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். 5 கி.மீ சுற்றாடலில் வசிக்கும் பிள்ளைகள் தங்கள் சுயவிவரங்களுடன் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.
பொறுப்பு அதிகாரி
198,அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

வீடும் தனித்தனி அறைகளும் , கடையும் சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அருகில் வாடகைக்கு உண்டு.
077 724 2427,077 7412 713

### வீடு வாடகைக்கு

யாழ்.நகரை அண்மித்த திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அண்மையில் வீட்டின் மேல்தளம் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
077 378 7380

# தேவயானை திருக்கல்யாணம் இன்று

இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறியாகத் தோன்றி கந்தனாக வந்து உதித்தவர் கந்தப் பெருமான். உலகு உய்ய வழி வகுத்து அசுரர்களை அழித்தொழித்து ஆறுமுகப் பெருமானாக வந்து அவதாரம் செய்த முருகப் பெருமானுக்கு தேவயானை என்கிற தேவேந்திரனின் வளர்ப்பு மகளையே திருமணப் பரிசாகக் கொடுக்க முன்வந்தனர் தேவர்கள்.

தேவர் சிறை மீட்ட தேவாதி தேவனுக்கு தேவயானைதான் பரிசு. சூரன் போர் முடிந்து வெற்றிவாகை சூடிய முருகப் பெருமானுக்கும் தெய்வீகமான அழகுப் பெண் தேவையானைக்கும் இன்று திருக்கல்யாணம். இற்றைநாள் வரை இன்னலே விளைத்த அசுரர் கோமானுக்கும் துன்ப சாகரத்திலே மூழ்கித் திளைத்த தேவர் கோமானுக்கும் கடுஞ்சமர்.



நீதிக்கும் அநீதிக்கும் பெரும் போர் நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் கடும் போர் பொய்க்கும் உண்மைக்கும் உன்னதப் போர். இந்தப் போர் தேவர்களுக்குத் தலைவனாக வந்த தேவாதி தேவனான முருகப்பெருமானுக்கும் அசுரர்களுடைய தலைமைப் பீடமாக விளங்கிய தாரகன், சிங்கமுகன், சூரபன்மன் ஆகியோருக்கும் இடையிலே நடைபெற்ற ஒரு மகத்தான மாண்பு மிக்க கடும் போராகும்.

ஈற்றிலே வென்றது முருகப் பெருமானே! மூண்ட கடும் போரிலே தாரகாசுரனையும் சிங்கமுகாசுரனையும் சூரபன்பமனையும் கொன்றொழித்தார் முருகப் பெருமான். அசுரகணங்களெல்லாம் அழிந்தொழிந்தன. தேவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அசுர ஆட்சி மறைந்தது; அசுரபலம் ஒழிந்தது. சூரனுடைய தவவலிமையின் காரணமாக அவனை அழிக்க முடியாது போயிற்று. முருகன் சூரபன்மனைத் தமது வேலால் இருகூறாகப் பிளந்தார். அதில் ஒரு கூறு சேவலாகவும் மற்றையது மயிலாகவும் மாறின. கந்தன் கருணை காட்டி சேவலைக் கொடியாகவும் அந்த மயிலை வாகனமாகவும் ஆக்கிக் கொண்டார். இது தான் முரு கனின் அருளுக்கு அடையாளம். சூரன் அழியவில்லை இப்பொழுதும் கந்தனின் சேவற்கொடியாகவும் மயில்வாகனமாகவும் இருக்கின்றான்.

போரில் வெற்றி வாகை சூடிய அருட் தெய்வமான அறுமுகப் பெருமானுக்கும் தெய்வயானை அம்மைக்கும் ஒரு தெய்வீகத் திருக்கல்யாணம் நடைபெற்ற நாளே இன்றைய பொன்னான நன்னாள்.

யாழ்.குடாநாட்டு முருகன் ஆலயங்களில் இந்தக் கந்தசஷ்டி ஆறு நாள்களும் விசேட அபிசேக ஆராதனைகள், பூசைவழிபாடுகள் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெறுகின்றன. ஆறுகாலப் பூசைகளுடன் அற்புதமான தெய்வீகத் திரு உலாக்களும் முருகனுக்கு நடைபெறுவதால் அடியார் பெருமக்கள் முக்கியமாக சஷ்டி விரதகாரர்கள் இவற்றில் பங்கேற்று இறையருளுக்குப் பாத்திரமாகின்றனர்.

முக்கியமாக கந்தசஷ்டி விரத விழா நல்லூரிலும், மாவிட்டபுரத்திலும், செல்வச்சந்நிதியிலும், பொலிகண்டி கந்தவனக் கடவையிலும், கொக்குவில் மஞ்சவனப்பதியிலும் மிகச் சிறப்பான முறையிலே இடம்பெறுகின்றன. சூரன் போர் முடிந்து இன்று நிகழ்கின்ற திருக்கல்யாணம் யாழ்.மக்கள் மறக்க முடியாத திருநாளாகும். இந்த நாளிலே தான் எல்லோரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய நிகழ்ச்சி இடம்பெற்றது. குழந்தை குட்டிகளையும் தட்டு முட்டுச் சமான்களையும் அரிசி, சீனி, தேயிலை முதலானவற்றுடன் எடுத்துக் கொண்டு ஓடிய நாள்

இனியாவது எமது நாட்டிலே நிம்மதியும் ஆறுதலான நித்திரையும் மன அமைதியும் கிட்ட வேண்டுமென்று தமிழ்க் கடவுளான முருகப் பெருமானை நாம் அனைவரும் ஒன்றாக ஒற்றுமையாகச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்று கந்தப் பெருமானின் கருணைக்குப் பாத்திரமாவோமாக.






மதுரகவி
காரை.எம்.பி.அருளானந்தன்

# கந்தசஷ்டி விரத மாண்பும் சூரசம்ஹாரமும்



முருக வேளுடைய விரதங்களுள் தலையாய விரதம் கந்த சஷ்டிவிரதம் ஆகும். சிவபெருமானுடைய விரதங்கள் எட்டு. அவற்றுள் தலையாயது சோமவார விரதம். அந்த அஷ்டவிரதங்களுள் ஒன்று தீபாவளி விரதம். இறைவன் ஜோதிவடிவானவன்.

தீபாவளி ஐப்பசித் திங்கள் தேய்பிறை சதுர்த்தசி திதியில் விரதம் இருக்க வேண்டும். அன்று உபவாசமாக இருந்து சிவபெருமானை வழிபட வேண்டும்.

மறுநாள் அமாவாசையன்று பாராயணம் செய்ய வேண்டும். அதற்கு மறுநாள் வளர்பிறை பிரதமையன்று அதிகாலை எழுந்து நதியாயின் நீரில் எதிர்முகமாக நின்றும் கிணறு குளங்களாயின் வடதிசை நோக்கி நின்றும் தண்ணீரில் நீராடலாம். நீராடியதும் தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து அநுஷ்டானம் புரிந்து, முருகப் பெருமானுடைய ஆலயம் சென்று வலம்வந்து மலரிட்டு திருப்புகழ் திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி போன்ற பதிகங்களை ஓதி வழிபட வேண்டும்.

ஐந்து நாள்கள் நோற்ற பின் ஆறாவது நாள் சஷ்டியன்று வழமைபோல் நீராடி சிறப்பாக ஜபதபங்களைச் செய்ய வேண்டும். தொடர்ந்து பாராயணஞ் செய்து சிந்தனை முழுவதும் முருகப் பெருமான் திருவடிக்கே செலுத்த வேண்டும். அன்றிரவு ஆறு காலங்களில் முருகன் திருவுருவத்துக்கு ஆயிரத்தெட்டு மந்திரங்களால் அர்ச்சனை புரியலாம். உறங்காமல் உணர்வுடன் குழைந்த உள்ளத்துடன் துதித்து வடிவேலிறையை வழிபட வேண்டும்.

மறுநாள் சப்தமி திதியன்று நீராடி, வழிபாடு முடிந்த பின், ஆறு அடியார்க்கு அன்னம் வழங்கி உணவு உட்கொள்ள வேண்டும். அன்று பகலில் உறங்கக் கூடாது.

ஆறு நாள்களிலும் பூரண உபவாசமிருக்க முடியாதவர்கள் ஐந்து நாள்கள் பால் பழமுண்டு சஷ்டியன்று முழு உபவாசமாக இருக்க வேண்டும்.

அதுவும் முடியாதவர்கள் ஐந்து நாள்கள் உச்சிவேளையில் இறைவனுக்கு நிவேதனம் செய்த உணவை உண்டு, இரவு பட்டினியாக இருந்து, ஆறாவது நாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபடவேண்டும். ஐந்து நாள்களிலும் படுக்கையில் படுக்கக்கூடாது. தூயபட்டு விரித்து அதன் மீதுபடுத்து இதயத்தில் முருகனை எண்ணிய வண்ணமாக உறங்க வேண்டும். அதாவது சஷ்டி விரதம் இருப்போர் மகப்பேறு முதலிய எல்லா நலன்களையும் எளிதில் பெறுவார்.

ஐப்பசி மாதம் சுக்லபட்சம் சஷ்டி (ஆறாவது) திதியன்று முருகப்பெருமான் சூரனை வதைத்த திருநாள். ஆறுமுகப் பெருமானின் ஆலயங்களில் எல்லாம் இந்தத் திருநாள் கொண்டாடப்படும். திருச்செந்தூர் போன்ற முருகதலங்களில் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

சிவ பக்தனான சூரபதுமன் மகேந்திர புரியை ஆண்டவன். யாகங்கள் பல செய்து, சிவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி வரம் பல பெற்றுக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். ஆனால் ஆணவ மிகுதியால் தேவர்களைக் சிறைப்பிடித்து யாராலும் வெல்ல முடியாத பலத்துடனும் செருக்குடனும் இருந்தான். அவனை வென்று அழிக்கும் ஆற்றல் படைத்தவன் மால் மருகன் ஒருவனே. முருகன் நினைத்தால் சூரனை உடனே வதைத்திருக்க முடியும். ஆனால் கொடியவர்கள் மன்திருந்தி நல்வழிப்பட போதிய அவகாசம் கொடுத்து பொறுத்திருப்பது தான் ஆண்டவனின் பெருமை.

வீரபாகுதேவரை தூது அனுப்பி, சூரன் திருந்தி நல்வழிப்படவாய்ப்பளித்தான் குமரன். ஆணவம் குடி கொண்ட சூரன் முருகப் பெருமானின் நல்லுரைகளைக் கேட்டானில்லை, மூண்டது போர். கந்த வேளின் வேலுக்கு இறுதியில் இரையானான் சூரன். சூரன் அவுணப் படையுடன் மாயங்கள் பல புரிந்து, முருகனுடன் பெருந்திய போரில் சூரனின் படைகள் அழிந்தன. சூரனை அழிக்கவென்றே தோன்றியவன் அல்லவா குமரன்? சம்ஹாரம் செய்த இத்திருநாளே சூரசம்ஹாரத் திருவிழா ஆகும்.

ஆறுபடை வீடமர்ந்த பெருமானின் கந்தசஷ்டி விழாவில் முருகன் புகழ்பாடி உய்வுபெறுவோம்.

பான் ஏஷியா வங்கியில்
www.pabcbank.com
(011) 4 667 222
24 கரட் தங்க நாணயம் ஒன்றுக்கு
50,000
24 கரட்
42,000
22 கரட்
38,000
சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
பான் ஏஷியா
பொன் LOAN
பான் ஏஷியா வங்கி
உங்களை அறியும் வங்கி
www.sarva.lk


மன்னிக்கவும்
உலகத் தரமான உற்பத்திகளை வேறு எப்போதும் இல்லாத விசேட
விலைக்கழிவில் பெறக்கூடிய அரிய வாய்ப்பை இழக்கப்போகும்
அனைவரும் எம்மை மன்னித்துவிடுங்கள்.
70% வரை தள்ளுபடி
நவம்பர் 10 ம் திகதிவரை சகல அபான்ஸ் காட்சியறைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
குறைந்த அளவு கையிருப்பே உள்ளது
LED தொலைக்காட்சிகள்
26% 24" HAIER 24" LED TV ரூ. 26,999 தள்ளுபடி விலை ரூ. 19,999
29% 40" TOSHIBA 40" LED TV ரூ. 84,999 தள்ளுபடி விலை ரூ. 59,999
63% 50" ABANS 50" LED TV ரூ. 199,999 தள்ளுபடி விலை ரூ. 74,999
33% 43" LG 43" FM / LED TV ரூ. 119,999 தள்ளுபடி விலை ரூ. 79,999
23% 42" LG 42" 3D SMART LED TV ரூ. 149,999 தள்ளுபடி விலை ரூ. 114,999
வீட்டுப் பாவனை உபகரணங்கள்
24% ரூ. 199,999 தள்ளுபடி விலை ரூ. 151,999
20% GL-M292RCJC ரூ. 99,999 தள்ளுபடி விலை ரூ. 79,999
24% EWF1063V ரூ. 91,999 தள்ளுபடி விலை ரூ. 69,999
19% ரூ. 27,799 தள்ளுபடி விலை ரூ. 22,399
17% வக்கியூம் கிளீனர் HT65-T0-ME ரூ. 11,699 தள்ளுபடி விலை ரூ. 9,699
ஹோம் தியெட்டர் / Hi-Fi / டொக்கிங் ஸ்டேஷன் / DVD மற்றும் ப்ளூ-ரே பிளேயர்
79% வரை தள்ளுபடி
ஹெட்போன் / கெம்கோடர் / டிஜிட்டல் ஃபோட்டோ ப்ரேம்
71% வரை தள்ளுபடி
வளிச்சீராக்கிகள்
29% LGACIN126B4A4E/ LGACIN126B4A4 24000BTU ரூ. 124,900 தள்ளுபடி விலை ரூ. 87,690
மொபைல்ஸ் / iPADS
4G 24% IPAD AIR 2 16GB ரூ. 118,999 தள்ளுபடி விலை ரூ. 89,999
18% 4G IPAD PRO 12.9" 128GB ரூ. 189,999 தள்ளுபடி விலை ரூ. 155,999
8% LG NEXUS 5X ரூ. 59,999 தள்ளுபடி விலை ரூ. 54,999
12% LG G4 Dual ரூ. 105,999 தள்ளுபடி விலை ரூ. 95,999
14% LG XSCREEN ரூ. 35,999 தள்ளுபடி விலை ரூ. 30,999
10% LG STYLUS ரூ. 49,999 தள்ளுபடி விலை ரூ. 44,999
டெப்ஸ் மற்றும் லெப்டாப்ஸ்
18% Lenovo - IP300-I3 ரூ. 79,900 தள்ளுபடி விலை ரூ. 65,900
29% HP - AC I3 ரூ. 79,900 தள்ளுபடி விலை ரூ. 59,900
14% ACER - E5-574S-I3 ரூ. 79,900 தள்ளுபடி விலை ரூ. 68,900
20% Lenovo Mix 3-10" Tablet ரூ. 69,900 தள்ளுபடி விலை ரூ. 55,900
21% Dell - 3543-I75 ரூ. 125,990 தள்ளுபடி விலை ரூ. 99,990
0115999000
அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமும் பெறலாம்
Abans

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கலைத்துறைக்கு பெரும் இழப்பு பண்டிட் அமரதேவாவின் மறைவு

இலங்கையின் மூத்த சிங்கள இசைக்கலைஞர் பண்டிட் டபிள்யு.டி.அமரதேவாவின் மறைவு பொதுவாக நாட்டுக்கும் குறிப்பாக சிங்கள இசைத்துறைக்கும் மாபெரும் இழப்பாகும்.

அந்த இசை மேதையின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் விதத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவே, அமரரின் பூதவுடல் வைக்கப்பட்ட பேழையை மற்றவர்களுடன் இணைந்து சுமந்து சென்றார் என்பது வேறு எந்தக் கலைஞருக்கும் கிடைக்காத பெருமையாகும். பண்டிட் அமர தேவாவின் மறைவுக்கு எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் உட்படப் பல்வேறு தலைவர்களும் இரங்கல் தெரிவித்திருக்கிறார்கள்.

பண்டிட் அமரதேவா, 60களின் பிற்பகுதியில் அல்லது 70களின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் வருகை தந்து இசைக்கச்சேரிகளை நடத்தியிருந்தார். அந்தவகையில் அவர் தமிழ் கலைஞர்களுக்கும் பரிச்சயமானவரே.

இங்கு அவர் நடத்திய வயலின் இசைக் கச்சேரிகளில், மிருதங்க வித்துவான் ராமநாதனும் பக்கவாத்தியம் வாசித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னக்குவத்தே வாதுகே டொன் அல்பேர் பெரேரா என்ற இயற்பெயரைக் கொண்ட அவர் அமரதேவா என்ற பெயரிலேயே நாட்டில் பெரிதும் அறியப்படுபவராக இருந்தார். 1927 டிசெம்பர் 5ஆம் திகதி பிறந்த அமரதேவா 2016 நவம்பர் 3ஆம் திகதி மறைந்தார்.

இலங்கை இசைத்துறைக்கு அவர் ஆற்றியிருந்த பணிகளுக்காக உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சிறப்பான விருதுகளைப் பெற்றிருந்தார்.

ஜனாதிபதியின் கலாகீர்த்தி விருதை 1986ஆம் ஆண்டிலும், தேசமானிய விருதை 1998 ஆம் ஆண்டிலும் பெற்றுக் கொண்ட அவர், 2001 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மெக் ஸஸே விருதையும் தமதாக்கினார். இந்தியாவின் பத்மசிறி விருதை 2002 ஆம் ஆண்டும், 2003 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் ஓடர் ஒப் ஆர்ட்ஸ் அன் லெட்டர்ஸ் (செவிலியர்) விருதையும் பெற்றார்.

அமரதேவா மாலைதீவு நாட்டின் தேசிய கீதமான காவுமில் சலாம் பாடலுக்கு இசைஅமைத்து வழங்கிய பெருமைக்கும் உரியவர் மென்டொலின் மற்றும் ஹார் ஆகிய இருவாத்தியங்களையும் இணைத்து மன்டோ றள்ப் என்ற வாத்தியத்தையும் உருவாக்கி வாசித்துள்ளார்.

பல்வேறு சிங்கள சினிமாப் படங்களுக்கு பாடல் இயற்றி, பாடி, இசை அமைத்தவரான அமரதேவ வயலின் (பிடில்) வாசிப்பதிலும் விற்பன்னராகத் திகழ்ந்துள்ளார். ஆரம்பத்தில் மொகமது கவுஸ் என்ற புகழ்பெற்ற இசைப் பணிப்பாளரின் கீழ் இசைபயின்ற அமரர், முதன்முதலில் அசோக்க மாலா என்ற படத்திலும், பின்னணி பாடும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார். உள்ளூரில் வழங்கப்படும் சரசவிய பன்னாட்டு படவிருது ரன்முது துவ என்ற படத்துக்கு இசைஅமைத்ததற்காக அவருக்குக் கிடைத்தது. களனிப் பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம் ஆகியவை அவருக்கு கௌரவ கலாநிதி பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன.

"இசைத்துறையில் நான் பெற்றுக் கொண்ட இசை ஞானங்கள் அனைத்தையும் இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினருடன் பகிர்ந்து கொள்ளவே முயன்று வந்துள்ளேன். இலங்கை மக்களது நிதி உதவியால் நான் மிகப்பெரிய இந்திய குருக்கள்மாரிடம் இசையைப் பெற்றுக்கொண்டேன்" இதன்மூலம் முடிந்தது. எனவே தான் நான் எப்பொழுதுமே இந்த நாட்டு மக்களுக்கு உரித்தானவன் என்று கருதி வந்துள்ளேன். என அவர் தமது கடைசி நேர்காணலொன்றில் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

கலை உணர்வும் இசை ஞானமும் கிட்டியதால், வாழ்நாள் முழுவதும் சிங்கள இசைத்துறைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பண்டிட் அமரதேவ, தமது 88 ஆவது வயதின் இறுதிக்காலத்தில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நாட்டின் சகல அரச மரியாதைகளுடனும் இடம் பெற்றன.

# அரசியல் தலைமைத்துவத்துக்கு உரிய தகுதி அவசியம் தேவை

மனோ.செல்லத்துரை

வடமாகாணசபையின் 64வது அமர்வு கடந்த 27.10.2016 அன்று வடமாகாணசபைக் கட்டடத்தில் இடம்பெற்றது. அவ்வேளை பிரதி அவைத்தலைவர் தெரிவு பெரும் பிரச்சினையாக அமைந்தது எனப் பத்திரிகை வாயிலாக அறிய முடிந்தது.

இன்னல்களைச் சுமந்த வடபகுதி மக்களுக்குச் சேவை செய்யவென எம் வடமாகாணத்து மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே சபையின் உறுப்பினர்கள். ஆனால், எமது அந்த அவலங்களை இணையங்களில் பார்த்து, வேறு எந்தவித ஒட்டுறவற்றவர்களுக்கும் நாம் எமது வாக்குகளை அளித்த தன்பயன் தான் இவ்வளவும்.

01.வடமாகாணசபைக்கு ஒதுக்கப்படும் நிதியின் பெரும்பகுதி தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் திறைசேரிக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது.

02.65000வீட்டுத்திட்டம் முதலமைச்சரால், தடுக்கப்பட்டது. காலம் கடந்தும் அதனை மீளப் பெற்றுப் பயனடைய் ஊக்கம் காட்டுவதாகத் தெரியவில்லை.

03.பொருளாதார மத்திய நிலையம் அமைக்கும் விடயத்தில் எந்த ஒரு முன்னேற்றமும் கிடையாது.

இந்த நிலையில் ஓர் அமர்வுக்கு மாகாணசபைக்கு ஏற்படும் செலவு ரூபா 5 லட்சம் என எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இந்த 64வது சபை அமர்வைப் பொறுத்தவரை முக்கிய பதவியான பிரதி அவைத் தலைவர் பதவி நிரப்பப்பட்டிருக்க வேண்டும். முதலமைச்சர் தமிழரசுக் கட்சியால் கொண்டுவரப்பட்டவர்; சாவடைந்த பிரதி அவைத் தலைவரும் அதே கட்சியைச் சேர்ந்தவர், என்பதோடு வன்னிப்பிரசேத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். எனவே அதில் என்ன தயக்கம்? தாமதம்?

> இந்த 64வது சபை அமர்வைப் பொறுத்தவரை, முக்கிய பதவியான பிரதி அவைத் தலைவர் பதவி நிரப்பப்பட்டிருக்க வேண்டும். முதலமைச்சர் தமிழரசுக் கட்சியால் கொண்டுவரப்பட்டவர்; சாவடைந்த பிரதி அவைத் தலைவரும் அதே கட்சியைச் சேர்ந்தவர், என்பதோடு வன்னிப் பிரசேத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். எனவே அதில் என்ன தயக்கம்? தாமதம்?

### சிவாஜிலிங்கத்தின் தலையீடு நியாயமற்றது

இந்த நிலையில் சிவாஜிலிங்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளுள் ஒரு கட்சியான ரெலோவைச் சேர்ந்தவர். இவருக்குத் தெரியும், தேர்தல்களின் போது இட ஒதுக்கீடு செய்யப்படும் முறை. உதாரணமாக ரெலோவுக்கு 4 இடம் ஒதுக்கப்பட்டால், அதற்கு மேற்கொண்டு அக்கட்சி சார்பாக எவரை நியமிப்பது என்பதில் ஏனைய மூன்று கட்சிகளும் தலையிட முடியாது. அது அவர்களின் உள்வீட்டு விடயமாகி விடும்.

இதேபோல் அன்ரனி ஜெகநாதன், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அவர் சாவடைந்ததால் அந்தக் கட்சிதான் புதிய உறுப்பினர் தெரிவு குறித்து முடிவெடுக்க வேண்டும். அதை விடுத்து சிவாஜிலிங்கத்துக்கு எந்த ஓர் உரிமையோ தகுதியோ இல்லாத நிலையில் இவர் எவ்வாறு அனந்தி சசிதரனைப் பிரேரித்தார்?

இப்போதைய அரசியல் களநிலை மிகவும் மாறுபட்டது. உதாரணமாக தற்போது ஓர் அரசியல்வாதியோ அல்லது ஆன்மிகவாதியோ வெளிநாடு சென்று வந்தால், சமூகத் தொண்டுக்கெனக் கூறி அவர் வெளிநாட்டில் பெற்ற உதவிகள் தொடர்பாக விவரங்கள் உடனடியாகவே இங்கு வந்து சேர்ந்து விடுகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிக்காது நடுநிலை வகிக்க வேண்டும் என்று பரப்புரை செய்தோர், மகிந்தவுடன் தொடர்புடையவர்கள் என்ற கருத்து வலுப்பெற்று ரும் இன்றைய சூழலில், சிவாஜிலிங்கத்தைப் பற்றியும் அனந்தியைப் பற்றியும் மக்கள் மிக எச்சரிக்கையாகச் சிந்திக்கின்றார்கள். 2005 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களித்திருந்திருந்தால் நிச்சயம் ரணில் விக்கிரமசிங்க வென்றிருப்பார். உலக அரங்கில் ஐ.தே.கட்சிக்கான அவப்பெயரைப் போக்கிக்கொள்ளவாவது, ரணில் இவ்வளவு பெரும் அவலத்தை தமிழ் மக்களுக்கு இழைத்திருக்க வாய்ப்பில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் அனந்தி, சுரேஷ் பிறேமச்சந்திரனிடம் தனக்கு ஓர் இடம் ஒதுக்கீடு செய்துதருமாறு கோரியதாகப் பத்திரிகைச் செய்திகள் வெளியாகின. அதனைச் சுரேஷ் பிரேமச்சந்திரனும் உறுதிப்

## வாசகர் திருமுகம்






**தமிழ் மக்களை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நடுவு நிலைமை வகிக்குமாறு கூறியமைக்காக அனந்திக்குக் கட்சித் தடை விதிக்கப்பட்டது. நீங்களும் அதே பிழையை விட்டவர். எதிர்காலத் தேர்தல்கள், பொதுமக்கள் உங்களிடம் புராணக் கதை கேட்கும் தேர்தலாக அமையாது.**

படுத்தியிருந்தார். இப்போது ரெலோ உறுப்பினரான சிவாஜிலிங்கம் எவ்வித தகுதியோ உரிமையோ அற்ற நிலையில், ஒரு தமிழரசுக்கட்சி உறுப்பினரை பிரேரிக்க முயன்றமை உங்கள் கடந்தகால ஆயுத கலாசாரச் செயற்பாடுகளை நினைவூட்டுகிறது என எண்ணவும் தோன்றுகிறது.

தமிழ் மக்களை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நடுவு நிலைமை வகிக்குமாறு கூறியமைக்காக அனந்திக்குக் கட்சித் தடை விதிக்கப்பட்டது. சிவாஜிலிங்கமும் அதே பிழையை விட்டவர். எதிர்காலத் தேர்தல்கள், பொதுமக்கள் இவர்களிடம் புராணக் கதை கேட்கும் தேர்தலாக அமையாது. ஆனால் மாகாண, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும், தத்தமது பதவிக் காலத்தில் மக்களுக்கு என்ன செய்தார்கள் என்ற சகல விவரமும் அடுத்த தேர்தல் காலத்தில் பொதுமக்களால் கேள்விக்குள் ளாக்கப்படும். வெளிநாடுகளில் வாழ்பவர்களிடம் தமிழ்மக்களைக் காட்டிப்பெற்ற பணங்கள், பொருள்கள், அவை பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் என்பவை குறித்து இவர்கள் பதிலளிக்க நேரும்.

**வற்றிய ஓலை கலகலக்கும்;**
**பச்சை ஓலை ஒலி எழுப்பாது**

முதலமைச்சர் வெளிநாட்டில் போய் நிற்கிறார்; வேலிகள், மதில்கள், பாதைகளை அகட்டி தார் போடப் போகிறோம். நாளையே வேலை தொடங்குகிறோம், என்று பொதுமக்களுக்கு சிவாஜிலிங்கம் கூறி வந்தார். இப்போது மூன்றாவது வாரமும் முடிகிறது.

சிவாஜிலிங்கம் அவர்களே வற்றிய ஓலை சலசலக்கும் – எஞ்ஞான்றும் பச்சை ஓலைக்கில்லை ஒலி.

அறிவுள்ளவன் அலட்டமாட்டான்; ரெலோவில் இருந்து கொண்டு தமிழரசுக்கட்சிப் பிரச்சினையை ஆராய மாட்டான்.

64வது அமர்வுக்காக, முறையற்ற விதத்தில் செலவான 5 லட்சத்தையும் உண்மையாக மனச்சாட்சி இருந்தால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேருமாக உங்கள் சொந்தப் பணத்தில் செலுத்தி 290ரூபா அரச உதவிப்பணம் பெறும் வயோதிபர்களுக்கு பகிர்ந்து வழங்குமாறு தாபாற்கந்தோர்களில் வழங்குவீர்களா? அவர்களுமல்லவா உங்கள் போன்றோர்க்கு வாக்களித்தார்கள்? முடிவாக உல்லாச வாழ்க்கை நடத்த பொதுமக்களால் வழங்கப்பட்ட சந்தர்ப்பமாக அரசியல் பதவிகளை எண்ணாதீர்கள்.

இன்று நாட்டில் சட்டமியற்றும் அதிகாரம் வயோதிப ஆண்களின் கைகளில் சிக்குப்பட்டுச் சீரழிவதால், ஏனைய மூன்று வகையினரும் (வயோதிபப் பெண்கள், இளம் பெண்கள், இளம் ஆண்கள்) சொல்லொணாச் சட்டச் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது; இது பயங்கரவாதத்துக்குத் தூண்டுகோலாக அமைகிறது. சிங்களவரிடம் போய் எமது உரிமையைக் கேட்பதன் முன்னர், எம்க்குள் அவரவர் உரிமையைச் சரியாக வழங்கத் தெரிய வேண்டும்.

சிங்களவரிடம் உரிமைகோர முயல்வதற்கு முன்னர், தமிழ்க்கட்சிகள் யாவும், கல்வித்தகைமை, ஒழுக்கம் உடைய இளைஞர் யுவதிகள் (இருபத்தைந்து வயதுக்கு மேல்) வயோதிப ஆண், பெண் எனச் சகல தரப்பினருக்கும் அங்கத்துவம் கொடுத்து உள்வாங்கி, அவர்கள் செயல்பாட்டைக் கவனித்து தேர்தலில் நிறுத்துவதன் மூலம் பல பெரும் பிரச்சினைகளை இல்லாதொழிக்கமுடியும். வயோதிப ஆண்கள் மட்டும் தேர்தலில் நின்று (கஞ்சிக்குள் பருப்புப் போல் ஓரிரு பெண்களையும், இளைஞர்களையும் இணைத்துக் கொண்டு) மாகாணசபையை நாடக மேடையாக்குவதைக் கண்டு உலக அரங்கில் தமிழினம் வெட்கித் தலை குனிய நேர்கிறது.

## யாழ்.மத்திய பஸ் நிலைய வளாகத்துள் ஓட்டோக்கள் உட்செல்ல அனுமதி உண்டா?

யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு அதிகாலைவேளைகளில் வெளியூர்களில் இருந்து பஸ் பயணம் செய்து வந்து சேரும் பேருந்துப் பயணிகளை ஏற்றுவதற்காக ஓட்டோக்கள் உள்நுழைவது அங்கு ஏற்கனவே வெளியிடங் களுக்குச் செல்ல பஸ்களுக்காகக் காத்து நிற்கும் பயணிகளுக்கு பெரும் அசௌகரியத்தை மட்டுமல்ல, ஆபத்தையும் ஏற்படுத்த முனைகிறது.

இரண்டு நாள்களுக்கு முன்பு, திருகோணமலை செல்வதற்காக அதிகாலை 4.30 மணியளவில் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில்நின்றபோது, மட்டக்களப்பு பொத்துவிலில் இருந்து வந்த பஸ்ஸைக் கண்டதும் இரண்டு ஓட்டோக்கள் போட்டி மனப்பான்மையோடு அதிவேகத்தில் என் அருகாகச் சென்று அந்தப் பஸ்ஸின் அருகில் பிரேக் அடித்துநின்றன.

பொதுவாக காலைவேலைகளில், வெளியிடங்களுக்குச் செல்லும் பயணிகளை (வயோதிபர்கள், மாற்றுத் திறனாளிகள், கனதி கூடிய பயணப்பொதிகளுடன் வருவோர்) ஏற்றிவரும் ஆட்டோக்களுக்குப் பஸ் நிலையத்தினுள் நுழைவதற்கு அனுமதி உண்டு என அறியமுடிகிறது.

ஆனால் வெளியிடங்களில் இருந்து வரும் பயணிகளை கட்டணம் பெற்று அவரவர்களது இடங்களுக்கு ஏற்றிச் சென்று விடும் நோக்கில் பயணிகளை ஏற்றுவதற்காக, அங்கு பஸ்ஸுக்காக காத்து நிற்கும் பயணிகளின் நலனைக்கூடக் கருத்தில் கொள்ளாது அதிவேகமாக ஓட்டோக்களை பஸ் நிலைய வளாகத்துள் ஓட்டிச் செல்வதற்கு உரிய நிர்வாகத் தரப்பினரது அனுமதி உண்டா? என்பது குறித்துத் தெரியவில்லை.

சம்பந்தப்பட்டவர்கள் விளக்கமளிப்பின் என்போன்ற அதிகாலைப் பயணிகள் தமது பாதுகாப்புக்குறித்து எச்சரிக்கையாக நடந்து கொள்ள அது பெரிதும் உதவியாக இருக்கும்.

கோமேதகன். புதுக்குடியிருப்பு.

## மழைவிட்டாலும் தூவானம் விடாத கதை இது

மழைவிட்டாலும் தூவானம் விடாத கதை போலிருக்கிறது வலி.வடக்கு மக்களது மீள் குடியேற்றப் பிரச்சினை. பன்னாட்டு சமூகங்கள் உட்பட பல தரப்புக்களது கடும் அழுத்தங்கள் காரணமாகாவோ என்னமோ, கடைசியில் வலி. வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து கிராமசேவகர் பிரிவுகளில் முன்னர் வசித்து வந்த மக்கள், தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற கடந்த திங்கட்கிழமை அனுமதி வழங்கப்பட்டதான செய்தி அந்தப்பகுதி மக்களுக்கு நிச்சயம் மனதுக்கு அறுதல் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆயினும் கடந்த வியாழக்கிழமை தாம் முன்னர் வாழ்ந்த தமது பாரம்பரிய வாழ்விடங்களைப் பார்வையிட மிகுந்த ஆவலுடனும், திருப்தியுடனும் சென்ற அந்தப்பகுதிகளின் முன்னைய குடியிருப்பாளர்கள், காங்கேசன்துறை கடற்கரைக்குச் சமாந்தரமாக பாதுகாப்புத் தரப்பினரால் தடுப்புவேலி அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சிக்கு உள்ளானதாகத் தெரிய வருகின்றது. அந்த வகையில் இந்தப்பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்தாலும் தமது தொழில் நடவடிக்கைகளுக்காக சுதந்திரமாக கடற்கரைக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாக அவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

மொத்தத்தில், குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியமர்ந்தாலும் கூட, அந்தப்பகுதிகள் திறந்தவெளிச் சிறைச்சாலையாக அமையும் வாய்ப்பே மேலெழுந்து காணப்படுவதாக உய்த்துணர முடிகிறது.

இதனை மழைவிட்டாலும் தூவானம் விடாத கதையாகக் கொள்வதில் தப்பேதும் இல்லையல்லவா?

க.கண்ணன், கோப்பாய்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.




செயற்கைத் தண்ணீர்த் தொட்டி அறிமுகமாகியுள்ளது. இறப்பரினால் உருவான இவற்றில் காற்றை நிரப்பிப் பயன்படுத்திக் கொள்ள முடியும். விடுமுறை தினங்களில் குடும்பமாகக் குளித்து மகிழ இவை உகந்ததாகும். வட்ட, சதுர வடிவங்களில் கிடைக்கும் தொட்டிகள் 2 ஆயிரத்து 850 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகின்றன.

# கச்சான் கொழுக்கட்டை



## செய்முறை

வெறும் சட்டியில் கச்சானை வறுத்து மிக்ஸியில் போட்டு அரைத்துக் கொள்ளவும். தேங்காயை துருவி வைக்கவும். சீனி மற்றும் ஏலக்காயை பொடி செய்து கொள்ளவும்.

தேங்காய்த் துருவலை வறுத்து எடுத்துக் கொண்டு அதனுடன் அரைத்த சீனி, ஏலக்காய் கச்சான் பொடி சேர்த்து கலந்து பூரணம் செய்து கொள்ளவும்.

பிறகு ஒரு பாத்திரத்தில் 2 டம்ளர் தண்ணீர் ஊற்றி உப்புப் போட்டுக் கொதிக்க விடவும். மற்றொரு பாத்திரத்தில் பச்சரிசி மாவை எடுத்துக் கொண்டு அதில் வெந்நீரை சிறிது சிறிதாக ஊற்றி கெட்டியாகப் பிசையவும்.

பிசைந்த மாவில் ஓர் எலுமிச்சை அளவு மாவை எடுத்து உருண்டையாக உருட்டிக் கொள்ளவும். உருட்டும் போது எண்ணெய் தொட்டு உருட்டி வாழை இலையில் வைத்து அப்பளம் வடிவில் தட்டிக் கொள்ளவும்.

தட்டிய மாவில் ஒரு தேக்கரண்டி பூரணத்தை நடுவில் வைத்து உருண்டையாக உருட்டிக் கொள்ளவும்.

இதே போல் அனைத்து மாவிலும் கொழுக்கட்டையாகத் தயாரித்துக் கொள்ளவும். பிறகு இட்லிப் பானையில் கொழுக்கட்டையை வைத்து 10 நிமிடம் வேக வைத்து எடுக்கவும். சுவையான கச்சான் பூரணக் கொழுக்கட்டை தயார்.

## தேவையான பொருள்கள்

பச்சரிசி மா - கால் படி
கச்சான் - 100 கிராம்
தேங்காய் - அரை மூடி
சீனி - 100 கிராம்
ஏலக்காய் - 2







# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | – | 800 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 500 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 600 | – | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 700 | 600 | 350 |
| சுறா | 500 | 400 | 500 | – | 800 | – | 500 |
| சீலா | 300 | 300 | 300 | – | 450 | 400 | 350 |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 300 | 300 | – | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | 300 |
| திரளி | 300 | 200 | 100 | – | 250 | 200 | 200 |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | – | 250 |
| சூடை | 150 | 150 | 100 | – | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 250 | 200 | – | 400 | – | 130 |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | – | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 120 | 100 | – |
| பாலை | 400 | 100 | 300 | – | 400 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | – | 300 | 200 | – |

# இஞ்சியின் பயன்கள்



இஞ்சிப் சாறு குடித்து வந்தால் நுரையீரல் சுத்தமாகும். சளியை ஒழித்து விடும். வாயுத் தொல்லை என்பதே வராது. தேவையில்லாத கொழுப்புப் பொருளைக் கரைத்துவிடும். தொப்பை வயிற்றுக்காரர்கள் தொப்பைக்கு விடை கொடுத்துவிடலாம். உடல் எடையை படிப்படியாகக் குறைத்து விடும். ரத்தக் குழாய்களில் அடைப்பு என்றாலும் நீக்கி விடும். எனவே மாரடைப்பைத் தடுக்கும் சக்தியும் இஞ்சிச் சாறுக்கு உண்டு. பெண்களுக்கு சினைப்பையில் வரக்கூடிய புற்றுநோய்க் கட்டிகளை நீக்கிவிடும்.

இஞ்சியை சாறு எடுத்து, அதில் தேன் கலந்து குடித்து வந்தால் செரிமான மண்டலத்தை சீராக செயல்பட முடியாமல், நிலைமை மிகவும் மோசமாக உள்ளதை சரிசெய்ய முடியும்.

இஞ்சியை சாறாக்கி காலையில் குடிக்க வேண்டும். சாறு எடுத்தவுடனே பத்து நிமிடம் அப்படியே வைத்திருந்தால் அடியில் வண்டல் படியும். அதை அப்படியே விட்டுவிட்டு மேலே தெளிந்த நீரை ,மட்டும் எடுத்துக் குடிக்க வேண்டும்.

இஞ்சியை தேன் சேர்த்தும் குடிக்கலாம். தேநீருக்குள் இஞ்சியைப் போட்டும் குடிக்கலாம். இவ்வாறு குடிப்பதால் அஜீரணக்கோளாறு சரியாகும்.

இஞ்சியை புதினாவோடு சேர்த்து துவையலாக்கி சாப்பிட பித்தம், அஜீரணம், வாய் நாற்றம் தீரும். சுறுசுறுப்பு ஏற்படும்.

இஞ்சிச் சாறுடன், வெங்காய சாறு கலந்து, காலையில் ஒரு கரண்டி வீதம், ஒரு வாரம் குடித்துவர நீரிழிவு குறையும்.

இஞ்சிச் சாறு, எலுமிச்சை சாறு, வெங்காயச் சாறு மூன்றையும் கலந்து ஒருவேளை அரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர, தொடக்கத்தில் உள்ள ஆஸ்துமா, இரைப்பு, இருமல்

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 70 | 50–120 | 60 | 40 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 80–120 | 80 | 80–100 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 140 | 130 | 140 | 80 | 140 | 160 | – | 60 |
| பாகல் | 120 | 160 | 200 | 120 | 180 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 100 | 100 | 80 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | – | 80 |
| சி.வெங்கரயம் | 90 | 120 | 100 | 100 | 80–100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 25–30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 70 | 60 | 60 | 80 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 60 | 60 | 80 | – | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 80 | 80 | 70 | 80 | – | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 30 | 60 | – | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | – | 50 |
| வெண்டி | 100 | 80 | 120 | 80 | 80 | 40 | – | 30 |
| போஞ்சி | 180 | 160 | 180 | 160 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 | 80 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 30 | 45 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 100 | 100 | 120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 600 | 500 | 300 | 600 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 140 | 140 | 100 | 140 | – | 70 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 60 | 80 | 80 | 80 | – | 100 |



புகை பகை! பக். 24

சூரியகாந்தி
உதயன்
06.11.2016



'ஆவா' அரசியல் பக். 23



அரசியல் துணிச்சல்! தேவை பக். 29



தவபாரதி

எங்கும் ஒரே பேச்சு! அடுத்த ஜனாதிபதி ஹிலாரியா? ட்ரம்பா? என்பதுதான் அது. அமெரிக்கா என்பது வெறுமனே ஒரு நாடு மட்டுமல்ல. இரண்டாம் உலகப் போரிலிருந்து வல்லரசாக, உலகநாடுகளின் அரசியலையும் தீர்மானித்து வருகின்றது. ஆகவே அமெரிக்காவில் ஏற்படும் ஆட்சி மாற்றம் உலக நாடுகளின் அரசியல் மாற்றத்துக்கும் வழிவகுக்கும் என்பதால் அனைவரது பார்வையும் தற்போது அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி யார் என்பதில் தான் உள்ளது. இதுவரை அமெரிக்காவில் 57 ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்துள்ளன. இதில் குடியரசுக் கட்சி யைச் சேர்ந்தவர்களும் ஜனநாயகக் கட்சி யைச் சேர்ந்தவர்களுமே வெற்றிபெற்று அதிகமாக நாட்டை ஆண்டுள்ளனர். ஆனால் இந்த முறை இவர்களில் யார் ஆளப்போகிறார்கள்?

# அமெரிக்காவை ஆளப்போவது யார்?



### கட்சிகளின் தோற்றம்

கட்சிகள் அமெரிக்காவில் ஆரம்பமாவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, மத்திய அரசா? மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வேண்டுமா? என்ற கேள்வியே! அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான ஜோர்ஜ் வொஷிங்டன் மத்திய அரசுக்கு ஆதரவளித்தார். ஆனால், சிலர் மாகாண அரசு களுக்குத்தான் அதிகாரங்கள் அதிகம் இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். அரசியல் கட்சிகளின் ஆரம்பங்களில் ஹமில்டனின் கட்சி 'பெடரல்' (கூட்டாட்சிக் கட்சி) என்று அழைக்கப்பட்டது. ஜெபர்ஸனின் கட்சி 'ஜனநாயக – குடியரசுக்கட்சி' என்று அழைக்கப்பட்டது. ஜனநாயக குடியரசுக் கட்சியிலிருந்து முதல் ஜனாதிபதியாக ஜெபர்ஸன் 1800இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த இருகட்சிகளும் உடைந்து 19ஆம் நூற்றாண்டில் பல பிரிவுகளாகின. 1869இலிருந்து இரண்டு கட்சிகள் உருவெடுத்தன. அவைதான் இன்றுள்ளவை. குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி. அன்றிலிருந்து இன்று வரை இந்த இரு கட்சிகளில் ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவர்தான் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒரே ஒரு ஆபிரிக்க அமெரிக்கர்(பரக் ஒபாமா) அமெரிக்க ஜனாதிபதியாக இருந்திருக்கிறார். இந்த முறை போட்டியிடும் 'ஹிலாரி' வென்றாராயின் அமெரிக்காவை ஆண்ட முதல் பெண்மணி என்ற பதிப்பும் இடம்பெறும்.

### இருபெரும் கட்சிகள்

உலகையே ஆட்சி செய்து வரும் அமெரிக்காவை ஆட்சி செய்து வருபவை குடியரசுக்கட்சி, ஜனநாயகக் கட்சி ஆகிய இருபெரும் கட்சிகளே. ஆபிரகாம் லிங்கன் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர். 20ஆம் நூற்றாண்டில் இது திறந்த சந்தையையும் அமெரிக்கப் பணக்காரர்களையும் முழுமையாக ஆதரிக்கும் கட்சியாக மாறியது. 1950களில் ஐசனோவர் தலைமையில் இயங்கிய ஜோன் பாஸ்டர் டல்லஸின் மேற்பார்வையில் ரஷ்யாவுக்கு எதிரான போர் வலுவடைந்தது. தெற்கு வியட்நாமுக்கு ஆதரவு அளித்து, வியட்நாம் போர் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தார். ஈராக்குக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலும் இந்தக் கட்சியைச் சேர்ந்த புஷ் தலைமையில்தான் நடந்தது. முதல் உலகப் போரில் பங்கு பெற்று உலக நாடுகளின் சங்கம் உருவாவதற்குக் காரணமாக இருந்த உட்ரோ வில்சன் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். நான்கு முறை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்தான். ஜனநாயகக் கட்சி பணக்காரர்கள் பக்கம் நிற்பதைவிட, அமெரிக்க நடுத்தர மக்கள் சார்பாகப் பேசுவதை விரும்புகிறது என்ற ஒரு கருத்து பரவலாக நிலவுகிறது. ஆனால், பணக்காரர்களின் உதவியில்லாமல் அமெரிக்காவில் எந்தக் கட்சியும் இயங்க முடியாது. வெளிநாட்டுப் போர்களை முனைந்து நடத்துவதில் இரு கட்சிகளும் சளைத்தவை அல்ல.

### அமெரிக்க அதிகாரம்

1823இல் ஜனாதிபதியாகவிருந்த மன்றோவால் அறிவிக்கப்பட்ட கொள்கை அமெரிக்கக் கண்டத்தின் விவகாரங்களில் மேற்கத்தேய நாடுகள் தலையிடக்கூடாது, மற்றும் அமெரிக்கக் கண்டத்தில் இருக்கும் நாடுகளைக் காலனிகளாக்க முயற்சிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தியது. மத்திய, தென் அமெரிக்க நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தடையின்றித் தலையிட அமெரிக்காவுக்கு உதவியது இந்தக் கொள்கை. ஆனாலும் இரண்டாம் உலகப் போர் முடியும்வரை அமெரிக்கா உலகின் மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவில்லை. பிலிப்பைன்ஸ் 1898இலிருந்து 1946வரை அமெரிக்கக் காலனியாக இருந்தது. இதைத் தவிர, ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் அமெரிக்கக் காலனி என்று எதுவும் இல்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நிலைமை மாறிவிட்டது. உலகில் 1945 இலிருந்து இன்று வரை 248போர்கள், 153இடங்களில் நடந்திருக்கின்றன. இதில் அமெரிக்கா தலையிட்ட 201போர்களில் சுமார் 3 கோடி உயிர்கள் இறந்திருக்கின்றன.

### புறக்கணிக்கப்பட்டவர்கள்

அமெரிக்க அரசியல் சட்டத்தை வடிவமைத்தவர்கள் மூன்று தரப்பினரை மனிதர்களாகவே கருதவில்லை. வெள்ளையர்கள் வருவதற்கு முன்னால் சுமார் 1.8 கோடி பழங்குடி மக்கள் வட அமெரிக்காவில் இருந்தார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது. இன்று சுமார் ஐம்பது இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்களது மூதாதையர்கள் பல வகைகளில் கொல்லப்பட்டார்கள். மீதி இருந்தவர்களை வெள்ளையர்கள் இறக்குமதி செய்த நோய்கள் அழித்துவிட்டன. இவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது 1924இல். ஆனால் 1957 வரை பல மாகாணங்கள் பழங்குடி மக்களை வாக்களிக்க அனுமதிக்கவில்லை. பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது 1920இல்தான். அதுவும் பல போராட்டங்களுக்குப் பிறகுதான் கிடைத்தது. ஆபிரிக்க அமெரிக்கர்கள் அமெரிக்காவுக்கு அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்கள். தெற்கு மாநிலங்களில் பருத்திப் பண்ணைகளில் உழைத்துக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு 1965இல்தான் முழு வாக்குரிமை கிடைத்தது.

### ஹிலாரி - ட்ரம்ப்

அமெரிக்காவின் அதிகாரங்களையும், இரு கட்சிகளுக்கு இடையே நடக்கும் போட்டியையும் பற்றிப் பேசியதிருக்கட்டும், இப்போது,அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எவ்வாறு ஹிலாரி-ட்ரம்ப் போட்டியாக மாறியது? அங்குள்ள இருபெரும் கட்சிகளுள் ஒன்றான குடியரசுக் கட்சி சார்பாக டொனால்ட் ட்ரம்ப்பும் ஜனநாயகக் கட்சி சார்பாக ஹிலாரி கிளின்டனும் இம்முறை இருபெரும் கட்சிகளின் சார்பாக மோதிக் கொள்வதே இதற்குக் காரணம். இதில் ஹிலாரி கிளின்டன் அல்லது டொனால்ட் டிரம்ப் யார் வெற்றிபெற்றாலும் உலக நாடுகளுக்கு ஏற்படும் பாதிப்பைச் சிறந்த முறையில் விளக்குகின்ற ஒரே ஒரு அம்சம் எளிதில் அனுமானிக்கக்கூடியதே. அதாவது ஒரு ஜனாதிபதி வேட்பாளர், கொள்கை உருவாக்கம், வெளியுறவுகள், அரசியல் ஆகியவற்றில் நீண்டகால அனுபவம் உடையவர். இன்னொருவருக்கு இந்த அனுபவமே இல்லை என்பதே.

### தேர்தல் முறை

அமெரிக்காவில் அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்கும் இடையே பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் மாகாண அரசுகளுக்கே கூடுதல் அதிகாரங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட அமெரிக்க கூட்டாட்சி/சமஷ்டி அரசால் நாட்டுக்குச் செய்வதற்கு ஒன்றுமேயில்லை என்பதுதான் நிலைப்பாடு. அதனால் தானோ என்னவோ அது எப்போதும் வெளியாருடன் சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறது. மத்திய அரசில் சட்டங்களைக் கொண்டுவரும் செனட் அமைப்பும் மக்கள் பிரதிநிதிகள் அமைப்பும் உள்ளன. அதிலும் அதிக அதிகாரங்கள் பெற்றது செனட். ஆனால், இதற்கெல்லாம் உயர்ந்தவர் ஜனாதிபதியே. ஆனாலும் இவர் அமெரிக்க மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை 'எலெக்டரல் காலேஜ்' என்ற தேர்வு செய்பவர்களின் அமைப்பால், அமெரிக்க அதிபர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதிலுள்ளவர்களையே ஜனாதிபதியைத் தேர்வு செய்ய மாகாணங்கள் ரீதியாக மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். மொத்தம் 538 பேர் தேர்வு செய்யப்படுவர். இவர்களில் 270 பேரின் ஆதரவு கிடைப்பவரே ஜனாதிபதியாக முடியும். மக்கள் அதிகமாக வாக்களித்த வேட்பாளர், ஜனாதிபதி ஆகாமல் விடும் வாய்ப்பும் இருக்கிறது. உதாரணமாக, 2000ஆம் ஆண்டுத் தேர்தலில் ஜோர்ஜ் புஷ் 48.4 சதவீத வாக்குகளைம் அல்கோர் 49.7 சதவீத வாக்குகளையும் பெற்றனர். ஆனால், தேர்வு செய்பவர்களில் 271பேரின் ஆதரவு புஷ் ஷுக்குக் கிடைத்ததால் அவரால் ஜனாதிபதியாக முடிந்தது.

### முன்னிலையில் தடுமாற்றம்?

மக்கள் வாக்களித்ததை ஒட்டிப் பல கருத்துக் கணிப்புக்கள் நடத்தப்படுகின்றன. அமெரிக்க ஜனாதிபதித் தெரிவு அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் நிலையில், அமெரிக்கத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. அமெரிக்கக் கறுப்பினத்தவரைப் பொறுத்தவரை ஹிலாரிக்கே ஆதரவு எனக் கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. கடந்த மே மாதம் முதல் பல்வேறு செய்தி நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைகள் நடத்திய கருத்துக்கணிப்பில் ஜனநாயகக் கட்சி அதிபர் வேட்பாளர் ஹிலாரியே முன்னிலை பெற்று வந்தார். இந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை ஏ.பி.சி. வொஷிங்டன் போஸ்ட் வெளியிட்ட புதிய கருத்துக் கணிப்பின் முடிவில் குடியரசுக் கட்சி அதிபர் வேட்பாளர் டிரம்ப், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரியைவிட முன்னிலை பெற்றிருந்தார் எனவும் ஓரிரு நாள்களில் அது சமநிலை அடைந்தது எனவும் அறிய முடிகிறது. ஆகவே இறுதித் தருணங்கள் வரை அமெரிக்க ஜனாதிபதி யார் என்பது கடும் போட்டியாக அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

### தள்ளாடும் கருத்தெடுப்புக்கள்

ஏற்கனவே ட்ரம்ப் மீது நிறைந்துள்ள அதிக குற்றச்சாட்டுக்கள் ஹிலாரியை மேலுயர்த்தி இருந்தன. ஆனால் ஊழல் மற்றும் வரி ஏய்ப்புச் செய்த ஆதாரங்கள் அடங்கிய 33,000 மின்னஞ்சல்களை ஹிலாரி நீக்கியதற்காகவும் தனது தனிப்பட்ட மின்னஞ்சலை அரச சேவைக்குப் பயன்படுத்தியதற்காகவும் அமெரிக்க உளவுத்துறை அமைப்பான எப்.பி.ஐ. விசாரணை செய்ய ஆரம்பித்தது. இதன் பின்னரான கருத்துக் கணிப்பிலேயே ஹிலாரி பின்தள்ளப்பட்டார். இதுவரை முன்னணியிலிருந்த ஹிலாரியின் பின்னடைவுக்குக் காரணமாக இந்த மின்னஞ்சல் விவகாரம் அமைந்ததால் மேலும், அமெரிக்க வெள்ளை இனத்தவரிடம் டிரம்ப்புக்கு நாளுக்குநாள் ஆதரவு பெருகிவருவதாகக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும் இதன் பின்னும் ஓர் கருத்துக் கணிப்பில் ஹிலாரியே முன்னிற்கிறார். நாளுக்கு நாள் மாற்றமுற்று நிதானமில்லாமல் ஆதரவுகள் தளம்பலில் அமைகின்றன. அத்துடன் மாகாண பிரதிநிதிகளின் தெரிவு என ஊசலாடுகிறது அமெரிக்கத் தேர்தல் களம். ஆகவே அமெரிக்க அதிபர் யார்? என்பதை அவர்களின் தெரிவு வரை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**ஏற்கனவே ட்ரம்ப் மீது நிறைந்துள்ள அதிக குற்றச்சாட்டுக்கள் ஹிலாரியை மேலுயர்த்தி இருந்தன. ஆனால் ஊழல் மற்றும் வரி ஏய்ப்பு செய்த ஆதாரங்கள் அடங்கிய 33,000 மின்னஞ்சல்களை ஹிலாரி நீக்கியதற்காகவும் தனது தனிப்பட்ட மின்னஞ்சலை அரச சேவைக்குப் பயன்படுத்தியதற்காகவும் அமெரிக்க உளவுத் துறை அமைப்பான எப்.பி.ஐ. விசாரணை செய்ய ஆரம்பித்தது. இதன் பின்னரான கருத்துக்கணிப்பிலேயே ஹிலாரி பின்தள்ளப்பட்டார்.**





# 'ஆவா' அரசியல்

அன்ரன்

கடந்த 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையதான 21பேர் அடங்கிய இளைஞர் குழுவொன்று கோப்பாய் விசேட பொலிஸ் அணியால் கைது செய்யப்பட்டது. அவர்களிடமிருந்து இரண்டு கைக்குண்டுகள் உட்பட உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்டன. இதுவே 'ஆவா' குழுவின் அறிமுகமாகவிருந்தது. அவ்வேளை கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவிருந்த சஞ்ஜீவ ஜெயக்கொடி தெரிவிக்கையில்,

"கடந்த வாரம் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் கண்ணாடி உடைக்கப்பட்டு, கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலமே இவ்வாறான ஒரு குழுவை நாம் கைது செய்தோம்" - என்றார்.

**ஆவாவின் ஆரம்பமும் அடக்கமும்**

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 21பேர் குழுவாக இணைந்து, தென்னிந்திய சினிமாப் பாணியில் மோட்டார் சைக்கிள்களின் இருக்கைகள் (சீற்) மற்றும் மழை அங்கி (ஜக்கெட்) போன்றவற்றிற்குள் வாள்களைக் கொண்டு நடமாடி, வீடுகளுக்குள் புகுந்து கைக்குண்டுகளை, வாள்களைக் காட்டி மிரட்டி, கொலை, கொள்ளை, கப்பம் கோரல், கடத்தல் போன்ற பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்தனர் என்று ஒரு கதையைப் பொலிஸ் கூறியது. இந்தக் குழுவுக்கு ஆவா என்று அழைக்கப்படும் குமரேசன் வினோதன் என்ற 21 வயதுடைய நபரே தலைமை தாங்கி வந்தாராம்.

இந்தக் குழுவில் 17 வயதுக்கும் 30வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் இருந்துள்ளனர். இந்தக் குழுவின் கைது நடவடிக்கையை அடுத்து, பொதுமக்களிடமிருந்து 100க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்பின் மூலம் வாழ்த்துக்கள் வந்துள்ளன. இந்தக் குழுவில் இன்னும் 7 அல்லது 8பேர் கொண்ட சந்தேகநபர்கள் இருக்கலாம் என்றும் அவர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு, விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - இந்தக் குழுவினால் பாதிக்கப்பட்ட மக்கள் இனிப் பயமின்றி வந்து, அவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம்" என்றும் கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி கேட்டுக் கொண்டார்:

பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தகவல்கள் அடிப்படையில்தான், பொலிஸாரினால் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள முடியும் எனவும், இனிவரும் காலங்களில் யாழில் யாருமே ஆயுதம் தூக்காத வகையில் இவர்களுக்குத் தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாகவும் கூட அவர் தெரிவித்தார்.

அந்த வழக்கில் பிணை பெற்ற 'ஆவா' பின்னர் பல தடவைகள் வேறு குற்றச்சாட்டுக்களின் கீழும் மீண்டும் மீண்டும் கைது செய்யப்பட்டார். ஒரு கட்டத்தில் பிணையில் வெளிவரமுடியாதபடி அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இப்போதும் சிறையிலேயே உள்ளார்.

அத்தோடு அடங்கியிருந்த 'ஆவா' குழுவின் பெயர் கடந்த மாதம் மீண்டும் பரபரப்பான பேசு பொருளாகியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டை அடுத்து உயிரிழந்த பின்னர் 'ஆவா' குழு மீண்டும் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் இலங்கை முழுவதிலும் பரபரப்பாகியது.

மாணவர்கள் கொல்லப்பட்ட இரு நாள்களின் பின்னர் சுன்னாகத்தில் இரு பொலிஸார் மீது சிலர் வாளால் வெட்டிவிட்டுத் தப்பினர். அதற்கு மறுநாள் ஊடக நிறுவனங்களின் வாயில்களில் ஒரு துண்டறிக்கை எறியப்பட்டிருந்தது. அதில் சுன்னாகத்தில் பொலிஸாரை வெட்டியவர்கள் தாமே என்றும் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடரும் என்றும் பொலிஸில் இணைந்துள்ள தமிழர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் இறுதியில் 'ஆவா' காங்ஸ்டேர்ஸ் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் துண்டறிக்கையும் பொலிஸாரை வெட்டியதற்கு 'ஆவா' குழு உரிமை கோருகின்றது என்ற செய்தியும் தெற்கில் ஆங்கில, சிங்கள ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்தன. இதைத் தொடர்ந்து 'ஆவா' குழு தொடர்பில் அரச தரப்பினரும் மகிந்த தரப்பினரும் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு கருத்துக்களைத் தெரிவிக்க ஆரம்பித்தனர். கிட்டத்தட்ட புலிகள் இயக்கம் மீண்டும் உருவாகிவிட்டது போன்ற கதைகளை மகிந்த தரப்பு பரப்ப ஆரம்பித்தது. பதிலுக்கு இந்தக் குழுவை பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே உருவாக்கினார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கொந்தளித்தார்.

போதாதற்கு ஹெல உறுமய போன்றன, ஆவா குழு முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை உள்ளடக்கியது என்று சிங்கள மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பின.

மகிந்த காலத்தில் 'ஆவா' குழுவை உருவாக்கி அதனை வழிநடத்தியவர்கள் இராணுவப் புலனாய்வுக் குழுவினரே என்றும் இந்தக் குழுவில் 500 பேர் வரையிலானோர் உள்ளனர் என்றும் பொலிஸ் அதிகாரிகளை ஆதாரம்காட்டி தெற்கில் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

"
மகிந்த காலத்தில் 'ஆவா' குழுவை உருவாக்கி அதனை வழிநடத்தியவர்கள் இராணுவப் புலனாய்வுக் குழுவினரே என்றும் இந்தக் குழுவில் 500 பேர் வரையிலானோர் உள்ளனர் என்றும் பொலிஸ் அதிகாரிகளை ஆதாரம் காட்டி தெற்கில் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

இப்படியெல்லாம் தூக்கி வைத்துக்கொள்ளும் அளவிற்கு இந்தக் குழுவினர் உண்மையிலேயே சக்தி வாய்ந்த மிகப் பெரிய குழுவா? உதயன் குழு தேடத் தொடங்கியது.

**உண்மை என்ன?**

குழுவின் தேடலில் கிடைத்த தகவல்கள் அதிர்ச்சிகரமானவை. தெற்கில் அரசியல்வாதிகள் சொல்வதும் பொலிஸ் தரப்பை மேற்கோள்காட்டி தெற்கு ஊடகங்கள் வெளியிடும் செய்திகளும் இலங்கை மக்களுக்கு போலியான தகவல்களையே சொல்கின்றன என்பது தெரியவந்தது.


கொக்குவில், தாவடி, இணுவில் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் அங்குள்ள மைதானம் ஒன்றை அடிப்படையாக வைத்து ஒன்று சேர்வார்கள். விளையாடுவார்கள். அவர்களின் எண்ணிக்கை இருபதில் இருந்து முப்பதுக்குள் இருக்கும். விளையாடுவது கூடி நின்று அரட்டையடிப்பது என்பவை இவர்களின் தலையாய கடமை. பெரும்பாலானவர்கள் பாடசாலைகளில் உயர் தரம் படித்துக் கொண்டிருந்தார்கள் அல்லது உயர் தரத்தை முடித்துக்கொண்டு வேலைக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள் அல்லது தனியார் கல்வி நிலையங்கள் ஊடாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொலைக் கல்வி மூலம் படித்துக்கொண்டிருந்தார்கள்.

இவர்களின் மத்தியில் உருவத்தில் சிறியவன் வினோதன். இளைஞர்கள் விறுவிறுப்பான "உரையாடல்களில் ஈடுபட்டிருக்கும்போது எங்காவது ஏமலாந்திக் கொண்டு 'ஆ' வென்று வாய்பார்த்திருப்பதுதான் அவனது குணம். இதுதான் அவனுக்கு நண்பர்கள் மத்தியில் ஆவா என்ற பெயர் வரக் காரணம்" என்கிறார்கள் அந்தக் கூட்டத்தில் இருந்த சில இளைஞர்கள்.

"வினோதனின் தந்தை சுன்னாகத்தில் நன்றாக வியாபாரம் நடக்கக்கூடிய கடை வைத்திருந்தார். அவருடைய கடைக்கு அடிக்கடி வந்து நெருக்கமாகப் பழகிச் செல்லும் நபராக பொலிஸ் புலனாய்வாளர் ஒருவர் இருந்தார். ஒருநாள் அவரே அலைபேசி மூலம் அழைத்து வினோதனைக் கைது செய்தார்" என்கிறார்கள் அந்த இளைஞர்கள்.

(37 ஆம் பக்கம் பார்க்க)





# தீவிரமடையும் புகையைப் பகையாக்கும் முயற்சிகள்!

ஸ்டோ ஸ்வாமி

கடந்த முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சிகரெட்டுகளுக்கான வரி மீண்டும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இதன்படி இம்முறை சிகரெட் ஒன்றுக்கான விலை 5ரூபா தொடக்கம் 10ரூபா வரை அதிகரிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. தற்போதைய விலைவிவரத்தின் பிரகாரம் சிகரெட் ஒன்றின் விலை அதிகபட்சமாக 55 ரூபா வரை அதிகரிக்கச் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னதாகக் கடந்த மாதம் 3ஆம் திகதி நள்ளிரவன்றும் சிகரெட்டுகளுக்கு விலை அதிகரிப்புச் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சிகரெட் குச்சிக்கான விலை 7ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

புகையிலை மற்றும் மதுபாவனைக்குக் கடிவாளமிடுவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ள அரசு, தொடர்ச்சியாகக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தி வருகின்றது. கடந்த ஆண்டு சிகரெட் பெட்டிகளின் வெளிப்புறம் 80வீதமான பகுதிகளை உள்ளடக்கி அதன் பாதிப்பை எச்சரிக்கையாகச் சித்திரிக்கும் ஒளிப்படங்கள் அச்சிடுவதை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் அரசு வெற்றி கண்டிருந்தது. குறித்த நடவடிக்கை முன்னைய ஆட்சிக் காலத்தில் அடையப்பட முடியாமல் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. புகைத்தல் தொடர்பான வெறுப்பான மனநிலையை புகை பருகுபவர் களிடம் ஏற்படுத்துவதில் சுகாதார அமைச்சு பிடிவாதமாக இருக்கின்றது. என்பதுவும் இதன் பின்னணியிலுண்டு.

### திகைப்பைத் தரும் புள்ளிவிவரங்கள்!

புகையில்ல சார்ந்த பொருள்களைப் புகைப்பதன் காரணமாக ஏற்படும் சுகாதாரச் சீர்கேடு தொடர்பில் கிடைக்கப்பெறும் தரவுகள் அதிர்ச்சிக்குரியனவாக இருக்கின்றன. புகைத்தல் காரணமாக நாளாந்தம் 60 இலங்கையர்கள் சாவடைவதாகவும் வருடமொன்றுக்கு இத்தொகை 21,000எனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 1.89மில்லியன் இலங்கையர் நாளாந்தம் புகைத்தலில் ஈடுபடுகின்றார்கள். 3வீதமான பாடசாலை மாணவர்கள் புகைக்கின்றனர். மில்லியன் கணக்கிலான வருவாயைப் புகையிலை சார்ந்த பொருள்கள் வரி வருமானமாக ஈட்டித் தருகின்றபோதிலும் புகைப்பொருள்களின் பாவனையினால் ஏற்படும் புற்று நோய்க்குச் சிகிச்சையாகப் பல மில்லியன்களை இறைக்க வேண்டிய நிலையும் காணப்படுகிறது. வருடாந்தம் 68.4பில்லியன் ரூபா புகைத்தல் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காகச் செலவிடப்படுகிறது. செய்தித் தரவொன்றின் அடிப்படையில் 2004ஆம் ஆண்டில் இலங்கையின் புகையிலைச் சந்தை நிலைவரம் 10பில்லியன் குச்சிகள் என அறியக்கிடைக்கிறது. தவிர, இலங்கை சனத்தொகையில் ஆண்களில் 21 வீதமானோரும் பெண்களில் 0.8வீதமானோரும் புகைத்தலுக்கு அடிமையானவர்களாக இருக்கிறார்கள்.

### புகைத்தலுக்கு எதிரானவை

பல்வேறு இதய நோய்கள், தொற்றா நோய்கள், மற்றும் புற்றுநோய்களுக்கான நேரடிச் சூத்திரதாரியான புகைத்தலை பூச்சியச் சதவீதத்திற்கு கொண்டுவரவேண்டும் என்று கூறுகின்றார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால. புகைத்தலினால் ஏற்படும் கெடுதிகளை கருத்தில் கொண்டு புகைத்தலுக்கு எதிரான போர் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு புகையிலையைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டமைப்பில் இலங்கை 2003ஆம் ஆண்டில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2006ஆம் ஆண்டில் புகையிலை மற்றும் மதுவிற்கு எதிரான தேசிய அதிகாரசபையையும் (என்.ஏ.ரி.ஏ) நிறுவியிருந்தது. பொது இடங்களில் புகைத்தல் தடுக்கப்பட்டதுடன் புகையிலைக்கான விளம்பரப்படுத்தலும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

### சிகரெட் மட்டும் புகைப்பொருள் அல்ல

புகைத்தலுக்கு எதிரான முழக்கத்தில் சிகரெட் எதிர்கொள்ளும் தாக்கத்தை ஏனைய புகைப்பொருள்களான பீடி மற்றும் சுருட்டு என்பன எதிர்கொள்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மத்திய மற்றும் குறைந்த வருமானம் ஈட்டும் மக்கள் மத்தியில் குறிப்பாக கிராம மட்டத்தில் இத்தகைய சிகரெட் அல்லாத புகைப்பொருள்களின் பாவனை அதிகரித்த அளவில் காணப்படுகின்றது. ஒப்பீட்டளவில் புகைப்பொருட்களுக்கான சந்தையில் முதன்மை நிலையை சிகரெட் வகிக்கின்ற போதிலும் சிகரெட்டை இலக்கு வைத்து நடத்தும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால், புகை விரும்பிகள் இது போன்ற ஏனைய புகைப்பொருள்களை நாடி நகர்வதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இலங்கைச் சுங்கத் திணைக்களத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவலின்படி கடந்த சில ஆண்டுகளில் பீடி இறக்குமதி 200மடங்கினால் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சிகரெட்டிற்குப் பிரதியீடாகப்
பீடி தலையெடுப்பதனைத் தவிர்ப்பதற்கான பொறிமுறையும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியிருக்கிறது.

மக்கள் புகையை பகைக்க வேண்டும் என்பதற்காக அரசு முன்னெடுக்கும் முயற்சிகள் வரவேற்பிற்குரியவையாக இருக்கும் அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் முன்மொழிந்த சிகரெட் உற்பத்தி நிறுவனங்களிடம் நட்டஈடு கோரும் சட்டமுறைகளை நடைமுறைப்படுத்துவது சிகரெட் உற்பத்தி நிறுவனங்களை கட்டுப்பாட்டில் கொண்டுவர மிகச்சிறந்த உத்தியாகும்.

### மைத்திரி முன்மொழிந்தது!

2014ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராகப் பதவி வகித்தபோது புகையிலைப் பாவனையின் காரணமாக மரணத்தைத் தழுவி இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களைச் சி.ரி.சி. எனப்படும் இலங்கைப் புகையிலைக் கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடுக்குமாறு கோரியிருந்தார். குறித்த நடவடிக்கைக்குச் சுகாதார அமைச்சு முடியுமான வகையில் உதவும் என்றும் தெரிவித்திருந்தார்.

றெனோல்ட் புகையிலைக் கம்பெனிக்கு எதிராகக் குறித்த கம்பனியின் சிகரெட்டுக்களைப் பாவித்து புற்றுநோயால் மரணமடைந்த மிக்கேல் ஜோன்சன் என்பவருடைய மனைவி அமெரிக்க நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கை முன்னிறுத்தியே சிறிசேன மேற்படி யோசனையைத் தெரிவித்திருந்தார். மிக்கேல் ஜோன்சனுடைய மனைவிக்கு 23.6 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்துமாறு குறித்த புகையிலை நிறுவனத்துக்கு நீதிமன்றம் பணிப்புரை விடுத்திருந்தது. வெறும் சுகாதார அமைச்சராக மைத்திரிபால தெரிவித்த யோசனையை வலுவான முறையில் நடைமுறைக்கிடுவதற்கான சாதகமான புறச்சூழல் தற்போது அவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வேளையில் குறித்த சட்டநடைமுறை தொடர்பிலும் கவனம் செலுத்துவது அரசின் முன்னெடுப்புக்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும்.

### நெருக்கடிகள் தொடரவேண்டும்

சட்டபூர்வ சிகரெட்டிற்கு கொடுக்கப்படும் நெருக்கடி, சட்டவிரோத சிகரெட்டுகளுக்கான சந்தைக்கு வாய்ப்பாக அமைந்து விடுவது தொடர்பிலும் சுகாதாரச் சட்ட ஒழுங்குத் தரப்பினர் கரிசனை காண்பிப்பது அவசியமானதாக இருக்கின்றது.

பல்வேறு சுகாதாரக் கோளாறுகளுக்கு அடியிடும் புகைத்தலை மட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளுக்குச் சமாந்தரமாகப் புகைத்தலிலிருந்து விடுபடும் நபர்களுக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படின், புகையைப் பகைப்பது என்பது சிரமத்திற்குரிய ஒன்றாக அமையாது.





“மக்கள் புகையை பகைக்க வேண்டும் என்பதற்காக அரசு முன்னெடுக்கும் முயற்சிகள் வரவேற்பிற்குரியவையாக இருக்கும் அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் முன்மொழிந்த சிகரெட் உற்பத்தி நிறுவனங்களிடம் நட்டஈடு கோரும் சட்டமுறைகளை நடைமுறைப்படுத்துவது சிகரெட் உற்பத்தி நிறுவனங்களை கட்டுப்பாட்டில் கொண்டுவர மிகச்சிறந்த உத்தியாகும்.

# தீய்ந்த சொர்க்கம்

எஸ்.நிலா

எல்லாப் பெற்றோருக்கும் தங்கள் பெண்ணை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்ற இலட்சியக் கனவு இருக்கும். இது நியாயமான ஒன்று. ஓவியாவின் பெற்றோரும் அப்படித்தான் கனவு சுமந்தனர். மாப் பிள்ளை பார்க்கும் படலம் ஆரம்பமானது. படித்த மாப்பிள்ளை; கை நிறையச் சம்பாதிக்கும் ஒருவன் விதியின் வலிதால், அவளைப் பெண் பார்க்க வந்தான். இரு குடும்பத்தினருக்கும் பிடித்துப் போகவே, பெரியோர்களால் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது.

அவளைத் தாலிக் கயிற்றுக்குள் பிணைத்து, எப்போதும் தன்னருகே வைத்திருக்க முந்தியது அவனது மனம். திருமணத் திகதியும் காலத்தை உந்தித்தள்ளிக் கொண்டு முன்வந்து நின்றது. நாளை திருமண நாள். அவளது மனதில் வெறுமை குடிகொண்டது. வீட்டை ஒருமுறை சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஓர் உணர்வு. ஏதோ ஒன்றை இழக்கப்போகிறோம் என்று அவளது உள்மனம் கூறிக்கொண்டேயிருந்தது. அது வேறொன்று மில்லை. அவள் வாழ்ந்த வீடு- அவளது தாய் வீடு.

திருமண நாள் அண்மித்தது. தந்தையையும் தாய்யையும் பார்த்தாள். அவர்களுக்காக அவள் மனம் பரிதவித்தது. அவள் வாழ்ந்த வீட்டை ஒரு முறை, பலமுறை சுற்றி வந்தாள். விழித்த கண் களோடு அதனைப் பார்த்தாள். கண்கள் சுருங்க ஓரத்தில் நீர்த்துளி எட்டிப் பார்த்தது. அந்த வீட்டில் அவள் தேக்கி வைத்த சின்னச் சின்ன மகிழ்ச்சி களை விட்டு விட்டு, இன்னொருத்தருடன் செல்லப் போவதை நினைக்கப் பெரும் சங்கடமாக இருந்தது அவளுக்கு.

குட்டிக் குட்டிக் கோபங்களுக்கெல்லாம் அம்மாவை அடிக்கடி திட்டுவது அவள் வழக்கம். இனி யாரு டன் அவள் சண்டைபோடுவது என்ற தாக்கம் அவளுள். எல்லோருக்கும் மாமிமார்கள் தாயாக வாய்ப்பதில்லை. அவளுக்கு வரப்போகும் மாமி யாரை அவள் இன்னும் படிக்கவில்லை. சம்பிர தாயபூர்வமாகப் பெண் பார்க்கும் நேரத்தில் பார்த்தது மட்டும்தான். அது ஒன்றே மாமியாரைப் புரிந்திடப் போதுமானதில்லையே!

அப்பாவை எண்ணிப் பார்த்தது அவள் மனம். நோயுற்ற போதெல்லாம் அன்பு வைத்தியராக அரு கிருந்து சேவையாற்றும் அப்பாவுக்கு, என்ன? கைம்மாறு செய்யப்போகின்றேன் என்று அலறி யது அவள் ஆன்மா. அவரின் ஒட்டுமொத்த அன்பையும் சுகித்திருந்தவள். இனி எதிலிருந்து அதனை மீட்டெடுப்பது என்று அந்தரித்தாள். ஒருகோடி பாசத்தைச் சுமந்து, அதனைச் சொல் லிட வார்த்தைகள் அற்றுத் தவித்திடும் அப்பாக்களில் அவரும் ஒருவர். அவரைப் பிரிவதிலும் அவளுக்குப் பெருவருத்தம். ஆயினும், அழுதுகொண்டு ஒளி கொடுக்கும் மெழுகு வர்த்தி போல- உள்ளூர அழுது, வெளியில் சிரித்துக் கொண்டிருந் தாள் அவள்.

தினமும் அவளை வம்புக்கிழுத்து, அவ ளுக்குக் கொடுக்கப் படும் அனைத்திலும் தனக்கும் பாதி வேண் டும் என அடம்பிடித்து அன்புச் சண்டை போடும் ஒரே தங்கை வந்தாள். அவள் கண் களுக்குள். புகுந்த வீடு சென்றால், இனி யாருடன் என் அன்புத் தங்கை சண்டை போடுவாள் என்று எண்ணிப் பார்க்கவே சலித்தது அந்த வாழ்க்கை. தங்கை மீதான பிரியம் இன்னும் அதிகரித்தது.

அவளின் அத்தனை சோகங்களையும் மோப்பம் பிடித்தவாறு, அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது அவள் வளர்த்த செல்ல நாய்க்குட்டி. அதனை அணைத்தெடுத்து முத்தமிட்டவள், உணர்வுகளால் மட்டும் அதனுடன் பேசிக்கொண்டிருந்தாள். அவளையே இமைக்காது பார்த்திருந்த அந்த நாய்க்குட்டியை மீண்டும் முத்தமிட்டவள், உணர்ச்சிக் கலவைகளால் உந்தப்பட்டுச் சோர்ந்து போனாள். அந்தச் சோர்வால் அவள் இமைகள் மூடியதும், மனம் விழித்துக்கொண்டது.

ஆணின் திருமணம் என்பது அவர்கள் வாழ்வில் நடக்கும் ஒரு நிகழ்வு. ஆனால், பெண்ணின் திரு மணம் என்பது பிடுங்கி நடப்படும் ஒரு நடவு. அவள் வாழ்ந்த வீட்டில்-இருந்து வேரோடு பிடுங்கி எடுக்கப்பட்டு மற்றொரு இடத்தில் நடப்படுகிறாள். மீண்டும் நடப்படும் இந்தத் தளிர்கள் தழைப்பதற்கு எத்தனை கணவர்மார் உண்மையாக அன்புநீர் பாய்ச்சுகின்றனர்? இந்தக் கேள்வியை அவள் மனம் அடிக்கடி உச்சரித்துக்கொண்டிருந்தது.

மணம் முடித்துப் போகும் இடம் சொர்க்கமோ நரகமோ என்றெல்லாம் அவளுக்குத் தெரியாது. ஆனால், தான் வாழ்ந்த ஒரு சொர்க்கத்தை விட்டுப்போக அவளுக்கு மனமில்லை. அலை அலையாய் வாழ்வியல் கனவுகள் அவளுக்குள் அலைமோத, அன்னை- தந்தைக்கு அடுத்து அந்த இன்னொரு உடலத்தை- நாளைய கணவனை ஸ்பரிசிக்க விருப்பற்று இருந்தாள். அந்தக் கேள்வி மறுபடி மறுபடி அவள் மனதைக் குடைந்தமைதான் அதற்குக் காரணம்.

கண்ணுக்கு அழகாகக் காட்சி கொடுக்கும் அநேக மான ஆடவர்கள், மனதளவில் அழகாகக் காட்சியளிப்பதில்லை. அவளது அடிமனதில் அவனைப் பற்றிய ஒரு சின்னக் கீறல். அந்தக் கீறல் போட்டது அன்றைய இரவு அவளுக்குள் தூறல். இருப்பினும், அவள் பெண் என்ற ஒரே காரணத்தினால்- அதில் நனைந்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தம்.

விடியல் வந்தது. ஆயிரம் உறவுகள் புடைசூழ்ந்தி ருக்க, அக்கினியை சாட்சி யாக வைத்து அரங்கேற றப்பட்டது அவளின் திருமணம். கண்களில் ஈரம் துளிர்த் திடா வண்ணம் கவனம் காத்தவள், அதையும் மீறி அழுதுவிட்டாள். அவளைத் தேற்றி மண மகன் வீட்டுக்கு அனுப்பினர் பெரியோர்கள். தாய் தந்த பண் பாட்டுப் பெருமையெல்லாம் தன்னோடு எடுத்துக்கொண்டு போகின்றாள் அவள். இனி அவள் இன்னொரு மண்ணுக்கு உரியவள். பிறந்திட்ட மண்ணுக்குப் புதியவள். நேசிப்புக் கனவுகள் சுமந்து நீள்கிறது அவள் பயணம்.

புகுந்த வீட்டில் அவளுக்குச் சரியாசனம் கொடுக்க மறுக்கிறான் கணவன். உணவு சமைக்கவும், பாத்திரம் துலக்கவும, பிள்ளைகள் சுமக்கவும் தான் இயற்கை உன்னைப் படைத்தது என்று கொக்க ரிக்கிறான். அவன் ஒரு பிற்போக்குவாதி. ஆணாதிக்க வாதி. பெண்மையின் பெருமைகளை ஆராதிக்க மறுப்பவன். அவர்களின் புதுமைகளை எள்ளி நகைப்பவன். அவன் தாயாரும் அவனுக்கு ஒத்தூது கிறாள். சொர்க்கத்தின் மறுபக்கத்தை- நரகத்தை நேரில் பார்த்தவள், நொந்து நொடி கின்றாள்.

அவள் காயங்களை ஆற்றக் கருப்பையில் முகிழ்த்து, மடியில் பூத்த மழலை தேவதை அந்த வீட்டில் தொடர்ந்து வாசம் செய்ய முடியாது என நினைத்தோ என்னவோ வானுலகம் சென்றது. வெறுமைக்குள் விரட்டப்பட்ட அவள் உணர்வுகள், பொங்கியெழ அரிய பரிசளித்தது சமூகம். அது தான் பைத்தியக்காரிப் பட்டம். கொச்சைத் தமிழில் சொல்வதென்றால், விசரி. மூன்று வருடங்களை விரட்டியடித்துவிட்டு, மீண்டும் முகிழ்த்தது ஐப்பசி. அவளது மூன்றாமாண்டு திருமணநாள் இன்று. அவள் மீது இரக்கமுற்று வானம் அழுதுகொண்டி ருக்கிறது. நேசிப்பின் நிராகரிப்பும், புரிந்துணர்வுப் புறக்கணிப்பும் அளித்த பைத்தியக்காரிப் பட்டத்துள் இப்போது அவள் வாழ்க்கை வட்டம். பௌர்ண மியாய் புகுந்தவீடு சென்றவள், தேய்பிறையாய் அங்கு காட்சியளிக்கிறாள். அவள் மீது அனுதாப அலைகளை வீசியவாறு கடக்கிறது காலம்.

கண்ணுக்கு அழ காகக் காட்சி கொடுக்கும் அநேகமான ஆடவர்கள், மன தளவில் அழகாகக் காட்சியளிப்பதில் லை. அவளது அடிமனதில் அவனைப் பற்றிய ஒரு சின்னக் கீறல். அந்தக் கீறல் போட்டது அன்றைய இரவு அவளுக்குள் தூறல். இருப்பினும், அவள் பெண் என்ற ஒரே கார ணத்தினால்- அதில் நனைந்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தம்.





# புதிர்கள்

ஒருகாற்று மண்டலம்
மீது மிதக்கும்
கனவுக் கற்பாறை - இங்கு
கணங்கள் தோறும்
நிறங்கள் மாறும்
கடவுள் தவறா சொல் - இது
புதிர்கள் பொதிந்த பூமி
வாழ்க்கை புரியவில்லையே சாமி
போலி உருமறைந்த
திரைகள் நீங்கி
உண்மை கண்டவன் ஞானி
பலர் வந்தார், வாழ்ந்தார்,
வெந்தே போனார்.
வாசல் தடமில்லை - நான்
வாழ்ந்தால் மட்டும் போதுமென்ற
வாதம் சரியில்லை.
கருவறையில் கொலுவிருந்தேன்
காயம் இல்லை - மாயை
நான் கண் விழித்து அழுதபோதும்
காணவில்லை - தாயை
வாழும் உலகில் பாதி வயதை
உறக்கத்திலே தொலைத்தோம்
- கன்னி
ஆயுளையே கரைத்தோம்
போகும் தெருவில் பூவை உருத்தி
புன்னகையை உதிர்ந்தான்
போன ஜென்ம பந்தமென்று
போனில் கூட கதைத்தான்
காலம் உள்ள காலம் வரை - நம்
காதல் வாழும் என்றான்
இவன் கணவனாக முன்பே
அவள் கற்பமாகி நின்றாள்.
காசுமட்டும் பேசுகின்ற
காலத்திலே ஜனனித்தேன் மூச்சு
காற்றும் கூட காசுக் கென்றால்
கற்பனையில் சிரித்தேன்
ஆதிமுதல் அரியணையில்
அமர்ந்த மொழி பணிந்தேன்
ஆயிரத்தில் ஒரு கவிஞன்
ஆசிவரத் துணிந்தேன்போதிமர
போலிமுக போதனையைப்
பொறுத்தேன்
பாதிவழி முறிந்து போன
பயணத்தையே தொடர்ந்தேன்
இடித்தமாவை இடித்திடவா
இளைய தளிரின் வருகை - நீ
படித்தபாடத்தோடு இணைந்து
பட்டறிவில் தெளிக

க.விஜயன், தண்ணீரூற்று

# வழு வழுக்கும் வீதிகள்

ஜெ.காயா

எமது நாட்டுக்குரிய பருவமழைகளுள் ஒன்றான வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் காவி வரப்படும் மழை பொழிய ஆரம்பித் துள்ளது. ஒக்ரோபர்–டிசம்பர் மாதங்களை உள்ளடக்கியதாக நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் வருடம் தோறும் பொழிந்து வரும் மழை யாதலால் மக்களுக்கு இந்தப் பருவமழை ஒன்றும் புதிதல்ல. வழமை யான ஒன்றாயினும் மழைகால விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதில் அக்கறை கொள்ளவேண்டும்.

**வழுக்கும் காப்பெற் வீதிகள்**

போர்க்காலத்தின் முடிவுடன் நிர்மாணிக்கப்பட்ட வடபகுதிக் காப்பெற் வீதிகளில் பயணிக்கும் சாரதிகள் அவதானமாக வாகனம் செலுத்த வேண்டும். வழமை யான தன்மையிலிருந்து மாறியதாக மழைகால நீர் வழிந்திருக்கும் வீதிகள் வழுக்கும் தன்மை பெற்றிருக்கும். குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்த வேண்டும் எனில், வழமையான வேகத்தணிப்பைக் கடைப்பிடிக்காமல் சற்றே முற்கூட்டியே வேகத்தணிப்பில் ஈடுபட வேண்டும். அத்துடன் வீதிகளில் நீர் கசிந்துள்ளபடியால் திடீரென வேகத்தைத் தணிப்பது விபத்தை ஏற்படுத்தும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேுண்டும். வடபகுதி மட்டுமன்றி அதிவேகச் சாலைகள், மழை பெறும் நாட்டின் கிழக்கு மற்றும் ஏனைய பகுதி மக்களும் மழைகால வீதிப் பயணத்தை அவதானமாக மேற்கொள்ள வேண்டும்.

**மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கு**

நீர் வழியும் வீதிகள் பொதுவாகவே வழுக்கும் தன்மையில் காணப் படும். ல் நான்கு சக்கர ஊர்திகள் எந்நிலையிலும் நீரினால் வழுக்கி விழும் தன்மை குறைவு. அவை சரிந்து விழாது நின்று கொள்ளக் கூடி யவை. மாறாக இரண்டு சக்கர வாகனங்கள் மனித வலுவின்றித் தாமாக நிற்க முடியாதவை. எனவே இவை வழுக்கும் சர்ந்தர்ப்பங்களில் கட்டாயமாகவே சரிந்து வீழ்ந்துவிடுகின்றன.ஆனால்மோட்டார்வாகனங்களைப் பொறுத்தமட்டி செல்லும் வேகத்திலோ விபத்தின் போதோ கால்களை ஊன்றித் தடுத்து நிறுத்துவதென்பது முடிந்த காரி யமல்ல. ஆகையால் அதிகரித்துள்ள மோட்டார் சைக்கிள் சாரதிகள் அவதான மாக மழை கால வீதிகளில் பயணிக்க வேண்டும்.



**வாகனங்களில் கவனம் தேவை**

ஏதோ ஓடினால் போதும் என்ற நிலையி லுள்ள உங்களுடைய வாகனத்தை மழைகாலங்களிலாவது சிறிது செம்மைப் படுத்திக்கொள்ளுங்கள். இதுவரை நன்றாகத் தேய்ந்து வழுவழுப்பாக உராய்வுகளற்றிருக்கும் ரயர்களைப் புதுப்பித்துக் கொள்வது முக்கியம். அத்துடன் உராய்வுத் தடுப்பு சரியாகச் செயற்படுகின்றதா? அதற் கான ஒயில், தடுக்கப்படும் அளவு சரியாகவுள்ளதா? என்றும் கவனித்துக் கொள்ளவேண்டும். அதும ட்டுமன்றி வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள், சமிக்ஞை விளக்குகள் சரியாகச் செயற்படுகின்றனவா? என்றும் கவனித்துக் கொள்ள வேண்டும்.



**மழைகாலச் சாரதிகள்**

கடும் இருட்டாக மழை மேகங்கள் பகற்பொழுதை மூடிக்கொள்ளும் வேளை களில் முன்பக்கமுள்ள சிறிய மின்குமிழை ஒளிரச் செய்வது எதிரே வருபவர் களுக்கு உங்களை இலகுவாக இணங்கண்டு கொள்ள உதவிபுரியும். மழை காலத்தில் வாகனத் தளவாடிகள் மங்கலாகக் காட்சியளிக்கும் என்பதால் பின் னால் வரும் வாகனங்களைக் கவனிப்பதில் கூடுதல் கவனம் தேவை. அதி கூடிய மழைப் பொழிவு என்றால் வீதியிலி ருந்து விலகித் தரித்துக் கொள்வதும் சிறந்த சாரதிக்குரியசெயலே. இத் தகைய வழுவழுக்கும் வீதிகளில் பய ணிக்கும் பாதா சாரிகள், துவிச் சக்கர வண்டிச் சாரதிகள், மோட்டார் வாகனச் சாரதிகள் அனைவரும் மிகக் கவனத் துடன் பயணித்து விபத்துக் களைத் தவிர்த்துக் கொள்வோம்.

வீதிகளில் நீர் கசிந்துள்ளபடியால் திடீரென வேகத்தைத் தணிப்பது விபத்தை ஏற்படுத்தும் என் பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். வடபகுதி மட்டுமன்றி அதிவேகச் சாலை கள், மழை பெறும் நாட்டின் கிழக்கு மற்றும் ஏனைய பகுதி மக்களும் மழைகால வீதிப் பயணத்தை அவதானமாக மேற்கொள்ள வேண்டும்.



# பூமி கோளமல்ல!

ந.ஜெயதாஸ்

பூமி கோள வடிவுடையது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் அது நேர்த்தியான கோளமானது என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பது தவறு. (பண்டைக் காலத்தில் உலகம் தட்டையானது என நினைத்தமை வேறுகதை). பூமியானது ஒரு ஒழுங்கற்ற கோளவடிவத்தில் இருக்கிறது. அதிலுள்ள கரடுமுரடான தரைத்தோற்றங்களே இதற்கு ஆதாரம். பூமி கோளவடிவானது என்றால் மலைகளும் பள்ளங்களும் எவ்வாறு என்று எண்ணியதில்லையா? தூரப்பார்வைக்குக் கோளவடிவமாகத் தென்படும் பூமி, சீரற்ற கரடுமுரடான ஒரு கோளமாகும். ஆகையால் பூமியில் உயர்ந்த, தாழ்ந்த, சமவெளியான தரைத்தோற்றங்கள் பரவியுள்ளன.

### பூமியில் மிகவும் உயரமான இடம்

எவரெஸ்ட் சிகரம் பூமியில் மிக உயர்ந்த இடமாகும். இது கடல் மட்டத்திலிருந்து 8,850 மீற்றர் உயரம் (29,029 அடி) உடையது. இமயமலைத் தொகுதிகளுள் அமைந்துள்ளது. சீனா நேபாள நாட்டு எல்லையாக நேபாளம் – திபெத் பகுதியில் அமைந்துள்ளது. உருமாறிய பாறைகளைக் கொண்ட. இதன் உருவாக்கத்துக்கு புவியோட்டின் இந்திய –ஆஸ்திரேலிய தகடு மற்றும் ஐரோப்பா- ஆசியத் தகடுகளிடையே நிகழ்ந்த மோதலே காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

கண்டத் தகடுகள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் ஏற்பட்ட வட–தென் அமெரிக்காக்களிலுள்ள றேக்கி- அந்தீஸ் மலைத் தொடர்களைப் போலவே இங்கும் மேவி மடிந்து உயர்ந்த மடிப்பு மலை என்று கூறுகிறார்கள்.

### எவரெஸ்க்குப் போட்டி

உலகிலேயே மிக உயரமான இடம் எவரெஸ்ட் சிகரம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். பொதுவாக உயர அளவீடுகள், கடல் மட்டத்திலிருந்து அளவிடப்படுகின்றன. ஹவாய்த் தீவிலிருக்கும் 'மவுன கிய' எனும் எரிமலை, கடல் மட்டத்துக்கு மேலே சுமார் 13802 அடி உயரம் மட்டும் வெளியில் தெரியும்படியாக அமைந்துள்ளது. இந்த எரிமலை கடலினுள் அமிழ்ந்துள்ளது. கடலின் அடியிலிருந்து கணக்கிட்டால், இதன் உயரமானது 33000 அடியாகும். எவரெஸ்ட்டின் உயரம் 29029 அடிதான். எனவே உண்மையில், உலகிலேயே உயரமான இடம் 'மவுன கிய' எரிமலைதான். கடல் மட்டத்திலிருந்து மட்டுமே கணக்கீடுகள் எடுக்கப்படுவதால் மவுன கிய எரிமலை அந்தப் பெருமையை எவரெஸ்ட்டிடம் இழந்து விட்டது.

### பூமியில் மிகவும் தாழ்வான பகுதி

இந்த உலகிலேயே மிக ஆழமானப் பகுதி, மரியானா அகழிப்பகுதியில் அமைந்துள்ள 'சேலஞ்சர் மடு' என்ற பள்ளம் தான். பசுபிக் கடலில் உள்ள பிறை போன்ற வளைவாக மரியானா தீவுகளுக்குக் கிழக்கே அமைந்துள்ளது. இது 'மரியானா நீள்வரிப்பள்ளம்' என்றும் அழைக்கப்படுகின்றது. வடக்கு பசுபிக் பெருங்கடலில் மரியானா தீவுகளுக்குத் தெற்கிலும், கிழக்கிலும் குவாம் தீவுக்கு அருகில் அமைந்துள்ளது. மரியானா வளைவின் ஒரு பகுதியான இந்த அகழி, பசுபிக் கண்டத் தட்டும், சிறிய மரியானா புவிப்பாறைத் தட்டும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. இது 2550 கிலோ மீற்றர் நீளமும், 69 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது. இதன் ஆழம் 35,840 அடி ஆகும். சேலஞ்சர் ஆழப்படுகுழி 36200 அடி (அதாவது 11034 மீற்றர்) ஆழ முடையது.

உலகிலேயே மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட்டை இதனுள்ளே வைத்தால், அதற்கு பிறகும் ஏழாயிரம் அடி மிச்சமிருக்கும் என்றால், இதன் ஆழத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

### அடைய முடியாத ஆழ்கடல்

இந்த உலகில் மனிதனின் காலடி படாத இடம் ஆழ்கடல்தான். மனிதனின் காலடி பட வாய்ப்பே இல்லாத இடமும், ஆழ்கடல்தான். அது ஏன்? விண்வெளியைப் போன்று எண்ணிலடங்கா இரகசியங்களை தன்னுள் புதைத்து வைத்திருக்கின்றது ஆழ்கடல்! கடலின் அடியிலும் வெளியிலிருப்பது போல ஏராளமான எரிமலைகள், பள்ளத்தாக்குகள், மாபெரும் மலைத் தொடர்கள், சிறு குன்றுகள் எல்லாம் இருக்கின்றன. கணக்கிலடங்காத கடல் வாழ் விலங்குகள் உயிர் வாழ்கின்றன. பல்வேறு கிரகங்களுக்கு செயற்கைக்கோள்களை அனுப்பி ஆராய்ச்சி செய்து வரும் மனிதன் நமது பூமியிலிருக்கும் ஆழ்கடலை இன்னும் முழுமையாக ஆராய்ச்சி செய்து முடிக்கவில்லை. ஏனெனில், விண்வெளிப் பயணத்தைவிட மிகவும் கடினமானது ஆழ்கடல் பயணம்தான்.

இதற்கு முக்கிய காரணம், கடலின் அழுத்தம். நாம் கீழே செல்லச் செல்ல நீரின் எடை அதிகரித்து, அந்த எடை எல்லாப் பக்கங்களிலிருந்தும் நம்மை அழுத்தும். பத்து மீற்றர் ஆழத்தில் நீரின் அழுத்தம் இரண்டு மடங்காகி இருக்கும். அவ்வாறு ஒவ்வொரு பத்து மீற்றர் ஆழத்துக்கும் கடலின் அழுத்தமும் இரு மடங்காக அதிகரித்துக்கொண்டே செல்லும். அத்துடன், இன்னுமொரு பிரச்சினை உண்டு. சூரிய ஒளியானது சுமார் இரு நூறு மீற்றர் ஆழம் வரையே ஊடுருவும் என்றாலும், ஆயிரம் மீற்றர் ஆழம் வரை ஓரளவு வெளிச்சம் தெரியும். அதன் பின்னர் கும்மிருட்டுத்தான். நீர்மூழ்கிக் கப்பல்கள் கூட ஒரு குறிப்பிட்ட ஆழத்துக்குக் கீழே பயணிக்காது. ஏனெனில், கடல் நீரின் அழுத்தத்தால் நீர்மூழ்கியும் வெடித்துச் சிதற வாய்ப்பிருக்கிறது. இதனாலேயே ஆழ்கடல் குறித்த கேள்விகளுக்கு, வெகுநாள்களுக்கு விடை கிடைக்கவில்லை.

### மூன்றே மூன்று சாதனையாளர்கள்

உலகின் உயரமான சிகரமான எவரெஸ்ட்டைக் கூட ஆயிரக்கணக்கானவர்கள் தொட்டு விட்டு திரும்பியிருக்கிறார்கள். ஆனால், இன்றைய நாள் வரை மரியானா அகழியின் தரை வரை சென்று திரும்பியவர்கள் மூன்றே பேர்தான். அதில் ஒருவர் உலகறிந்த, புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரான ஜேம்ஸ் கேமரோன். மற்ற இருவர், அமெரிக்கக் கடற் படையைச் சேர்ந்த டான் வால்ஷ் மற்றும் ஜேக்குஸ் பிக்கார்டு ஆவர். இங்கிலாந்துக் கடற்படையைச் சேர்ந்த சேலஞ்சர் என்ற கப்பல்தான் முதன்முதலில், இந்த இடத்தின் ஆழத்தை 26850 அடி என்று கண்டறிந்து உலகுக்கு அறிவித்தது. 1875ஆம் ஆண்டு ஒலி அதிர்வு முறையில் இதைக் கணித்துச் சொன்னார்கள். இந்தக் கப்பலை பெருமைப்படுத்தும் விதமாகவே, இந்த ஆழ்குழிக்கு 'சேலஞ்சர் படுகுழி' எனப் பெயரிடப்பட்டது.

### கோளம் என்பது சாத்தியமா?

சுருக்கமாக 'மரியானா ஆழி' என்றழைக்கப்படுகின்ற இந்த மரியானா அகழி எப்படி ஏற்பட்டது. மோதுண்ட நிலத்தகடுகளினால் உண்டானது. பல மில்லியன் வருடங் களுக்கு முன்பு, பசுபிக் நிலத்தகடும் சிறிய மரியானா நிலத்தகடும் ஒன்றையொன்று மோதிக் கொண்டபோது, பசுபிக் நிலத்தகடானது மரியானா வின் அடியில் சென்றது. இதனால் இந்த மாபெரும் அகழி உருவானது. இது சுமாராக 180 மில்லியன் வருடங்கள் பழமையானது. இவ்வாறாகப் பூமியின் தரைத்தோற்றத்தைப் பிரித்து வைத்திருக்கும் கவசத்தகடுகளின் நகர்வுகளால் பூமியின் மேற்பரப்பில் உருவாகும் ஏற்ற இறக்கங்களே பூமியைச் சீரற்ற கோளம் என்பதைத் தெளிவாக்குகின்றன. ஆனால் பூமியின் அளவுடன் ஒப்பிடுகையில் இந்த எவரெஸ்ட் சிகரமும் மரினா ஆழியும் நமது முகத்தில் ஏற்படும் சிறிய பருக்களைப் போன்றிருக்கும். ஆகையால் பூமியின் கோளவடிவை இவற்றால் எப்போதும் பாதிக்க முடிவதில்லை.

> பூமி கோளவடிவானது என்றால் மலைகளும் பள்ளங்களும் எவ்வாறு என்று எண்ணியதில்லையா? தூரப் பார்வைக்குக் கோளவடிவமாகத் தென்படும் பூமி, சீரற்ற கரடுமுரடான ஒரு கோளமாகும். ஆகையால் பூமியில் உயர்ந்த, தாழ்ந்த, சமவெளியான தரைத்தோற்றங்கள் பரவியுள்ளன.



# வாகனப் பசுமை



பா. அபிராமி

இன்று வடக்கின் செழிப்பையும் மக்களின் வசதிகளையும் பறைசாற்றுகின்றன போக்குவரத்துச் சாதனங்கள். ஒவ்வொருவரதும் உடைமைகளான போக்கு வரத்துச் சாதனங்களின் ஊடாக வடபுலத் தமிழர்களின் வசதி நிலை மட்டுமன்றி அவர்களிடையே நிலவும் போட்டித்தன்மையும் காணக்கூடியதாக உள்ளது.

வடக்கிலே வீதி விபத்துக்களும் அதனால் ஏற்படும் இழப்புக்களும் இன்று அதிகமாகிக் கொண்டு போவதற்குப் பிரதான காரணங்களுள் இதுவும் ஒன்றே. எல்லோரு டைய வீட்டினுள்ளும் குறைந்தது ஒரு மோட்டார் வாகனமாவது இருக்கும். அதுவும் சற்றே வசதி கூடியவர்களானால் வீட்டில் ஆளுக்கொரு வாகனங்களும் அவர்களது சொகுசுப் பயணத்திற்கு எனக் கார்கள், வான்கள் என ஒவ்வொன்றும், வெளிநாட்டில் சிலரிருந்தால் வீட்டு வடிவுக்கும் தரித்திருக்கும்.

**ஆளுக்கொரு உந்துருளி**

எதிர்வீட்டுக்காரர் என்ன புதுசாக வாங்குகிறாரோ அதே போல் ஏட்டிக்குப் போட்டியாக வாங்குகின்ற தன்மையும் உண்டு. அதுவும் 18வயதுடைய அல்லது அதற்கு முன்னே பின்னேயுடைய இளம் வாலிபர்கள் அடம் பிடித்தாலோ அல்லது பரீட்சையில் சித்தியடைந்தாலோ வசதி படைத்த இன்றைய பெற்றோர் புத்தகமோ, புதுஉடையோ வாங்கிக் கொடுப்பதில்லை. மாறாக அவரவருக்கு ஒரு வாகனம். சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கின்றதோ, இல்லையோ அனைத்து வீடுகளிலும் இன்று ஆளுக்கொரு மோட்டார் வாகனம் உள்ளது. சாரத்திய அனுமதிப்பத்திரம் இன்றி வீதியில் மோட்டார் வாகனங்களில் சுற்றித்திரியும் சின்னஞ் சிறுசுகள் வாலிபத்துடுக்குடனே அதிவேகமாக மோட்டார் வாகனங்களை ஓட்டுவதனாலும் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

**கடன் வாங்கி வாகனம்**

கடன் உதவிகளை வழங்கும் நிறுவனங்களிடம் தமது தொழில் இலாபத்தை விரிவுபடுத்த பணம் முழுமையாகச் செலுத்த முடியாதவர்கள், சிறுதொகைப் பணத்தைச் செலுத்திக் கடன்பெற்று வாங்கும் போக்குவரத்து சாதனங்களும் அதிகமாக வீதிகளில் உலாவுவதைக் காணலாம். போரின் முடிவோடு வந்துசேர்ந்த இத்தகைய நிறுவனங்களால் வாகனங்கள் நிறைந்து போக்குவரத்து நெரிசல்களும், விபத்துக்களும் வடக்கிலே அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. அருகில் உள்ள பாடசாலைக்கோ கோயிலுக்கோ கடைக்கோ போவதென்றால் கூட நடந்து போகமாட்டார்கள். உடனே உந்துருளிகளை இயக்கிக் கொண்டு வேகமாய் பறப்பார்கள். ஒரு சில பெண்களுக்குத் தமது பிள்ளை களைக் கல்வி நிலையங்களுக்குக் கூட்டிச்செல்வதும் திரும்பவும் கூட்டிவருவது மட்டுமே அவர்களது பணி. இவர்களுக்கும் அந்த உந்துருளிக்கும் வேறேந்த வேலையுமே கிடையாது.

**வீதி விதிகளைப் பின்பற்றுங்கள்**

சாரத்தியப் பயிற்சி நிறுவனங்களில் இளையோரே தினம் தினம் குவிந்து கொண்டு இருக்கிறார்கள். விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதாயின் சரியாகப் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்து இயன்றளவு வீதிகளில் பயணங்களை மட்டுப்படுத்திப் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும். எவரெவர் என்ன தேவைக்கு வீதியில் பயணிக்கிறார்கள் என்பதற்கு முன் பயணிக்கும் அனைவரும் சரியான வீதி விதிகளைக் கடைப்பிடித்துப் பயணிக்க வேண்டும். அண்மையில் யாழ்ப்பாணம்–வடமராட்சியில் நடைபெற்று முடிந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தீர்த்த திருவிழாவின் போது பரந்த வெளியில் கூட வாகனங்களின் நெரிசல் தன்மையையும் மோட்டார் வாகனங்களின் குவியலையும் வண்டிகளது நிறை வையும் வடக்கின் செழுமையையும் நோக்கக் கூடியதாக இருந்தது.



# மதியத் தூக்கம் ஆபத்து!



சி. சந்திரவதனா

அப்பாடா...' என்று களைப்பிலிருந்து இளைப்பாறத் தூக்கம் கொள் கின்றவர்கள் பயப் படத் தேவையில்லை. அலுவலகங்களிலும் வீடுகளிலும் அநேகமானோர் மதியநேர உணவை உண்டதுமே கண்கள் சுழற்றித் தூக்கம் போடுவார்கள். அதுதான் ஆபத்தானதாம்! அது அரைமணி நேரத் தூக்கம் என்றால் கூடப் பாதகமில்லை. அதை40 நிமிடங்களுக்கும் மேலாகத் தூங்கினால் ஆபத்து என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். குறிப்பாக, சில பெண்கள் மதியம் தூங்குவதை ஒருவழக்கமாகக்கொண்டுள்ளார்கள். அவர்களுக்குத்தான் இன்னும் ஆபத்து!

உடல் வேலைகளால் அலுப்பு வரும்போது மதியம் தூங்கும் குட்டித் தூக்கம் உடலுக்குப் புத்துணர்வையும் மனதுக்கு உற்சாகத்தையும் தரும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், 40 நிமிடங்களுக்கும் மேலாக நீங்கள் தினமும் தூங்கினால் நீரிழிவு நோய் உண்டாகும் ஆபத்து ஏற்படும். ஜப்பான்– டோக்கியோவிலுள்ளயமடா டோமா ஹைட் பல்கலைக்கழகத்தில் நடந்த ஆய்வில் 3 இலட்சத்திற்கும் அதிகமானவர்களை ஈடுபடுத்தினர். இதில் 40 நிமிடங்களுக்கும் குறைவாகத் தூங்குபவர்களுக்கு நீரிழிவு நோய் வரவில்லை. ஆனால், 45நிமிடங்களிலிருந்து 1 மணி நேரத்துக்கும் அதிகமாகத் தூங்கிய பெரும்பாலானோருக்கு நீரிழிவு நோய் உருவாவது தெரிய வந்துள்ளது.

பல நோய்களுக்கு அத்திபாரம் நீரிழிவு நோய். பல நோய்களுக்கான இணைப்புச் சங்கிலி என்றும் கூறலாம். கண் பார்வைக் குறைபாடு, நரம்புக் கோளாறு, சிறுநீரகச் செயலிழப்பு மற்றும் இதயநோய் எனப் பல வியாதிகள் நீரிழிவு நோயினால் உருவாகும். இத்தகைய நீரிழிவு நோய்க்கு மதியத் தூக்கமும் ஒரு காரணம். இதனால் மதியம் தூங்குபவர்களுக்கு எல்லாம் நீரிழிவு நோய் வந்தே தீரும் என்று அர்த்தம் இல்லை.

எப்படி உடற் பருமன், உணவுப் பழக்கம், மரபு ஆகியவை நீரிழிவு நோய்க்குக் காரணமாகிறதோ! அதுபோல் மதியத் தூக்கமும் ஒரு காரணம் என்று மேற்படி ஆய்வின் இறுதியில் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மதியம் அதிக நேரம் தூங்குபவர்களுக்கு நீரிழிவு நோய் மட்டுமல்ல, பல நோய்களும் ஏற்படுகின்றன என்று இவர்கள் மட்டுமல்ல உலகின் பல ஆய்வாளர்களும் கூறுகின்றனர். ஆகவே இயலுமான வரைக்கும் உங்கள் சோம்பேறித்தனத்திற்குத் தீனிபோடும் பகற் தூக்கத்தைத் குறையுங்கள். அரச அலுவலகங்களில் மதிய உணவின் பின் மின்விசிறியின் கத கதப்பில் தூங்குபவர்கள் 40நிமிடம் வரை தூங்க முடியாது என்பதால் தப்பித்துக் கொண்டதாக எண்ணி விடாதீர்கள். உங்களுக்கும் இந்த நோய்கள் ஏற்படலாம்.



"மதியம் அதிக நேரம் தூங்குபவர்களுக்கு நீரிழிவு நோய் மட்டுமல்ல! பல நோய்களும் ஏற்படுகின்றன என்று இவர்கள் மட்டுமல்ல உலகின் பல ஆய்வாளர்களும் கூறு கின்றனர். ஆகவே இயலுமான வரைக்கும் உங்கள் சோம்பேறித் தனத்திற்குத் தீனிபோடும் பகல் தூக்கத்தைத் குறையுங்கள்.

# மைத்திரிக்குத் தேவை அரசியல் துணிச்சல்!



அமுதன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிக்கிறது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களான பவுன்ராஜ் சுலக்ஷன், நடராஜா கஜன் இருவரும் கடந்த மாதம் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். குண்டு பாய்ந்ததில் பவுன்ராஜ் உயிரிழந்தார். துப்பாக்கிச் சூட்டின் காரணமாக ஏற்பட்ட விபத்தில் நடராஜா கஜனும் உயிரிழந்தார். முதலில், "மாணவர்களின் சாவுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை; வேகமாகச் சென்றவர்கள் விபத்தில் சிக்கி இறந்து விட்டார்கள்" என்றே விவரிக்கப்பட்டது. மக்களின் எதிர்ப்பும் உடற்கூற்றுப் பரிசோதனை முடிவு வெளிக்கொணர்ந்த உண்மையும் பொலிஸாரின் குரூர முகத்தை அம்பலப்படுத்தியதால், ''மாணவர்களை நிற்கச் சொல்லிச் சைகை காட்டினோம்; நிற்காததால் அவர்களைச் சுட வேண்டியதாகிவிட்டது" என்றிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் தமிழ் மக் களிடையே பெரும் கொந்தளிப்பை உரு வாக்கியிருந்தது. இந்தச் சம்பவமானது மனித உரிமை மீறல் மட்டும் அல்ல கொதித்துக்கொண்டிருக்கும் இனவெறியின் அப்பட்டமான வெளிப்பாடும்கூட.

தமிழ்மக்களின்போராட்டம், பல்கலைக்கழக மாணவர்களின் நெருக்குதல்களைத் தொடர்ந்து, உரிய விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். ஐந்து பொலிஸார் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். தமிழர் பகுதிகளில் ராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களைத் திரும்ப வழங்க வேண்டும் என்றும், வட மாகாணத்தில் ராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றும் ஐ.நா. சபையின் சிறு பான்மை விவகாரங்கள் நிபுணர் கேட்டுக்கொண்டதற்கு அடுத்த நாள், நடந்திருக்கும் சம்பவம் இது. இலங்கை அரசு தமிழ் மக்கள் விவகாரத்தில் இன்னமும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்காததே முக்கியமான காரணம்.

தமது சக மாணவன் சுட்டுக் கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டித்த பல்கலைக்கழக மாணவர்கள் அன்றிலிருந்து அவர்களுக்கு நீதி வேண்டித் தமது பல்கலைக்கழகக் கற்றல் செயற்பாடுகளை மறுத்து வந்த நிலையில், கடந்த வாரம் பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகளையும் முடக்கினர். இதன் காரணமாக ஜனாதிபதியைச் சந்தித்து முறையிட வேண்டும் என்ற அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. இதன் பிரகாரம் ஜனாதிபதியைச் சந்தித்தவர்களிடம், கொல்லப்பட்ட மாணவர்களுக்கான இழப்பீடு, நீதியான விசாரணை, இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமை போன்ற வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. இதே போன்று குறித்த காலப்பகுதிக்குள் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்ற வாக்குறுதியையே புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கிலும் ஜனாதிபதி வழங்கியிருந்தார். அது செயற்பாட்டு வடிவம் கொள்ளாதிருக்கும் சமயம் மற்றொரு வாக்குறுதியையும் மைத்திரி வழங்கியிருக்கிறார். இது மட்டுமல்ல போரின் தொடர்ச்சியாகச் சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு மெல்லக் கொல்லும் விச ஊசி செலுத்தப்பட்டதாகச் சில வாரங்களுக்கு முன் ஒரு விவகாரம் பெரிதாக எழுந்தது. ஆனால், அது தொடர்பான விசாரணையின் நிலைமை என்ன? வெள்ளை வான்களில் கடத்தப்பட்டவர்களின் கதி என்ன? அவ்வப்போது தமிழர்கள் மீது வன்முறையை நிகழ்த்தும் இன வெறியர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? இவ்வாறுதான் பல்கலைக்கழக மாணவர்களின் கொலைக்கான நீதியும் நீடித்துச் செல்லப் போகிறதோ?

குற்றவாளிகள் தண்டிக்கப் படுவர் என்ற வாக்குறுதியையே புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கிலும் ஜனாதிபதி வழங்கியிருந்தார். அது செயற்பாட்டு வடிவம் கொள்ளாதிருக்கும் சமயம் மற்றொரு வாக்குறுதியையும் மைத்திரி வழங்கியிருக்கிறார்.

நல்லாட்சியாகத் தன்னைச் சித்திரிக்கும் மைத்திரி இலங்கைத் தீவு அனைத்துத் தரப்பினருக்குமானது எனும் சூழலை உருவாக்க அரசியல் துணிச்சல் மிக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது போன்ற இன வெறித் தாக்குதலில் ஈடுபடுவோர் மீதான கடும் நடவடிக்கைகள் தொடங்கி இலங்கையின் அரசியல் சட்டம் வரை அந்தத் துணிச்சல் தொடர வேண்டும் அப்போதுதான் தமிழருக்கு எதிராக, இலகுவாகச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் அரச வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

# கடதாசிக் கப்பல்...



நகுலன்

அடைமழை விடாது பெய்து கொண்டிருக்கின்றது. அம்மாவைக் காணவில்லை! அப்பாவும் அவசர வேலையொன்றில் இருக்கிறார். அப்பாடா... மெதுவாக நழுவி குசினிப் பக்கத் தாவாரத்துக்குள் ஒதுங்கி விட்டேன். இடையிடையே பேரிரைச்சலுடன் வீசும் காற்றால் கால்கள் நனைந்து கொள்ளத், தூவானமும் குளிர்வித்துக் கொள்கிறது.

மறைத்துக் கொண்டு வந்த, எழுதி முடிந்த பள்ளிக்கூடக் கொப்பியை வெளியே எடுத்து நடு ஒற்றைகளைக் கிழித்துக் கப்பல் செய்துகொள்கிறேன். அதில் சிறியதாய் இருப்பது தோணியாயிற்று.

கொஞ்சம் பெரிது கப்பலாயிற்று இது அயல் வீட்டு நண்பன் எனக்குச் சொன்னது. ஆனாலும் அதைப் பாய்க் கப்பலாகவும் மாற்றிக் கொள்ளலாம் என்பது எனக்குத் தெரியும். தாவாரத்தினருகே வழிந்தோடும் மழைநீரில் நான் செய்த தோணிகளை வரிசையாக விட்டுக் கொண்டிருக்கிறேன். வரிசை கட்டிச் செல்லும் தோணிகள் சில தத்தளிக்கின்றன. சில தடுமாறுகின்றன. சிலது மட்டும் வேகம் கொள்கின்றன. தாவாரத்திலிருந்து விழுந்த பெரிய துளிகள் பட்டுச் சரிந்தவைகளை நிமிர்த்தியும் விடுகிறேன்.

அதிலும் கொஞ்சம் காற்றால் சரிந்து மிதந்து கிழிந்தும் விடுகின்றன. நீரில் மிதந்தவாறு எஞ்சிய அழகாய்ப் பயணிக்கும் கப்பல்கள் குறையவே இன்னும் சில கப்பல்கள் அவசரமாய்ச் செய்கிறேன். திடீரென்று அப்பாவின் சத்தம்... சற்றே அதட்டலுடன்! சத்தமில்லாமல் மறைந்து நிற்கும் என்னை அவருக்கு எப்படித் தெரிந்தது? ஓகோ... நான் விட்ட கப்பல் கடலுக்குப் போகாமல் முற்றத்துக்குப் போய்விட்டது. தடியோடு வருகிறார் அப்பா!!! இந்த நேரம் பார்த்து அம்மாவையும் காணவில்லை. திடீரென்று மழைத்துளிகள் சில முகத்தில் படவே உறக்கம் கலைந்ததால் விழித்துக் கொள்கிறேன். பின்னர் என்ன நடந்தது என்று தெரியவில்லை. கனவு கலைந்தாலும் மிகுதி எனக்குத் தெரியும்.

வழமை போன்று அடியும் பின்னர் அரவணைப்புடன் உறக்கமுமாய்க் கழிந்த பொழுதுகள் தான் அவை.

"குடை பிடித்துச் செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடுகுடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்!
மழைகாலம் வழிவழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளமுண்டு
விலகி வரவேண்டும்
வெள்ளத்தில் கல்லெறிந்து
விளையாடவேண்டாம்
வீண்சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்
கண்மணிகாள்! நீர்ச்சிரங்கு
காலில் வரும் கவனம்
கண்ணுறக்கம் இல்லாமல்
விழித்திருக்க வேண்டும்
அம்மா சொல் தட்டாமல்
ஆசிரியர்கு அடங்கி
ஆசையுடன் பள்ளியிலே
படித்துவர வேண்டும்"

இவ்வாறாய் இன்னும் பல ஞாபகங்கள் தந்த பள்ளிக்காலங்களும் பாலர்நினைவுகளும் நினைக்கும்தோறும் இனிப்பவை.



# தாய்க்குத் தாயாகும் வரம் வேண்டும்....

"மழையில் நனையாதே
சளியுடன் நோய் பிடித்து விடும்"
முழுவதுமாய் நனைந்து கொண்டு முந்தானையால்
என் தலை துடைக்கும் தாயிடம்
"உனக்குப் பிடிக்காதா அம்மா இந்தச் சளியும் நோயும்"
என்று கேட்கும் மனநிலை
அன்றெனக்கு இருக்கவில்லை.

வலி, துன்பம் எனக்கு வரவும்
விழிநீர் சிந்தி நான் அழவும்
விடியும் வரை விழித்திருந்து தலைதடவி
மருந்துண்டு நானுறங்க நீயுறங்காது விழித்திருப்பாய்
உனதன்பை இன்றெனக்கு யார் தருவார்?
உன்னிலையில் நானிருந்து உணர்கின்ற
உண்மைகளை உலகில் நீ உள்ளபோதே
உனக்குத் தாயாகிக் கடமை தீர்க்க ஏங்குகிறேன்.



சு.பவானி

# அவதார் இயக்குநரின் புதுமுயற்சி

'அவதார்' படத்தின் அடுத்த பாகங்கள் முப்பரிமாணத் தொழில் நுட்பத்தின் ஒரு முன்னோடியாக இருக்கும் என்றும், ரசிகர்கள் முப்பரிமாண அனுபவத்தைப் பெறுவதற்கு அதற்குரிய கண்ணாடிகளை அணியத் தேவையில்லை என்றும் அவதார் படத்தின் இயக்குநர் ஜேம்ஸ் கமரூன் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு வெளியான அவதார் படத்தில் 'பெர்போமன்ஸ் கப்சர்' என்ற புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆச்சரியப்படுத்தினார் இயக்குநர் கமரூன். சினிமா வரலாற்றில் அதிக வசூல் செய்த படமாக அவதார் சாதனை படைத்தது. தற்போது அவதார் படத்தின் அடுத்த பாகங்களுக்கும் புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு வருகிறார் கமரூன்.

முப்பரிமாணக் காட்சிகளை இன்னும் எளிதாகப் பார்க்கும்படி ஒரு தொழில் நுட்பத்தைக் கொண்டு வர நினைக்கும் கமரூன் தனது பரிசோதனையில் கிட்டத்தட்ட வெற்றியடைந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார். இது ரசிகர்கள் படம் பார்க்கும் விதத்தை மாற்றும் என்றும் தெரிவித்துள்ளார்.

'நான் எல்லைகளை இன்னும் பெரிதாக்குகிறேன். மேம்பட்ட கருவிகள், வேலைத்திறன், உயர் நேர்த்தி மற்றும் அதிக பிரேம்(உள்ளடக்கம்)என அனைத்திலும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். எனக்கு முப்பரிமாணத்தின் மீது இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் திரையிடல் இன்னும் வளர்ச்சியடைய வேண்டும். ஒரு கட்டத்தில் முப்பரிமாணக் கண்ணாடி இல்லாமல் அது சாத்தியமாகும், அந்த நாள் வெகு தொலைவில் இல்லை' என்றார்-அவர்.








# கொடி

இயக்குநர் துரை செந்தில் குமார் 'எதிர்நீச்சல்', 'காக்கி சட்டை' ஆகிய படங்களைத் தொடர்ந்து இயக்கியிருக்கும் படம் 'கொடி'. தனுஷ் இரட்டையர் வேடத்தில் நடிக்கும் முதல் படம் என்பதால் இந்தப் படத்தை ரசிகர்கள் அதிகமாக எதிர்பார்த்தனர். தனுஷ் த்ரிஷாவுடன் இணைந்து நடிக்கும் முதல் படம் என்பதும், 'ப்ரேமம்' புகழ் அனுபமா பரமேஸ்வரன் தமிழில் அறிமுகமாகும் படம் என்பதும் கூடுதல் ஆவலை உருவாக்கியிருந்தன.

கொடி (தனுஷ்) பிறக்கும்போதே அரசியல் அவனுடைய வாழ்க்கையின் அங்கமாகிவிட்டது. அவனுடைய அப்பா (கருணாஸ்) தான் வாய் பேச முடியாததால் அரசியலில் சாதிக்க முடியாததைத் தனது மகன் சாதிக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஊரில் பாதரசக் கழிவுகளைக் தேக்கி வைத்திருக்கும் ஒரு தொழிற்சாலையை அகற்றக்கோரி கட்சி நடத்தும் போராட்டத்தில் தீக்குளித்து இறந்து விடுகிறார். அப்பாவின் விருப்பத்துக்கு ஏற்றபடி, கொடி தீவிர அரசியல் வாதியாகிறான். இரட்டைச் சகோதரர்களில் இன்னொருவனான அன்பு (தனுஷ்) பயந்த சுபாவம் உடைய கல்லூரிப் ஆசிரியர்.

கொடியைப் போலவே சிறு வயதிலிருந்தே அரசியலில் இருக்கிறார் ருத்ரா (த்ரிஷா). இருவரும் எதிரெதிர்க் கட்சிகளில் இருந்தாலும் காதலிக்கிறார்கள். தம்பி அன்பு, முட்டை வியாபாரம் செய்யும் மாலதியைக் (அனுபமா) காதலிக்கிறார். ஒரு கட்டத்தில், சட்டமன்ற இடைத்தேர்தலில் கொடியும், ருத்ராவும் எதிரெதிர் அணிகளில் நிற்கவேண்டிய சூழல் உருவாகிறது. இதற்கிடையில் ஊரில் மூடப்பட்ட தொழிற்சாலை குறித்த சர்ச்சை ஒன்று பெரிதாகிறது. அரசியல் வெற்றியா? காதலா? என்று வரும்போது யார் எதைத் தேர்ந்தெடுக்கிறார்கள்? இந்த அரசியல் விளையாட்டில் எதிர்பாராமல் நுழையும் அன்பு என்னவாகிறான்? என்பதுதான் 'கொடி'.



இயக்குநர், கொடி கதாபாத்திரத்துக்குக் கொடுத்திருக்கும் தெளிவான பின்னணியை மற்ற கதாபாத்திரங்களுக்குக் கொடுக்கத் தவறியிருக்கிறார். குறிப்பாக, கொடி கதாபாத்திரத்துக்கு இணையான வலிமையுடைய ருத்ராவின் கதாபாத்திரம் அந்த அளவுக்குத் தெளிவாக எழுதப்படவில்லை. ருத்ராவுக்கு அரசியல் ஆர்வம் வருவதற்கான பின்னணி சரியாக நிறுவப்படவில்லை. ருத்ராவின் போக்கில் ஏற்படும் அதிர்ச்சிகரமான மாற்றமும் நம்பும் விதத்தில் காட்டப்படவில்லை.

இரட்டை வேடத்துக்குத் தனுஷ் தனது நடிப்பால் முழுநியாயம் சேர்த்திருக்கிறார். கொடி கதாபாத்திரத்தில் தனுஷின் நடிப்புச் செறிவாக உள்ளது. கனமான பாத்திரத்தை ஏற்றிருக்கும் த்ரிஷா சில இடங்களில் சமாளிக்கிறார். சில இடங்களில் தடுமாறுகிறார். அவர் அரசியல் மேடைகளில் பேசும் காட்சிகள் மேலோட்டமாகக் கடந்து சென்றுவிடுகின்றன. மாலதியாக அனுபமா கொஞ்ச நேரம் வந்தாலும் துறுதுறு நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். மற்ற துணை கதாபாத்திரங்களில் நடித்திருந்த எஸ்.ஏ.சந்திரசேகர், சரண்யா, காளி வெங்கட் ஆகியோர் தங்கள் பங்களிப்பைச் செம்மையாகச் செய்திருக்கிறார்கள்.

சந்தோஷ் நாராயண் இசையில் 'ஏ சுழலி', 'சிறுக்கி வாசம்' பாடல்கள் முணுமுணுக்க வைக்கின்றன. வெங்கடேஷின் கமராவும், பிரகாஷின் படத் தொகுப்பும் ப்டத்தில் அந்த அளவுக்கு எடுபடவில்லை. திரைக்கதை வழக்கமான பாணியிலேயே நகர்கிறது. பலசாலி அண்ணன், பயந்தாங்கொள்ளித் தம்பி, பழிவாங்கும் படலம் என எல்லாமே எதிர்பார்க்கும்படியே நகர்கின்றன. அரசியலில் வளர்வது, பதவிகள் உயர்வதெல்லாம் விளையாட்டுச் சமாச்சாரம் போலக் காட்டப்படுகின்றன. நகைச்சுவை இல்லாத குறைக்கு இப்படியா? த்ரிஷா, தனுஷ் இடையே அரசியல் களத்தில் போட்டியும் தனிப்பட்ட முறையில் காதலும் இருப்பது ரசிக்கும்படி காட்சிப்படுத்தப்பட்டிருகிறது. கட்சிக்குள் த்ரிஷா மேற்கொள்ளும் காய் நகர்த்தல்கள் பரவாயில்லை. இடையில் வரும் 'திடுக்கிட' வைக்கும் திருப்பம் செயற்கையாக உள்ளது. அரசியலில் ஓர் ஆண் நினைத்தால் நேர்மையாக, நல்லவனாக இருக்க முடியும். ஆனால், ஒரு பெண் அரசியல்வாதி என்றால் அவள் வில்லியாகத்தான் இருக்க வேண்டுமா? இதுபோன்ற சில அம்சங்களைத் தவிர்த்திருந்தால் 'கொடி' இன்னும் நன்றாகப் பறந்திருக்கும்.



# காஷ்மோரா

## போலிச்சாமியார்களின் ஏமாற்று வேலைகள்

பேய், பில்லிசூனியம் போன்றவற்றை நம்புகிறவர்களை ஏமாற்றிப் பிழைக்கிறார் காஷ்மோரா (கார்த்தி). அவரது ஏமாற்று வேலைகளுக்குக் குடும்பமும் கைகொடுக்கிறது. காவல்துறை ஆணையர் முதல், அரசியல் பெரும்புள்ளி வரை காஷ்மோராவை நம்பும் நேரத்தில், அவரும் அவரது குடும்பமும் ஏழு நூற்றாண்டுகள் பழைமையான ஒரு பேயிடம் சிக்கிக் கொள்கிறார்கள். அந்தப் பேய் யார்? அதன் நோக்கம் என்ன? அதனிடமிருந்து அவர்களால் தப்பிக்க முடிந்ததா? என்பதுதான் காஷ்மோரா.

நிகழ்காலம், இறந்த காலம் இரண்டையும் இணைத்துக் குழப்பம் இல்லாத திரைக்கதையை எழுதியிருக்கிறார் இயக்குநர் கோகுல். முதல் பாதித் திரைக் கதையில் கூறியது கூறவேண்டிய தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. கார்த்தி ஒரு ஏமாற்றுக்காரர் என்பது இரண்டாவது காட்சியிலேயே தெரிந்துவிடுகிறது. அதன் பிறகும் கார்த்தியின் மோசடி ஜாலங்களை விரிவுபடுத்திக் கொண்டே போவது தேவையற்றது. இருப்பினும் அரசியல்வாதி தனக் கோடி (சரத் லோகிதாஸ்வா), அவர் கண்மூடித்தனமாக நம்பும் சீனியர் போலிச் சாமியார் திருக்கோடி (மதுசூதனன்), அவரது கைத்தடிகள் ஆகியோர் காஷ்மோரா ஆடும் ஆட்டத்தில் கடப்பாரையை விழுங்கிவிட்டு சுக்குக் காயம் குடித்ததுபோல் அல்லாடும் காட்சிகள் சிரிப்புக்கு உத்தரவாதம்.

நகைச்சுவையைக் கதையோட்டத்தில் இயல்பாகக் கையாண்டிருக்கிறார் இயக்குநர். காட்சிகள், கதாபாத்திரங்களை வடிவமைத்த விதமும் பாராட்டத்தக்கவை. நயன்தாராவின் பாத்திரமும் 700ஆண்டுகளுக்கு முந்தைய காட்சிகளும் பேய் வீட்டில் மாட்டிக் கொண்டு கார்த்தி குடும்பம்படும் அவஸ்தையும் நன்றாக உள்ளன.

பேய் வீட்டுக்குள் கார்த்தி மாட்டிக்கொள்ளும் காட்சியில் காட்சியமைப்பும் கார்த்தியின் நடிப்பும் அருமை. அதே வீட்டில் ஏற்கனெவே மாட்டிக்கொண்டிருந்த முருகானந்தமும் நடிப்பில் அசத்தியிருக்கிறார்.

ஆவி, பேய்களை விரட்டுவதாகச் சொல்லும் ஆசாமிகள் அதை எப்படி வணிகமாக மாற்றியிருக்கிறார்கள் என்பதை முதல் பாதியில் தோலுரித்துக் காட்டியிருக்கிறார் இயக்குநர். ஆனால் இரண்டாம் பாதி முழுக்க முழுக்கப் பேய்களின் ஆதிக்கமாக இருக்கிறது. பேய்கள் இருப்பது நிஜம் என்று (மூட நம்பிக்கையை) வலியுறுத்தினால், பேய் ஓட்டும் (மோசடி) ஆசாமிகளும் இருக்கத்தானே செய்வார்கள்?

ஆவி, பேய்களை விரட்டுவதாகச் சொல்லும் ஆசாமிகள் அதை எப்படி வணிகமாக மாற்றி யிருக்கிறார்கள் என்பதை முதல் பாதியில் தோலுரித்துக் காட்டியிருக்கிறார் இயக்குநர். ஆனால் இரண்டாம் பாதி முழுக்க முழுக்கப் பேய்களின் ஆதிக்கமாக இருக்கிறது. பேய்கள் இருப்பது நிஜம் என்று (மூட நம்பிக்கையை) வலியுறுத்தினால், பேய் ஓட்டும் (மோசடி) ஆசாமிகளும் இருக்கத் தானே செய்வார்கள்?

போர்க்காட்சிகளின் காட்சியமைப்பு கவரும் அளவுக்குச் சண்டை அமைக்கப்பட்ட விதம் கவரவில்லை. தளபதி கார்த்தி போடும் சண்டைகள் மாயாஜாலம்போல உள்ளன. நயன்தாராவின் நடனக் காட்சி சிறப்பாக உள்ளது.

கார்த்திக்கு இரண்டு வேடங்கள். மூன்று பரிமாணங்கள். கிரந்த தேசத்தின் தளபதி ராஜ் நாயக், அவனது ஆவி, பேயோட்டி காஷ்மோரா ஆகிய மூன்று தோற்றங் களும் நன்றாகவே பொருந்தியிருக்கின்றன. மொட்டைத் தலையில் வல்லூறு உருவத்தைப் பச்சை குத்திக் கொண்டு வரும் தளபதியின் தோற்றம் அசத்துகிறது. கருந்தாடியைக் கர்வமாகத் தடவிக் கொண்டு, வீரத்தையும் பெண்ணாசையையும் வெளிப்படுத்தும் நடிப்பில் ஈர்க்கிறார். காஷ்மோரா பாத்திரத்தில் வழக்கமான 'கலகல' கார்த்தியாகக் கவர்கிறார். நயன்தாராவுக்குத் தரப்பட்டிருக்கும் இடம் குறைவு. ஆனால் அவர் வரும் எல்லாக் காட்சிகளும் கம்பீரம் கலந்த வசீகரம். சிறிய பாத்திரத்தில் வரும் திவ்யா தன் கடமையைச் செவ்வனே ஆற்றுகிறார். நெடுநாள்களுக்குப் பிறகு விவேக் நகைச்சுவையில் முத்திரை பதிக்கிறார்.

ஆங்கோர்வாட் கோவிலும், கிரந்த தேச அரண்மனை செட்டும், ரத்னமாலாவின் அந்தப்புர அரண்மனை செட்டும், கிராபிக்ஸில் உருவாக்கப்பட்டுள்ள செட்களும் காட்சிகளின் பிரம்மாண்டத்துக்கு உதவியிருக்கின்றன. பல காட்சிகளில் சிறப்பாக இருக் கும்கிராபிக்ஸ் காட்சிகள், பேய் மரம் நடந்துவருவது போன்ற சில இடங்களில் பலவீனமாக இருக்கிறது. கடந்த காலக் கதாபாத் திரங்கள்மீதுநம்பகத்தன் மையை உருவாக்குவதில் கலை இயக்கம் (ராஜீவன்), ஆடைகள் வடிவமைப்பு (நிஹார் தவான், அனுவர்த்தன், பெருமாள் செல்வம்) ஆகியவற்றுக்கு எந்த அளவு பங்கிருக்கிறதோ, அதே அளவுக்கு வசனங்களுக்கும் (கோகுல், ஜான் மகேந்திரன், ஆர்.முருகேசன்) பங்கிருக்கிறது. 'ராஜ் நாயக் இருக்கும் இடத்தில் வாளையும் வார்த்தைகளையும் பார்த்து வீச வேண்டும்', 'பிணமேடையின் மீது மணமேடை அமைத்த மயக்கத்தில் இருந்தவனே..' போன்ற வசனங்கள் காட்சிக்கு வலிமை சேர்த்து மனதில் தங்கிவிடுகின்றன.

ஒளிப்பதிவாளர் ஓம் பிரகாஷ் உள்ளரங்கக் காட்சி களை எடுத்துக்காட்டிய விதத்தில், ஒளியமைப்பு, கமரா நகர்வுகள் ஆகியவற்றில் பிரம்மாண்டத்தை நிலைநிறுத்தியிருக்கிறார். சந்தோஷ் நாராயணின் பின்னணி இசை படத்தோடு ஒன்ற வைக்கிறது. கல்பனா ரவீந்தரின் குரலில் ஒலிக்கும் 'ஓயா ஓயா' பாடல் ரத்னமாலா கதா பாத்திரத்தின் வலியையும் சதியையும் நமக்குக் கடத்திவிடுகிறது. முன்பாதியின் வேகத்துக்கு முழுசாக ஈடுகொடுக்க முடியவில்லை என்றாலும்... நகைச்சுவை, பிரம்மாண்டம், முன் னணி நட்சத்திரங்கள் ஆகிய அம்சங்களோடு, கொஞ்சம் சமூக அக்கறையும் கலந்து தருவதில் சொல்லத்தக்க அளவு வெற்றி பெற்றிருக்கிறது காஷ்மோரா.





## எனது வலி...

எத்தனை உலக அதிசயங்கள்
உன்னை மட்டுமே சுற்றிச் சுற்றி மகிழ்ச்சி கொண்டேன்.
எத்தனை இயற்கை அதிசயங்கள்
உன் அன்பான வார்த்தைகளில் மட்டுமே
தெரிந்து கொண்டேன்.
எத்தனை விபத்துக்கள்
பூகம்பம் செய்யாத மாற்றத்தை
உனது இதழோரப் புன்னகையில் தான்
தெரிந்து கொண்டேன்.
இறந்து போவது உடல்கள் மட்டுமில்லை
உணர்வுகளும் தான் என்பதை
நீயின்றித் தவித்த தருணங்கள் எனக்குக் கற்றுத் தந்தன.
உன் மடியில் தலை சாய்ந்து உறங்கிய நிமிடங்களை எல்லாம்
மீண்டும் புதுப்பிக்க முயற்சித்துத் தோற்றுப் போகிறேன்.
இறந்து போவேனோ என்பதற்காகச் சுவாசிக்கவில்லை
ஒருவேளை உன்நினைவுகளை மறந்து போவேனோ
என்பதற்காக மட்டுமே சுவாசிக்கின்றேன்.



ச.பிரகாசினி



# வேண்டாமே மர(ண)ண முறிவு



■ அராலியூர் எஸ்.மல்லிகா

“சொர்க்கமும் நரகமும் கண்முன்னே காணவேண்டும் என்றால், கல்யாணம் செய்துபார்” என்றார் ஒரு அறிஞர். இது நூறுவீதம் உண்மை. பலருக்கு ஆரம்பத்தில் சொர்க்கலோகம் காட்டும் வாழ்க்கை, நாளாக நாளாக நரகமாகிப் போவதுண்டு. பாதிப் பேருக்குத் திருமண வாழ்க்கை சொர்க்கமாகவும் மீதிப் பேருக்கு அதுவே நரகமாகவும் அமைந்து விடுவது விதிவசத்தால் அல்ல. அவரவர் மனப் பாங்குதான் அதற்குக் காரணம். அதேநேரம், பலரது திருமண வாழ்க்கை நரகமாகிப் போவதற்கு அதிகரித்த வசதி வாய்ப்புக்களும் ஒரு காரணம் என்கின்றன ஆய்வுகள். இதில் கைபேசிப் பாவனையும் அடக்கம்.

இன்றைய கணவன்- மனைவியர் இருவருமே தமது தொடர்பாடல் தேவைக்காகக் கைபேசியைப் பயன்படுத்துபவர்களாக உள்ளனர். இவர்களுடைய கைபேசிகளுக்கு வரும் அநாமதேய அழைப்புக்கள். குடும்பத்தினரிடையே பிரிவினையை உண்டுபண்ணுவதாக இருக்கின்றன. குறிப்பாக, கணவன்- மனைவியர் மத்தியில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவனவாகவும் வளர்ப்பனவாகவும் உள்ளன. ஆரம்பத்தில் தவறிய அழைப்பாக ஒருவரின் கைபேசிக்குக் கிடைக்கும் அழைப்பு, பின்னர் உறவு வளர்ப்பாக அமையும். நலம் விசாரிப்பி லிருந்து குடும்ப விவரச் சேகரிப்பு வரை தொடரும். இதன் உச்சமாக, ஆபாசப் பேச்சுக்கள் மற்றும் காதல் லீலைகள் அரங்கேறும். உருகித் துடிக் கும் உறவாகப் பரஸ்பரம் தொடர்பாடுவோரை மாற்றுகின்றன இந்த அழைப்புக்கள்.

அநாமதேய அழைப்பில் வரும் முகம் தெரியாத இந்த மூன்றாம் நபர்கள், ஏதோ ஒரு காரணத்துக்காக அழைப்போரைப் பேரீர்ப்புக்கு உள்ளாக்கி- ஈற்றில் நேருக்கு நேர் சந்திக்க முனைகின்றனர்- சந்திக்கவும் செய்கின்றனர். அழைப்பைப் பெறுவோரும் அவர்கள்பால் இச்சை கொள்கின்றனர். நட்பைத் தாண்டி, உடற்பசித் தீர்ப்பாகவும் இந்தச் சந்திப்புக்கள் அமைகின்றன. இதில் இரு பாலார்க்கும் பங்குண்டு.

இவ்வாறு கள்ளத் தொடர்பை வளர்க்கும் கணவன் அல்லது மனைவி, அகத்தில் ஒரு வாழ்க்கையும் புறத்தில் ஒரு வாழ்க்கையும் வாழ்கின்றனர். இவர்கள் மனதுக்குள் என்ன இருக்கின்றது என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. ஓருலகில் இரு வாழ்க்கை வாழும் கணவன் அல்லது மனைவி ஒருகட்டத்தில் மாட்டுப்படும் போது, மனதளவில் உடைந்துபோகின்றனர். நான் இவ(ளு)ருக்கு என்ன குறை விட்டேன்? ஏன் இப்படி எனக்குத் துரோகம் செய்ய வேண்டும்? இனி எப்படி இவ(ளு)ருடன் நான் வாழ்வது எனப் பாதிக்கப்பட்டவர் மனதில் அடுக்கடுக்காய்க் கேள்விகள் எழும். ஏமாற்றும் உறவுடன் பொய் வாழ்க்கை வாழ்வதை விட, பிரிந்து செல்வதே மேல் என்று ஈற்றில் முடிவெடுப்பர். விரக்தி நிலையில் எடுக்கப்படும் இந்த முடிவு, விவாகரத்தைப் பரிசளிக்கும்.

இரு இணைகளும் பிரிந்த பின்னர், அவர்களது மனதின் சேமிப்புக் கிடங்கிலிருந்து எட்டிப்பார்த்து வெகு அழகாய்ச் சிரித்துக்கொண்டிருக்கும் இருவரும் ஒருமித்து வாழ்ந்த தருணங்கள். அதன் பின்னர் தான், தவறிய அழைப்பால் நிகழ்ந்த தவறு உணரப்படும். பின்னர் இணைந்த தருணங்களை மறுபடி அடைந்திடத் துடிக்கும் அவர்களின் ஜீவன். மன்னிக்கும் மனம் இருந்தால், இருவரையும் இணைத்து வைக்கும் காலம்.

(தொடரும்)



“என் ஜீவன் பாடுது...
உன்னைத்தான் தேடுது...
காணாமல் ஏங்குது, மனம் வாடுது.
எங்கே என் பாதை மாறி...
எங்கெங்கோ தேடித் தேடி...”

“இரு இணைகளும் பிரிந்த பின்னர், அவர்களது மனதின் சேமிப்புக் கிடங்கிலிருந்து எட்டிப் பார்த்து வெகு அழகாய்ச் சிரித்துக் கொண்டிருக்கும் இருவரும் ஒருமித்து வாழ்ந்த தருணங்கள். அதன் பின்னர் தான் தவறிய அழைப்பால் நிகழ்ந்த தவறு உணரப்படும்.

## மனிதா!

மனிதா
மரத்தை நீ தறிப்பதேன்?
மழையை நீ மறுப்பதேன்?

ஊட்டி வளர்த்த அன்னையை
உடனடியே கொல்வதேன்?
மரம் தான் உனக்கு உலகம்
மனிதா நீ மறுப்பதேன்?

ஐயோ என மரங்கள்
அலறுவது கேட்டாயோ
அன்று கற்ற பாடத்தை
இன்று நீ மறந்தாயோ

நடை வண்டில் பிடித்தாய்
ஊஞ்சல் கட்டி ஆடினாய்
ஓடி ஒளிந்து பாடினாய்
ஏறி அதில் தாவினாய்

நிழலுக்காக ஒதுங்கினாய்
நீண்ட உதவி
பெற்றாய், அத்தனையும்
பெற்ற நீ அதை
அழிக்க ஏன் துணிகிறாய்
மரமே உந்தன் சுவாசம்
நெருங்கி அதைக் காதலிப்பாய்

ஆளுக்கொரு மரம் வளர்த்து
நாளும் பயன் பெற்றிடலாம்
நாதியற்றுப் போகாது
காத்திடுமே அது உன்னை.

பவனா. பாலராஜினி



## உழவன்



வண்ணநிலா முகம் காட்ட
வண்டுகள் ஓய்வெடுக்க
பறவைகளும் போர்வை போர்த்த
மனிதர்களும் தம் இமை மூட
களைப்பினால் கருமேனி சோர்ந்து
உழைப்பினால் உள்ளம் நெகிழத்
தன் பசி மறந்து உறக்கத்தை
அணைக்கிறான் ஒருவன்.
விடியும் நாள்களில் தான்
விழி திறக்காவிடினும்
பிறர் பசி போக்கும் உணவைத்
தந்த உழவன். அவனே உலகின்
பசிதீர்க்கும் உத்தம இறைவன்.

தவராசா சேபிதா



# தலை சீவும்போது கவனிக்க வேண்டியவை

முழுகியவுடன் உங்களுடைய தலைமுடியைச் சீவ வேண்டாம். ஏனெனின் கூந்தல் ஈரமாக இருக்கும்போது சீவினால் கூந்தலில்; முடிச்சுக்கள் மற்றும் சிக்குகள் அதிகமாக ஏற்படும் .அப்போது தலைமுடியை வாரினால் முடி உதிர்வுடன் சிக்குகள் அதிகம் காணப்படும்.

உலர்ந்த தலையில் சிக்குகளைத் தட்டும்போது நேராக உச்சிபிரித்து தலையைச் சீவுங்கள். மண்டை ஓட்டுடன் சீப்பு நன்கு பதியும்படி சீவவேண்டும். அப்போது தான் குருதி ஓட்டம் அதிகரிப்பதுடன் தலைமுடிக்கு புரோட்டின் ஊட்டமும் அதிகரித்துக் கூந்தலானது நன்கு வளரும். இவ்வாறு தினமும் கூந்தல்வாரும்போது மூளைக்குப் புத்துணர்வு ஏற்ப்படும்.

முடியை வார ஆரம்பிக்கும் போது கூந்தலின் முனை யில் இருந்து வார வேண்டும்.ஏனெனில் கூந்தலின் முடிச்சுக்கள் முனையிலேயே அதிகம் காணப்படும். அடியில் இருந்து வாரினால் முடிச்சுக்கள் இடையே சீப்புத் தடக்கி இன்னும் அதிகமாக சிக்குகள் ஏற்ப்படும்.முடிச்சுச் சிக்குகளை சீர்செய்யும்போது பொறுமையாக இழுக்க வேண்டும். முதலில் முனையில் இருந்தே சிக்குகளைத் தட்டி அடி வரை தலைவார வேண்டும். இவ்வாறு தலை வாரினால் கூந்தல் உதிர்வு குறைவாக இருக்கும்.

## கர்ப்ப காலப் பாதிப்புக்கள்



கர்ப்பம் தரிக்கப்பட்ட அறிகுறிகள் தென்பட்டால் காபனீர் ஒட்சைட்டின் அளவு அதிகமாக உள்ள உணவுகளான சோடா போன்ற பான வகைகளைத் தவிர்க்க வேண்டும். கர்ப்ப காலத்தின்போது அளவுக்கு அதிகமாக காபன் உணவுகளை உட்கொண்டால் அவை முதல் மூன்று மாதங்களில் கருச் சிதைவை ஏற்படுத்தும்.

சமைக்கப்படாத உணவுகளாக முட்டை. பால். மரக்கறிகள் உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. கடல் உணவுகள் சில கருவுக்கு நோய்த் தொற்றுக்களை உண்டாக்கும்.

பப்பாசிப்பழத்தைத் தவிர்ப்பது நல்லது. இது கருச்சிதைவை உண்டாக்கும். கர்ப்பிணிப் பெண்கள் சுட்டாறிய தண்ணீரையே பருக வேண்டும். வீதியோரக் கடை உணவுகள் வாங்கி உண்பதைத் தவிர்க்க வேண்டும். கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் தாயும் கருவும் மருத்துவ தாதிகளின் அறிவுரைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

# கொலுசு அணிவதன் அறிவியல்

தமிழ்ப் பெண்கள் பாரம்பரியமாக நகைகள் அணிவது என்பது இன்று நாகரிகமாக மாறி விட்டது. தங்கம், வெள்ளி நகைகள் அணிவதன் மூலம் உடலில் சில நன்மைகள் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. பழங்காலத்தில் பெண்கள் காலில் காப்பு, தண்டை, சிலம்பு போன்ற தடிமனான அணிகலன்களை அணிந்து வந்தனர். இன்று தடிப்புக் குறைந்த வெள்ளிக் கொலுசை அணிகிறார்கள். பழங்காலத்தில் மாம்பிஞ்சு கொலுசு, அத்திக்காய்க் கொலுசு, ஆலங்காய்க் கொலுசு என வெள்ளி உலோகத்தில் பல வடிவங்களில் கொலுசு அணிந்துள்ளார்கள்.

கொலுசு என்பது நமது மூதாதையர்கள் காலத்தில் இருந்து மிக முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்பட்டுள்ளது. பொதுவாக எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம், காலில் அணியும் கொலுசை வெள்ளியில் தான் அணிகிறோம்.

தங்கத்தை உயரியதாக மதிப்பதால் நாம் காலில் அணிவதில்லை என்பர். ஆனால் அதுவல்ல காரணம். வெள்ளிக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. வெள்ளி குளிர்ச்சி தரும் உலோகம். வெள்ளி நகைளை அணிவதால் ஆயுள் விருத்தியாகும் என்று ஆயுர்வேதம் சொல்கிறது. ஒவ்வாமை போன்ற உபாதைகள் வெள்ளியால் வருவதில்லையாம். சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்குக் கொலுசு அணிவித்து விடுகின்றோம். குழந்தை நடக்கும்போது அதிலிருந்து சத்தம் கேட்கும் என்பதால் குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்கக் கொலுசு அணிவிக்கப்படுகிறது. பொதுவாகவே ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு உடற் சூடு அதிகமாகக் காணப்படும். இதற்காகத் தான் சிறுவயதிலிருந்தே பெண் குழந்தைகளுக்கு கொலுசு அணிவிக்கப்படுகிறது. உணர்ச்சி வசப்படுதல் என்பது எப்பொழுதும் ஆண்களை விட பெண்களுக்கு அதிகம். வெள்ளி குதிக்கால் நரம்பைத் தொட்டுகொண்டிருப்பதால் குதிக்கால் பின் நரம்பின் வழியாக மூளைக்குச் செல்லும் உணர்ச்சிகளைக் குறைத்துக் கட்டுப்படுத்துகிறது.

மூதாதையர்களின் மூடநம்பிக்கை என்று கருதும் தங்கத்தைக் கடவுளாக்கி வெள்ளியைக் காலில் அணியும் செயலின் பின்னாலுள்ள அறிவியலைப் பார்த்தீர்களா!



# பெண்களின் அணிகலங்கள்...

ஆடைகள் நம்முடைய அழகை அதிகமாக்கிக் காட்டுகின்றன. அதே நேரம் ஆடைகளுக்குப் பொருத்தமான அணிகலன்களை அணிந்து கொண்டால் பெண்களுக் குரிய இயற்கை அழகு மேலும் மெருகூட்டப்படுகின்றது. பெண்கள் தாங்கள் அணிந்திருக்கும் உடைகளின் வடிவமைப்புக்குப் பொருத்தமான அணிகலங்களைத் தேர் செய்வதிலும் அதனைச் சரியாக அணிந்து ஒப்பனைகளை மேற் கொள்ள வேண்டும். எடுப்பான தோற்றமாக இருக்கும்படி அணிகலன்களை அணிய வேண்டும்.

அணிகலன்களை அணிவது அழகையும் ஓர் ஈர்ப்பையும் கொடுக்கும். நகைகள் மட்டும் அணிகலன்கள் என்று கருதக்கூடாது நகைகளோடு சேர்த்து காலணிகள், கைப்பைகள், கைக் க காரங்கள்,வாசனைத்திரவியங்களும் அணிகலங்களுக்குள் அடங்குகின்றன. பெண்கள் கலாசாரமுறைப்படி பட்டுப்புடவை அணிந்தால் நெக்கிலஸ், ஆரம் முத்துமாலை போன்றவற்றை அணியலாம். நமக்கு விருப்பமான பாரம்பரிய நகைகளையோ நவீன நகைகளையோ பொருத்தமான உடைகளுக்கு ஏற் அணிந்துகொள்வது அழகை அதிகரிக்கும்.



# வரலாற்றில் இன்றைய தினம்



1844 - டொமினிக்கன் குடியரசின் முதலாவது அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1913 - தென் ஆபிரிக்காவில் இந்திய சுரங்கத் தொழிலாளர்களின் பேரணியை தலைமையேற்று நடத்திய மோகனதாஸ் காந்தி கைது செய்யப்பட்டார்.

1944 - புளூட்டோனியம் முதன்முதலாக ஹான்போர்ட் அணு வசதி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டதையடுத்து அதனைப் பயன்படுத்தி ஜப்பான் நாகசாகி மீது அணுகுண்டு போடப்பட்டது.

1965 - அமெரிக்காவும் கியூபாவும் 250,000 கியூபர்களை அமெரிக்காவுக்கு விமானமூலம் கொண்டுசெல்ல முறைப்படி இணங்கின.

1999 - ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில், தமது நாட்டின் தலைமையாக பொதுநலவாய நாடுகள் தலைவர் தொடர்ந்து செயற்பட ஆதரவாக ஆஸ்திரேலிய மக்கள் வாக்களித்தனர்.

2000 - இஸ்லாமியப் பிரிவுகளிடையே இந்தியாவில் வன்முறை மோதல்; 11 பேர் சாவு; ஊரங்கு நடைமுறை.
- யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் பயணிகள் விமான சேவை; விசேட குழு நிலைமையை மதிப்பீடு.
- அப்புத்தளையில் ஊர்வலம் சென்ற போது கைதான 18 இளைஞர்களும் அடி காயங்களுடன் விடுவிப்பு.

2004 - அநுராதபுரம் - திருமலை வீதி இனி மேல் ராஜீவ்காந்தி நெடுஞ்சாலை என அழைக்கப்படும் என இருநாட்டுக் கூட்டறிக்கையில் தகவல்.
- கச்சதீவைப் பாதுகாக்க அதனை தேசிய கடற் பூங்காவாகப் பிரகடனம் செய்வதே ஒரே ஒரு வழியென முதுநிலை விரிவுரையாளர் சூசை தெரிவிப்பு.

2006 - சதாமை தூக்கில் போடாதீர்கள் - புனித பாப்பரசர் வேண்டுகோள்.
- சதாமின் தீர்ப்பையடுத்து ஈராக்கில் கலவரம் வெடித்தது.
- அமெரிக்கர்களைப் பழிவாங்க வேண்டாம் - சதாம் கோரிக்கை.
- ஐ.தே.க.விலிருந்து ரம்புக்வெல நீக்கப்பட்டமை சட்டவிரோதமென உயர் நீதிமன்றம் தீர்ப்பு.
- வடக்கு - கிழக்குக்கு 5500 தொன் பொருள்களை இலவசமாக வழங்க இந்திய அரசு தீர்மானம் - பிரதித் தூதுவர் உதயனுக்குத் தகவல்.
- இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் ஆழ்ந்த கவலை ஐ.நா.வில் கண்டனத் தீர்மானம் கொண்டு வர பின்லாந்து முஸ்தீபு.

# அன்பு அண்ணன்

> மாணவனின் கனவுகளைக் கைவசப் படுத்திக் கொடுக்க உதவும் தூண்டு கோலே சிறந்த ஆசிரியர்.
>
> அப்துல் கலாம்

ஆறு வயதுச் சிறுவன் தன் நான்கு வயதுத் தங்கையை அழைத்துக் கொண்டு கடைத் தெருவின் வழியே சென்று கொண்டிருந்தான். ஒரு கடை வாசலில் இருந்த பொம்மையைப் பார்த்துத் தயங்கி நின்ற தங்கையைக் கண்ட அவன், "எந்தப் பொம்மை உனக்கு வேண்டும் ?" என்று கேட்டான். தங்கை கூறிய பொம்மையை எடுத்து அவள் கையில் கொடுத்துவிட்டு- ஒரு பெரிய மனிதனின் தோரணையுடன் கடையின் முதலாளியைப் பார்த்து, "அந்தப் பொம்மை என்ன விலை?" என்று கேட்டான். அதற்குச் சிரித்துக்கொண்டே அந்த முதலாளி, "உன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது?" என்று கேட்டார். சிறுவன் தான் விளையாடச் சேர்த்து வைத்திருந்த சிப்பிகளைத் தன் சட்டைப் பையில் இருந்து எடுத்துக் கொடுத்து, இது போதுமா?" என்று கவலையுடன் கேட்டான். அவனுடைய கவலையான முகத்தைப் பார்த்த அந்தக் கடைக்காரர், "எனக்கு நான்கு சிப்பிகள் போதும்" என்று மீதியை அவனிடம் கொடுத்தார். சிறுவன் மகிழ்ச்சியோடும் மீதிச் சிப்பிகளோடும் பொம்மையோடும் செல்வதைக் கவனித்துக் கொண்டு இருந்த அந்தக் கடையின் வேலையாள் முதலாளியிடம், "ஐயா, ஒன்றுக்கும் உதவாத சிப்பிகளை வாங்கிக்கொண்டு விலை உயர்ந்த பொம்மையைக் கொடுத்து விட்டீர்களே; எதற்காக அப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அந்த முதலாளி, "பணம் கொடுத்தால்தான் பொம்மை கிடைக்கும் என்று புரியாத வயது அந்தச் சிறுவனுக்கு. அந்தச் சிப்பிகள்தான் உயர்ந்தவை என்று அவன் நினைக்கும் பருவம். நாம் பணம் கேட்டால், அவன் எண்ணத்தில் பணம்தான் உயர்ந்தது என்ற மாற்றம் வந்துவிடும். அதைத் தடுத்து விட்டேன். அத்துடன், தன் தங்கை கேட்டவற்றைத் தன்னால் வாங்கித் தர முடியும் என்ற தன்னம்பிக்கையை அவனுக்குள் விதைத்துவிட்டேன். என்றோ ஒருநாள் அவன் பெரியவன் ஆகி இந்தச் சம்பவங்களை நினைத்துப் பார்க்கையில், இந்த உலகம் நல்லவர்களால் ஆனது என்ற நல்ல எண்ணம் அவன் மனதில் தோன்றும். ஆகையால், அவன் எல்லோரிடமும் அன்பு காட்டத்தொடங்குவான். உலகம் அன்பினால் கட்டமைக்கப்பட வேண்டும்" என்றார்.



நீதி: அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்? நாம் செல்லும் இடம் எல்லாம் அன்பை விதைப்போம்

## ஏற்ற நாள்!



பள்ளிக் கூடம் செல்
பாடம் படித்து நில்
எதிலும் முற்றும் வெல்
இதுவே இனிக்கும் சொல்!

உள்ளம் தூய்மை கொள்
உதவாச் செயல்கள் தள்
உயர்ந்த சொற்கள் கேள்
உனக்கிது ஏற்ற நாள்!

அண்ணல் காந்தி பார்
அஹிம்சை உயிராம் வேர்
என்றும் நல்லிடம் சேர்
இவையே பண்பின் நீர்!

படிப்பில் கவனம் வை
பழுதானால் அதை தை
பிடிப்பில் அன்பே கை
பிறர் மனம் போற்றிடும் மெய்!

# ஆளுமை விருத்தியை நல்கும் விளையாட்டு

குழந்தையின் ஆளுமையை விருத்தி செய்வதில், கட்டி எழுப்புவதில் விளையாட்டுக்குப் பெரும் பங்குண்டு. குழந்தையுடன் விளையாட்டும் பிறக்கின்றது. குழந்தையின் சுதந்திர வளர்ச்சியில், அதன் தன்னுணர்வில் விளையாட்டு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. விளையாடும் போது குழந்தை தன்னைத் தானே அறிந்துகொள்கின்றது. குழந்தை விளையாட முயன்று தவறுகின்றது. அந்த அனுபவத்தைத் திரும்பப் பெறுவதால் தன் தவறுகளைத் தானாகவே திருத்திக்கொள்கின்றது. விளையாடும் போது குழந்தை சிந்திக்கின்றது. விளையாட்டானது குழந்தையின் உடல், உள, அறிவு, சமூக வளர்ச்சிக்குரிய களமாக அமைகின்றது. விளையாட்டில் ஈடுபடல், மன மகிழ்வு, ஆறுதல் போன்றனவற்றை இலக்குகளாகக் கொண்டிருக்கும் அதே நேரம், சுதந்திரமாகச் சிந்திக்கவும் பல்வேறு திறன்களைக் குழந்தை பெற்றுக்கொள்ளவும் உதவுகின்றது.




# புத்திசாலித்தனம்

ஒருமுறை சோக்கிரட்டீஸின் சீடர் ஒருவர், "ஐயனே, அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வேறுபாடு?" என்று கேட்டார். உடனே அவர், "அதோ இருக்கிறாரே ஒரு கிழவர், அவரிடம் சென்று- இங்கிருந்து கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும் என்று கேட்டு வா!" என்றார்.

சீடரும் அந்தக் கிழவரிடம் சென்று அவ்வாறே கேட்டார். அவர் பதிலேதும் கூறவில்லை. திரும் பத் திரும்பக் கேட்டார். பலன் இல்லை. கிழவருக்குப் புத்திசுவாதீனம் இல்லையோ என்று நினைத்து வந்த வழியே திரும்பிச் சில அடிகள் எடுத்து வைத்தார் அந்தச் சீடர் உடனே கிழவர் அவரை அழைத்து, "நீ பத்து நிமிடங்களில் கிராமத்தை அடையலாம்!" என்றார்.

"நீங்கள் ஏன் இந்தப் பதிலை நான் கேட்டவுடன் கூறவில்லை?" என்று சந்தேகத்துடன் கேட்டார் சீடர்.

"நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் எப்படியப்பா, நீ கிராமத்தை எவ்வளவு நேரத்தில் அடைவாய்என்பதைக் கூற முடியும்?" என்று திருப்பிக் கேட்டார் அந்தக் கிழவர்.

சீடர் வியப்பும் மரியாதையுமாக சோக்கிரட்டீஸிடம் வந்து நடந்ததைக் கூறியதும் அவர், "அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்!" என்றார்.

# இரு புதிர்; ஒரு விடை

01. முடவன் நடப்பது எதனாலே?
தானியங்கள் அளப்பது எதனாலே?-மரக்காலால்
02. மாமுனியும் மயங்கியது எதனாலே?
மாளிகையும் சரிந்தது எதனாலே?- ஆட்டத்தால்
03. காகத்தின் அடையாளம் எதனாலே?
காகிதத்தில் எழுதுவது எதனாலே? - கருமையினால்
04. கதைகள் உருவாவது எதனாலே?
கன்னியும் தாயாவது எதனாலே? - கருவினால்
05. இடியும் மழையும் எதனாலே?
தோலின் இயல்பு மாறுவது எதனாலே?- மேகத்தால்
06. மன்னர் மாண்பு பெறுவது எதனாலே?
மக்கள் அழிவு எதனாலே?- குடியினால்
07. சிறுவர் விளையாடுவது இதனாலே-
சிறப்பான வாழ்வு அதனாலே - பட்டத்தால்
08. கற்றறிந்த புலமையுடை மாந்தர் யார்?
மரத்துக்கு மரம் தாவும் இனத்தவர் யார்?- மேதாவி
09. பால் வற்றுவது எதனாலே?
பாரில் பிணி தெரிவது எதனாலே?- காய்ச்சலால்
10. இல்லத்தின் வாசல் இதுதானே?
தானியம் அளப்பது அதனாலே - படி





ஆர். அனுசன்,
தரம் - 8F,
யாழ்.இந்துக் கல்லூரி.



அ.அஸ்வினி,
தரம் - 3A,
யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.


# கருவேப்பிலைத்தைலம்





தலை முடிநீளமாகவும் கருமையாகவும் வளர்வதற்கு நீங்கள் தலைக்கு வைக்கும் எண்ணெயுடன் கருவேப்பிலைகளை நன்றாக இடித்து வடித்தெடுத்த அந்தக் கரும்பச்சைச் சாற்றினைச் சேர்த்து இரண்டுநிமிடம் சூடாக்குங்கள். பின்னர் கறிவேப்பிலைகளுடன் சிறிதளவு வெந்தயம் சில செவ்வரத்தம்பூக்களை; சூடாகிக் கொண்டிருக்கும் எண்ணெயினுள் இடுங்கள்.

நன்றாகச் சூடாகியதும் இப்போது எண்ணெய் கரும்பச்சைநிறமாக மாறியிருக்கும். இதுவே கருவேப்பிலைத் தைலம். வீட்டிலே அனைவரும் தமக்குத் தேவையான அளவுகளில் கருவேப்பிலைத்தைலத்தைத் தயாரிக்கலாம். காய்ச்சிய தைலத்தை வடிகட்டி ஒரு சுத்தமான போத்தலில் அடைத்துக் குளிர்மையான இடத்தில் வைக்கவும். வாரத்தில் நான்குமுறையாவது இந்தத் தைலத்தைத் தலைக்கு வையுங்கள். தலை முடி கருமையாவதுடன் பளபளப்பாகவும் முடி உதிர்வுஏற்படாமலும் இருக்கும். தலையில் பொடுகுவராமலும் மூளை குளிர்மையுடனும் இருப்பதற்குகந்த இயற்கையான கலப்படமற்ற தைலம் இதுவாகும்.



## சாத்தாவாரி இலைக் கஞ்சி

'சாத்தாவாரி' என்பது ஒருகொடிவகைத் தாவரம் ஆகும். இதன் இலைகள் மெலிதானவையாகவும் கூர்மையானவையாகவும் இருக்கின்றன. இது பல மருத்துவக்குணங்கள் மிக்கது. சளி, காய்ச்சல், இருமல் என்பவற்றை இல்லாமல் போக்கும் குணம் இந்தச் சாத்தாவரிக்கு உண்டு.

சாத்தாவாரி இலைக் கஞ்சியைத் தயார் செய்யும் முறையை இனிப்பார்ப்போம். முதலில் சாத்தாவாரியின் இலைகளை எடுத்து இடித்து அதன் சாற்றினை நன்றாக வடித்து எடுக்கவும். பச்சையரிசியைப் பாற்சோறு ஆக்குவது போன்று சமைத்து அதற்குள் தேங்காய்ப்பாலினை இட்டபின் அவிந்துகொண்டிருக்கும் கஞ்சியினுள் வடித்து எடுத்து வைத்திருந்த சாத்தாவாரி இலைச்சாற்றினைச் சேர்க்கவும்.

இலைச்சாற்றினைவிட்டபின் கஞ்சியைத்துழாவி 5நிமிடம் வரையில் அவியவிடவும். பின்னர் இளம் சூட்டுடன் சாத்தாவாரி இலைக்கஞ்சியினைப் பருகினால் ஒருவிதச்சுவையாக இருக்கும். உணவும் மருந்தும் ஒன்றாய் அமையும் உணவாகின்றது இந்த சாத்தாவாரி இலைக்கஞ்சி.



## குளிர்காலத்தில் சளித் தொல்லையா?

அதிகமாக அநேகருக்குக் குளிர் காலங்களில் தான் சளி பிடிக்கும். அவர்கள் எவ்வளவுதான் அதற்கு வைத்தியம் செய்தாலும், மருந்துகளை உட்கொண்டாலும் சளி இலகுவில் குணமாகி விடாது.

ஆனால் இந்த நாட்டு வைத்தியத்துக்குச் சளி ஓடிப்போய்விடும். மூன்று தேசிப்பழத்தை எடுத்து, அவற்றைப் பாதியாக வெட்டி, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் இரண்டு டம்ளர் அளவு தண்ணீர் விட்டு, அதனுள் சிறிதளவு உப்புப்போட்டு, நன்கு கொதிக்க வையுங்கள்.

நீங்கள் விட்ட இரண்டு டம்ளர் நீர், ஒரு டம்ளர் அளவுக்குக் குறையும் வரை கொதிக்க வையுங்கள். பின்னர் அதிலுள்ள தேசிப்பழங்களை அதனுள் பிழிந்து, அந்த நீரை ஒரு டம்ளரில் எடுத்துச் சிறிதளவு சீனி சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஓரளவு சூட்டுடன் இரவு உறக்கத்துக்குச் செல்லும் அரைமணி நேரத்துக்கு முன்பு குடித்து விட்டுத் தூங்குங்கள். நீங்கள் உறங்கிய பிறகு, உங்களுக்கு வியர்த்துக் கழியும். பின்னர் உடலிலுள்ள சளியும் வெளியேறி விடும் பிறகு மருத்துவர்களிடம் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது.



## ஆறு சுவைகளும் ஆற்றலும்!

**இனிப்பு:** உடல் தசையை அதிகமாக வளர்க்கும்.

**கசப்பு:** வேண்டாத கிருமிகளை அழிக்கும் சக்தியைத் தரும்.

**புளிப்பு:** குருதிக் குழாயில் உள்ள அழுக்கை நீக்கும்.

**கார்ப்பு:** உடல் வெப்பம், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும்.

**உவர்ப்பு:** ஞாபகசக்தியை அதிகரிக்கும்.

**துவர்ப்பு:** உடலில் காயம் ஏற்படும்போது, குருதியை உறையச் செய்யும்.

## புதினாவின் புதினம்

பொதுவாக மாதவிடாய்க் காலத்தில் வயிற்றுவலி ஏற்படுவது சாதாரணமானது. இந்த வயிற்றுவலி தாங்கமுடியாத ஒன்றாகக் காணப்படும். இந்த வயிற் றுவலியைக் குறைத்துக்கொள்ளக் கீரை வகைகளில் ஒன்றான புதினாக்கீரையை இடித்து அதன் சாற்றைக் குடிப்பது நல்லது. புதினாக்கீரையின் சாற்றைத் தனியாகப் பருகுவது கசப்பாக இருந்தால் புதினாக் கீரையைச் சம்பல் செய்தோ அல்லது வேறு காய்கறிகளுடன் சமைத்தோ சாப்பிடலாம். எப்படியாவது புதினாக் கீரையை உட்கொண்டீர்களானால் மாதாந்தம் ஏற்படும் இதன்போதான வயிற்றுவலியைக் குறைத்தோ அல்லது இல்லாமலோ செய்து விடும்.



## அதிக உப்பு

உலகம் முழுவதும் அதிக உப்பைப் பயன்படுத்துபவரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதால், வருடத்துக்கு 25 லட்சம் பேர் வரை உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உப்புப் பயன்பாடு பற்றி சமீபத்தில் ஆய்வு நடத்திய உலக சுகாதார அமைப்பு, ஒரு மனிதன் சராசரியாக நாள்தோறும் 9.2 கிராம் உப்பைப் பயன்படுத்துவதாகவும், ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும், அந்த உப்பைக் குறைத்து ஒருவர் 5 கிராம் உப்பை உட்கொள்வதன் மூலம் குருதிக் கொதிப்பு மற்றும் இதயம் தொடர்பான நோய்த் தாக்கத்தில் இருந்து எளிதாகத் தப்பிக்க முடியும் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

முக்கியமாக உலகம் முழுவதும் அதிக அளவு உப்பைப் பயன்படுத்துவதன் மூலம் வருடத்துக்கு 25லட்சம்பேர்வரை உயிரிழப்பதாகவும், லட்சக்கணக்கானவர்கள் இதய நோய் தாக்குதலுக்கு ஆளாவதாகவும் தனது ஆய்வில் உலக சுகாதார அமைப்புக் கூறியுள்ளது.



## உயிருக்கு ஆபத்து!

# அன்புள்ள அம்புலிக்கு...



நிலாப் பெண்ணே...!
உன் சகோதரன் பகலில் வெப்பமாக
வருகிறான்.
நீயோ இரவில் குளிர்ச்சியாக
வருகிறாய்.
பகலில் தெரியாத உன் தங்கைகள்
உனது தயவால் இரவில்
பிரகாசிக்கின்றனர்.
மாதத்தில் ஒருமுறை
முழுமை கொள்ளும் உன் வதனம்
ஒருமுறை முழுமையாக
மறைந்தும் போகின்றது.
ஒளியையும் இருளையும்
மனிதருக்கு உணர்த்தும் உன்
புதுமை
தான் என்னவோ?

உன் கூடவே வரும்
பனித்துளிகளும்
மின்மினிகளும் என்ன அழகு!
நீ உல்லாசமாய் உலா வருவதால்
எல்லையில்லா
வனத்துக்கும் அழகு!
நீ இல்லாவிடில் இங்கு பல
கவிஞர்களுக்கு
வயிற்றுப் பிழைப்பில்லை!
தினமும் உனது நேரக்கடமைக்குக்
கட்டளையிடுபவர் யார்?
உனதருகிருந்து நிறையப்
பேச்சளக்கும் மையலுண்டு.
ஒரு நாள் அதற்கும் நேரம்
ஒதுக்கி வருவாயா?

*நி.காசினி*

# இசைத் தமிழ்



ந. ஜெயநிஷா

முத்தமிழ் என்று குறிப்பிடுபவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் ஆகியவையே. இவைதாம் தமிழ்மொழியின் பால் பாகுபடுத்திக்கொள்ள முடிந்த இலக்கண, இலக்கிய, வெளிப்பாட்டு முறைகளிலிருந்து பரிணாமம் கண்டவை. நாடகத் தமிழ் என்பது உரை மற்றும் வெளிப்படும் முறையிலே இசைத் தமிழிலிருந்து வேறுபடுகின்றது. ஆனாலும் துரித வேகத்தில் அது மொழிக் கலப்புக்குள் சென்றுவிடுகின்றது.

உங்களுக்குப் பிடித்த பாடல் என்ன? என்று உங்கள் அம்மம்மாவைக் கேட்டால் "பச்சைக் கிளி... முத்துச்சரம்... முல்லைக்...கொடி யாரோ..." என்பார். அப்பாவிடம் கேட்டால் "வா வெண்ணிலா உன்னைத் தானே வானம் தேடுதே" என்பார். இதையே இன்றைய இளைஞரிடம் கேட்டால் "போற போக்கில் ஒரு லுக்க விட்டு என்னச் செஞ்சிட்டாளே... என்னச் செஞ்சிட்டாளே" என்பான். இவ்வாறாக இசை காலத்துக்கேற்ப தானும் மாறித் தனக்கு ஆதாரமான மொழியையும் மாற்றி விருத்தி கொண்டு நகர்கின்றது. தமிழர்களிடம் மட்டும் இல்லை, இந்த உலகில் எவரைக் கேட்டாலும் சரி, இசையைப் பிடிக்காதவர்கள் இருக்கவே மாட்டார்கள். அனைவருக்கும் பிடித்த பாடல்கள், பிடித்த பாடகர், பிடித்த இசையமைப்பாளர் என்பன இருக்கத்தான் செய்யும். ஆனால், ஏன் எல்லோருக்கும் இசையைப் பிடிக்கிறது? சிலருக்கு போதை போன்று மகிழ்ச்சியைக் கொடுக்கிறதே! இசையில் அறிவியல் ரீதியாக அப்படி என்ன தான் இருக்கிறது? என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

## இசை ஒரு மொழி

இசை எல்லோருக்குமே புரிகின்ற ஒரு மொழி என்றே கூறலாம். வார்த்தைகளால் நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதைவிட இசையால் வெளிப்படுத்துவது மிகவும் இலகுவாக இருக்கும். அடிப்படையில் இசை என்பது வேறு ஒன்றும் இல்லை: பல ஒலி அதிர் வெண்கள் கலந்து விதம் விதமான வடிவங்களில் காற்றில் மிதந்து நமது செவிகளை அடைவதைத் தான் இசை என்று கூறு கின்றோம். நமது கண்கள் ஒளியை எவ்வாறு செயலாக்கம் செய்கின்றனவோ, அதேபோன்றுதான் நமது காதுகளும் ஒலியைச் செயலாக்கம செய்கின்றன. உண்மையைச் சொல்லப்போனால், நாம் பிறப்பதற்கு முன்பே இசையைக் கேட்க ஆரம்பித்து விடுகின்றோம். என்ன புரியவில்லையா? நாம் நமது தாயின் கருவறையில் இருக்கும் போது, நமது கண்களால் எதையும் பார்க்க முடியாமல் இருப்போம். ஆனால், நாம் நமது காதுகள் எப்போதும் ஒலியை உள்வாங்கிக் கொண்டே இருக்கும். அத்துடன் நமது தாயின் இதயத்துடிப்புத் தான். எப்போதுமே நமக்கு ஆரம்பத் தாலாட்டு. அந்த இதயத் துடிப்பின் ஓசையில் நாம் உறங்கிக்கொண்டு இருப்போம்.

## இசை ஒரு போதை


இசையை ரசிக்கும்போது, நமது உடலில் பல செயல்கள் நடைபெறுகின்றன. குருதி அழுத்தம் அதிகரித்து, நமது மூளையில் உள்ள பல்வேறு பகுதிகள் இயங்கத் தொடங்கிவிடுகின்றன. இசை, நாம் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானது இல்லை என்றாலும், அதை ரசிக்கும்போது நாம் மகிழ்ச்சி கலந்த திருப்தி நிலையை அடைந்து விடுகின்றோம். இன்றுவரை அதன் காரணத்தை ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கவில்லை. போதைப் பொருள்கள் சிலரை அடிமை ஆக்குவதுபோல் இசையும் ஒரு விதமாக, நம்மை அடிமை ஆக்கி விடுகிறது. ஒவ்வொரு மனிதனின் இசைச் சுவை வித்தியாசமாக இருந்தாலும் அதன் விளைவு எப்போதும் ஒன்றாகத் தான் இருக்கிறது.

## இதயத்துடிப்பில் ஆரோக்கியம்

இசை கேட்கும்போது நமது உடலில் மேலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக நமது உடலில் எல்லாமே ஒரு தாளத்துக்கு அடங்கியதாகத் தான் இருக்கிறது. நமது இதயம் துடிப்பது ஒரு தாளத்தில். நாம் சுவாசிக்கும்போது பிராண வாயு உள்வாங்கி, கரியமிலவாயு வெளியேற்றுவது இன்னும் ஒரு தாளம். கடினமான வேலை செய்யும்போது இதயத் துடிப்பு மற்றும் சுவாசத்தின் அளவு அதிகரித்துவிடுகிறது. அதேபோன்றுதான் நாம் இசை கேட்கும்போதும் இந்தத் தாளங்கள் மாறிவிடுகின்றன. அதன் விளைவாகக் குருதி அழுத்தம் மற்றும் மூளையின் செயற்பாடும் மாறிவிடுகின்றது. பொதுவாக நமது இதயம் ஒரு நிமிடத்தில் 72 தடவைகள் துடிக்கின்றது. ஆராய்ச்சியாளர்கள் அறிந்தது என்னவென்றால் இசையைச் செவிமடுப்பதைப் பொறுத்து, நமது உடல் வெவ்வேறு உணர்ச்சிகளை உருவாகின்றன என்பது தான். இதயத்துடிப்பு 72தடவைக்கு அதிகமாகத்துடிக்குமாயின் இசை கேட்கும்போது மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறோம், அதுவே 72தடவைக்குக் குறைவாக துடிக்குமாயின் இசை கேட்கும்போது நாம் அமைதி ஆகிவிடுகிறோம் என்பதையே.

## குழந்தைகளுக்கு மெல்லிசை

சிறுவர்களின் வளர்ச்சி நேரம், அவர்களின் மூளை விருத்தியை இசை தூண்டுகிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் அறிந்துள்ளார்கள். எனவே, பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு இசையை இரசிக்கும் சூழலை ஏற்படுத்திக்கொடுங்கள். அவர்கள் மேலும் புத்திசாலிகள் ஆவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே அளவான இசை நம் ஆயுளைக் கூட்டும்.



# அழைப்புக்காய் காத்திருக்கும் தருணம்...

நேரத்துடனேயே விழித்து
விடுகிற மனம்
இனிய நினைவுகளால்
நிரம்பி வழிகிறது.

அந்த அழைப்புக்காய்;
காத்திருக்கின்ற நேரம்
மனம் அன்பை நிரப்பிக்கொண்டு
முகில்களில் மிதக்கிறது.

பேசுவதற்காய்
இதயத்தில் இருந்து
அழகிய வார்த்தைகளை
எடுத்து அடுக்கிவைக்கிறது.

குரலில் தேனைப் பூசிக்கொண்டு
ஒத்திகையாய்ப் பேசிப்பார்க்கிறது
அன்பாய் அழைத்து உருகுகிறது
இலேசாய்க் கோபப்படுகிறது
சமாதானம் செய்ய
கவிதைகளை இணைக்கிறது.

அழைப்பு வரும் நேரம் நெருங்க.
வினாடிகள் நகர மறுக்கின்றன.

ஏதோ ஒன்று ஒக்சிரோசினை
கூட்டிவிடுகிறது
இதயம் துடிப்பது காதுக்குக் கேட்கிறது

பசி நிறுத்தப்பட்டிருக்கிறது.
இடையில் வருகின்ற
அழைப்பெல்லாம்
அந்த அழைப்போ? என
மனம் பரபரக்கிறது

அந்த நேரம் கடந்தும்
அழைப்பு வராமல்
விடுகிறபோது
அதை அணுக
முடியாதிருக்கிறபோது
மனதில் கற்பனைகள்
உதிரத்தொடங்குகின்றன.

வெற்றிடையாகிக்
கிடக்கிற மனது
இயற்பியல் விதிகளை மீறி
கனக்கிறது
கவலையில் ஆழ்ந்து
போகிறது

காத்திருந்த சொற்கள்
பேசப்படாமல்
நிலையாகிச் செயலற்று
நின்று விடுகின்றன
இந்தக் கவிதையைப்போல...

*வேலணையூர்-தாஸ்*

# ஹைக்கூ

## வெட்டிய துண்டுகள்

இழவு வீடுகளிலும்
'சொற்பொழிவு' முயற்சி
அரசியல் வியாபாரிகள்.

...

'மப்பில்' இருந்ததால்
வந்ததாம் தப்பு
பார்வைகள் குளறுபடி.

...

"படுகொலைகள் சாதாரணம்"
பகருகிறது இனவாதம்
எத்தனம் உச்சத்தில்.

...

விண் பார்த்துச் சென்ற செப்பு
நெஞ்சை நோக்கி வந்தது
சிறப்புப் பயிற்சி.

...

"வடக்கின் காவலர்க்கு
வந்துவிட்டது ஆபத்து"
சிவப்புக் கொம்பனிகள்.

...

சும்மா கிடந்த சங்கை
ஊதிக்கெடுத்தன ஊர்சுற்றிகள்
மாணவர் படுகொலை.

*–அலெக்ஸ்பரந்தாமன்,*
*புதுக்குடியிருப்பு.*

# 'ஆவா' அரசியல்

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எங்களுக்குத் தெரிந்து இவர்கள் எந்தப் பாரதூரமான குற்றங்களிலும் ஈடுபட்டதில்லை" என்பது அவர்களின் வாக்குமூலம். ஆனால், சில சந்தர்ப்பங்களில் இந்த இளைஞர்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு செயற்பட்டதையும் அவர்கள் மறுக்கவில்லை. இரண்டு உதாரணங்களை அவர்கள் சொல்கிறார்கள்.

அதில் முதன்மையானது, ஆண் துணையற்று இருந்த ஒரு குடும்பத்தில் இருந்த இளம் பெண்ணைத் தனக்குத் திருமணம் செய்து தரவேண்டும் என்று அத்துமீறிய நபர் ஒருவரைத் தாக்கியது.

"அந்தப் பெண்ணின் தாயார் வந்து, அவன் வீட்டுக்க வந்து பிள்ளையின்ர கையப் பிடிச்சு இழுக்கிறான். தனக்குத் தான் கட்டித்தரவேணும் என்று மிரட்டுறான். நீங்கள் எல்லாம் ஊர்ப் பெடியள் எண்டு இருக்கிறியள் இதெல்லாம் என்னெண்டு கேக்கமாட்டியளோ? என்று அழுதா. அதுதான் அவங்கள் அந்தாளையும் அவரோட திரியிற வேற மூன்று பேரையும் பிடிச்சு அடிச்சவங்கள்" என்று விளக்குகிறார்கள் நண்பர்கள்.

பிறகொரு சமயத்தில, "தாவடியில ஒரு வீட்டுக்குள்ள கள்ளன் புக, வீட்டுக்காரர் கத்த, இவங்கள் அங்க ஓடிப்போய் அவனப் பிடிச்சு அடிச்சவங்கள். அவன் அப்பவே சொன்னவன், நான் யாரென்று தெரியாமல் கைவைக்கிறியள் இதுகின்ர பின்விளைவை அனுபவிப்பியள் எண்டு. அங்க வந்த பொலிஸும் கள்ளனை விட்டிட்டு இவங்களைத்தான் தேடித் திரிஞ்சது. இவங்கட வீடுகளுக்கு எல்லாம் போய்த் தேடினவை. பிறகுதான் ஒருநாள் வினோதனையும் வேற சிலரையும் பிடிச்சவங்கள். அதோட பெடியள் எல்லாம் பயத்தில ஓடிட்டாங்கள். சிலர் வெளிநாட்டுக்குப் போட்டாங்கள். சிலர் வேற எங்கெங்கேயோ போட்டாங்கள்."

இப்படிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டும் தேடப்பட்டும் வந்தவர்களில் சிலருக்கு வங்கிகளிலும் வேறு அரச திணைக்களங்களிலும் வேலை கிடைத்திருந்தது. ஒருவருக்கு பொலிஸில் இணைவதற்கான அழைப்புக் கடிதம்கூடக் கிடைத்திருந்தது. ஆனால், பொலிஸார் அவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ததன் மூலம் அந்தப் பணியே அவருக்குக் கிடைக்காமல் போயிருக்கிறது.

ஆவா குழுவைப் போலவே மற்றொரு குழு என்று பொலிஸார் சொல்லும் கும்பல் சன்னா குழு. உண்மையில்சன்னா எனப்படுகின்ற பிரசன்னாவும் இந்த இளைஞர் குழாத்தில் ஒருவரே. கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவாகியிருந்தார். இப்போது பொலிஸாருக்குப் பயந்து தப்பியோடித் தலைமறைவாகியிருக்கிறார். இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்ட நபர். அவரது எதிர்காலமே பாழாய்ப் போயிருக்கிறது.

இப்படி 'ஆவா' குழுவையும் 'சன்னா' குழுவையும் மக்களுக்குப் பொலிஸார் அறிமுகப்படுத்திய பின்னர் அடுத்தடுத்து நடந்த பல குற்றச்செயல்களின் பின்னால் இந்தக் குழுவினரே இருந்தனர் என்று பொலிஸார் சொல்ல ஆரம்பித்தனர் என்பதை பொலிஸ் செய்திகளை எழுதும் பத்திரிகையாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

'ஆவா' கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், 'சன்னா' தப்பியோடிய பின்னர், அந்தக் குழுவினரில் பலரும் சிதறியோடிய பின்னர், எஞ்சியிருந்தவர்களை பொலிஸ் நிலையம் அழைத்து தாய், தந்தையர் முன்பாக மிரட்டிப் பணிய வைத்த பின்னரும் நடந்த குற்றங்கள் எல்லாவற்றுக்கும் இந்தக் குழுக்களின் பெயர்களே பயன்படுத்தப்பட்டமை ஏன் என்கிற பெரும் கேள்வி விடைகாணப்படாமலேயே உள்ளது.

### வாள்வெட்டுக் குழுக்கள்

யாழ். குடாநாட்டில் பல வாள்வெட்டுக் குழுக்கள் அடையாளம் இடப்பட்டுள்ளன. உண்மையில் அவை குழு மோதல்களிலும் குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றன. கூலிக்குக் குற்றங்கள்செய்யும் அளவுக்கு இந்த வலைப் பின்னல் விரிவடைந்தும் உள்ளது. ஆனால் இத்தகைய கும்பல்களில் எவற்றுக்கும் பொலிஸார் பெயரிட்டதும் இல்லை; தேடித் தேடி வேட்டையாடியதும் இல்லை என்பதும் உறுத்துகிறது.

கடந்த மாதம், பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்டதற்குச் சில நாள்கள் முன்பாக யாழ். நகரின் மத்தியில் வைத்தியசாலை வீதியில் இரவு 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் நடமாடி வீதியில் நின்றவர்களையும் போவோர் வருவோரையும் அச்சுறுத்தியது ஒரு கும்பல். பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்தியில் ஒரு வாகனத்தையும் தாக்கிச் சேதப்படுத்திப் பகிரங்கமாக அட்டகாசம் புரிந்துவிட்டுத் தலைமறைவாகும் அளவுக்குத் துணிவு பெற்றிருந்தது அந்தக் கும்பல். அப்போதும் 'ஆவா' சிறையில்தான் இருந்தார். 'சன்னா' தலைமறைவாகித்தான் இருந்தார். ஏனையவர்களும் ஒடுங்கிப்போன நிலையில்தான் இருந்தார்கள்.

அப்படியிருக்கும்போது இப்போது எல்லாக் குற்றங்களுக்கும் 'ஆவா' குழுவே



பலிக்கடா ஆக்கப்படுவதன் பின்னணி கூர்ந்து நோக்கப்படவேண்டியது.

உண்மையான குற்றவாளிகளை விட்டு விட்டு அப்பாவி இளைஞர்களைக் குற்றவாளிகளின் பட்டியில் சேர்த்து வழக்குகளை முடிப்பதும் கிளர்ந்தெழும் விமர்சனங்களைப் பொலிஸார் அடக்குவதும் தெற்காசியா முழுவதும் புதிய விடயம் ஒன்றுமில்லை. இங்கும் அதுவே ஏன் நடந்திருக்கக்கூடாது என்கிற நியாயமான சந்தேகம் எழுவதற்கு நிறையவே வாய்ப்பிருக்கிறது.

இப்போது பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்ட பின்னர் 'ஆவா' குழு ஊதிப் பெருப்பிக்கப்படுவதைப்போன்றே அப்போதும் அது பலி கொடுக்கப்படுவதற்காகவே உருவாக்கப்பட்ட ஒரு குழுவாக ஏன் இருக்க முடியாது?

'ஆவா' 'சன்னா' குழு போன்றவற்றால் அடையாளம் காட்டப்படுபவர்கள் நன்றாகப் படித்த, சிந்திக்கும் திறனுள்ள, சிறந்ததொரு எதிர்காலம் குறித்த கனவுகளோடிருந்த, சமூகத்தின் ஒரு தரப்பின் மீது அறக் கோபத்தோடு இருந்த இளைஞர்கள் என்று அவர்களோடு தொடர்புபட்டவர்களிடம் விசாரிக்கும் போது தெரியவருகிறது. அப்படிப்பட்டவர்கள் ஏன் இலக்கு வைக்கப்பட்டு நசுக்கப்பட்டார்கள்? அவர்களின் சிந்தனைப் போக்கு எதுநோக்கியதாக இருந்தது? அவர்களின் அறச் சீற்றம் யாருக்குப் பாதகமாக இருந்தது? போன்ற ஆழமாக ஆராயப்படவேண்டிய வினாக்கள் பலவுண்டு.

கொழும்பில் இருந்துகொண்டு அரசியல் சதுரங்கம் ஆடுவதற்கல்ல யாழ்ப்பாணத்து இளைஞர்களின் வாழ்க்கை. 1970களிலும் பொலிஸாரும் அரசியல்வாதிகளும் இதே தவறைச் செய்திருக்கிறார்கள். அதன் விளைவை இலங்கை 30 ஆண்டுகளுக்கு அனுபவித்தது. அதை யாரும் மறந்துவிடக்கூடாது.

அனைத்துக் குற்றங்களும் 'ஆவா' குழுவின் மேல் சுமத்தப்பட்டு அது ஒரு பயங்கரக் கும்பலாகக் காட்டப்படுவதன் நோக்கமும் தேவையும் நன்கு ஆராயப்பட்டு மக்களுக்கு அவை வெளிப்படுத்தப்படவேண்டும். இதன் பின்னணியில் செயற்பட்டவர்களும் அம்பலப்படுத்தப்படவேண்டும்.

## மாறாப் புன்னகை

மறக்கவே முடியாத மென்மையும்
புன்னகையும் கொண்ட புனிதன்...
மிகுந்த உறுதியும் இறுக்கமும் உடைய விடுதலை
இயக்கத்தின் வீர மறவன்...
இந்தப் புன்னகை முகம் ஒரு புறம் கரும்புலிகளின்
தீவிரத்தை உடையது..
மறு புறம் உச்சமான சகிப்புத் தன்மை கொண்டது
நெகிழ்ச்சியும் உறுதியும் தந்தது&
திலீபனின் அகிம்சையை வெளிக் காட்டியது
எவருடைய கணிதத்தினுள்ளும் புலிகள் இல்லை என்பதை
சர்வதேசத்திற்கு உணர்த்தியது.
வீரத்தின் அடையாளமாய் மாறாப்
புன்னகை மடிந்து போனது
தமிழினம் இடிந்து போனது.

விடியல் வருமென காத்துக் கிடக்கிறது.
உந்தன் புன்னகை எல்லோர் மனங்களிலும்
கார்த்திகைப் பூவாய் பூத்துக்கிடக்கிறது
வான மகளின் கண்ணீர் மழையில் நனைந்து
ஜொலிக்கிறது – சிலிர்க்கிறது – சிரிக்கிறது.
மாறாத புன்னகை எங்கோ தெரிகிறது....

செ.தமிழ்நம்பி



# பேய்களுடன் பேசலாமா?

ந.ஜெயா



உயிர்கள் இறந்த பின்னர் பேய், பிசாசாக அலைவதாக நம்பும் நம்மவர்களின் சிந்தனைக்கு சிறிய விளக்கம் கொடுக்கலாம். ஏனெனில் அண்மையில் வெளிவந்த தென்னிந்திய‌த் திரைப்படமான கஷ்மோராவில் சித்திரிக்கப்பட்டுள்ளது போலான போலிச் சாமியார்கள் எமது ஊரிலும் உலவுகிறார்கள் என்பதால் சின்னதாக இதுபற்றி அசை போட்டுக் கொள்ளலாம். கண்ணுக்குத் தெரிபவர்களை நம்பாத நம்மவர்கள் பேய் இருக்கின்றதோ? இல்லையோ? ஒரு சிலரால் உருவகப்படுத்தப்படும் இவற்றை இலகுவாக நம்பி விடுகிறார்கள். போலிச்சாமியர்கள். தமது உழைப்புக்காக இன்றும் ஆவி, பேய் என்பது உண்மை என்றுரைத்து வருகின்றனர். பேய், பிசாசு என்பது உண்மையாக இருக்கின்றதோ, இல்லையோ அதை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்கள் உண்மையாக இருக்கின்றனர் என்பதுதான் இதுபற்றி ஆராய்ந்த ஆபிரஹாம் கோவூர் போன்ற ஒருசிலரின் கண்டுபிடிப்பும் கூட. பித்தலாட்டத்தில் ஈடுபடும் போலிச் சாமியார்களும் அவர்கள் தேற்றுவிக்கும் பேய்களுக்கும் மத்தியில் இவை பற்றிய உண்மையைக் கண்டறிவதைக் கல்வியாகக் கொண்டவரே இந்தக் கோவூர். ஆவிகளும் அதன் விந்தை தொடர்பிலும் ஆராய்ந்தவர். இவை எல்லாம் மனிதனின் கற்பனையே என உரைத்திருந்தார்.

### பேய்களுடன் பேசலாமா?

தீர்க்க முடியாத பிரச்சினைகளில் உள்ளவர்களுக்கும், ஆவிகளால் பாதிக்கப்பட்டு மன உளைச்சலில் உள்ளவர்களுக்கும் சிகிச்சை அளித்த கோவூர் உண்மையான ஆவி என்பது கற்பனையும், மனநோயுமே என்றறிந்தார். அவர் ஆராய்ந்தவர்களுள் பேய்களுடன் பேசுவதாகக் கூறிய பலருண்டு. ஒருவர் கூறிய வித்தியாசமான விளையாட்டு இது. ஒரு வட்டமான தட்டொன்றில் ஆங்கில எழுத்துக்களை வரிசையாக எழுதி டம்ளர் ஒன்றினைக் கவிழ்த்து இருவர் விளையாடும் போது டம்ளர் தானாக நகர்வதாகவும் பேய்கள் வந்து பேசுவதாகவும் குறிப்பிட்டனர். ஆனால் அவரது ஆய்வில் அது ஒரு மனநோய் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் ஆவிகள் மிரட்டுவதாகவும் பேய்பிடித்திருப்பதாகவும், வேறு சிலர் கூறிய விடயங்களையும் அவர்கள் கூடவே இருந்து எல்லாம் கற்பனையே எனவும், தீர்க்க முடியாத மனநோயின் விளைவு எனவும் நிரூபித்தார்.

### பேய் என்பது உண்மையா?

கோவூர் ஆராய்ந்த எந்தவொரு பிரச்சினையிலும் பேய்கள் இருப்பதற்கான எந்த தடயங்களையும் அவர் அறியவில்லை. அதுமட்டுமல்ல பேய்கள் இல்லை என்பதை ஆதாரமாக்கி அவர் குறிப்பிட்ட ஆய்வுகள் வெற்றியளித்தமையினாலேயே உலகம் கோவூரை மனோதத்துவத்தின் தந்தை என்றும் கௌரவித்ததுள்ளது. அவதாரம் அல்லது தெய்வீக ஆற்றல் உள்ள மகான் என்று சொல்லும் அனைவருமே பொய்க்காரர்கள். ஏமாற்றுவாதிகள் என்பதே கோவூரின் கண்டுபிடிப்பின் முடிவாக இருந்தது. பேய் பற்றிய நிகழ்வுகளும் நம்பிக்கைகளும் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டவை என்பதே அவருடைய முடிவு. ஆவி, பேய் ஆகியவை தொடர்பான ஆற்றல்கள் பெற்றுள்ளதாகக் கூறுகின்ற எல்லாரும் ஒன்று ஏமாற்றுக்காரர்களாக இருக்கவேண்டும். அல்லது மூளைக்கோளாறோ, மன நோயோ கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

### ஏமாற்று வித்தைக்கு கட்டுக்கதை

ஆவிகள் இருப்பதாக நிரூபிப்பவர்கள், தான் கடவுளின் பிறப்பு, தன்னால் எதனையும் நிரூபித்து காட்ட முடியும் எனக் கூறுபவர்கள், எத்தனையோ விதமான மூட நம்பிக்கைகளுள் மூழ்கி, மந்திரவாதிகளையும் பூசாரிகளையும் நம்பி காசைக் கரியாக்குபவர்கள் என இந்தச் சமுகம் உருவாக்கிக் கொண்டது தான் பேய் என்பது. பின்னர் தொடரும் அதன் சாடலில் பணத்தைப் பறிக்கும் ஆசாமிகளின் விளையாட்டுக்கள் போலி என்பதை நமது மனதில் தேற்றுவிக்கப்பட்ட கற்பனையின் உக்கிரத்தால் உணர மறுக்கின்றோம். மூட நம்பிக்கைகளுக்கு விடை கொடுப்போமானால் இனிவரும் காலங்களில் தோற்றம் பெறமாட்டார்கள் உயிருள்ள இவர்கள் போன்ற பேய், பிசாசுகள் கூட.



# மகிந்த சிந்தனை நிழலில் முஸ்லிம் அரசியல்

சந்திரசேகரஆசாத்

இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் பல முனைகளிலும் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில், தமிழர்களும் முஸ்லிம்களும் ஒடுக்கு முறைகளுக்கும் அநீதிகளுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இப்படியான நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியம் என்பது இன்றைய காலகட்டத்தின் தவிர்க்க முடியாத தேவையாக உள்ளது. எனினும் சில முஸ்லிம் தலைவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளும், தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையேவெறுப்பையும்கசப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. ஆறிப்போன காயங்களை மீண்டும் மீண்டும் கிளறி ஆறாத ரணமாக்க அவர் கள் முயன்று வருகின்றனர்.

அண்மையில் முஸ்லிம் சிவில் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட நினைவு நாளை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தனர். சில முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் குற்றம் சாட்டி வரும் நிலையில், அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டமையும், அவர்கள் அதில் கலந்து கொண்டு ஒளிவு மறைவின்றி உண்மைகளை முன்வைத்து உரையாற்றியமையும் நல்லதொரு ஆரோக்கியமான முன்னெடுப்பாகும். சமஷ்டி முறை முஸ்லிம்களுக்கு எதிரானது என்பது ரிசாத் மற்றும் ஹிஸ்புல்லாவின் நிலைப்பாடு

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வரும் இராஜதந்திரப் போரில் முஸ்லிம் தலைமைகளின் பங்களிப்பைத் தாம் எதிர்பார்த்ததாகவும், அது கிடைக்கவில்லையெனவும் தனது வருத்தத்தைத் தெரிவித்த இரா.சம்பந்தன், வடக்கு, கிழக்கு இணைக்கப்படாவிட்டால், கிழக்கு பறிபோய் விடும் அபாயம் ஏற்படுமெனவும் எச்சரித்திருந்தார். அங்கு உரையாற்றிய சுமந்திரனும், கூட்டாட்சியை அதாவது சமஷ்டிக் கோரிக்கையை எதிர்ப்பது என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் மக்களுக்கும் எதிரானதெனத் தெரிவித்திருந்தார்.

அண்மையில் புல்மோட்டையில் ஒரு நிகழ்வின்போது உரையாற்றிய அமைச்சர் ரிசாத் பதியுதீன், சமஷ்டிக் கோரிக்கை முஸ்லிம்களுக்கு எதிரானது என வலியுறுத்தியுள்ளதுடன், வடக்கு, கிழக்கு இணைப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லையெனவும் தெரிவித்திருந்தார். அதே வேளை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவும் வடக்கு கிழக்கு இணைப்பை தொடர்ந்து நீண்டகாலமாகவே எதிர்த்து வருகின்றார். அதே புல்மோட்டைப் பகுதியில் முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த 500 ஏக்கர் காணிகள் அங்கு புத்த சின்னங்கள் காணப்படுவதாகக் கூறப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தால் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கெதிராக முஸ்லிம் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட மக்கள் பல போராட்டங்களை நடத்தினர். காணிகளை அளவீடு செய்ய வந்த நில அளவையாளர்களைத் தடுத்துப் போராட்டம் நடத்தினர். இன்று வரை அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவுமில்லை; முஸ்லிம் மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேற்றப்படவுமில்லை.

இங்கு நாம் கவனிக்க' வேண்டியது என்னவெனில், கடந்த கால மகிந்த ஆட்சியிலும் சரி, இன்றைய மைத்திரி ரணில் ஆட்சியிலும் சரி ரிசாத் பதியுதீன் அமைச்சரவை அந்தஸ்துள்ள சக்திவாய்ந்த அமைச்சராயிருந்தார். இன்றும் இருக்கிறார். அதே போன்று முன்பு ஹிஸ்புல்லா மீள்குடியேற்ற அமைச்சராகவும் தற்சமயம் பிரதியமைச்சராகவும் பதவி வகிக்கிறார். தமிழ், முஸ்லிம் மக்கள் காணி அதிகாரம் உட்பட தங்களுக்கான சுயநிர்ணய அதிகாரத்தைக்கோரும் சமஷ்டி ஆட்சியை எதிர்க்கும் இவர்களால் ஏன் மத்திய அரசில் சக்திவாய்ந்த பதவிகளில் இருந்துகொண்டும் கூட, முஸ்லிம்களின் காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் சவூதி அரேபிய அரசால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வசதியான 500 வீடுகள் வழங்கப்பட்டன. அது மட்டுமன்றி, பள்ளிவாசல், பாடசாலை, விளையாட்டுத்திடல் போன்ற ஏற்பாடுகளும் தரமான முறையில் அமைக்கப்பட்டன. தற்சமயம் பன்னிரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், அவர்கள் இன்றுவரைக்கும் குடியேற்றப்படவில்லை. அவர்கள் இன்றும் குடிசைகளில் வெய்யிலிலும், மழையிலும் துன்பங்களை அனுபவிக்க, அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய வீடுகளுக்குள் பற்றைகள் வளர்ந்து பாம்புகள் குடியேறி விட்டன. அந்த மக்கள் எத்தனையோ முறை கோரிக்கைகளை முன் வைத்தபோதும், இந்த மத்திய அமைச்சர்களால் அவர்களைக் குடியேற்ற முடியவில்லை.

அதிகாரம் இருந்தும் கூட முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கத் திராணியற்ற இவர்கள், ஒரு சமஷ்டி அரசியல் அதிகாரம் மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்க்கக் கூடிய ஒரு நிலமை உருவாவதை கர்ணகடூரமாக எதிர்த்து வருகின்றனர்.

இங்கு தான் இவர்கள் முஸ்லிம் மக்களின் நலன்களுக்காக அரசியல் செய்கிறார்களா அல்லது பதவி களைப்பெற்று அதன் மூலம் தமது சொந்த சுகங்களைப் பெருக்க அரசியல் செய்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. அமைச்சர் ரிசாத் பதியுதீன் தமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்தும் வகையில் பல செயற்பாடுகளைக் கடந்த காலத்தில் மேற்கொண்டுவந்தார்.

அவருக்கு எதிராகவும், முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும், பொதுபலசேனாவினர் படுமோசமான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டபோதிலும் அவர்களுக்கு எதிராக அமைச்சரவையில் ஒரு தீர்மானத்தை முன்மொழியவுமில்லை. நாடாளுமன்றத்தில் ஒரு கண்டன உரை கூட ஆற்றவுமில்லை. பள்ளிவாசல்கள் தொடர்ந்து உடைக்கப்பட்டமைக்கு எதிரான ஜனநாயகப் போராட்டங்களைக் கூட நடத்தவில்லை. பேரினவாதக்குழுக்கள் முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளிலேயே கைவைத்தபோதிலும் அவர்கள் தொடர்பான ஒரு மென்போக்கையே இவர்கள் கடைப்பிடித்து வந்தனர். ஆனால் அடிக்கடி முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டதையும், காத்தான்குடிப் பள்ளிவாசல் சம்பவத்தையும் சொல்லிச் சொல்லி முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழர் விரோதக் கருத்துக்களை அழியவிடாமல் பாதுகாப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் கிழக்கில் முஸ்லிம் ஊர்காவற்படையினர் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து பல இடங்களில் சுற்றிவளைப்புகள் மூலம் பல்லாயிரம் தமிழ் மக்களைக் கொன்று தீர்த்தமைக்காக இவர்கள் கவலைப்பட்டதுமில்லை. வருத்தம் தெரிவித்ததுமில்லை.

### வடமாகாண சபை மீது ரிசாத்தின் குற்றச்சாட்டு

அமைச்சர் ரிசாத் பதியுதீன் அண்மையில் ஐக்கிய நாடுகளின் இனவிவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் ரடியாவைச் சந்தித்தபோது வடக்கில் முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்துக்கு வடமாகாணசபையும் வடமாகாண முதலமைச்சரும் தடையாக உள்ளனர் என்று தெரிவித்தார். காணி அதிகாரம் காணி அமைச்சின் கையிலும் மீள்குடியேற்ற அதிகாரம் மீள்குடியேற்ற அமைச்சின் கையிலும் இருக்கும் போது அதே அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஓர் அமைச்சர் காணி அதிகாரமோ மீள்குடியேற்ற அதிகாரமோ இல்லாத மாகாண சபை மீது எப்படிக் குற்றம் சாட்ட முடியும்? இந்தக் கருத்து இவரால் உண்மையிலேயே முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான அக்கறை காரணமாக வெளிப்படுத்தப்பட்டதா அல்லது மாகாணசபைகளுக்கு காணி அதிகாரம் வழங்கப்படக் கூடாது என்பதை ஐ.நா.மட்டத்தில் வலியுறுத்த முன்வைக்கப்பட்டதா என்ற கேள்வி எழுகின்றது. ஆனால் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீள்குடியேற்றம் என்ற பேரில் முஸ்லிம்களையும் தமிழர்களையும் மோத வைக்கும் நடவடிக்கைகளைச் கனகச்சிதமாகச் செய்து வருகிறார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சன்னார் கிராமம், 1977,1983 ஆகிய காலப்பகுதிகளில் தெற்கில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் காரணமாக விரட்டப்பட்டு வந்த தமிழ் மக்கள் குடியேறி நிரந்தரமாக வசிக்கும் கிராமம். போரின்போது இடம்பெயர்ந்து வெளியேறினர். அந்த மக்களின் காணிகளை அபகரித்து மீள்குடியேற்றம் என்றபேரில் முஸ்லிம்களுக்கு வழங்க முற்பட்டபோது அந்த மக்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். அமைச்சர் வலிந்து ஒரு மோதல் நிலையை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செயற்பட்டார். முஸ்லிம்களை மீள்குடியேற்ற தமிழர்கள் விடுகிறார்கள் இல்லையென ஒப்பாரி வைத்தார். ஆனால் மன்னார் வாழ் நல்லெண்ணம் கொண்ட தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு பிரச்சினையைச் சுமுகமாக முடித்து வைத்தனர்.

முள்ளியவளையில் தமிழ் மக்களின் காணிகளில் முஸ்லிம்களைக் குடியேற்றவும் விடுதலைப் புலி கள்போர் நெருக்கடிக்குள்ளும் நீரூற்றி வளர்த்துப் பாதுகாத்த தேக்கம் காட்டை அழித்து அங்கு முஸ்லிம்களைக் குடியேற்றவும் இவர் எடுத்தமுயற்சிகள் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டது.

முல்லைமக்கள் ஒல்லாந்தர் காலத்தில் போராட்டம் நடத்தி வெற்றி கொண்ட இடம் கற்பூரப் புல்வெளி. தமிழ் மக்களின் விடுதலைப் போரின் வரலாற்றுச் சின்னமான கற்பூரப் புல்வெளி அமைச்சர் ரிசாத்தின் உறவினர் கள் உட்படச் சிலரால் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை மறிச்சுக்கட்டி, சிலாவத்துறை ஆகிய பகுதிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டபோதும், அந்த முஸ்லிம் மக்களின் காணிகளை மீட்டெடுத்து மீள்குடியேற்றம் செய்ய இவர் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அகராதியில் மீள்குடியேற்றம் என்றால் தமிழர் காணிகளை அபகரித்துக் குடியமர் வதாகும்.

இப்படியாக நயவஞ்சகமாக தமிழர்களையும் முஸ்லிம்களையும் நிரந்தரப் பகையாளிகளாக மாற்றும் நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் தடையாக இருப்பதையே அமைச்சர் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு வடமாகாணசபை தடையாக இருக்கிறதெனக் கூறி வருகிறார். அவர் ஐ.நா. பிரதிநிதியிடம் முறைப்பாடு செய்துள்ளமை இவ்வாறான நோக்குடனேயே ஆகும்.

தமிழ் மக்கள் மீதும் முஸ்லிம் மக்கள் மீதும் தொடர்ந்து இனவாத, மதவாதத்தைப் பிரயோகித்து ஒடுக்குமுறைகளை மேற்கொண்டு அவர்களை நிரந்தரமாகவே இரண்டாம் தரப் பிரஜைகளாக வைத்திருப்பது என்பது மகிந்த சிந்தனையின் அடிப்படையிலான நிகழ்ச்சி நிரலாகும். வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு தமிழ் மக்களும் முஸ்லிம்களும் ஐக்கியப்பட்டாலோ சமஷ்டி அடிப்படையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலோ இந்த நிகழ்ச்சி நிரலின் அடித்தளமே தகர்ந்து விடும்.

அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் மகிந்த சிந்தனையின் முஸ்லிம் அரசியல் முதல்வராக அமைச்சர் ரிசாத் பதியுதீன் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

அவர்களையும் அவர்களின் நோக்கங்களையும் இனங்கண்டு அவர்களை முற்றாக நிராகரிப்பதே தமிழ் முஸ்லிம் ஐக்கியத் துக்கும் இரு இனங்களும் அடிப்படை உரிமைகளுடன் இந்த நாட்டின் பிரஜைகளாக தலைநிமிர்ந்து வாழ்வதற்கான சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தவும் உரிய வழியாகும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆரோக்கியமற்ற உணவுகளைத் தவிர்ப்போம்

மருத்துவர் பொ.ஜெசிதரன்

அதிக சுவையின் காரணமாக ஆரோக்கியமற்ற துரித உணவுகள் இன்று பிரபல்யம் பெற்று வருகின்றன. உணவுகளின் பெயருக்கு மாறாக இந்த உணவுகளின் சந்தைப் பெறுமதி அதிகமாக இருப்பதோடு இவற்றின் சுவையானது ஆரோக்கியத்துக்குக் கேடான அதிக சீனி, அதிக உப்பு, எண்ணெய் போன்றவற்றின் சேர்க்கை காரணமாகவே ஏற்படுத் தப்படுகின்றது. அதிக அளவிலான சீனி மற்றும் கொழுப்புக்கள் உள் ளடக்கப்பட்டிருப்பதனால், இவை அதிக கலோரிகளைக் கொண் டுள்ளதுடன் குறைவான நுண்ணூட்டச் சத்துக்களையே கொண் டுள்ளன. வெற்றுக் கலோரி உணவுகள் என்றும் இவற்றை அழைப்ப துண்டு. இவை போசணைக் கூறுகளான புரதம், கனியுப்புக்கள் மற் றும் விற்றமின்களை வழங்குவதில்லை.

உருளைக்கிழங்கு சிப்ஸ், இனிப்புக்கள் மற்றும் உருளைக் கிழங் கினாலும் மாப்பொருளினாலுமான தயாரிப்புக்கள், காபனேற்றப்பட்ட மற்றும் சுவையூட்டப்பட்ட பானங்களான சோடா வகைகள், பைக்கற் யூஸ் போன்றவை இலங்கையில் உட்கொள்ளப்படும் முக்கியமான பெறுமதியற்ற உணவுகளாகும். இந்த உணவுகளை உண்ணுதல் உடல் நலத்துக்குக் கேடானது. சிறுவர்கள் இந்த உணவுகளை உண்பதை ஊக்கப்படுத்துதல் கூடாது. இவற்றை அதிகளவில் உண் பதனால் நீரிழிவு, அதிக உடல்நிறை, இதய நோய்கள், பற்சிதைவு போன்ற நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

இந்த உணவுகள் பாடசாலை உணவகங்களில் விற்பதை நிறுத்துதல் வேண்டும். இதற்காக பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை அபி விருத்திச் சங்கம் போன்றோர் விழிப்புடன் செயற்படுதல் அவசிய மாகும். கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பன இது தொடர்பாக பாடசாலைகளை வழிநடத்துதல் மிகவும் அவசியமாகும்.

உணவுப் பொதியிலுள்ள சுட்டுத் துண்டில் (Label) அந்த உணவில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்களின் பட்டியல் இறங்கு வரிசையில் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். எமக்கு விளங்கக்கூடிய மொழியில் இவை எழுதப்பட்டிருத்தல் அவசியமாகும். எமக்கு விளங்காத மொழி யில் (அரபு, ஹிந்தி, சீன மொழி) எழுதப்பட்ட சுட்டுத்துண்டுடனான



உணவுகளில் எந்த வகையான பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்றோ அவற்றின் அளவுகள் தொடர்பாகவோ எம்மால் அறிந்து கொள்ள முடி யாது. எனவே அந்த வகையான சுட்டுத்துண்டுடன்கூடிய உணவுகளை வாங்குவதைத் தவிர்த்தல் நன்று. இது பற்றி முடியுமாயின் அந்தப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் அறிவித்தல் நன்று.

அதிக அளவில் சீனி, கொழுப்பு மற்றும் உப்பு சேர்க்கப்பட்டுத் தயாரிக் கப்பட்ட உணவுகளைத் தவித்தல் நன்று. ஒரு முழு உணவு வேளைக் காக உண்ணும், உணவு தவிர்ந்த நொறுக்காக எடுக்கும் உணவானது 300 கிலோ கலோரிக்கு மேலான சக்தியை வழங்குமாயின் அவ் வாறான உணவைத் தவிர்க்கவும். ஐந்து கிராம் கொழுப்பானது ஒரு தேக்கரண்டி எண்ணெய்க்கு சமமானது என்பது அறிந்து கொள்ள வேண்டியதே. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் எந்த வகையான உணவுகளைத் தேர்வு செய்கின்றனர் என்பதை அவதானித்தல் இன்றியமையாததாகும். பெறுமதியற்ற உணவுகளின் பாதிப்புக்களை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி அன்புடன் ஆரோக்கியமான உணவுகளைத் தேர்வு செய்திட உதவிடுதல் வேண்டும்.

வலயக்கல்வி அதிகாரிகள் பாடசாலைகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களையும் கண்காணித்துப் பாடசாலை உண வகங்களில் இந்த வகையான உணவுகள் விற்பதைத் தடைசெய்து ஆரோக்கியமான உணவுகள் கிடைக்க வழி சமைத்துக் கொடுத்தல் நன்று. இதன் மூலம் வருங்கால சமுதாயத்தை நோயற்ற சமுதாயமாக மாற்ற முடியும்.

சுகாதார வைத்திய அதிகாரி
மாநகர சபை, யாழ்ப்பாணம்.




# என்று தணியும் இந்த சீனி மேல் மோகம்?



மருத்துவர் எம்.அரவிந்தன்

உலகளாவிய ரீதியில் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பல்கிப் பெருகி வருவதைக் காணக்கூடியதாக வுள்ளது. இலங்கை போன்ற வளர் முக நாடுகளிலும் சிறிது சிறிதாக இவற்றின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய் வொன்றின்படி கொழும்பு நகரப்பகுதியில் ஏறக்குறைய 23 சதவீதத்தினர் நீரிழிவு அல் லது நீரிழிவுக்கு முந்தைய நிலையினால் (Pre Diabetes) பாதிக்கப்பட்டுள்ளனர். இனங்களை ஒப்பிடுகையில் இலங்கைத் தமிழரிடையே நீரிழிவு ஏற்படும் சதவீதம் அதி கரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக வுள்ளது.

எமது மக்களிடையே சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையானது அதிகமாக இருப்பதும் இதற்கானதொரு காரணமாகும். இதே போல அதிகரித்து வரும் மேற்கத்தைய துரித (Fast Food) உணவுகளின் பயன்பாடும் இதற்கு முக்கிய காரணமாகும். உடற்பயிற்சியற்ற (Sedentary) வாழ்க்கை முறையும் கூட இதற்கு ஏதுவாக அமைகின்றது. இவ்வாறான தவறான உணவுப் பழக்கங்களால் நீரிழிவு ஏற்படும் போது அதனால் பல வகையான நீண்ட காலப் பிரச்சினைகள் (Complica tions) ஏற்பட நேரிடலாம். கண் குருடாதல், சிறுநீரக செயலிழப்பு, நரம்புகளில் ஏற்படும் தாக்கம், மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

எமது மக்களிடையே தாகம் ஏற்படும் போது அருந்தும் பானமாக "சோடா" எனப்படுகின்ற மென்பானங்கள் அமைந்திருப்பது மிகவும் துர்ப்பாக்கியமான விடயமாகும். நாம் தேநீர் மற்றும் பழச்சாறு என்பவற்றுக்கு நேரடியான முறையிலும் அதே போல பல் வேறுபட்ட ம றைமுகமான வழிகளிலும் சீனியைப் பயன்படுத்திவருகின்றோம். மென் பானங்கள், ஐஸ்கிறீம், கேக் மற்றும் இனிப் பூட்டிய பிஸ்கற், சொக்கலேட் என்பவற்றில் மிகவும் அதிகமான அளவில் சீனிச் சத்து இருக்கிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய் வொன்றின் படி ஒரு வருடத்தில் இலங்கைய ரொருவர் உள்ளெடுக்கும் சீனியின் அளவு ஏறக்குறைய 30 கிலோகிராம் ஆகும். எமது விழாக்கள் மற்றும் சடங்குகளில் கூட சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுப் பண்டங் களின் அளவு மிக அதிகமாக இருத்தலைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எமது மண்ணிலே மூலைக்கு மூலை புதிது புதிதாக முளைக்கின்ற ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான நிலையங்களும் இவ்வாறான சீனிப்பாவனை அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாகும்.

சுகாதார அமைச்சானது மிக அண்மையில் குளிர்பானங்களுக்கு வர்ணக் குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி பச்சை (மிகக் குறைந்த சீனியளவு), மஞ்சள் (இடைப் பட்ட அளவு), சிவப்பு (மிக அதிகளவு) ஆகிய நிறக் குறியீடுகளை மென்பானங்களில் நாம் பார்க்க முடியும்.

**தீர்வுகள்**

01.சிறுவர்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவ னையால் ஏற்படும் தீமைகளை எடுத் துரைத்தல் அவசியமாகும். இவ்வாறான பாவனையால் நீண்டகால அடிப்படையில் ஏற்படும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்களின் தாக்கத்தை எடுத் துரைப்பது அவசிய மாகும்.

02.பொது மக்கள் மத்தியில் அதிகரித்த சீனி மற்றும் மாச்த்துப் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளை விரிவாக எடுத்துக் கூறுவது இன்றியமை யாததாகும். இதற்குப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையங்கள் போன்றவை உதவ முடியும்.

03.பாடசாலை உணவகங்களில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவு களையும் துரித உணவுகளையும் தடை செய்து ஆரோக்கிய உணவுகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

04. தாகம் ஏற்படும்போது சோடா போன்ற மென்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து சீனி சேர்க்கப்படாத இயற்கை யான பழச்சாறு, செவ்விளநீர் அல்லது தூய நீரை அருந்தப் பழக வேண்டும்.

05.பொதுச் சுகாதாரப் பிரிவினர் சுகாதார அமைச்சின் ஆலோசனைப்படி குளிர்பான மற்றும்ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையங்களில் சீனிப் பாவனையின் அளவைக் கண்காணித்து தேவையான நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

06.நாம் உறவினர் மற்றும் நண்பர்களின் வீட்டுக்குச் செல்லும் போது சொக்கலேட், பிஸ்கற்மற்றும்ஐஸ்கிறீம்போன்றஆரோக் கியமற்ற உணவுகளைக் கொண்டு செல் லாது பழங்கள் போன்ற ஆரோக்கியமான வற்றையே கொண்டு செல்லப் பழகிக் கொள்ள வேண்டும். எமது உறவினர் களுக்கோ நண்பர்களுக்கோ சீனி மற் றும் மாச்சத்து அதிகமான தின்பண்டங் களை வழங்குவதன் மூலம் அவர்களை நாம் ஆரோக்கியமற்ற நோயாளராக மாற் றாது இருத்தல் அவசியமாகும்.

07.எந்தவொரு காரியாலயக் கூட்டமாக இருந்தாலும் விழாக்களாக இருந்தாலும் சீனியை வேறாக வைத்திருத்தல் அவசிய மாகும். இவ்வாறு வைத்திருக்கும் போது தேவைப்பட்டவர் தனக்குத் தேவையான அளவில் அதைச் சேர்த்துக் கொள்ள முடியம்.

08.இறுதியாக நாம் அனைவரும் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையினால் நீண்டகால அடிப்படையில் ஏற்படுகின்ற பாரதூரமான பின் விளைவுகளையும் தொற்றா நோய்களையும் கருத்தில் கொண்டு இன்றே செயற்பட விளைவது காலத்தின் கட்டளையாகும்.

"நாளைய மாற்றத்திற்காக
இன்றே செயற்படுவோம்"

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி,
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | | | | 9 |
| 7 | | | | | 1 | 2 | 3 | |
| | | | | | | | 7 | |
| 4 | | | 2 | | | | | 3 |
| | | | | 7 | 8 | | 9 | 1 |
| | 6 | | | | | 5 | | |
| | | | 1 | | | | | 5 |
| | 5 | | 8 | | | 4 | | |
| | | 1 | 5 | | 3 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 7 | 8 | 1 | 2 | 9 | 6 | 4 |
| 6 | 2 | 1 | 4 | 9 | 5 | 7 | 3 | 8 |
| 9 | 4 | 8 | 6 | 3 | 7 | 2 | 1 | 5 |
| 1 | 9 | 4 | 5 | 8 | 3 | 6 | 7 | 2 |
| 2 | 8 | 6 | 1 | 7 | 4 | 3 | 5 | 9 |
| 7 | 5 | 3 | 2 | 6 | 9 | 8 | 4 | 1 |
| 4 | 6 | 5 | 7 | 2 | 8 | 1 | 9 | 3 |
| 3 | 7 | 2 | 9 | 4 | 1 | 5 | 8 | 6 |
| 8 | 1 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரை யான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களை யும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக் கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.










14 ஆண்டுகள் கழித்து ஷாருக்கானும், ஐஸ்வர்யா ராயும் மீண்டும் ஜோடி சேர்ந்து நடிக்க உள்ளார்களாம். பொலிவுட்டின் சூப்பர் ஜோடிகளில் ஷாருக்கானும், ஐஸ்வர்யா ராயும் மிகவும் பிரபல்யமானவர்கள். அவர்கள் காதலர்களாகவும், உடன்பிறப்புகளாகவும் நடித்துள்ளனர்.

அவர்கள் இருவரும் சேர்ந்து கடைசியாக 2002 ஆம் ஆண்டில் வெளியான தேவதாஸ் படத்தில் நடித்தனர். கரண் ஜோஹார் இயக்கத்தில் தீபாவளிக்கு ரிலீஸான ஏ தில் ஹை முஷ்கில் படத்தில் ஷாருக்கான் ஐஸ்வர்யா ராயின் கணவராக நடித்தார். ஆனால் கௌரவ தோற்றத்தில் நடித்தார்.

ஏ தில் ஹை ஷூட்டிங்கில் ஷாருக், ஐஸ்வர்யாவை சேர்த்து பார்த்த கரண் ஜோஹாருக்கு அவர்களை ஜோடி சேர்த்து புதிய படத்தை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் வந்துள்ளது.

ஷாருக்கான், ஐஸ்வர்யா ராயை வைத்து எந்த வகையான படத்தை எடுக்க வேண்டும் என்பதை கூட கரண் யோசித்து வைத்துவிட்டாராம். ஷாருக்-ஐஸ் மீண்டும் ஜோடி சேர்வதை அறிந்து பொலிவுட் ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

ஷாருக்கான், ஐஸ்வர்யா ராய் ஜோடி சேர்ந்து நடித்த படங்களில் மொஹபத்தைன் படத்தை ப்பாலிவுட் ரசிகர் களால் மறக்க முடியாது. அத்தகைய வெற்றி ஜோடி மீண்டும் ஒன்று சேர்கிறது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




என் பெண்ணுக்கு சமைக்கத் தெரியாது என்று பெருமையாக சொல்லும் பெற்றோரே என் பையனுக்கு சம்பாதிக்கத் தெரியாது என்றால் ஏற்பீரோ.... !?

WhatsApp

•• 【kanal】 •• @Im_Kanal

உங்களுடைய மதிப்பு, சிலருடைய இயலாமையால், பெறுமதி அற்று விடாமல் இருக்குமளவு பார்த்து நடந்து கொள்!





**மேடம்:** எளிய பணிகூட நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி சுமாராக இருக்கும். மிதமான லாபம் கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.



**இடபம்:** குடும்ப வியம் பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். அளவான வருமானம் கிடைக்கும். பெண்கள், செலவில் சிக்கனத்தை பின்பற்றுவர். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.



**மிதுனம்:** உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரம், அபரிமிதமாக வளர்ச்சி பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி பெறுவர்.



**கடகம்:** சமயோசிதமாக செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கும்.



**சிங்கம்:** தகுதிக்கு மீறி, யாருக்கும் வாக்களிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.



**கன்னி:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, அதிக உழைப்பு அவசியம். பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**துலாம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், பாராட்டு வெகுமதி பெறுவர். புத்திரரின் நற்செயல், மனதை மகிழ்விக்கும்.



**விருச்சிகம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடை கும். தொழில் வியாபாரத்தில், எதிர்பார்த் லாபம் வரும். பணியாளர்கள் பணிவிடயமா வெளியூர் செல்வர். பணக்கடனில் ஒரு ப தியை செலுத்துவீர்கள்.



**தனுசு:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விள குவீர்கள். தொழில், வியாபாரத்தில், அதிக லா கிடைக்கும். பிள்ளைகளின் வழியில், தாரா மனதுடன் செலவு செய்வீர்கள். மாண களுக்கு படிப்பில் சிறந்த தரத்தேர்ச்சி கிடைக்



**மகரம்:** உங்களின் நற்செயலை, சிலர் ப காசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தி அதிக மூலதனம் தேவைப்படும். லாபம் படிப் யாக உயரும். குடும்ப ஒற்றுமையைக் கா பாற்ற முயல்வீர்கள்.



**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்க தொழில், வியாபாரத்தில், இலக்கு எளித பூர்த்தியாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாய கிடைக்கும். பெண்களுக்கு, பொன் பொரு சேரும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவ



**மீனம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உத கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாய அதிகரிக்கும். பெண்களுக்கு வீட்டுத் தேவை தாராள செலவில் நிறைவேறும். அரசியல்வா கள் பதவிபெற அனுகூலம் உண்டாகும்.



உலக கார்பந்தயத்தில் புலியாகத் திகழ்ந்து வரும் நடப்புச் சம்பியன் லூயிஸ் கமில்டன் தனது செல்லப்பிராணியான புலியுடன் விளையாடுவது போன்ற படமொன்றும் காணொலியொன்றும் இணையத்தில் பலராலும் விரும்பப்பட்டும் பகிரப்பட்டும் வருகிறது.



# ஸ்ரெய்னின் கிரிக்கெட் வாழ்க்கை தொங்கு நிலையில்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரெய்ன் எலும்பு முறிவு காரணமாக விலகினார். அவரின் கிரிக்கெட் வாழ்க்கையை கேள்விக்கு உட்படுத்தும் விதத்தில் இந்தக் காயம் வந்தமைந்துள்ளது.

மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில், விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா அணி ஆஸ் திரேலியாவுக்குசுற்றுப்பயணம்ஒன்றைமேற்கொண்டுள்ளது. முதல் டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது இன்னிங்ஸில் தோள்பட்டையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக ஸ்ரெய்ன் இந்த ஆட்டத்திலிருந்து விலகியதுடன் தொடரிலிருந்தும் விலகியுள்ளார். ஸ்ரெய்னின் விலகல் தென்னாபிரிக்கா அணிக்கு மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்றால் மிகையில்லை.

வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் காயங்களில் அகப்படாமல் விளையாடுவது அரிதிலும் அரிது. அந்த வகையில் ஸ்ரெய்னுக்கு காயம் ஏற்பட்டது ஒன்றும் பெரிய விடயமல்ல. ஆனால், கடந்த சில வாரங்களுக்கு முன்னர்தான் ஸ்ரெய்ன் காயத்திலிருந்து மீண்டு களத்துக்குத் திரும்பினார். மிகக்குறுகிய கால இடைவெளிக்குள் மீண்டும் அவர் காயத்தின் பிடியில் சிக்கியுள்ளமை ஸ்ரெய்னின் கிரிக்கெட் வாழ்வு தொடர்பில் சிந்திக்க வைக்கும் விடயமாக அமைந்துள்ளது. ஏனெனில் அவருக்கும் வயதாகிவிட்டதல்லவா!



# கியூக்ஸின் சாவுக்கு கியூக்ஸே காரணம்

பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு கடந்த 2014 ஆம் ஆண்டு உயிரிழந்த ஆஸ்திரேலிய வீரர் பிலிப் கியூக்ஸ், பந்தைத் தவறாகக் கணித்தமையாலேயே உயிரிழந்தார். அவரது சாவுக்கு வேறு எவரும் காரணம் அல்லர் என விசாரணை அறிக்கை வெளியானது.

கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிட்னி மைதானத்தில் நடந்த செப்பீல்டு சீல்டு கிண்ணத்தக்கான ஆஸ்திரேலியாவின் உள்ளூர் முதல் தர தொடர் நடைபெற்றது. தெற்கு ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடிய 25 வயதான பிலிப் கியூக்ஸ், நியூ சவுத் வேல்ஸ் அணியின் வேகப் பந்து வீச்சாளர் சீன் அப்போட் வீசிய பவுன்சர் பந்தை அடித்து ஆட முயன்றபோது, அது அவரது கழுத்தின் இடது பகுதியில் பயங்கரமாக தாக்கியது. இதனால் நிலைகுலைந்து மைதானத்தில் சரிந்த கியூக்ஸ் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளித்தாலும் மயக்க நிலையிலேயே நவம்பர் 27 ஆம் திகதி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கிரிக்கெட் உலகையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வளரும் நட்சத்திரமாக விளங்கிய பிலிப் கியூக்ஸின் சாவுக்கு காரணம் குறித்து விசாரணை நடத்திய நியூ சவுத் வேல்ஸ், மாகாண சிறப்பு அதிகாரி மைக்கேல் பார்ன்ஸ் தனது விசாரணை அறிக்கையை நேற்று வெளியிட்டார். அதில் கியூக்ஸ் சாவுக்கு ஆட்டத்தின் நடுவர்கள் மற்றும் வீரர்கள் யாரும் காரணம் இல்லை. அந்த ஆட்டத்தில் விளையாட்டு விதிமுறைகள் சரியாக கடைப்பிடிக்கப்பட்டு இருக்கிறது. அந்த நாளில் கியூக்ஸுக்கு 20 பவுன்சர் பந்துகள் வீசப்பட்டு இருக்கிறன. அவர் பவுன்சர் பந்தை திறம்பட சமாளித்து விளையாடக்கூடியவர் தான். சாவை விளைவித்த அந்த பந்தை அவர் குனிந்து தவிர்த்து இருக்கலாம். அவர் அடித்து ஆட முயலுகையில் எதிர்பாராத விதமாக இந்த துயர விபத்து இடம்பெற்று விட்டது. மிகச்சிறிய தவறான கணிப்பாலோ? அல்லது பார்வை கவனத்தில் ஏற்பட்ட லேசான பிழையாலோ இந்த பந்து தாக்குதல் சம்பவம் நடந்து இருக்கிறது. யாரும் வேண்டுமென்றே தவறான நோக்கத்துடன் அவருக்கு பந்து வீசவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதுகாப்பற்ற மற்றும் நியாயமற்ற பந்து வீச்சுகளை தவிர்க்க நடுவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். கழுத்தை பாதுகாக்கும் வகையிலான உபகரணங்களை கண்டறிந்து அதனை முதல் தர போட்டியில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். திடீரென விபத்து நேர்ந்தால் அதனை சிறப்பாக கையாள்வது குறித்து நடுவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

மைதானத்தில் போதிய மருத்துவ வசதிகள் தயாராக இருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விசாரணை அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




# பங்களாதேஷுக்குப் பறந்த இலங்கை ஜாம்பவான்கள்

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணியின் முன்னாள், இன்னாள் நட்சத்திர வீரர்கள் பலரும் அங்கு சென்றுள்ளனர்.

கிரிக்கெட் விளையாடும் பல்வேறு நாடுகளில் உள்ளூர் ரி-20 தொடர்களை நடத்துகின்றன.

உதாரணமாக, இந்தியாவில் ஐ.பி.ல். தொடர், ஆஸ்திரேலியாவில் பிக் பாஷ் தொடர். மேற்கிந்தியத் தீவுகள் கரீபியன் பிரீமியர் லீக் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைப்போல், பி.பி.எல். (பங்களாதேஷ் பிரீமியர் லீக்) தொடர் நடைபெறுகிறது. இதில் 7 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தத் தொடரில் பங்கேற்க இலங்கை வீரர்கள் 12 பேர் பங்களாதேஷ் சென்றுள்ளனர்.

டில்சான், சத்துரங்க டி சில்வா, ஜீவன் மென்டிஸ், திசர பெரேரா, ஜெயவர்த்தன, சங்கக்கார, நுவான் குலசேகர, சசித்திர செனநாயகே, கிகான் ருபசிங், மிலிந்த சிறிவர்த்தன, உபுல் தரங்க, சீகுகே பிரசன்னா ஆகியோரே அவ்வாறு ஒப்பந்தமாகியுள்ளனர். சங்கா, மகேல இருவரும் டாக்கா அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளனர்.

# ஜலதரங்கம்

## நீரில் ஒரு இசைத்தாளம்

யாழவன்

தொழில்நுட்பவளர்ச்சி அறவே இல்லாமலிருந்த பண்டைக் காலத்தில் பாவனையிலிருந்தஒருஇசைக் கருவியே இந்த 'ஜலதரங்கம்'. ஆனாலும் இதனை இசைக்கருவி என்பதைவிட இசையை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் உத்தி என்றே கூறலாம். ஜலம் என்ற வடசொல்லின் கருத்து நீர் என்பதாகும். ஜலம்–அரங்கம் என்ற இணைப்புச் சொல்லின் உருவாக்கமே ஜலதரங்கம் என்பதுமாகும். அதாவது தண்ணீரை மூலமாகக் கொண்டு இசையை அரங்கேற்றுவது என்று அர்த்தப்படுத்திக் கொள்ளுவதே சாலச் சிறந்தது. பானைகள், மட்பாண்டங்களில் தட்டி இசை எழுப்பும் வில்லுப்பாட்டுப் போன்ற கிராமிய –நாட்டுப் புறக் கலைகளுக்குப்பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள் போன்று மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்களுள் ஒன்றான சிறிய சட்டிகள் அல்லது கிண்ணங்கள் அதுபேன்ற கோப்பைகளுள் நீரை வெவ்வேறு அளவுகளில் நிரப்பி அரை வட்டமாக அவற்றின் நீர்க்கொள்ளளவுக்கு ஏற்ப வரிசைப்படுத்தி உட்கார்ந்திருந்து இரு கைகளிலும் குச்சி கொண்டு பாத்திரங்களின் விளிம்புகளில் தட்டி இசை எழுப்பிக் கொள்ளுவதே இந்த ஜலதரங்கம்.



குச்சியால் தட்டும்போது கோப்பைகளில் நிரப்பப்பட்டுள்ள நீரின் அளவுக்கு ஏற்பவே ஒலி வெளிவருகின்றது. ஆகையால் நீரின் அளவுக்கு ஏற்ப இசை மெட்டுக்களை உருவாக்கலாம். தண்ணீர் குறைந்த பாத்திரங்களில் தட்டும் போது கணீர் என்ற துல்லியமும் தண்ணீர் அதிகமுள்ள பாத்திரங்களில் மந்தமான ஓசையும் எழுகின்றது. கைகளுக்கு எட்டக்கூடியவாறு நீரின் அளவுக்கு ஏற்ப ஏறுவரிசைப்படுத்தியோ, இறங்கு வரிசைப்படுத்தியோ பாத்திரங்களைச் சுற்றிவர அடுக்கி வைத்துத் தட்டி இசைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக இதிலிருந்து மென்மைனயான இசையே வெளிவந்திருக்கும். ஏனெனில் சிறிய பாத்திரங்களில் ஈர்க்கை விட சற்றுப் பெரிய குச்சி கொண்டுதான் இசைக்கப்பட்டுள்ளது.

இசையை இரசிக்க முடி யாதுள்ள இந்தக்காலம் போலில்லாமல் துல்லியமாக இசைக்கு மாத்திரம் முக்கியத்துவமளித்த அந்தக்காலத்தில் தொழில்நுட்ப வசதிகள் இல்லாவிடினும் நீரின் அடர்த்தி கொண்டு இசையமைத்த நுட்பம் வியப்புக்குரிய ஒன்றே. பிற்காலங்களில் பீங்கான் பாத்திரங்களில் நீர் நிரப்பி இசைத்து வந்த ஜலதரங்கம் கால ஓட்டத்தில் மறைந்து வருகின்றதும் உண்மையே.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 445

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | | 5 |
| | | 6 | | | | 7 | |
| 8 | 9 | | | | 10 | | |
| 11 | | | | 12 | | | 13 |
| | | | 14 | | | | |
| 15 | | 16 | | | | 17 | |
| | | 18 | | | 19 | | |
| 20 | | | | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:............................................

பூரணமான தபால் விலாசம்: ..................................

............................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. பரிதாபப்படல்
6. ஆண் மகவு
7. ஒரு கிரகம்
8. நாவிதன் செய்வது
10. முக்கனிகளுள் ஒன்று
11. அதிகம்
12. ஆசைப்பட
14. ஆற்றைக் கடக்க உதவும்
15. நிகழ்வு
17. ஒருவருக்குத் தீங்கு விளைவிக்க தீட்டும் திட்டம்
18. பழம்
19. எழுத்துக்களின் ஆரம்பம் இது
20. சமிபாடு நடப்பது இங்கே
21. முப்பரிமாணங்களுள் ஒன்று

### மேலிருந்து கீழ்

1. ஐந்தாம் திதி
2. கவரி
3. விடாய்
4. 'பல' என்பதைக் குறிக்கும்
5. ஒரு தமிழ் மாதம்
7. 'சல்யூட்' அடிப்பதை இப்படிக் கூறுவர்
9. முகம்
10. குடி
12. நஞ்சு
13. கவனம்
14. உலாப் போதல்
15. இராஜ சின்னங்களில் ஒன்று
16. இரவு அல்லாத நேரம்
17. அனைத்து
19. உள்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 443 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) தேகப்பியாசம் (6) சம (7) தாசன் (9) வம்பு (11) கனிதல் (13) வரம் (15) மலை (16) மைதானம் (18) புது (19) ராம் (20) மகா (22) உள (23) தகர்தல் (25)பம்பரம் (26) காலை

**மேலிருந்து கீழ்**

(1) தேசவழமை (2) கமம் (3) பிதா (4)யாசகம் (5) சன்னி (8) வில்லை (10) புவனம் (12) தமது (14) ரம் (17) தாராளம் (18) புகார் (20)மகம் (21) முல்லை (22) உப (23)தர (24)தகா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 443 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
ஜெ.செந்தூரன்,
இல.57, நான்காம் குறுக்குத் தெரு,
வவுனியா.

**2 ஆம் பரிசு**
க.சுந்தரேஸ்வரன்
இல.109, விநாயக முதலியார் வீதி,
பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு**
த.நிர்மலம்,
இல.02, நான்காம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
திருமதி ப.சிவமலர்,
புத்தூர் வீதி, அச்செழு,
நீர்வேலி.

**5 ஆம் பரிசு**
உ.கனிஸ்ரன்,
இல.79/9 புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி ஜாஹிதா கலால்தீன்,
இல.38/2 ஜாமியுள்ளாடிரீன் வீதி,
காத்தான்குடி 6

யூ.ம.அ.யாழினி,
இல. 13, அண்ணாநகர் பிரதான வீதி,
வவுனியா.

ஜெ.மயூரிபா,
இல.150, சிவபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.

சொற்சிலம்பம் போட்டி
இல.445
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(16.11.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.445இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 20.11.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 443இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம்

06.11.2016 முதல் 12.11.2016 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். தாமதமான திட்டங்கள் ஓரளவு நிறைவேறும். அலைச்சல் குறையும். புத்திரர்கள் படிப்பு வேலையில் முன்னேற்றம் பெற உதவுவீர்கள். எதிர்ப்பாளர்களிடம் இருந்து விலகுவது நல்லது. சொத்து ஆவணங்களைக் கவனமுடன் பாதுகாக்கவும். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். மனைவி யின் நல்ல கருத்து குடும்ப நலன் சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்களுக்கு, வேலைப் பளு அதிகரிக்கும். மாணவர்கள், படிப்பில் முன்னேறுவர்.

## இடபம்

குரு, சூரியன், புதன் அதிக நன்மை தருவர். பேச்சும், செயலும் வசீகரமாக இருக்கும். புதியவர்களின் அன்பு ஊக்கம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் கூடும். பயணங்கள் பாதுகாப்பாக அமையும். புத்திரர்கள் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் விவகாரம் அணுகாத சுமுக சூழல் அமையும். மனைவியின் சொல்லும் செயலும் வேகம் பெறும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற வழி பிறக்கும். லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள், பணிகளை விரைந்து முடித்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், உடல்நலத்தில் அக்கறை கொள்ள வேண்டும். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## மிதுனம்

சனீஸ்வரர், ராகு, சந்திரனால் அதிக நன்மை கிடைக்கும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். எதிர்ப்புகளை தகுந்த முயற்சியால் சரி செய்வீர்கள். வாகன பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்களின் ஆர்வம் நிறைந்த செயல் வியப்பை தரும். செலவில் சிக்கனம் சிரமம் தவிர்க்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயல்கள் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் பண வரவு சீராகும். பணியாளர்கள், நிர்வா கத்தின் சட்ட திட்டத்தைப் பின்பற்றி நற்பெயர் பெறுவர். பெண்கள், பிறர் வியத்தில் கருத்து சொல்லக் கூடாது. மாணவர்கள், அதிக பயிற்சியால் தேர்ச்சி பெறுவர்.

## கடகம்

புதன், சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். பணிகள் கடும் முயற்சியால் நிறைவேறும். முன்பிருந்த பிரச்சினைகளின் தீவிரம் குறையும். தம்பி, தங்கைகளுக்கு உதவுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேறி பெருமை தேடித் தருவர். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். சீரான ஓய்வு உடல் நலத்தைப் பாதுகாக்கும். மனைவி வழி உறவினர்களின் பாசம், மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள், சலுகை பெறவாய்ப்புண்டு. பெண்கள், பணவசதிக்கேற்ப நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள், படிப்பில் ஆர்வம் கொள்வர்.

## சிங்கம்

சூரியன், குரு, சுக்கிரன், செவ்வாய் நற்பலன் வழங்குவர். மன உறுதியுடன் பணிபுரிவீர்கள். தம்பி, தங்கைகளுக்கு மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் வளரும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்களுக்கு நண்பர்களின் உதவியால் முன்னேற்றம் கிடைக்கும். பகைவர்களிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. பயணங்களால் அதிக பலன் ஏற்படும். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தாராள பணவரவால் கடன்களைச் செலுத்துவீர்கள். பணியாளர்கள், பொறுப்புடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்களிடம், பணப்புழக்கம் கூடும். மாணவர்கள், படிப்பில் முன்னேறுவர்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், கேது அனுகூலமாக உள்ளனர். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். வளர்ச்சிக்கான வாய்ப்பு அதிகம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்களில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். நோய் தொந்தரவு விலகி உடல் ஆரோக்கியம் பெறும். மனைவியின் ஆலோசனை குடும்ப நன்மைக்கு உதவும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் இடையூறுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். பணியாளர்கள், ஓரளவு சலுகை பெறுவர். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், லட்சிய மனதுடன் படிப்பர்.

## துலாம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மையுண்டு. மனதில் நம்பிக்கை உருவாகும். செயலில் நிதானம் வெற்றியை அதிகரிக்கும். பயணங்கள் அளவுடன் இருக்கும். புத்திரர்கள் கல்வி, பணி சார்ந்த விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் செயல் பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் வளம் பெறும். பணியாளர்கள், பாக்கி வைத்திருந்த பணிகளை நிறைவேற்றுவர். பெண்கள், கணவரின் பாசமழையில் நனைவர். மாணவர்கள், படிப்பில் தீவிர கவனம் செலுத்துவது நல்லது.

## விருச்சிகம்

செவ்வாய், குரு, சுக்கிரனால் நன்மை உண்டாகும். மதிநுட்பமுடன் பேசி ஆதாயம் காண்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசத்துடன் உதவ முன்வருவர். பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர்கள் உங்கள் வழிகாட்டுதலை ஏற்று முன்னேறுவர். குடும்பத்தில் ஒற்றுமை நிலைத்திருக்கும். மனைவியின் ஆலோசனை மகிழ்ச்சி கூடும். உடல்நிலை பலம் பெற்று சுகமான தூக்கம் வரும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டம் பின்பற்றினால் தான் சலுகைகளைப் பெற முடியும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் முன்னேறுவர்.

## தனுசு

சூரியன், புதன், சுக்கிரன், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் இருந்த குழப்பம் விலகும். திட்டங்களில் முன்னேற்றம் ஏற்படும். உடன்பிறந்தவர்களுக்கு சுபநிகழ்ச்சி நடந்தேறும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்களின் செயற்திறன் வளர ஆலோசனை சொல்வீர்கள். குடும்ப பிரச்சினைக்கு சுமுக தீர்வு வரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி குடும்பப் பணிகளை சிறப்பாக செய்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். பணியாளர்கள், பொறுப்புடன் பணிபுரிந்து நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள், நகை, புத்தாடை வாங்குவர்.

## மகரம்

பெரும்பான்மை கிரகங்கள் அளப்பரிய நன்மை வழங்குவர். சிந்தனையும் செயலும் சிறப்பாக அமையும். தம்பி, தங்கைகள் பாசத்துடன் நடந்து கொள்வர். பயணங்கள் அளவுடன் இருக்கும். புத்திரர்களின் செயற்பாடு பெருமை தரும் விதத்தில் இருக்கும். எதிர்ப்பாளர்கள் விலகிச் செல்வர். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், அலுவலகத்தில் நற்பெயருடன் திகழ்வர். பெண்கள், உறவினர் குடும்ப நிகழ்ச்சிக்கு உதவுவர். மாணவர்கள், அதிக மதிப்பெண் பெறுவர்.

## கும்பம்

சந்திரன் நன்மை தருவார். இயலாத பணிகளை செயற்படுத்த வேண்டாம். இதனால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். உறவினர்கள் பணம் கேட்டு அணுகுவர். புத்திரர்களால் சில பிரச்சினைகள் வரலாம். பொறுமையுடன் கையாளவும். உடல்நலம் சுமாராக இருக்கும். கணவன், மனைவி இடையே அன்பு மலரும். பயணங்களால் அதிக பலன் இராது. தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பு இருந்தாலும், லாபம் குறையாது. பணியாளர்களுக்கு, ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், எளிய பயிற்சியால் தேர்ச்சி பெறலாம்.

## மீனம்

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தரும். முக்கிய பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனதில் மகிழ்ச்சியும், உற்சாகமும் கூடும். உறவினர்கள் ஒற்றுமையாக நடந்து கொள்வர். பண வரவு அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் அதிக வசதிக்காக சில மாற்றங்கள் செய்வீர்கள். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். மனைவியுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து சமூக அந்தஸ்து உயரும். பணியாளர்களுக்கு, பணவரவு கூடும். பெண்கள், குடும்ப நலன் பாதுகாப்பர். மாணவர்கள், படிப்பில் சாதனை நிகழ்த்துவர். மாணவர்களுக்குநண்பர்களால் நன்மை உண்டாகும்.

# URGENT VACANCY –
## Project Coordinator, Monitoring and Evaluation Officer

SHANTHIHAM
Association for Health & Counseling

### Background

Shanthiham, the Association for Health and Counseling is a non-government organization providing Psychosocial support services and training of government and non-government cadre in the northern region. Presently Shanthiham is implementing a three year EIDHR program with the support of ZOA funded by European Union (EU). The overall goal of the program is Community-based integrated Mental Health/Psychosocial Support Program in Northern Province of Sri Lanka.

### Project Coordinator

#### Duties and Responsibilities

Function / Expected Results: Planning, implementation and management of Programme activities:

- Liaise between AHC, EIDHR working partners, ZOA Programme Management Unit (PMU) and field level stakeholders to implement the project;
- Support the preparation and implementation of the detailed Annual Work Plans for field sites in consultation with the PMU and EIDHR working partners;
- Facilitate the implementation of project activities as per the AWP in a timely, systematic and efficient manner;
- Prepare and report on quarterly financial progress at field sites and act as liaison between the project, EIDHR working partners, and ZOA Programme Management Unit (PMU) to ensure programme implementation;
- Prepare in consultation with the EIDHR working partners, ZOA Programme Management Unit (PMU), quarterly financial and narrative progress reports for the field site;
- Support the Project Technical Coordinator on relevant aspects of project implementation, especially monitoring of project outputs and results.

Function/Expected Results: Office Management and Coordination among Technical Assistance Team:

- Develop a network of partnerships to ensure ownership and sustainability of project actions;
- Facilitate the coordination amongst local level stakeholders to ensure smooth implementation of activities in a timely manner;
- Coordinate between national level and local level stakeholders to ensure implementation of activities in a timely and efficient manner;
- Brief missions from the AHC and EIDHR management team and other future donors on progress of project activities as well as other collaborative actions.

### Monitoring and Evaluation Officer

#### Duties and Responsibilities

Function/Expected results: Monitoring, Evaluation and Reporting:

- Undertake rigorous monitoring against the AWP at the field locations to ensure that project activities are on track
- Undertake regular monitoring against the M&E plan to ensure that the project is achieving the desired results;
- Maintain excellent progress monitoring reports, and provide quarterly narrative progress reports to the Project in a timely manner
- Support the development of regular reports, annual reports, donor reports and briefs with Monitoring and Evaluation Officer

Impact of Results:

- Efficient and coordinated implementation of Programme activities;
- The achievement of delivery targets and results as outlined in the Programme work-plan;
- Effective institutional capacity building of relevant stakeholder groups;
- Strengthened partnerships with Implementing Partners and expanded partnership with relevant government agencies and civil society.

### Competencies

Corporate Competencies:

- Demonstrate integrity by modeling the AHC/Shanthiham values and ethical standards;
- Promote the vision, mission and strategic goals of AHC/Shanthiham;
- Displays cultural, gender, religion ,race, nationality and age sensitivity and adaptability;
- Treats all people fairly without favoritism.

Functional Competencies:

- Good understanding of Project Management;
- Actively works towards continuing personal learning, acts on learning plan and applies newly acquired skills;
- Proven problem solving skills;
- Ability to work with accuracy under time constraints and pressure in a stressful environment; with patience, tactfulness, maintain confidentiality, take initiative and exercise good judgment;
- Ability to work in a hazardous environment;
- Excellent interpersonal skills and ability to establish and maintain effective partnerships in a multicultural, multi-ethnic environment and respects diversity;
- Ability to work collaboratively with colleagues and encourage sharing of knowledge to achieve organizational goals;
- Ability to identify priority activities and assignments; adjust priorities as required;
- Ability to plan own work and use time efficiently, manage conflicting priorities and work under pressure of tight and conflicting deadlines.

Technical Competencies:

- Strong analytical skills and comparative knowledge on gender , mental health and women empowerment
- Excellent facilitation skills managing multi-stakeholder national/local dialogues;
- Excellent understanding of challenges to women empowerment in Northern Province;
- Ability to design and prepare strategies and action plans for interventions aimed at building adaptive capacity.

### Required Skills and Experience

Education:

- Bachelors' Degree or equivalent in the areas of sociology, Development Studies, gender, Ecology, or related field; or
- G.C.E A/L or equivalent diploma in the areas of women empowerment, Gender, Development Studies, or related field.

Experience:

- At least 2 years of experience in project management, Monitoring and Evaluation, Quality Management including handling contracts, financial management, donor reports, project monitoring at field level;
- The candidate should have minimum 3 years' experience in the field of gender, empowerment / women empowerment , Monitoring and evaluation / Quality Management;
- Experience in supporting development/capacity building activities especially in the government institutions will be advantageous;
- Past experience with women / gender related programmes will be of added advantage.

Language:

- Fluency in written and spoken English,Sinhala or Tamil.

**Women are highly encouraged to apply. Valid Driving license with motorbike is highly preferable.**

The short listed candidates will be invited for an interview. Applicants are requested to send their updated CVs on or before 10th of November, 2016.

**Human Resource Officer,**
**Association for health and Counselling - Shanthiham**
**8-1/8 Katpagavinayagar Lane,**
**Off Kachcheri Nallur Road,**
**Jaffna.**

(C/23315)(10.17.18)


# லாவோஸிடம் தோற்றது இலங்கை



கொழும்பு, நவ. 6

ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மலேசியாவில் நடைபெற்றுவரும் ஒற்றுமைக் கிண்ணத்துக்கான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லீக் ஆட்டமொன்றில் லாவோஸ் அணி வெற்றிபெற்றது.

இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் விறு விறுப்புத் தன்மை இரட்டிப்பானது. ஆட்டத்தின் 58 ஆவது நிமிடத்தில் லாவோஸ் கால்பந்தாட்ட அணிக்கு மூலை உதை ஒன்று கிடைத்தது. வாய்ப்பு கச்சிதமாகப் பயன்படுத்தப்பட இலங்கைக்கு முதல் அடி விழுந்தது. 83 ஆவது நிமிடத்தில் லாவோஸ் வீரர் சென்தனாலே தனது அணியின் இரண்டாவது கோலைப் புதிவு செய்தார். 93 ஆவது நிமிடத் தில் இலங்கை யின் கோலைப் பதிவுசெய்தார் ரகுமான். ஆட்ட நேர முடிவில் லவோஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இலங்கை அணியைப் பிரதிநிதித்துவம் செய்து மன்னார் மாவட்ட வீரர் எடிசன் களமிறங்கினார். (ம-23)

# நெருக்கடியில் சிம்பாப்வே



இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றது. தொடரில் இரண்டு ஆட்டங்கள் என்பதால் இன்று ஆரம்பமாகும் இரண்டாவது ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது இலங்கைக்கு பாதகத்தை ஏற்படுத்தாது. ஆனால் குறைந்தபட்சம் தொடரை சமன் செய்ய வேண்டுமாயின் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் சிம்பாப்வேக்கு உள்ளது. ஹராரே மைதானத்தில் ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)



இன்னொன்று உலகத்தின் அசைவியக்கத் தோடு ஒன்றித் திருக்க வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். அதற்காகவும் நாங்கள் உத் வேகத்தோடு போராடவேண்டி ய வர்களாக இருக்கின்றோம் என்ற தமிழ்ச்செல்வனின் விடு தலைத் தாகம் அவன் பெயருட னேயே மறைந்துவிட்டது.

# விடுதலையின் சுந்தரப் புன்னகையாளன்

செ.தமிழ்நம்பி

அகிம்சை வழியில் தோல்வி கண்டுகொண்டதன் பின்னதாக தமிழ் மக்களுக்கான உரிமைகளைவேண்டி ஆயுதத்தைக் கையிலேந்திய விடுதலைப்புலிகள் இயக்கத்தினரின் மண் மீதான பற்றும் மக்கள் மீதான பற்றும் எந்தவொரு நாட்டின் போராட்டவாதிகளுக்கும் ;ஈ ா காத ஒன்று. இது தனித்து சொல்லப்படுகின்ற வாய்வழிக்கூற்று அல்ல.

எந்தவொரு சுயநலமுமின்றி வெடிகுண்டுகளை உடலில் சுமந்து கொண்டு கந்தகப் பறவைகளாய் எதிரியை அழிக்கும் உத்தியை உலகுக்குக் காட்டிய கரும்புலிகளே இதற்கான சான்று. இந்த செயல் நிலைகள் தானாக வெளிப்பட்டவையல்ல, தமிழருக்கு பெரும்பான்மையின அரசுகள் செய்து வந்த வன்முறைகளும் அநீதிகளும் தீராத போராட்ட உத்வேகமாக மாற்றம்கொண்டது. புலிகளைப்போராடவைத்தது. உடைமைகளை இழந்தாலும் உடல்அவயவங்களை இழந்தாலும், உயிருள்ள வரை போராடுவோம்.

பேராட வேண்டும் என்ற வேட்கையை ஏற்படுத்தியது. ஆரம்ப காலத்திலே சாதாரண போராளியாக இணைந்து கொண்டு வீரமாய் தாவி தன்னிலையுயர்ந்து போராட்டக் களங்களிலே தளபதியாகி கையை இழந்தபோதும் விலகி ஒதுங்கிவிடாமல் அரசியல் துறையில் தன்னை இணைத்து தாய் மண்ணுக்காய் பணிசெய்த சுப்பையா.பரமு தமிழ்ச்செல்வனின் தமிழினப் பற்று என்பதும் அவ்வாறான ஒன்றே.

யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி பிரதேசத்தில் பிறந்த தமிழ்ச் செல்வன். 1984 ஆம் ஆண்டு தன்னுடைய 18ஆவது வயதில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து சாதாரண போராளியாக ஆயுதப் பயற்சி பெற்றார். பின்னைய நாட்களில் தமிழீழ விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச்செல்வன் 1987 ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணம் தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளராகவும் 1991ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண மாவட்ட சிறப்புத் தளபதியாகவும் செயற்பட்டார். 1993 இல் கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசத்தில் இடம்பெற்ற இலங்கை இராணுவத் தளம் மீதான தவளைப் பாய்ச்சல் என்ற விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கையின்போது காலில் காயமடைந்தார்.அதனைத் தொடர்ந்து அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். 1994 மற்றும் 1995 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற சந்திரிகா அரசுடனான அமைதிப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகளின் அணிக்கு தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார்.

பல ஆண்டுகளாக இராணுவ இயக்கமாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலே மறந்துவிடமுடியாத அரசியல் மாற்றங்களையும் திருப்பங்களையும் ஏற்படுத்தினார். புலிகள் பங்குபற்றியிருந்த அரசுகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்று வந்த இவர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னதாக பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டு வந்தார். 1993 ஆம் ஆண்டிலிருந்து வீரச் சாவடையும் வரை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்டார். நோர்வே அரசின் அனுசரணையில் இலங்கை அரசுடன் இடம்பெற்ற அத்தனை பேச்சுவார்த்தைகளிலும் பங்குபற்றினார்.

2002 ஆம் ஆண்டு நோர்வே அனுசரணையிலான பேச்சுவார்த்தைக்குழுவில் அன்ரன் பாலசிங்கத்துடன் இணைந்து ஓர் பிரதிநிதியாக கலந்துகொண்டார். அவருடைய சாவைத் தொடர்ந்து, விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியற்துறைத் தலைவரானார்.

போர்க்களங்களிலே வெற்றி கொள்ள முடியாதிருந்தவர்களுக்கு சவாலாய் இருந்து பேச்சுவார்த்தை மேடைகளிலும் அவர்களுக்கு முற்றுப்புள்ளிவைத்தார் தமிழ்ச்செல்வன். இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழ்ச்செல்வனைக் கொலை செய்ய வேண்டும் என்பதை இலங்கை அரசு முடிவாகக்கொண்டிருந்தது.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி காலை ஆறு மணியளவில் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட ஐந்து விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் இலங்கை வான்படையின் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். தமிழர் தாயகமெங்கும் முகாரி இசையில் அலைபாய்ந்தது.நெடுநாளாக ஆயுதத்தை மறந்து அரசியல் நெறிமுறையோடு ஜனநாயக வழியிலே தீர்வுகாணப் பாடுபட்ட தழிழ்ச்செல்வனின் ஆன்மா தமிழீழத் தாயின் மடியை விட்டுப் பிரிந்தது.

தமிழினம் இரு முனைப்போரை சந்திக்கின்றது. ஒன்று எதிரியின் இன அழிப்புக்குள்ளும் கொடுமையான போருக்குள்ளும் நாம் தள்ளப்பட்டு, அதற்குள் இருந்து மீண்டு விடுதலை பெறுவதற்காக போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இன்னொன்று உலகத்தின் அசைவியக்கத்தோடு ஒன்றித்திருக்க வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். அதற்காகவும் நாங்கள் உத்வேகத்தோடு போராடவேண்டியவர்களாக இருக்கின்றோம் என்ற தமிழ்ச்செல்வனின் விடுதலைத் தாகம் அவன் பெயருடனேயே மறைந்துவிட்டது. ஆனாலும் அந்த வீர மறவனின் பெயர் என்றும் மறையாது ஒளிர்ந்துகொண்டேயிருக்கிறது.மாறாத சுந்தரப் புன்னகை கரங்களை பற்றியிழுத்து அழைத்தபடியே இருக்கிறது.



வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டுப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நடை பெற்றது. (ற-10)



சங்கானை மாவடி இந்து மன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் கலை விழாவில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர் ஒருவருக்கு இந்த நிகழ்வில், நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். (ற-29)



வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனின் குறித்தொதுக்கப்பட்ட நிதி யிலிருந்து முல்லைத்தீவு மாவட்ட செயலக விளையாட்டுத் துறைப் பிரிவினர் ஊடாக மாவட்ட விளையாட்டு வீரர்கள் சிலருக்கு அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ற-10, 102)



பளை வீமன்காமம் தெற்கில் புதிதாக ஆரம்பித்த சிறுவர் முன்பள்ளியின் தேவைகள் குறித்து கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு பிரான்சில் வதியும் பாலா வால் 21 முன்பள்ளி மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு தேவையான பணம் வழங்கப் பட்டது. நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், செயலாளர், பொதுமக்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ற-10)







காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்திய பரிசளிப்பும் கலைவிழாவும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன. விழாவில் முதன்மை விருந்தி னராக இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டார்.மாண வர்களின் கலை நிகழ்வுகளை யும் முதன்மை விருந்தினர் மற் றும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மத்திய வங்கி யின் வடபிராந்திய முகாமை யாளர் பா.சிவதீபன் தம்பதியர், கலைமாடக்கோண் ச.சிவ ஞானம் ஆகியோர் கலாமன்ற மாணவர்களுக்குப் பரிசில் களை வழங்கினர். (ற-10, 250)





கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த் காரை நகர் கோட்டப் பாடசாலை மாணவர்களைக் கௌர விக்கும் நிகழ்வு காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் அண்மையில் காரைநகர் அபிவிருத்திச் சபை நூலகத்தில் வட மாகாணக் கல்வியமைச்சின் ஓய்வு நிலைப் பிரதிச் செய லரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலை வருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வடகடல் நிறுவனத்தின் தலை வரும் சபையின் போசகருமான தி.பரமேஸ் வரன், யாழ் பல்கலைக் கழக ஆங்கிலத்துறை மூத்த விரிவுரையாளர் திருமதி வீ.யோகரத்தி னம் மற்றும் பலர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி பரி சில் வழங்கினர். (ற-10, 250)










வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலை அதிபர் சி.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றன.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர் சங்கப் பொருளாளர் க. இராஜேஸ்வரன், திருமதி மேகலை இராஜேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கமும் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ற-10)



சாவகச்சேரி கல்வயல் கணபதி ஞாபகார்த்தமாக நடராஜா யோகம் குடும்ப கணபதி அறக்கட்டளை நிதியம் சாவகச்சேரியில் அண்மையில் திறக்கப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கற்பகக் காவலர் நடராஜா மற்றும் லயன் மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம், கலாபூசணம் எஸ்.திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-10)



உறவுகளுக்கு கரம்கொடுப்போம் ஜேர்மனி அமைப்பால் வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா ஊடாக போரால் பாதிக்கப்பட்ட இரு வருக்கு வாழ்வாதாரம் மற்றும் மருத்துவத்துக்கான உதவிகள் வழங்கப்பட்டுள் ளன. (ற-10)



வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரனின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட தென்னியன் குளம் செல்வ விநாயகர் ஆலய மண்டபத்துக்கான காசோலை அண்மையில் நிர்வாகத்திடம் ஒப்படைக் கப்பட்டது. (ற-10)





புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தனது ஒதுக்கீட்டில் இருந்து விளையாட்டுக் கழகங்களுக்கான உதவிகள், கோவில் சீரமைப்பு நிதி உதவிகள், முன்பள்ளிகளுக்கான தளபாட உதவிகள் மற்றும் கமக்கார அமைப்புக்கான உபகரண உதவிகள் என பல்வேறுப்பட்ட உதவிகள் வழங்கப்பட்டன. (ற-10)

# தப்பியோடுவதற்கு முயன்ற சந்தேக நபர் விழுந்து சாவு

கொழும்பு, நவ 6
குற்றச் சம்பவமொன்றின் சந்தேக நபராக இனங்காணப்பட்டு, எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர், கம்பகா பொது வைத்தியசாலையில் இருந்து தப்பிச் செல்ல முயன்றவேளை, நான்காம் மாடியிலிருந்து விழுந்து நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

பிட்டிபன வடக்கு பகுதியிலுள்ள வீடொன்றில் திருடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த குறித்த சந்தேகநபர், திடீர்ச் சுகவீனம் காரணமாக கம்பகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். கம்பகா வைத்தியசாலைக்கு வருகைதந்த கம்பகா நீதிவான் மன்ற பதில் நீதிவான் அவரை, எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இரண்டு பொலிஸ் பாதுகாவலர்களுடன் வைத்தியசாலையில் இருந்த சந்தேக நபர், மலசலக்கூடத்துக்குச் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார். பாதுகாப்பில் இருந்தவர்களை ஏமாற்றிவிட்டு தப்பிச் செல்வதற்கு முயற்சித்த நபர், கால் தடுக்கி நான்காம் மாடியிலிருந்து முதலாம் மாடியில் விழுந்துள்ளார். படுகாயமடைந்த நபர், தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (கு)

## போலித் தொல்பொருள்கள் விற்க முயன்றவர்கள் கைது

கொழும்பு, நவ 6
புதையல் தோண்டும்போது கிடைக்கப்பெற்ற தொல்பொருள் என்று கூறி, போலியான தொல்பொருள்களை விற்பனை செய்வதற்கு முயற்சித்த 3 பேரை, அநுராதபுரம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ஹொரவபொத்தான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சுற்றிவளைப்பின் போதே, குறித்த இருவரும் கைது செய்யப்பட்டள்ளனர்.

தொல்பொருள்கள் என்று கூறப்பட்ட பெரிய பித்தளை விளக்குகள், மற்றுமொரு விளக்கு, தூள் கற்களால் உருவாக்கப்பட்டிருந்த வெவ்வேறு அளவுகளைக் கொண்ட பேழைகளும் இதன்போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தன.

குறித்த பகுதியிலுள்ள மிகப்பெரிய வர்த்தகரொருவர், குறித்த தொல்பொருள்களை 1 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு இணங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சந்தேக நபர்களிடமிருந்து தொல்பொருள்கள் என்று கூறப்படும் பொருள்களை தயாரிப்பதற்காக பயன்படுத்திய, தூளாக்கப்பட்ட கற்கள், பசை, பித்தளை, அச்சுக்கள் மற்றும் கருவிகள் என்று பலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (கு)

## ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த நல்லூர் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் தெரிவித் துள்ளார். (கு-10)

## அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு, நவ 6
கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் புதன்கிழமை அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் கருணை ஆனந்தனின் தலைமையில் 'குற்றச் செயல்களும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளும்' என்னும் தலைப்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நோயல் பிரான்சிஸும், 'வாகன விபத்துக்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிகளும்' என்னும் தலைப்பில் முன்னாள் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரத்தினமும் உரையாற்றவுள்ளார்கள். (கு)






# வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் தடுப்பூசி

யாழ்ப்பாணம், நவ. 6
யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த யாழ்நகர் 11 பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.




நாளை திங்கட்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை அத்தியடி பிள்ளையார் கோயிலடியிலும், மு.ப.11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணி வரை ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாகவும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை பருத்தித்துறை வீதி குருநாதர்சுவாமி கோயிலடியும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மறுநாள் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்திலும், மு.ப.11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணி வரை ராசாவின் தோட்ட வீதி ஸ்ரான்லி வீதிச் சந்தியிலும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை கோவில் வீதி றக்கா வீதிச் சந்தியிலும், 9 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை மருதடிலேன் வைரவர் கோயிலடியிலும், மு.ப.11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணி வரை நல்லூர் தெற்கு சனசமூக கற்பக பிள்ளையார் கோயிலடியிலும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை றக்கா வீதி இளஞ்சிங்கம் சனசமூக நிலையத்திலும், 10 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை கோயில் வீதி ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிலும், மு.ப.11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணி வரை குழந்தையேசு ஆலயத்துக்கு முன்பாக கோயில்வீதியிலும் பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணிவரை மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்திலும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியிருந்து மு.ப. 11 மணி வரை அருள்மாதா கோயிலடி ராசாவின் தோட்டத்திலும், மு.ப. 11 மணிவரை பி.ப. ஒரு மணிவரை மார்ட்டீன் வீதி சப்பல் வீதிச் சந்தியிலும், பி.ப.2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை 2 ஆம் குறுக்கு வேம்படிவீதி யாழ்ப்பாணத்திலும், எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11மணி வரை ஓ.எல்.ஆர். தேவாலயம் 4 ஆம் குறுக்குத் தெருவிலும், மு.ப. 11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணி வரை யாழ். புகையிரத நிலைய வீதி வைரவர் கோயிலடியிலும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை 2 ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்திலும், எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை நடமாடும் சேவை மூலம் அனைத்துப் பகுதியிலும் தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு உரிமைக்கட்டணமாக 30 ரூபா செலுத்தித் தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (த-10)

# இன்று மின் தடை

யாழ்ப்பாணம், நவ.6
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழ்ங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் இரும்புமதவடி, மனோகரா, சக்களாவத்தை, தேவரையாளி, திக்கம், கொத்தியாவத்தை, ஊரெழு, புன்னாலைகட்டுவன், குரும்பசிட்டி, ஐயனார்கடவை விக்ரமாராச்சி, அச்செழு, ஈவினை, வாகையடி, நிலாவரை, குட்டியப்புலம், நவக்கிரி, புத்தூர்,கலைமகள் சந்தி, விக்னேஸ்வரா மட்டுவில் வீதி, வீரவாணி, ஊறணி, வாதரவத்தை, பெரிய பொக்கணை, அச்சுவேலி, ஆவரங்கால், கைத்தொழிற்பேட்டை I மற்றும் II , செல்வநாயகபுரம், கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு, விஜிதா அரிசி ஆலை பிரதேசம், மட் டுவில், கல்வயல் முத்துமாரி அம்மன் கோயிலடி, சரசாலை வடக்கு ஆகிய இடங்களிலும்–

வவுனியாப் பிரதேசத்தில் ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (த-10)

011 5 411 411
www.sdb.lk | @SDBbank
www.facebook.com/sdbbank

SDB வங்கியிடமிருந்து
நிலையான வைப்புக்களுக்கு
கவர்ச்சிகரமான வட்டி

11.75%
வ.தே.வ. 12.28%
03 மாதங்கள்

12%
வ.தே.வ. 12.36%
06 மாதங்கள்

12.25%
வ.தே.வ. 12.25%
12 மாதங்கள்

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரு 1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் விஷேட வட்டியும் உரித்தாகும்.

அழையுங்கள்: 0115 411 411
SDB வங்கி

# கழிவுகள் கொட்டிய 22 பேர் கைது

கொழும்பு,நவ 6
களனி கங்கை மற்றும் பொல்கொடை நீர்த்தேக்கத்தில் கழிவுகளை கொட்டிய 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 13பேர் பெண்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பேலியகொடை மற்றும் மொரட்டுவைப் பிரதேசங்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள், பேலியகொடை மற்றும் மொரட்டுவை பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (த)

## வடக்கு...

கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழி கள் அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடக்கில் ஆவா குழுவை இப்போது இராணுவம் நடத்துவதாக அமைச்சர் ராஜித சொன்னதாக நான் நினைக்கவில்லை. ஆனால், அதற்கு அன்று பிள்ளையார் சுழி போட்டு, முடுக்கிவிட்டவர் கோத்தபாய ராஜபக்ச என்றுதான் ராஜித சொன்னார். அதேபோல் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கி, இன்று இராணுவம், படையணி தொழிலுக்குத் தொடர்பில்லாத வேலையைச் செய்கிறது என்று சொன்னது பிழையல்ல. அவை உண்மை. புலிகளின் செயற்பாடு பயங்கரவாதம் என்றால், காணி பிடிப்பது, பிடித்த காணிகளைவிட மறுப்பது என்பவை அரச பயங்கரவாதம் இல்லையா? இது எப்படி ஆளுநருக்குத் தெரியாமல் போனது?

அன்று, கொழும்பில் பல குழுக்களை தங்கள் அரசியல் – இராணுவத் தேவைகளுக்காக அமைத்துக்கொண்டு நடத்திய இவர்களைப் பற்றி எனக்குத் தெரியாதா? ஆகவே, அன்று வடக்கில் அமைக்கப்பட்டு, முடுக்கிவிடப்பட்ட குழுக்கள் இன்றும் அங்கு செயற்படுகின்றன. அவை வடக்கின் பாதாள கோஷ்டிகள். இன்று அவை அழித்து ஒழிக்கப்பட வேண்டும். ஆனால், இவற்றை ஒழிக்கின்றோம் என்று மாணவர்களை சுட்டுவிட்டு, ஆவா என்று எண்ணித்தான் நள்ளிரவில் கண் மண் தெரியாமல் சுட்டு விட்டோம் என்றால் அது எடுபடாது. விசம் வைத்தவர்கள்தான் இன்று அந்த விசத்தைக் கவனமாக அகற்ற வேண்டும். இது பெரிய வேலையல்ல. இதை இன்று பொலிஸ்மா அதிபர் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் செய்யத் தொடங்கியுள்ளார் என நினைக்கின்றேன்.

அதேபோல் வடக்கு முதலமைச்சர் விக்கி, இன்று இராணுவம், படையணி தொழிலுக்கு தொடர்பில்லாத பல வேலைகளைச் செய்கிறது என்று சொன்னது பிழையல்ல. அவை உண்மை. இது எப்படி ஆளுநருக்கு தெரியாமல் போனது? இன்று இராணுவம் வடக்கில் சுற்றுலா விடுதிகளை நடத்துகிறது. மீன்பிடி தொழில் செய்கிறது. தெற்கிலிருந்து தங்கள் ஊர் மீனவ நண்பர்களை கூட்டிவந்து, முல்லைத்தீவு மீனவர்கள் பாரம்பரியமாக தொழிலுக்கு போகும் கடலில் இறக்கி விடுகிறது. விவசாயப் பண்ணைகளை நடத்துகிறது. சிறு தெருவோரக் கடைகளை நடத்துகிறது. இவற்றை முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டும் சொல்லவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தனும் பலமுறை அழுத்தமாகச் சொல்லியுள்ளார். இந்த அரசின் அமைச்சரவை அமைச்சரான நானும் பலமுறை சொல்லியுள்ளேன். சிங்கள ஊடகங்களில் பலமுறை இது பற்றி அதிகமாகப் பேசியுள்ளது நான்தான். இவற்றை நான் பிரதமருக்கும் கூறியுள்ளேன்.

வடக்கில் இராணுவம் நடத்தும் சுற்றுலா விடுதிகள், உடனடியாக அரசு – தனியார் பங்குடமை நிறுவனங்களாக மாற்றப்பட்டு, ஒன்றில் வடக்கு மாகாண சுற்றுலா அமைச்சிடமோ அல்லது தேசிய சுற்றுலா சபையிடமோ மீளளிக்கப்பட வேண்டும். ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான பொறுப்புக்கூறல் இயந்திரம் அமைக்கும் குழுவின் ஆரம்ப கூட்டம், அலரி மாளிகையில் நடைபெற்ற போது, இந்தக் கருத்தை நானும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இணைந்து கூறினோம்.

வடக்கில் இருந்து இராணுவம் முழுதாக வெளியேற வேண்டும் என எவரும் கேட்பதாக நான் நினைக்கவில்லை. இராணுவம் என்பது ஒரு நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பு. அது நாட்டின் நாலாபுறத்திலும் இருக்கத்தான் வேண்டும். அதைப் புரிந்துகொள்ள முடியாத மடையர்கள் அல்லர் தமிழர்கள். இந்திய மீனவர்களின் ட்றோலர் ஆக்கிரமிப்பிலிருந்து வடக்கு மீனவர்களைக் காப்பாற்ற கடற்படை அங்கு தேவைதானே. அது கடற்படையின் கடமை. அதை அவர்கள் செய்யட்டும்.

ஆனால், மேலதிகமான இராணுவம் தங்கள் ஊரில் இருந்து கொண்டு, படைத்துறைக்குத் தொடர்பில்லாத தொழிலைச் செய்வதை தாம் விரும்பவில்லை என்றுதான் வடக்கு மக்கள் என்னிடம் கூறுகின்றார்கள். இதை வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் எவரும் விரும்பமாட்டார்கள். கடற்படை, தங்கள் சொந்தக்காரர்ளை அழைத்து வந்து காலி, மாத்தறை கடலில் மீன்பிடிக்க விட்டால் அப்பகுதி மக்கள் ஒப்புக்கொள்வார்களா? அனுராதபுரம், பொலநறுவையில் பெருந்தொகைக் காணிகளைப் பிடித்து விவசாயம் செய்ய இராணுவம் புறப்பட்டால், அங்குள்ள மக்கள் சும்மா இருப்பார்களா?

இந்த உண்மைகளை வேண்டுமென்றே திரித்து, திட்டமிட்டு பலர் இங்கே மாற்றிப் பேசுகிறார்கள். இப்போது ரெஜினோல்ட் குரேயும் பேசுகின்றார். புலிப் பயங்கரவாதிகள் பொதுமக்களின் இடங்களைப் பிடித்து வைத்திருந்தார்கள். அவற்றைத்தான் இராணுவம் பிடித்து வைத்துள்ளது. இராணுவமே நேரடியாக பொதுமக்களின் காணிகளைச் சென்று பிடிக்கவில்லை என ரெஜினோல்ட் கூறுகின்றார். புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை விடுவித்ததாகத் தானே இராணுவம் சொல்கிறது. அப்படியானால் புலிகள் பிடித்து வைத்திருந்த இடங்களை மீண்டும் தமிழ் மக்களிடம் வழங்கி தமிழ் மக்களின் மனங்களில் இடம் பிடிக்கலாமே. தமிழர் காணிகளைப் பிடிப்பதை விட்டுவிட்டு, இராணுவம் தமிழர் மனங்களைப் பிடிக்க முயல வேண்டும். புலிகளின் செயற்பாடு பயங்கரவாதம் என்றால், காணி பிடிப்பது, பிடித்த காணிகளை விட மறுப்பது என்பவை அரச பயங்கரவாதம் இல்லையா? என்னே, மடமை ஐயா உங்கள் கருத்து.

எனவே, உண்மையான சகவாழ்வு வேண்டும் என்றால், படைத்துறைத் தொழிலுக்குத் தொடர்பில்லாத பல தொழில்களை இராணுவம் செய்வது தொடர்பில் ஒரு இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்துத் தமிழ் கட்சிகளையும் அழைத்து நம் மத்தியில் முதலில் பேச வேண்டும். பின்னர் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நமது அரசுடன் தமிழ்க் கட்சிகள் என்ற அடிப்படையில் பேசலாம்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நண்பர் யார் என்று பகுத்தறிய முடியாத, யாரிடம் பேசுவது என்று முடிவு செய்ய முடியாத ஒரு நோய் இருக்கிறது. இதற்கு என்னிடம் மருந்து கிடையாது.

மேற்பூச்சு சகவாழ்வு என்பது ஒரு பம்மாத்து. மேற்பூச்சு சகவாழ்வு அமைச்சர் என்ற பெயர் வரலாற்றில் எனக்கு வேண்டாம் என்றுதான் நான் நினைக்கின்றேன். இந்த வருடம் இதோ முடிகின்றது. அடுத்த வருடம், சகவாழ்வைப் பொறுத்தவரையில் ஒரு தீர்மானகரமான வருடமாக அமைய வேண்டும். இல்லாவிட்டால் நான் இங்கே இருக்கப்போவதில்லை – என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் மனோ கணேசன். (த்)

## இழுவை...

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தியா இவ்வாறு இணக்கம் தெரிவித்தமைக்காக, இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்பில் தொழில் செய்ய அனுமதி வழங்கியுள்ளதாக வெளியான தகவல்களில் எந்த உண்மையும் இல்லை என்றும் சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

இந்திய – இலங்கை மீனவர்கள் இடையே மூன்றாம் கட்டப் பேச்சு கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக இரு நாட்டு அமைச்சு மட்டத்திலான பேச்சு புதுடில்லியில் நேற்று இடம்பெற்றது.

இலங்கைக் குழுவின் சார்பில், அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர, வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் பளிகக்கார, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், இந்தியக் குழுவின் சார்பில் அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், மீன்பிடி அமைச்சர் ராதா மேனன் சிங், தமிழக மீன்பிடி அமைச்சர் பொன்.இராதாகிருஸ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தப் பேச்சுகள் தொடர்பில் புதுடில்லியிருந்து 'உதயன் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்திய அரசு முதல் தடவையாக இழுவைமடிப் படகு முறைமையைத் தடை செய்வதற்கு இணங்கியுள்ளது. எழுத்து மூலமாக இதற்கான உறுதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்குப் படகுகளில் மாற்றம் செய்வதற்குக் கால அவகாசம் கோரியுள்ளனர். இதற்காக இரண்டு நாடுகளினதும் அமைச்சுக்களின் செயலர்கள் தலைமையிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு ஜனவரி 2 ஆம் திகதி அடுத்த பேச்சு நடத்தும்.

மீனவர்கள் எல்லை மீறாமல் இருப்பதற்காக இரண்டு நாடுகள் இணைந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். மீனவர்களுக்கு நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் இதற்காக வழங்கப்படும். இந்திய தரப்பினர், மீனவர்களின் படகுகளை விடுவிக்குமாறு கோரினர். இதற்கு இலங்கை அரசு சார்பில் திட்டவட்டமாக மறுப் புத் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்படும் மீனவர்களை விரைந்து விடுவிப்பது தொடர்பில் ஜனவரி 2 ஆம் திகதிய பேச்சில் ஆராயப் படவுள்ளது – என்றார்.

இழுவைமடிப் படகுகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்வது தொடர்பில் இந்திய அரசு இணக்கம் தெரிவித்ததற்காக, அவர்களை இலங்கைக் கடற்பரப் பில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வடபகுதி மீனவ அமைப்புக்கள் குற்றம் சுமத்துவது தொடர்பில் கேட்டபோது, அவ்வாறு எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை என்று பதிலளித்தார். (த-5-101)

## இரண்டுக்கும்...

விடவும் அந்தத் தீர்வுப் பொதிக்கு வைக்கின்ற பெயர் இனங்களிடையே சந்தேகத்தைக் கிளப்புவதால் பெயர் பற்றி அலட்டிக்கொள்ளாமல் தீர்வின் உள்ளடக்கம் பற்றி சிந்திப்பதுதான் பொருத்தமானது எனவும் அத்தரப்பு சுட்டிக் காட்டுகின்றது.

வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே உள்ளிட்ட அரச தரப்பு உறுப்பினர்கள் பலர் இந்தப் புதிய முறைமை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறான புதிய முறைமையின் அடிப்படையின் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவை தேவையோ அவற்றைத் தீர்வாக உள்ளடக்க வேண்டுமே தவிர இனங்களிடையே வீண் சந்தேகங்களையும், பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும் விடயங்களை தீர்வுப் பொதிக்குள் உள்ளடக்குவதோ அல்லது அதற்கான கோரிக்கைகளை முன்வைப்பதோ தவிர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அந்தத் தரப்பு உள்ளது.

அதேவேளை, தமிழருக்கு வழங்கப்பட வேண்டிய – ஆளுநர்களைக் கொண்டு தடுத்து வைத்திருக்கின்ற அதிகாரங்கள் முழுமையாக தமிழரின் கைகளுக்குச் செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் மறுபுறம், நாட்டுக்குச் சிக்கலை ஏற்படுத்தக்கூடிய கோரிக்கைகளை தமிழ் தரப்பு முன்வைக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டிலும் இந்தத் தரப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையும் வடக்கு – கிழக்கும் முரண்படாத வகையில் விட்டுக் கொடுப்புடன் தீர்வுப் பொதி தயாரிக்கப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கையை இந்தத் தரப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் விரைவில் முன்வைக்கவுள்ளது. (த்)

## சட்டமா ...

ஜயந்த ஜயசூரிய தலைமையிலான உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு பங்குபற்றவுள்ளது.

நாளை ஆரம்பமாகும் இந்தக் கூட்டத் தொடர் டிசெம்பர் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இலங்கையில் இடம்பெறும் சித்திரவதைகள் உட்பட மேலும் பல நாடுகளில் தொடரும் சித்திரவதைகள் குறித்தும் ஆராயப் படவுள்ளது. இலங்கை தொடர்பிலான அமர்வு நவம்பர் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

ஆட்சி மாற்றம் இடம்பெற்றுள்ள போதிலும் பொலிஸார் உட்பட அரசபடையினரால் தொடர்ந்தும் சித்திரவதைகள் இடம்பெறுவதாகவும், இரகசிய சித்திரவதை முகாம்கள் இயங்கி வருவதாகவும் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முறை கூட்டத்தொடர் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ராணுவம்...

டிருந்த இரும்புச் சுருள் முட்கம்பிகளை அப்புறப்படுத்தியவேளை எலும்புகள் இருந்தமை கண்டறியப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் அவை மனிதர்களுடையதா அல்லது கால்நடைகளினுடையதா என்பது தெரியவில்லை.

இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் வடக்கு ஒட்டுவெளி வயலுக்கு அருகில் நேற்று இடம்பெற்றது.

கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை படையினர் அந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்ததால் குறித்த காணிக்கு அருகில் மண் அணை அமைக்கப்பட்டுக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பகுதி மக்களை மீளக்குடியமர்த் தும்வரை அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டதால் மக்கள் நடமாட்டம் இல்லாமல் இருந்தது.

2011ஆம் ஆண்டு மீள்குடியமர்வு இடம்பெற்ற நிலையில் காணி பற்றையாகக் காணப்பட்டதால் உரிமையாளர் அங்கு செல்லவில்லை. இந்த நிலையில் இவ்வருடம் மீண்டும் தோட்டம் செய்வதற்காகக் காணியைத் துப்பரவு செய்தபோது மண் அணை காணப்பட்டதெனவும், அதற்கு அருகில் புதைந்து காணப்பட்ட கொமாண்டோக் கம்பிகளை அப்புறப்படுத்தியபோது அங்கு எலும்புகள் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

காணியைத் துப்புரவு செய்தவர்கள் உடனடியாகக் கிராம அலுவலருக்குத் தகவல் அனுப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அப்பகுதி நீண்ட காலம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்டதால் எலும்புக்கூடுகள் மனிதர்களுடையதா அல்லது கால்நடைகளுடையதா என்பது தெரியவில்லை எனவும் கூறப்பட்டது. (த-4-9)

## வடக்கு–கிழக்கு...

சுதந்திரம் ஏற்படும். சில சோம்பேறி அரசியல்வாதிகள் கூறுவதைக் கருத்தில் கொள்ளக்கூடாது. இவ்வாறு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

முல்லைத்தீவு நகரில் 111 பயனாளிகளுக்கு வீடுகளை அமைப்பதற்கான சிமெந்துப் பைக்கற்றுக்கள் மற்றும் ஆயிரத்து 500 இளைஞர், பெண்களின் தொழிற்பயிற்சிக்கான உபகரணத் தொகுதி, சீருடை ஆகியவை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நாங்கள் தேவையில்லாத பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல், இந்த நாட்டில் கிடைத்துள்ள நல்லாட்சியோடு நல்லிணக்கத்தை உருவாக்குகின்ற சகோதர சகோதரியாக திகழவேண்டும். நாங்கள் அனைவரும் இலங்கை நாட்டு மக்கள், உரிமைகளை அனுபவிக்கின்ற தன்மை எங்களுக்கு இருக்கின்றது. அனைவருக்கும் சமமான உரிமை பேணப்படவேண்டும். சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற ஒரு கோட்பாட்டை மையமாகக் கொண்டு அந்த உரிமைகள் பகிரப்படக்கூடாது.

நீங்கள் எந்த இடத்திலும் ஆலயம் அமைத்துக்கொள்ளலாம். விகாரை அமைத்துக்கொள்ளலாம். தேவாலயம், பள்ளிவாசல் அமைத்துக் கொள்ளலாம். இப்படியாக நீங்கள் உங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உரிமைகள் இருக்கின்றன.

வடக்கிலே விகாரைகள் கட்டக் கூடாது எனச் சிலர் கூறுகின்றார்கள், தெற்கிலே உள்ள ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் உடைக்கப்படவேண்டும் என்று இன்னும் சில அரசியல் வாதிகள் தங்களுடைய வேண்டுகோளை முன்வைக்கிறார்கள். இப்படியாக இந்த சமயங்களை அல்லது இந்த உறவுகளை அழித்து விடுவது சுலபம். ஆனால் அதனை மீளவும் கட்டி எழுப்புவது மிகவும் கடினம்.

நாட்டிலே எத்தனையோ நல்ல செயல்களைச் செய்ய வேண்டி இருக்கின்றது. அபிவிருத்தி, தொழில், போக்குவரத்து வசதி, விவசாயம் என்று பல வேலைகளைச் செய்யவேண்டும். ஆனால் சில சோம்பேறி அரசியல் வாதிகள் என்ன செய்கிறார்கள்? ஒருவரை ஒருவர் போட்டியிட்டுக் கொண்டு வடக்கிலே விகாரைகள் அமைக்கக்கூடாது, தெற்கில் ஆலயங்கள் உடைக்கப்படவேண்டும் என்று இருகின்றார்கள். இந்த நாட்டில் எத்தைனையோ பெண்கள் குடும்பங்களை தலைமை தாங்கிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று ஒரு போதும் சிந்தித்ததில்லை. சமயப் பாகுபாட்டை ஏற்படுத்துவதுதான் அவர்களுக்கு முக்கியமானதாக இருக்கின்றது–என்றார். (த-4-7)

## வேலை ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலை ஆள்கள் தேவை.

**075 2952985, 076 5620873**


## German பொருள்கள் விற்பனைக்கு

தயாரிப்பு
German - டயர் மாற்றும் Machine
டயர் Balance } 24" - Boos
Compressor
இறைச்சி அரைக்கும் Machine - Bizerba - German தயாரிப்பு.
இலத்திரனியல் உபகரணங்கள்
தளபாடப்பொருள்கள்
Wallpapers
Professional Sound System Complete Set
ஒலிபெருக்கி உபகரணத்தொகுதி Germany இதனுடன் பல வகையான பொருள்கள் Germany இல் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளன.

**Gercey Guest House**
முகவரி - 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(ஜெ5917)(7.19.20) தொடர்பு - 077 2264930, mr.தேவராஜா


## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் சுரேஸ்குமார்
(செல்வன் -முச்சக்கரவண்டி சாரதி)



இல.19, கலைப்புலவர் வீதி (மணிக்கூட்டு வீதி), யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சுரேஸ்குமார் (செல்வன்) நேற்று (05.11.2016) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், யோகநாதன் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், நந்தினியின் அன்புக் கணவரும், தருஷன், சுபராஜ், கீர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இல.19, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(ஜெ.5909)(13.17.18.21) **077 511 8982/077 168 4381**

### திருமதி
### அருளம்மா வைத்திலிங்கம்



துரைவீதி, தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்மா வைத்திலிங்கம் நேற்று (05.11.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனை வியும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி-அன்னம்மா தம்பதி களின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, மாங்களேஸ்வரி மற்றும் சுபாநாதன் (ஓய்வு நிலை பிரதம கணக்காளர், நெடுஞ்சாலை அமைச்சு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகநாயகம் (ஓய்வுநிலை ஆசிரியர்), இராசநாயகி (சுவிஸ்), குகதாஸ் (ஓய்வுநிலை வடமாகாண உள்ளக கணக்காய்வு பணிப்பாளர்), இந்திராணி, மனோகரன் (நோர்வே), பிரபாகரன் (கிராம உத்தியோகத்தர், J/183 உடுவில் தென்கிழக்கு), பாஸ்கரன் (USA) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தினி (ஓய்வு நிலை ஆசிரியர்), தனபாலசிங்கம் (சுவிஸ்), மாதினி, சிவஞானம் (ஓய்வுநிலை அலுவலக ஊழியர்-RDD), சந்திரவதனா (நோர்வே), கம்சானந்தி (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி), பிரணவச்செல்வி (USA) ஆகியோரின் அன்பு மாமியும் பவதாரணி, நந்தினி, வரோதயன், யசோதரன், சதீஸ், கோபிராஜ், ஆரூரன், பாலோசனன், மயூரன், சங்கீர்த்தனன், கரிகாலன், கரிகரன், பிரணவன், பவித்திரா, துர்கா, துளசி, நிஜந்தன், வத்சாங்கன், யாதவன், தாருண், தாருணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிறிஸ்ணிகா, மிதுன், அபிநயன், அயிஸ், மோகீசன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.2016 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானதத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரைவீதி,
தாவடி வடக்கு, (ஜெ.5915) (16.17.19)

தகவல்
குடும்பத்தினர்.

# இலங்கையில் ஆட்சி மாற்றமா சீனாவின் இலக்கு?

## இராஜதந்திர வட்டாரங்கள் கேள்வி

இலங்கை அரசையும் நிதி அமைச்சரையும் கடுமையாக விமர்சித்து இலங்கைக்கான சீனத் தூதுவர் வெளியிட்டுள்ள கருத்து இலங்கையில் ஆட்சிமாற்ற மொன்று இடம்பெறலாம் எனச் சீனா எதிர்பார்ப்பதை வெளிப்படுத்தியுள்ளது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்திருந்த சீனத் தூதுவர், இலங்கையின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவைக் கடுமையாக விமர்சித்திருந்தார். மூன்று தடவைகள் நிதி அமைச்சரின் பெயரைக் குறிப்பிட்டுக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கொழும்பைத் தளமாகக் கொண்ட இராஜதந்திர வட்டாரங்கள் - சீனத் தூதுவரின் இந்தக் கருத்து இலங்கை அரசை வெளிப்படையாக விமர்சிக்கும் ஒரு முயற்சி எனக் குறிப்பிட்டுள்ளன.

சீன இராஜதந்திரிகள் தக்க தருணங்களில் மாத்திரம் கருத்துக்களை வெளியிடுவார்கள். அவசியமற்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் கருத்துக்களை வெளியிடமாட்டார்கள். மேலும், அவர்கள் தங்கள் அரசு ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்பும் சந்தர்ப்பத்திலேயே தங்கள் மௌனத்தைக் கலைப்பார்கள்.ஆகவே, சீனத் தூதுவரின் இந்தக் கருத்தை அவ்வாறே கருதவேண்டும் என ஆசிய நாடொன்றைச் சேர்ந்த இராஜதந்திரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நிதி அமைச்சர் விமர்சிக்கப்பட்டமை குறித்து அமைச்சரின் செயலாளர் ஒருவர் சீனத் தூதுவரிடம் பேச்சுக்களை மேற்கொண்டதாகவும், அவ்வேளை, தான் தெரிவித்த கருத்துக்களை ஊடகங்கள் திரிபுபடுத்திவிட்டன எனச் சீனத் தூதுவர் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இலங்கை அதிகாரிகள் குறிப்பிட்ட செய்தியாளர் மாநாட்டின் ஒலி, ஒளிப் பதிவுகளைப் பயன்படுத்தி இந்த விவகாரத்தை வெளிவிவகார அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சீனத் தூதுவரின் கருத்து வெளியான தருணம் குறித்தே தாங்கள் அதிக கரிசனையடைந்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய அரசுக்குள் முரண்பாடுகள் தீவிரமடையும் இந்தத் தருணத்தில்,பிரதமரைக் கவிழ்ப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி முயற்சிகளை மேற்கொண்டுள்ள இந்தத் தருணத்தில் சீனத் தூதுவரின் இவ்வாறான கருத்துக்கள் வெளியாகியுள்ளதை அரச வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (தி)

## பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், நவ. 6

கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகப் பாடசாலையின் பழைய மாணவியும் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய உதவி முகாமையாளருமான திருமதி சிவசோதி சிவக்கொழுந்து, சிறப்பு விருந்தினர்களாகக் கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.கே. யோகநாதன் மற்றும் ஓய்வு நிலைக் கணக்காய்வாளர் ஜே.ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவர்.

(து-108)

## தொண்டமானாறு...

ஒப்படைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த சிறுவன் யார் என்பது நேற்று இரவு வரை அடையாளம் காணப்படவில்லை.

தொண்டமானாற்றில், புன்னாலைக் கட்டுவனைச்சேர்ந்த இளைஞர்கள் சிலர் நேற்று மாலை 6 மணியளவில் குளித்துக் கொண்டிருந்துள்ளனர். தொண்டமானாற்று நீரேரியில் குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் நீந்தும்போது கால்களுக்குள் ஏதோ தட்டுப்படுகின்றது என்று பார்த்தபோதே, சிறுவனின் உடல்அங்கு இருப்பதைக் கண்டுள்ளனர்.

உடனடியாக அதனை மீட்டுக் கரைக்குக் கொண்டுசென்றுள்ளனர். அங்கு நின்ற முச்சக்கர வண்டிச் சாரதிகள் எவரும், மீட்கப்பட்ட சிறுவனின் உடலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன்வரவில்லை. நீண்ட நேரத்தின் பின்னரே வேறிடத்திலிருந்து முச்சக்கர 'வண்டி கொண்டுவரப்பட்டு, சிறுவன் வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டான்.

சிறுவன் உயிரிழந்தாக மருத்துவர்கள் தெரிவித்தனர். எப்படி உயிரிழந்தான் என்பது தொடர்பில் உடற்கூற்றுப் பரிசோதனையின் முடிவிலேயே தெரிவிக்க முடியும் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டனர். வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(து-5-26-108-109)

## 45 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்கள்

**வேலுப்பிள்ளை பசுபதி
பசுபதி வள்ளிப்பிள்ளை**

**பசுபதி நந்தமூர்த்தி
நந்தமூர்த்தி சுதாயினி**

கடந்த 15.09.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தின் பாசமலர்களின் 45 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (07.11.2016) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற விருப்பதனால் அந்நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இத்துன்பியல் நிகழ்வில் கலந்து கொண்டோர் மற்றும் சகல வழியிலும் ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

மாயக்கை,
புலோலி வடமேற்கு, பருத்...

குடும்பத்தினர்.

**காணி தேவை**

கீரிமலை நகுலேஸ்வரம் கிராமசேவகர் பிரிவில் அல்லது பன்னாலை கிராம சேவகர் பிரிவில் 2 1/2 பரப்புக் காணி தேவை.

**தொடர்பு: 077 1386 198** (J/5905) (10.18)

**காணி விற்பனைக்கு**

முல்லைத்தீவு நகரில் (50, 40 பேர்ச்) காணிகள் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
**077 795 0179, 024 222 1026**

**நாகபூஷணி திருமண சேவை**

மணமக்கள் அனைவருக்கும் பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்
**(06.11.2016 முதல் 14.11.2016 வரை)**

டாக்ரர். எஞ்சினியர். எக்கௌண்டன். சட்டத்தரணி. ஆசிரியர். அரச உத்தியோகத்தர். வங்கியாளர்கள் மற்றும் தனியார் துறையினர். உள்நாட்டு. வெளிநாட்டு . மணமக்கள் ஏராளமாக எம்மிடம் உள்ளனர். நீங்கள் விரும்பிய மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
J/5898(12.18)

**383/14B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**
**(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)**
**021 222 9306, 077 138 7596**
Email: nakapoosanywedding@gmail.com

**University of Jaffna**

Professor Sivapathasuntharam Mageswaran Memorial Lecture - 2016
On
'Gone Fishing' : Studying Metal / Molecule/ Metal Junctions With Scanning Probe Microscopy'

Speaker :- Professor Simon Higgins.
Department of Chemistry
University of Liverpool
United Kingdom.

Place :- Kailasapathy Auditorium,
University of Jaffna.

Date :- 07.11.2016
Time :- 3.00 p.m

All are cordially invited.

- Registrar - (C/23762)(11.18.21)

**வேலைவாய்ப்பு**

கட்டட நிர்மாண வேலைகளுக்கு பின்வரும் வேலையாள்கள் உடன் தேவை. தகுதியானவர்களுக்கு தொடர்ச்சியான வேலையும் சலுகைகளும் வழங்கப்படுவதோடு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**மேசன், காப்பென்ரர், கம்பி வேலை செய்பவர், வெல்டர், கூலியாள்கள்.**

**தொடர்புகளுக்கு:**
இல.09. நந்தாவில் லேன் (ஐயப்பன் கோவில் அருகில்).தாவடி.
0777120945

SARUKAYA CONSTRUCTION (PVT) LTD

**VACANCIES**

**Project Engineer**
Should have B.Sc.Eng (Civil) or Equivalent qualification with 2 years working experience in building projects

**Technical Officer**
Those with NCT (Civil) / NVQ Level 5 or equivalent qualifications with 2 years experience.

**Quantity Surveyor**
The Candidate should have NCT (QS) or Equivalent qualifications with 2 years post contract management experience.

**An Attractive Salary and relevant allowances will be paid for the right Candidates.**

**THE ADMINISTRATOR**
**SARUKAYA CONSTRUCTION (PVT) LTD**
No.207, Navalar Road, Jaffna.
T.P/Fax : (021) 221 3663
Email : vacancynsc@gmail.com
(J/5871)(10.18)

# கோயில் உடைத்து திருட்டு

கிளிநொச்சி, நவ.6
கோயில் ஒன்றை உடைத்து உட்நுழைந்த திருடர்கள் அம்மனின் தாலி, கண்மடல் உட்பட பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி ஆனந்தநகர் பகுதியில் இடம்பெற்றது. கிளிநொச்சி ஆனந்தநகர் ஜெயதுர்க்கை அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டே இவ்வாறு நகைகள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டது. ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு அல்லது ஆலய மண்டபத்தின் மேல் உள்ள துவாரத்தின் ஊடாக திருடர்கள் உள்நுழைந்து திருடியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. ஐந்து பவுண் தங்க நகைகளான அம்மனின் இரண்டு தாலி, ஒரு சங்கிலி, ஒரு கண்மடல் போன்றன திருடப்பட்டுள்ளன. ஆலயத்தின் மூல விக்கிரகம் தூக்கப்பட்டு, அதன் கீழ் உள்ள ஐம்பொன் இயந்திர தகடும் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டது என தெரிவித்த பொலிஸார் மேதிக விசாரணைகளை மேற் கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்தனர்.
(ற-21,35)

**வேலைவாய்ப்பு**

Cleaning மற்றும் Garden வேலை
நிறுவனம் :- பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri - Nallur Road, Jaffna.
**021 222 8093**

**காணி விற்பனைக்கு**

பம்பலப்பிட்டிய ரம்யா வீதியில் காலி வீதிக்கு அருகில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. 11.65 Perches

Gajan: **077 934 7222**

**வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை**

திருநெல்வேலி முதல் நல்லூர் வரை (பலாலி வீதியை அண்மித்த) 3 அறைகள்,2 குளியலறைகள் கொண்ட வீடு சிறிய குடும்பத்துக்குத் தேவை.

**077 640 8982**

**காணி விற்பனைக்குண்டு**

அச்சுவேலி, ஆனைவிழுந்தான் பகுதியில் 21 பரப்பு தென்னைகளுடன் கூடிய நெற்பரப்பு விற்பனைக்குண்டு.

**071 806 6411, 077 651 1583**

**தேவை**

வெள்ளவத்தையில் வீட்டில் தங்கியிருந்து சிறு வீட்டு வேலைகள் செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட யாழ்.பெண் ஒருவர் தேவை. சம்பளம் 20,000/=. மேலும் எமது குடும்ப உறுப்பினராகக் கவனிக்கப்படுவர்.

**077 679 8485**

**பணிப்பெண் தேவை**

கொழும்பு , வெள்ளவத்தையில் படுக்கையில் இருக்கும் வயோதிப தாயை வீட்டில் தங்கி இருந்து பராமரிக்க பணிப்பெண் தேவை.

**தொடர்பு: 071 492 1678, 077 999 0456**

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, சோமசுந்தரம் அவனியுவில் வீடு வாடகைக்கு.

**076 690 7008**

**வேலைவாய்ப்பு**

வவுனியா நகரில் கடைக்கு பில் போடுபவர்கள் (ஓய்வு பெற்றவர்கள்), பொதி கட்டுபவர் (ஆண்) தேவை.

**071 623 6624**

**வாடகைத்தாய் தேவை**

30 வயதிற்குக்குறைவான பெண் IUF மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

**தொடர்பு:0779061406** (C/23787) (10.18)

**பெயர்மாற்றம்**

உரும்பிராய் கிழக்கு. உரும்பிராயைச் சேர்ந்த **புஸ்பலீலா** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **புஸ்பராணி** எனப் பெயர்மாற்றி இனிவரும் சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(J 5899) (14,17,18) **புஸ்பராணி**

**பணியாளர் தேவை**

அச்சகத்தில் பைன்டிங் வேலை செய்வதற்கு அனுபவமுள்ளவர்களும் பழகவிரும்புபவர்களும் தேவை

**தொடர்பு:077 555 3918 / 077 8286497** (J/5904) (10.18)

SHANTHIHAM
Association for Health & Counselling

**வெளிக்கள ஆய்வு உதவியாளருக்கான பதவி வெற்றிடம் -02**

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு / மாவட்ட செயலகங்கள் (வடமாகாணம்) மற்றும் சாந்திகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளநல, உள சமூக சேவைகளை வழங்க முன்வந்துள்ளன. அதன் ஒரு அம்சமாக வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடையே காணப்படும் பிரச்சினைகளை இனங்காண்பதற்கு வெளிக்கள ஆய்வினைச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இத்துறைக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

- உளவியல்,சமூகவியல்,மானிடவியல்,விஞ்ஞானத்துறை மற்றும் சமூகசேவை ஆகிய துறைகளில் சிறப்பு இளங்கலைமாணிப்பட்டம் முதல் வகுப்புச் சித்தியுடன் ($1^{st}$ class) பெற்றிருத்தல்.
- முதுதத்துவமாணி (M.Phil),கலாநிதி (PhD) ஆகியதுறைகளில் ஆய்வுசெய்பவர்கள்/ செய்ய விரும்புபவர்கள்.
- பண்பறிசார் ஆய்வுமுறையியலில் (Qualitative Research Methodology) பரீட்சயம் உள்ளவர்கள்.
- கணினி மற்றும் ஆய்வு மென்பொருள்களில் பரீட்சயம் உடையவர்களாக இருத்தல்.
- ஆங்கிலத்தில் திறமையுள்ளவர்களாக இருப்பது அவசியமானது.
- சிறந்த தொடர்பாடல் திறமையும் ஆய்வுத்துறையில் சுய ஆர்வமும் விருப்பமும் முக்கியமானது.

மேற்படி பதவிநிலைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கும் சென்று கள ஆய்வுப் பணியில் ஈடுபடக் கூடிய உடற் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன், மோட்டார் சைக்கிளும் அதற்கான சாரதி அனுமதிப் பத்திரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உள்ளவர்கள் தங்களைப் பற்றிய தகவல் பெறக்கூடிய, உறவினரல்லாத மூவரின் பெயரைக் குறிப்பிட்டுத் தங்களுடைய சுயவிவரக்கோவையைப் பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 15.11.2016 - செவ்வாய்க்கிழமை (C/23312) (11.18.21)
அனுப்ப வேண்டிய முகவரி :- மாவட்ட இணைப்பாளர், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு, சாந்திகம்.
இல.15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 021 300 4900,021 222 3338 - மின்னஞ்சல் முகவரி :- psych@sltnet.lk
T.விஜயசங்கர் -
மாவட்ட இணைப்பாளர், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு, சாந்திகம்.

## கவிதை தொகுதி வெளியீடு

கரணவாய், நவ.6
கவிஞர் துவாரகன் எழுதிய 'அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்' என்ற கவிதைத் தொகுதி இன்று வெளியீடு செய்யப்படவுள்ளது.

உயில் கலை இலக்கியசங்கத்தின் ஏற்பாட்டில் வெளியிடப்படும் இந்த நூல்இன்றுஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பருத்தித்துறை வீ.எம். றோட், ஞானாலயம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சி. விமலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் உரைகளை தி. செல்வமனோகரன், தர்சன் அருளானந்தன், சித்திரதரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ற-108)




# சாகிரா மகுடம் சூடியது பற்றிக்ஸ் இரண்டாமிடம்



யாழ்ப்பாணம், நவ. 6

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் கொத்மலை கிண்ணத்துக்காக நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கொழும்பு சாகிராக் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு இறுதியாட்டம் நடைபெற்றது. கொழும்பு சாகிராக் கல்லூரியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் சாகிராக் கல்லூரி அணியிடம் காலிறுதியில் தோல்வியடைந்து வெளியேறியது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. தற்போது அந்தத் தோல்விக்கு சொந்த மண்ணில் வைத்துப் பதிலடி கொடுக்கக் கூடிய வாய்ப்பு பற்றிக்ஸுக்கு ஏற்பட்டிருந்தமையாலும் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்கள்வரை கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 34 ஆவது நிமிடத்தில் சாகிராக் கல்லூரி தனது ஆதிக்கத்தை ஆரம்பிக்கத் தொடங்கியது. கோலைப் பதிவுசெய்தவர் எம்.சவ்ரான்.

வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதற் பாதி. ஆட்டத்தின் 52 ஆவது நிமிடத்தில் சஹோல், சாகிராவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். இந்தக் கோல் பதிவானமையை அடுத்து சாகிராவின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. 81 ஆவது நிமிடத்தில் தூர்வன் சாகிராவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் பற்றிக்ஸை வீழ்த்தி தேசியத்தில் மகுடம் சூடியது சாகிராக் கல்லூரி. சாகிராக் கல்லூரியின் கோல் காப்பாளர் கலீல் உர் ரகுமான் சிறந்த கோல் காப்பாளராகவும் அதே கல்லூரியின் சுல்பிகர் அகமட் ஆட்டநாயகனாகவும் தெரிவாகினர். (ம-23)



# கோலாகலமாக அரங்கேறியது வடமராட்சியின் வர்ண இரவு

கரணவாய், நவ. 6

வடமராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட வர்ண இரவு நிகழ்வில் தேசிய மட்டச் சாதனையாளர்கள் உட்பட 600க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய, மாகாண மற்றும் வலய மட்டத் தடகளப் போட்டிகள் மற்றும் பெருவிளையாட்டுக்கள் ஆகியவற்றில் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் வர்ண இரவு நிகழ்வு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தேசிய மட்டக் கபடிப் போட்டியில் சாதனை நிலைநாட்டிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் 15 மற்றும் 19 வயது அணியினர், வெள்ளிப்பதக்கம் பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி 15 வயதுப்பிரிவினர் மற்றும் தேசிய மட்ட பளு தூக்கலில் வெண்கலம் வென்ற மணற்காடு றோ.க. த.க. பாடசாலையைச் சேர்ந்த எஸ். சுவர்ணசீலி, நீளம் பாய்தலில் வெண்கலம் வென்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி ஆரணி உட்பட 600க்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் வடமாகாண கல்விப் பணிப்பாளர் சி.உதயகுமார் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-108)

# ஹென்றிஸ் மூன்றாவது இடம்

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் கொத்மலை கிண்ணத்துக்காக நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது சென். ஹென்றிஸ்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை 5 மணிக்கு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து வென்னப்புவ சென். ஜோசவாஸ் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் முதல் இருபது நிமிடங்கள் வரை எந்த அணியாலும் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 22 ஆவது நிமிடத்தில் சென். ஹென்றிஸ் கல்லூரி அணியின் றூபன்ராஜ் தனது அணிக்கான முதற் கோலைப் பதிவு செய்தார். முதற் பாதியின் முடிவு வரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை.

சென். ஹென்றிஸின் ஏக ஆதிக்கத்துடன் இரண்டாவது பாதியும் நகர்ந்தது. 54ஆவது நிமிடத்தில் அன்ரனிராஜ் ஹென்றிஸின் இரண்டாவது கோலையும் பதிவுசெய்து ஆதிக்கத்தை இரட்டிப்பாக்கினார். 79 ஆவது நிமிடத்தில் ரமேஸ் அணியின் மூன்றாவது கோலையும் பதிவு செய்ய, முடிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# கொக்குவில் இந்துவின் கூடைப்பந்தாட்ட இறுதிகள்

யாழ்ப்பாணம், நவ. 6

கொக்குவில் இந்துக் கல்லூரியினால் நடத்தப்படும் கீர்த்திகன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் கொக்குவில் இந்துவின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று மாலை நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணியும், பெண்களுக்கான இறுதியாட்டத்தில் இராமநாதன் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்பகன்னியர்மட அணியும் மோதவுள்ளன. (ம-422)

# செட்டிகுளம் ம.வி. இலகு வெற்றி

யாழப்பாணம், நவ. 6

சமபோசா கிண்ணத்துக்காக தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லீக் ஆட்டமொன்றில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

அல்பிரட் பீரிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து இரத்தினபுரி தர்மபால வித்தியாலய அணி மோதியது. இதில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23-422)

# லூசியஸ் வென்றது

யாழப்பாணம், நவ. 6

சமபோசா கிண்ணத்துக்காக தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லீக் ஆட்டமொன்றில் மன்னார் சென். லூசியஸ் அணி வெற்றி பெற்றது.

அல்பிரட் பீரிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மன்னார் சென். லூசியஸ் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வென்னப்புவ சென். ஜோசவாஸ் கல்லூரி அணி மோதியது. இதில் மன்னார் சென். லூசியஸ் மகா வித்தியாலய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23-108)

# அரையிறுதியில் அன்டி முர்ரே

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் பிரிட்டன் நட்சத்திர வீரர் அன்டி முர்ரே.

காலிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீரரான பிரிட்டனின் முர்ரே, செக்குடியரசின் தோமஸ் பெர்டிச்சை 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

## எல்கர், டுமினி சதம் ஆஸிக்கு அச்சுறுத்தல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்களுடன் உள்ளது தென்னாபிரிக்கா.

உலகின் அதிவேக ஆடுகளமான பேர்த்தில் ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டமிழந்தார் ஸ்ரீபன் குக். முதல் கோணல் முற்றும் கோணலாக சீரான இடைவெளியில் இலக்குகள் சரிந்து 242 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா. பந்துவீச்சில் ஸ்ராக் 4 இலக்குகளையும், ஹசில்வூட் 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும், சிடில் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 244 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா. அதிகபட்சமாக வோர்ணர் 97 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஸ் 63 ஓட்டங்களையும், வோக்ஸ் 27 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் பிளன்டர் 4 இலக்குகளையும் மகராஜ் 3 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா இரண்டாம் நாள் முடிவில் 104-2 என்ற நிலையில் இருந்தது. எல்கர் 46 ஓட்டங்களுடனும், டுமினி 34 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இணைப்பாட்டத்தை அவ்வளவு இலகுவில் ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களால் அசைத்துவிட இயலவில்லை. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதத்தைப் பதிவு செய்து சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர். ஸ்ராக், கசில்வூட், சிடில், மார்ஸ், லையன் என அத்தனை பந்துவீச்சாளர்களையும் பரிசீலித்துப் பார்த்தாயிற்று இலக்குச் சரிவு ஏற்பட்டபாடில்லை. இருவரும் சதம் கடந்தனர். 127 ஓட்டங்களுடன் எல்கரை வீழ்த்தினார் கசில்வூட். 141 ஓட்டங்களுடன் டுமினியை வீழ்த்தினார் சிடில். பிளாசிஸ் 32 ஓட்டங்களுடனும், பவுமா 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க நாள் முடிவில் தென்னாபிரிக்கா 390-6 என்றுள்ளது. குயின்டன் டி கொக் 16 ஓட்டங்களுடனும், பிளன்டர் 23 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## பரிஸ் மாஸ்டர்ஸ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார் ஜோகோவிக்

பிரான்ஸில் நடைபெற்றுவரும் பரிஸ் மாஸ்டர்ஸ் தொடரிலிருந்து அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டார் ஜோகோவிக்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து சிலிச் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய சிலிச், ஆரம்பத்திலேயே ஜோகோவிக்கை நடுக்கம் காணவைத்தார். இரண்டாவது செற்றில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதியைப் பற்றி சிந்திக்க வேண்டிய நெருக்கடி நிலைமை ஜோகோவிக்குக்கு ஏற்பட்டது. ஆனால் இரண்டாவது செற்றிலும் 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜோகோவிக் வெற்றி பெற்றதையடுத்து 0:2 என்ற நேர் செற் கணக்கில் ஜோகோவிக் வெளியேற்றப்பட்டார். ஜோகோவிக், சிலிச் இருவரும் இந்த ஆட்டத்துடன் சேர்த்து 15 தடவைகள் ஒருவரையொருவர் எதிர்த்து மோதியுள்ளனர். 14 தடவைகளும் ஜோகோவிக்கே வெற்றிபெற்றார். அவரின் தொடர் ஆதிக்கத்துக்கு சிலிச் முற்றுப்புள்ளி வைத்தார். (ம)

## தயார்!

உலக கார்பந்தயத்தின் 20 ஆவது சுற்றான பிரேஸில் சுற்றுக்கு தான் தயாராகஉள்ளேன்எனதெரிவித்தார் நடப்புச் சம்பியனான லூயிஸ் கமில்டன்.

நடப்பு வருடத்தின் உலக கால்பந்தயத் தொடரும் 21 சுற்றுக்களாக நடத்தப்பட்டு வருகிறது. முடிவடைந்த முதல் 19 சுற்றுக்களின் அடிப்படையில் 349 புள்ளிகளுடன் ஜேர்மன் வீரர் ரஸ்பேர்க் முதலிடத்திலும் 330 புள்ளிகளுடன் கமில்டன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். அடுத்த இரு சுற்றுக்களிலும் கமில்டன் வெற்றிபெற்று ஓர் சுற்றில் ரஸ்பேர்க் 3 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டாலேயே கமில்டனால் உலகச் சம்பியன் அந்தஸ்தைதக்கவைக்கலாம். பலரும் கமில்டனின் உலகச் சம்பியன் அந்தஸ்து பறிக்கப்படவுள்ளது என்றே கருதுகின்றனர். 20 ஆவது சுற்று பிரே



ஸிலில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் குறித்த சுற்றக்குத் தான் தயார் எனத் தெரிவித்தார் கமில்டன்.

பிரேஸில் சுற்றுக்குத் தயாராகவே உள்ளேன். அடுத்த இரு சுற்றுக்களையும் கைப்பற்றுவதே ஒரே நோக்காக உள் ளது. எனக்கு எதிரான அபிப்பிராயங்கள் பரவலாக வைக்கப்பட்டுவருவதை நன்கு அறிவேன். எதைப் பற்றியும் கவலையில்லை. நான் நடப்புச் சம்பியன். அந்த அந்தஸ்தை தக்கவைக்க கடுமையாகப் போராடுவேன் என கமில்டன் மேலும் தெரிவித்தார். (ம)

## ஐயனார், நசரேத் அணிகள் மாவட்டச் சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், நவ. 6

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் துறையூர் ஐயனார், புங்குடுதீவு நாசரேத் அணிகள் அணிகள் மாவட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றன.




மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகமைதானத்தில் நேற்றையதினம் அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு செென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதையில்வைத்து, துறையூர் ஐயனார் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நாரந்தனை அண்ணா அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)




## இந்தியா பெரும் சவால் வழங்கும்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி பெரும் சவாலை வெளிப்படுத்தும் எனத் தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான ஜோண்டி ரூட்ஸ்.

5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையிலேயே ஜோன்டி ரூட்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய சுற்றுப் பயணம் இங்கிலாந்து அணிக்கு கடினமானதாகவே இருக்கும். இந்தியாவில் 5 டெஸ்ட் ஆட்டங்களை விளையாடுவதற்கு உடல் அளவிலும், மனதளவிலும் வலிமையாக இருக்கவேண்டும். ஏனெனில் அங்கு நிலவும் தட்பவெட்ப சூழ்நிலைகள் இங்கிலாந்து அணிக்கு வசதியானதாக இருக்காது. இது நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே செய்யும். 3 ஆட்டங்கள் கொண்ட தொடர் என்றால் அதில் சாதகமான விடயங்களை பெறவும் முடியும், இழக்கவும் முடியும். ஆனால் 5 ஆட்டங்கள் கொண்ட தொடர் என்றால் எதிரணிக்கு அது கடினமாகவே இருக்கும். இந்திய அணியின் கை ஓங்கியே இருக்கும். தவிர்க்க இயலாது.

தட்பவெட்ப சூழ்நிலைகளுக்கு அடுத்தபடியாக அஸ்வின், கோக்லியை சமாளிக்கும் திறனை இங்கிலாந்து கற்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்த இருவரையும் சமாளிக்கும் உபாயம் தெரியாவிட்டால், இங்கிலாந்து 5:0 என்ற அடிப்படையில் தொடரை இழக்க வேண்டி வரலாம். அவ்வாறு இந்திய அணி 5:0 என்று இங்கிலாந்தை வீழ்த்திவிட்டால் அடுத்த வருடம் முழுவதும் இந்திய அணி முதலிடத்தில் தொடரக்கூடிய வாய்ப்பு உள்ளது என ஜோண்டி ரூட்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)



**அகரம்** கல்வி நிலையம்
மல்லாகம் கே.கே.எஸ் வீதி காங்கேயன் வெதுப்பகம் முன்பாக
கொக்குவில் கே.கே.எஸ் வீதி சம்பியன் வீதி அருகில்

**கல்வியாண்டு 2017 புதியதரம் 06**
தமிழ்,ஆங்கில மொழி மூல வகுப்புக்களுக்கான அனுமதி வழங்கப் படுகின்றன.
02.11.2016 இல் இருந்து அனுமதிகளை அலுவலக நேரத்தில் எமது இரு நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
நிர்வாகி
(J 5800) (16,17,19)

**விற்பனைக்கு**
45 நாள்கள் வயது நிரம்பிய Doberman நாய்க்குட்டிகள் விற்பனைக்கு. (தடுப்பூசி போடப்பட்டது)
தொடர்பு: 077 934 6599

# டெஸ்ட் தரவரிசை; கேரத் முன்னேற்றம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தனது தரவரிசைப் பட்டியலை நேற்றுப் புதுப்பித்தது. அஸ்வின் வழக்கம்போல் முதலிடத்தில் தொடரும் அதேநேரம் இலங்கை அணியின்தலைவர் கேரத் நான்காவது இடத்துக்கு முன்னேறினார். 900 புள்ளிகளுடன் அஸ்வின் முதலிடத்திலும் 878 புள்ளிகளுடன் ஸ்ரெய்ன் இரண்டாவது இடத்திலும் 853 புள்ளி களுடன் அண்டர்சன்மூன்றாவது இடத்திலும் 832 புள்ளிகளுடன் கேரத் நான்காவது இடத்திலும் 821 புள்ளிகளுடன்புரோட் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். இலங்கை அணி சிம்பாப்வே அணிக்குஎதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்று களமிறங்குகிறது. இந்தஆட்டத்திலும் வெளிப்படுத்தும் பட்சத்தில் கேரத் மேலும்முன்னேற்றம் காணலாம்.

**அருந்ததியின்**



**வரன் தேடுவோம் வாருங்கள்**
யாழ் வீரசிங்கம் மண்டபம்
06-11-2016 • 9.00 மணி முதல்
076 822 8519
Organized By : Arunthathee
Main Sponsor : JEEVAN STUDIO JAFFNA
Co - Sponsor : Thadsha

NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna
To Inquire : 077 336 4055
**பணியாளர் தேவை**
முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.
01. வகுப்பறை மேற்பார்வையாளர்கள் (ஆண்கள்)
02 . சிற்றூழியர்கள் (ஆண்கள்)
நேர்முகத் தேர்வு: 10.11.2016 வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு நேரில் வரவும்.

SINGER FINANCE
மோட்டார் சைக்கிளுக்கான குத்தகை வசந்தகாலம்




தொடர்புகளுக்கு:
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124

SLAS Open
SLEAS Ltd
நேர்முகத்தேர்வுக்கான இலவச வழிகாட்டல் நிகழ்வு யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் நடைபெற உள்ளன.
பதிவுகளுக்கு:
021 222 3382.
076 688 3394
(அ/23328)(17.19.20)

CHELVA MAHAL
No:1229, Poonari Marathady, K.K.S. Road, Jaffna.
Tel: 021 221 9779




40 நிமிடத்தில் சமையல்.
உணவு சமைக்கும் இயந்திரம்.
ரைஸ் ஸ்ரீமர் மெசின்
RICE STEAMER MACHINE புகை,வெப்பம் வெளிவிடாது !!




• சோறு • இடியப்பம் • வட்டலாப்பம்
• மரக்கறி • இறைச்சி • புட்டு • மா
போன்ற உணவுப் பொருட்களை இலகுவாகவும் விரைவாகவும் சமைக்கக்கூடியது.
தமிழில் தொடர்பு கொள்ள :
0773918870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்




• 1 வருட உத்தரவாதம்
• இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
• விற்பனைக்கு பின் சேவையுண்டு
• இலவச விநியோகம்
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.